# என் இனிய இசைப்பயணங்களில்...







என்றும் அன்புடன்...

ஈழத்து மெல்லிசை மன்னன் **எம்.பி.பரமேஷ்**

# என் இனிய இசைப்பயணங்களில்



The first Tamil record producer in Sri-Lanka, 1968

"EEZHATHU MELLISAI MANNAN"

## M.P. PARAMESH

❖ **என் இனிய இசைப்பயணங்களில்...**

❖ *வெளியீடு எண்* : 1

❖ *முதல் பதிப்பு* : டிசம்பர், 2007

❖ *அட்டை வடிவமைப்பு* : கணபதி & கிறிஸ்டோபர்

❖ *அச்சு* : பாலாஜி ஆப்செட்

❖ *ஒளி அச்சு வடிவமை* : கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்

❖ *வெளியீடு* : **மாலினி பப்ளிகேஷன்ஸ்**



**உங்கள் ஆக்கங்களை படைப்புக்களை**
**(கவிதைகள், கட்டுரைகள், கதைகள்)**
**புத்தகங்கங்களாக மிக சிறந்த முறையில்**
**இந்த புத்தகத்தின் தரத்தில்**
**வடிவமைத்து அச்சிட்டு தர உங்களுக்காக**

**Malini Publications**
MUEHLENSTR. 20, 41352 KORSCHENBROICH
GERMANY
✆ 0049-21615646477
Mobile : 0049-17621234376
e_mail : rhythms@gmx.de

நவஜோதி. ஜோகரட்னம்
லண்டன்



# நினைவு கூருகிறேன்...



- அமரர் சங்கீத பூஷணம்
  மாலினி பரமேஷ்
  அவர்களின் தந்தையார்
  சங்கீத பூஷணம் ஆ. நமசிவாயம்
  திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



- எம்.பி. பரமேஷ் அவர்களின் தந்தை
  மா. பீதாப்பரன் சாவகச்சேரி
  (கல்லூரி வித்தியாதிகாரி தமிழ் அறிஞர், கவிஞர்).
  கௌரவம் : சுவாமி விபுலானந்தரின் முதல் மாணவன்.
  பிள்ளைப்பாட்டுக் கவிஞர்.
  5.4.1972, சித்திரை மாதத்தில் தனது 74வது
  வயதில் திருக்கோணமலையில் காலமானார்.



- எமது பரமேஷ் கோணேஷ்
  உதவி இசையமைப்பாளர்
  எஸ்.இ. மகேஷ்,
  48வது இளவயதில் கனடாவில்
  காலமானார். திருக்கோணமலை
  V.S.E. Gold House உரிமையாளர்.



- எமது இசைத் தென்றல்,
  கலைஞர் S.K. பஞ்.
  30.12.2006 லண்டன்.
  தனது 62வது வயதில் காலமானர்.

**உங்களது ஆத்ம சாந்திக்காக....**

# பொருளடக்கம்

1. வாழ்த்துரை - பாடகர் இரா. மாணிக்கவினாயகம் ........ 6
2. கவிப்பேரரசு வைரமுத்து ........ 7
3. வாழ்த்துரை - நடிகர் ராதாரவி ........ 8
4. அப்துல் ஹமீது, அறிவிப்பாளர் ........ 9
5. என் இனிய இசைப் பயணங்களில் ........ 11
6. நான் ஆணித்தரமாக எழுதவேண்டிய வரிகள் ........ 75
7. பாடகர் துரைலிங்கம் ........ 77
8. றிதம்ஸ் இசைத்தென்றல் ........ 78
9. இசையமைப்பாளர் விஜய் ஆன்ரனி ........ 80
10. பொப் இசை சக்கரவர்த்தி ஏ.ஈ. மனோகரன் ........ 81
11. நாடகத்தந்தை கலையரசு சொர்ணலிங்கம் ........ 83
12. பத்திரிகைகளின் பாராட்டு ........ 84
13. **இசையில் இணைந்தோர் விமர்சனங்கள்**
    * கே.ரி. செல்வகுமார் ........ 85
    * எழிலன் ........ 91
    * திரு.திருமதி பவானந்த ராஜா ........ 93
    * திரு.திருமதி சிவபாலன் ........ 95
    * இயக்குனர் திரு. ஏ. ரகுநாதன் ........ 97
    * நயினை விஜயன் ........ 98
    * எஸ்.பி. ஜெயக்குமார் ........ 100
    * பொ.சிவானந்தன் ........ 102
    * லன்டோ மனோ ........ 105
    * பிரியாலயன் துரைஸ் ........ 108
    * திருமதி ஜெயா பத்மநாதன் ........ 110
    * நடிகர் அப்புக்குட்டி இராஜகோபால் ........ 112
    * அறிவிப்பாளர் திருமதி நவாஜோதி ........ 116
    * திருமதி ஜெயந்தி யோகராஜா ........ 119
    * இந்து மகேஷ் ........ 120
    * நடிகர் முகத்தார் யேசுரட்ணம் ........ 123
    * சின்னத்தம்பி கெந்தீஸ்வரன் ........ 125
    * எழுத்தாளர் வண்ணைதெய்வம் ........ 127
    * புலவன் ஆலடி நா.சி. கமலநாதன் ........ 131
    * கவிஞர் சிவலிங்கம் சிவபாலன் ........ 135
    * முகுந்தராஜா ........ 140
    * சிவனடியார் ஸ்ரீபதி ........ 146
14. Jaffna Stores - திரு. துரைசிங்கம் ........ 152
15. எஸ்.கே. ராஜென், அறிவிப்பாளர் ........ 153
16. ஜே.பி. அரியநாயகம் ........ 159
17. திருமண நாட்களிலே... ........ 171
18. கலைமாமணி பாசையூர் ஜேசுதாஸ் ........ 178
19. இலங்கைத் தமிழிசை தட்டுக்கலை முன்னோடிகள் ........ 179

# சமர்ப்பணம்




என் அன்புக் காதலி, அருமை மனைவி,
எமது ஆறு குழந்தைகளின் தாயாக வாழ்ந்து
சென்ற தேவதை எனது மாலினி.
என்னை தன் காதலால் கவிஞனாக்கிய எனது மனைவி
மாலினிக்காக என் இனிய இசைப்பயணத்தில் தொடர்கிறேன்,
சமர்ப்பிக்கிறேன்.

மாலினி மணாளன் **எம்.பி. பரமேஷ்**

# எங்கள் திருமண வெள்ளிவிழா



## புத்துடல் புகப் பூவுலகு நீத்த என் உளங்கவர்ந்த உனக்குத் தெரியுமா கவிக் காதலிக்கு என் கண்ணீர்க் கவிதை



எந்தன் ராஜாத்தி போனாள் புது பிருந்தாவனம்
இந்த ராஜாக்குச் சொல்லாத் துயர் சிம்மாசனம்
பூந்தென்றலேன் புயலாகினாய்
தொடர் பாடலில் சுரம் மாற்றினாய்
துடிக்காதோ தரைவந்த மீனும் - நான்
முடிக்காத கதைதானே மானே - நீ - நான்
முடிக்காத கதைதானே மானே - இனி
முடியாத துயர் தானே தேனே. எந்தன் ராஜாத்தி...

முழங்காமல் வானத்தில் மழை வந்தது
விழங்காமல் என் வாழ்வில் இடி வீழ்ந்தது
குலமேடை இடைவேளை திரை வீழ்ந்தது
குத்து விளக்கேற்றி விடப்புயல் வந்தது
குத்து வளக்கேற்றி விடப்புயல் வந்தது. எந்தன் ராஜாத்தி...

நிழல் தேட நிலமெங்கும் நெருப்பானது
அனல் மேட்டில் ஆறுபுறா துடித்தாடுது
வயற்காட்டில் வாழ்ந்த கிளி பருந்துண்டது
வானத்தில் ஒரு நட்சத்திரம் புவி வீழ்ந்தது
வானத்தில்... எந்தன் ராஜாத்தி...

இசைத்தட்டில் விரல் கீறி இடைநின்றது வாழ்க்கை
இரயில் ஒன்று தடம் புரண்டு தடுமாறுது
குயில் ஒன்று குரலடைத்துக் கூவமறந்தது
குலை வாழை மரமொன்று தரை சாய்ந்தது
குலைவாழை... எந்தன் ராஜாத்தி...

முயற்கூட்டில் அன்னை முயல் அடிபட்டது
துயர்முட்டி ஆறு குட்டி அழுதேங்குது
ஆதரவு தேடி தலைமுயல் ஏங்குது - அந்த
ஆறும் சிந்தும் கண்ணீரில் நனைந்தழுகுது
ஆறுதலைத் தேடிக் கடைநாள் தேடுது. எந்தன் ராஜாத்தி...

கலைமாமணி **இரா. மாணிக்கவினாயகம்**
திரைப்படப் பின்னணிப் பாடகர், நடிகர்.
வழூலூர், சென்னை - 20.

திரு. எம்.பி. பரமேஷ் அவர்களுக்கு,
அன்புடன் வணக்கம்.

தங்களின் என் இனிய இசைப் பயணங்களில் என்ற ஒரு அருமையானக் கட்டுரைத் தொகுப்பினை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இசை சுயசரிதையென்றே சாதனைக் கட்டுரை என்றோ நினைக்க முடியாத அளவுக்கு மிகவும் நெகிழ்ச்சி உண்டாக்கப்கூடிய, தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய இன்றைய இளைய தலைமுறைக்கு ஒரு வழிகாட்டி நூலாகவே எனக்குத் தோன்றியது. உளமாற மகிழ்ந்தேன், பூரித்தேன். என்னையே நான் புரிந்துக்கொண்டேன் என்பதே உண்மை.

உலகை வியக்கவைத்த உன்னத நாட்டியமேதை வழுவூர் இராமையாபிள்ளையவர்களின் மகனாகப் பிறந்த நான் எனது வாழ்க்கையில் போட்ட எதிர்நீச்சலும் சந்தித்த சோதனைகளும், ஓரளவு சாதித்த சாதனைகளும் நினைவுகொள்ளும்வகையில் அமைந்துள்ளது.

ஸ்வாமி விபுலானந்தரின் பிரதம சீடரான பேராசிரியர், இசைமேதை மா. பீதாம்பரனின் திருமகனாய்ப் பிறந்து, இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்டு வாழ்க்கையின் சுகதுக்கங்கள் அனைத்தையும் அனுபவித்துக் கடந்து, எத்துயரையும் வெளிகாட்டாது ஈன்ற பிள்ளைகள் செவ்வனே வளர்த்து ஆளாக்கி, நல்லதொரு ஆலமரமாய் விழுதுவிட்டு வேரூன்றி நிற்கும் தங்களின் இசைப்பயணம் இன்னமும் முடியவில்லை. நல்லதோர் கலைஞனின் இசைப்பயணம் என்றும் முடிவதுமில்லை. இசைக்கு மரணமில்லை... இசைக்கலைஞனுக்கும்தான்.

நன்றி.
இரா. மாணிக்கவினாயகம்
10/12/06.



கலைமாமணி திரு. மாணிக்கவிநாயகம்
(தென்னிந்திய திரைப்பட பாடகர், நடிகர்) அவர்களுடன்...





கவிப்பேரரசு **திரு. வைரமுத்து**
(திரைப்பட பாடலாசிரியர்) அவர்களுடன்...



# கவிப்பேரரசு வைரமுத்துவுடன் முத்தான நிமிடங்கள்

இலங்கைத் தமிழர் கலை வடிவம் என்றால் அதில் ஒரு வித்தியாசமான தென்றல் காற்று வீசும் என்றும் அதை தானும் நுகர்ந்துள்ளதாக தெரிவிக்கையில், ஈழக் கலைஞர்களின் திறமை, பெருமை இந்த மகத்தான கவிஞன் அறிந்துள்ளதை எண்ணி பெருமையடைந்தேன்.

ஈழத்தின் முதலாவது இசைத்தட்டு 45 R.P.M. எனது வெளியீடான 'உனக்குத் தெரியுமா?' மற்றும் சில பாடல்கள் அடங்கிய இசைத்தட்டுக்கள் அவர் கைகளில் தவழ்ந்தபோது இவையெல்லாம் பொக்கிஷமல்லவா, மிகவும் பாதுகாக்கவேண்டுமென்று ஆர்வத்துடன் அவர் என்னிடம் கூறிப் பாராட்டினார்.


அதுமட்டுமல்ல நான் அவரிடம் கையளித்த எமது ஒளிப்பேழைகளை ஆர்வத்துடன் ஏற்று இந்தப் பாடல்கள் எனது வாகனப் பயணத்தில் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கும் என்று கூறியது எனக்கு மகிழ்ச்சியளித்தது.

உலகமெங்கும் தமிழர் முன்னே பல மேடைகள் ஏறி ஈழத்து கலைஞர் பலரை சந்தித்து புலம்பெயர்ந்து வாழும் தமிழருக்காக இவர் செய்த கலைச் சேவை மெச்சத்தக்கது.

ஒரு கலைஞனுக்குத்தான் தெரியும் மற்றொரு கலைஞனுடைய படைப்பின் வெகுமதி.

என்றென்றும்

**M.P. பரமேஷ்**



**Radha Ravi**

*General Secretary*

**The South Indian Artistes' Association**

16/153, Habibullah Road, T.Nagar, Chennai - 600 017

Phone : 2834 5231, 2834 2832, 2834 0884, 2834 1230

**சென்னையில் எதிர்பாராத சந்திப்பில் எனக்கு வாழ்த்து நல்கிய**
**நடிகர் சங்க முதன்மை காரியதரிசி,**
**நடிகர், ராதாரவி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.**



தென்னிந்திய திரைப்பட நடிகர்
திரு. ராதா ரவி அவர்களுடன்...



ஆட்டோகிராப், வசூல்ராஜா MBBS, பள்ளிக்கூடம்,
ஒன்பது ரூபாய் நோட்டு திரைப்படப் புகழ்
திரு. பரத்வாஜ்
(திரைப்பட இசையமைப்பாளர்) அவர்களுடன்...



1995ல் சங்கீதசாம்ராஜ்யம்
இசைப்பேழை ஒலிப்பதிவுகளில்...





லண்டனில் BBC தமிழோசை என்றால்
அறியாதவர்களே இல்லை. மாலினி,
BBC அறிவிப்பாளர் **ஆனந்தி**, அறிவிப்பாளரும்
வழக்கறிஞருமான **திரு. விமல் சொக்கநாதன்**
அவர்களை சந்தித்த பொழுது...



அதேநிகழ்வில் பத்திரிகை ஆசிரியர்
**திரு. E.K. ராஜகோபாலுடன்**



அறிவிப்பாளர் சுந்தரத்தமிழ் சிகரம் திரு. B.H.அப்துல் ஹமீது
அவர்களுடன்
மகள் பிரபாலினி, மனைவி மாலினி, மகள் பிரியந்தினியுடன் இணைந்து...

# கடல்கடந்து வந்தாலும் கலைஞர் நட்பு அழிவதில்லை

எனது காலத்திலேயே மொட்டாகி மலராகி மணம் வீசிய திரு. பி.எச். அப்துல் ஹமீது அவர்களுடன் மீண்டும் மனம் விட்டு பேசி மகிழ்ந்த மற்றொரு நாள் வெளிநாட்டில் ஹம் நகரில் கிடைத்தது.

இந்நாளை நான் என்றும் மறக்க முடியாது. இந்த வைபவத்தில் என் மனைவி மாலினியும் வந்து கலந்துகொண்டார்.

இந்த விழாவில் நான் திரு. அப்துல் ஹமீது அவர்களை கௌரவிக்கத் தயாராக சென்றேன். ஆனால் அவரோ என்னை மேடைக்கு அழைத்து எதிர்பாராதவிதமாக எனக்குப் பொன்னாடைப் போர்த்தினார். அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் என்பதுபோல் என்னை அவர் முந்திக்கொண்டார். நான் விட்டுவிடுவேனா? அன்று நான் அவருக்குக் கொடுத்த பரிசு ஒரு புதிய கௌரவ பெயர் 'சுந்தரத் தமிழ்ச் சிகரம்'. இதை நினைத்து நான் மிகவும் பெருமையடைகிறேன்.

அன்று நாங்கள் குடும்பமாக திரு. அப்துல்ஹமீது அவர்களுடனேயே, எமது நண்பர் Jaffna Stores உரிமையாளர் திரு. துரைசிங்கம் இல்லத்தில் சகல கலைஞர்களுக்கும் எனது குழந்தைகள் சமைத்து, பரிமாறி மகிழ்ச்சி கொண்டாடினோம்.

வலப்பக்கப் படத்தில் மகள் பிரபாலினி, திரு. அப்துல் ஹமீது, மனைவி மாலினி, மகள் பிரியந்தினி அவர்களுடன்...



முதன் முதலாக இலங்கையில் தமிழிசைத் தட்டு தயாரித்த
வருடம் 1968. ஈழத்து மெல்லிசை மன்னன்
இயல் இசைக் கலைஞன் பொப்பிசைத் திலகம்
இசையமைப்பாளர் கவிஞர் பாடகர்
இசைத்தட்டுத் தயாரிப்பாளர்
என்றெல்லாம் கௌரவிக்கப்பட்ட
எங்களில் ஒருவன் ஈழத்தமிழ் மகன்
எம்.பி. பரமேஷ் எழுதும்

# என் இனிய இசைப் பயணங்களில்

"அப்பா உங்கள் இசைப் பயணத்தைப் பதிவுகளாக்க வேண்டும் என்று என் அன்பு மகள் பிரபாலினி என்னிடம் வேண்டுகோள் வைத்தபோது என் கண்கள் கலங்கின. நான் இதை உங்கள் மகளாகக் கேட்கவில்லை. உங்கள் இசைப் பயணத்தின் வாரிசாகக் கேட்கிறேன். உங்களைப் பற்றி மட்டுமல்ல, ஈழத்துக் கலைஞர்கள் அனைவரைப் பற்றியும் இதுபோலப் பதிவுகள் ஏற்படுத்த விரும்புகிறேன். அந்த முயற்சியின் துவக்கமாக ஈழத்து மெல்லிசை மன்னன், இயல்இசைக் கலைஞன், பொப்பிசைத் திலகம் என்று பல்வேறு பட்டங்கள் பெற்றவரும் இலங்கைத் தமிழில் முதன்முதலாக இசைத்தட்டு தயாரித்தவருமான உங்கள் வாழ்வு குறித்த பதிவுகளில் இருந்து துவங்குகிறேன். இந்தப் பதிவுகள் நாளைய வளரும் புதிய கலைஞர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதுதான் எனது ஆசை."

எனது மகள் பிரபாலியின் வேண்டுகோள் என் வாழ்வின் முதல்நாளாம் நான் பிறந்த சூழலை நோக்கி என் நினைவுகளைத் திருப்பியது. உலகிலேயே சிறந்த விஞ்ஞான ரீதியிலான இசை அகராதியான யாழ்நூலை உலகிற்கு யாத்தளித்த அமரர் சுவாமி விபுலானந்தர் புகழ் உலகறியும். அவரின் முதல் மாணவராகத் திகழ்ந்தவர் என் அருமைத் தந்தை மா. பீதாம்பரன்.

விபுலானந்தரின் நிழலாகவும் அவரின் சீடராகவும் தன் வாழ்வை ஸ்வாமிகளுக்கு அர்ப்பணித்தவர். சுமாமிகள் உலகப் புகழுக்குச் சொந்தமானவராதலால் எங்கும் அவரின் சொற்பொழிவுகள் நிகழ்ந்து கொண்டே இருந்தது.

ஒருநாள் திருச்சி வானொலி நிலையத்தில் சொற்பொழிவாற்றும்போது மிகுந்த பலவீனத்துடன் இருந்தவர் பாதிச் சொற்பொழிவின்போதே மயங்கி விழ அருகேயிருந்த என் தந்தை அவரைத் தாங்கிப்பிடித்து தன் மடியில் ஏந்திக் கொண்டார். பின்னர் சுவாமிகள் ஆடிமாதம் ஆயிலிய நட்சத்திரத்தில் காலமானார். சுவாமி விபுலானந்தர் தமிழைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டவர். அவர் வழியில் வந்த என் தந்தை பேராசிரியர். பாடசாலை வித்யாதிகாரி, கலைஞர், தமிழறிஞர் சாவகச்சேரி மா. பீதாம்பரன். மடியில் நான் தவழ்ந்து வளர்ந்ததாலோ என்னவோ இந்த இசைச் சக்தியின் ஒரு துளி என்னுள் விதையாகி இசைப் பிரவாகமாக ஆகியுள்ளது என நினைக்கிறேன்.

என் தந்தையைப் பற்றி பல பெருமைகள் எமக்குண்டு. அப்படி ஒரு உதாரண மகானாக வாழ்ந்து காட்டியவர் அவர். விபுல பீதாம்பரன் இரவுப் பாடசாலையைத் தன் உயிரினும் மேலாகக் கருதி நடத்தி வந்தார். இந்தப் பாடசாலையில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாரிடமும் பணம் வாங்கக் கூடாதென்று சொல்லி இறுதிவரை அதில் உறுதியுடன் இருந்தார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இதனால் பயனடைந்தனர். இந்த மாணவர்களுக்கு இரவு முழுவதும் பாடம் சொல்லிக் கொடுத்து அவர்களைப் பட்டதாரியாக்கியவர் என் தந்தை. '**சைவமும் தமிழும் பிரிக்க இயலாத சக்திகள்**' என்று மேடைகளில் முழங்கி கிறிஸ்துவ மதத்தினரும் சிந்திக்கும் வகையில் எடுத்துரைத்தவர் இவர். அவர் காலத்தில் இந்தியாவில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் அத்தனை இந்தியக் கவிஞர்களுக்கு மத்தியில் கவிதையெழுதி முதலாவது கவிஞர் என்று பெயர் பெற்றவர். "**அந்த மரம் ஆலமரம் அழகான நல்ல மரம்**" என்ற சிறுவர் பாடலுக்காக '**பிள்ளைப் பாட்டுக் கவிஞர்**' என்ற சிறப்பு அடைமொழியால் அழைக்கப்பட்டவர். இன்றைக்கும் ஈழத்துத் தமிழ்க் குழந்தைகள் முதலில் படிக்கும் பாலபோதனைப்

புத்தகத்தின் முதல் பாடலுக்குச் சொந்தக்காரர் என் தந்தை பீதாம்பரன்.

மிகச் சிறிய வயதிலேயே என் தந்தை எனக்கு தன் பாடல்களை இசைவடிவில் ராகம் சேர்த்துப் பாடிக் காண்பிப்பார். அது என் மனதில் ஆழப்பதிந்து போனது. இதனாலோ என்னவோ நானும் எனது பதினாறாவது வயதிலேயே பாடல்கள் எழுதத் தொடங்கிவிட்டேன். மனதில் தோன்றும் வரிகளைக் கோர்த்து எழுதி நண்பர்களிடம் காண்பிக்கும்போது நன்றாக வந்திருக்கிறதே என வியந்து பேசுவார்கள். தந்தையின் ஆசியும் நண்பர்கள் கொடுத்த உற்சாகமும் அந்தச் சிறுவயதிலேயே என்னை இசையமைக்கத் தூண்டியது. மிகவும் விளையாட்டுத்தனமாக ஒரு பாடலை எழுதி இசையமைத்து என் சகோதரன் கோணேசுடன் இணைந்து பரமேஷ் கோணேஷ் என்ற பெயரில் திருக்கோணேஷ்வர் ஆலயத்தில் என் முதல் பாடல் அரங்கேறியது.

'திருக்கோணமலை எங்கள் நாடு' என்ற அப்பாடலின் வரிகளையும் அதில் அமைந்த அடிசந்தங்களையும் கவனித்த என் தந்தையார் வியந்துபோய் என்னைக் கட்டித் தழுவிப் பாராட்டினார்கள். என் வாழ்வில் எனக்குக் கிடைத்த முதல் விருதும் பாராட்டும் அதுதான். இன்றுவரை எனக்கு மிகச் சிறப்பாகத் தோன்றுவதும் இந்த விருதுதான். என்னை மிகவும் என் தந்தையார் பாராட்டிய வரிகளை நான் இங்கே நினைவு கூர்கிறேன்.

தென்னவனாம் ராவணனார்
செந்தமிழ்ப்பா செவிசேர
கொன்றை அணிசிவனார்க்கு
குற்றமில்லா இசையீர்த்த
திருக்கோணமலை எங்கள் நாடு

எப்படிச் சிறப்பாகக் கவிதை எழுதுவது என்பது குறித்து நிறைய யோசிப்பேன். யோசித்துப் பின்பு எழுதிக் கொண்டு போய் அப்பாவிடம் காண்பிப்பேன். அப்பா சொல்வார். 'டேய் துரை! கனக்க யோசிக்கிறாயேடா அடி சந்தம் யாப்பு இலக்கணம் எல்லாம் ஒரு சாதாரண விடயமடா. **'கவிஞன் என்பவன் கவிஞனாகவே பிறக்கின்றான். அவன் கவி எழுதும்போது**

**உணர்வின் பிரவாகம் மட்டுமே எழுத்துக்களாகும். அடி சந்தம் யாப்பு இலக்கணம் அதில் தானாகவே பொருந்திக்கொள்ளும். கவிதைக்குத்தான் யாப்பு இலக்கணம் வகுக்கப்பட்டதே தவிர யாப்பு இலக்கணத்தைப் படித்துக் கவிதை எழுதுவது எப்படி என்று யோசிப்பது சரியல்ல**' என்றார். அவரின் இந்த வார்த்தைகள் இன்றும் என் மனதில் கல்வெட்டாகப் பதிந்துபோனது.

நான் குழந்தையாக இருக்கும்போது அப்பா என்னை அதிகாலை நான்கு மணிக்கே எழுப்பிவிடுவார். தூக்கக் கலக்கத்தில் அவர் தமிழ்ப்பாடல்களை உரக்கப் படிக்கக் கேட்டுக் கொண்டிருப்பேன். என் அம்மாவோ 'ஏன் குழந்தையை சிரமப்படுத்துகிறீர்கள்?' எனப் பேசுவார். ஆனால் அப்பா விடமாட்டார். நான் பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்கத் துவங்கிவிட்டால் விடமாட்டார். ''டேய் துரை, பள்ளிக்கூடத்தில் படிக்கிறாய்தானே? பின் ஏன் அதை வீட்டிலும் படிக்கிறாய். முதலில் அதை மூடிவையடா. நான் பாடுவதைக் கேளடா'' என்பார். அவர் தமிழ்ப்பாடல்களை ராகம் கூட்டிப் பாடத்துவங்கிவிடுவார். நான் சரியாகக் கவனிக்க வேண்டும். ஏனெனில் அவர் முதலில் ஒரு பாடலை ஒரு ராகத்தில் பாடுவார், பின்பு அதே பாடலை வேறொரு ராகத்தில் அருமையாகப் பாடுவர். இதுவே அவரது தனிச்சிறப்பு.

ஒரு முறை மிகுந்த ஆர்வமிகுதியில் ஒரு பாடலை எழுதி அப்பாவிடம் காண்பித்தேன். அன்று அவர் ஆசியுடன் எழுதத் தொடங்கிய என் கரம் அடுத்தெழுதிய பாடலில் ஒரு பந்தி மட்டும் எனக்கு என்றைக்கும் மறக்க முடியாதது.

**பிறை கங்கை சூடி இடபாகம் பாதி**
**உமை கொண்ட நாதன் நீயே**
**அன்று கடலுண்ட பாதி தரை கொண்ட மீதி**
**கவிஞான கோயில் உனதே.**

திருக்கோணமலை ஈசா உந்தன் திரு நாமம் சொல்லவா என்று ஆரம்பிக்கும் பாடல் ''அடேய் துரை கவிஞான கோயில் உனதே என்று எழுதியுள்ளாயே ''கவி ஞான'' என்றால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டார். 'உங்களிற்குத் தெரியுமப்பா

வேண்டுமென்று கேட்கின்றீர்கள்' என்றேன். 'இல்லையடா துரை சொல்லு இன்று தான் நீ யார் யார் அருளால் எனக்கு மகனாய்ப் பிறந்தாய் என்று அறியப் போகின்றேன்' என்றார். பயத்தில் தவறாகச் சொல்லிவிடுவேனா என்று பயந்து நான் ஓட, தன் கையிலிருந்த கோப்பியையும் தூக்கி உடைத்து வீட்டுக்குள் இருக்கும் எல்லோரையும் எழுப்பிவிட்டார்.

நான் பயந்து நடுங்கி நான் யாரையும் பார்த்தெழுதவில்லையப்பா. ஆனால் கவிஞான என்றால் அழகான என்று ஒரு பொருளும் இருக்கு என்று எங்கோ எவரோ சொன்னதுபோல் நினைவிருக்கிறது அதனால்தான் அப்படி எழுதினேன் அப்பா என்றேன். அன்று ஒரு நாள் தான் அவர் முதற்முதலாக ஆனந்தக் கண்ணீர் விட்டு வெகுநேரம் அழுதிருக்கின்றார். சிறுவயதாக இருக்கும்போது என்னிடமிருந்த கவிபுனையும் இந்தச் சிறப்பை இன்று நான் என் மகள் பிரபாலினியிடம் காண்கின்றேன். பெரிய தமிழ்ச் சொற்களையெல்லாம் இணைத்துப் பாடல்கள் எழுதிவிடுவாள். அவளுக்கே தெரியாது எப்படி எழுதுகின்றாள் என்று.

அன்று முதல் நான் தொடர்ந்தெழுதிய பாடல்கள் தான்,

1. யாழ்பாடி யாழ்ப்பாணம் பெயர் கொண்டது.
   வேலேந்தும் நல்லூர்க் கந்தன் அருள் கொண்டது

2. மீனிசை பாடி வரும் தேனருவி ஓடிவரும்
   தேசவளக் கூத்தாடும் திருநாட்டிலே
   தெய்வமகள் வாழ்கிறாள் கண்ணகி
   தெய்வமகள் வாழ்கிறாள்.

3. நாம் பிறந்த நாடு நல்லதமிழ்ப் பேசுகின்ற ஈழ நாடு
   தேன் கலந்த வீடு
   தெய்வ அருள் பொங்கி நிற்கும் திருநாடு.

4. இசைக்கிண்ணத்திலே எங்கள் இதயம் அதில்
   எண்ணற்ற கீதங்கள் உதயம்
   அதைப் பாடப்பாட என் உள்ளம்
   பரந்துபாவிய கலைவெள்ளம்.

மேடை நிகழ்ச்சிகள் எல்லாம் மிகப்பெரிய வெற்றியடைந்திட திருக்கோணமலையிலிருந்த எம்மை யாழ் நகர் அழைத்தது. அரியாலை என்ற இடத்தில் இரு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அங்கு ஒலித்த பாடல்தான் என்றும் என் நினைவில் தங்கியிருக்கும் ''யாழ்பாடி யாழ்ப்பாணம் பெயர் கொண்டது'' என்ற நாட்டுப்பற்றுப் பாடல். அந்தப் பாடல்தான் 'தினகரன்' விழாவில் **தீந்தமிழ் இசைக்கவிஞனாக என்னைத் திகழச்செய்தது.**

1968ஆம் ஆண்டு எங்களது மேடை நிகழ்ச்சிகளுக்கு மக்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பு அனைவராலும் கவனிக்கப்பட்டு வானொலி நிலைய நிகழ்ச்சி வழங்கும் அளவிற்கு எங்களை வளர்த்தெடுத்துச் சென்றது.

இலங்கை வானொலியில் நிகழ்ந்த 'அரங்கேற்றம்' என்ற நிகழ்ச்சி எமக்கு வானொலியில் அரங்கேற்றமாகவே அமைந்துவிட்டது. **வணக்கம் கூறுவது எஸ்.பி. மயில்வாகனன் ஆமாம். அந்த அற்புத குரல் வானொலிக்கென்றே அமைந்த குரல். உலகின் அனைத்துத் தமிழர்களின் நெஞ்சைக் கவர்ந்த குரல்.** இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தில் வர்த்தக சேவை ஆரம்பித்த நாள் முதல் ஒலித்த குரல் இவருடையது. அரங்கேற்றம் நிகழ்ச்சிப் பொறுப்பாளரான திரு. மயில்வாகனன் எனக்கு 52 முறை அரங்கேற்றம் நிகழ்ச்சியில் இசையமைக்க வழிவகுத்துத் தந்தார். ஒவ்வொரு வாரமும் 15 நிமிடங்கள் இந்நிகழ்ச்சி 52 வாரங்கள் நடைபெற்றது. மிகவும் மகிழ்ச்சியான நினைவில் தங்கிவிட்ட கணங்கள் அவை. இந்த நிகழ்ச்சியில் பல்வேறு பாடகர்கள் பங்கேற்க மொத்தம் மூன்று பாடகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களுக்கு முதல் இரண்டாம் மற்றும் மூன்றாம் தெரிவுப் பரிசுகள் வழங்கப்படும். நாங்கள் பங்கேற்ற இரண்டாவது நிகழ்ச்சியில் இசையமைத்து மட்டுமின்றி நானும் ஒரு பாடல் பாடினேன் அது ''பட்டுப்பூச்சி பட்டுப்பூச்சி பாப்பா'' என்ற பாடல். அது முதற்ஸ்தானம் பெற்றது.

**இதுவரை காலமும் திரைப்பாடல்களிற்கு இடை இசையினை** (interlude). **தாம் விரும்பிய வண்ணம் வாசித்து வந்த இசைக்குழுக்களை அப்படி இருக்கக் கூடாது**

**இசைத்தட்டில் அமைக்கப்பட்ட அதே இடை இசையினை வாசிப்பதே முறையானது என்று எடுத்துக்காட்டி முன்னுதாரணமாக விளங்கியது எங்கள் குழுதான்.** அரங்கேற்றம் நிகழ்ச்சிக்கு இசையமைக்கத் துவங்கிய பின்னர் அதில் ஒலித்த சகல பாடல்களிற்கும் மூலஇசைத் தட்டில் உள்ளது போலவே இடைஇசையினை அமைத்தோம். இந்த நிகழ்ச்சியின் துல்லியத்திற்காக நயத்திற்காக எமக்கு வாழ்த்துக் கூறி வந்த கடிதங்களோ ஆயிரக்கணக்கானவை. தபால் ஊழியர் ஒவ்வொரு முறையும் அவற்றை தன்னால் எடுத்து வரமுடியாது என்று சொல்லிவிட்டு அவரே எமக்கு ஒரு அஞ்சல் பெட்டியைத் தபால் நிலையத்தில் அமைத்துவிட்டார். திரைப்படப் பாடல்களிற்கு அதன் இசைத்தட்டில் உள்ள அசல் இடைஇசையையே வாசிக்கும் வழக்கத்தை முதன்முறையாக செயல்படுத்திய இசைக்குழு என்கிற பெருமை பரமேஷ் கோணேஷ் ஆகிய எமக்குண்டு என்பதைப் பணிவுடன் தெரிவிக்கிறேன்.

இப்படியாகத் தொடங்கிய அரங்கேற்றம் நிகழ்ச்சிக்கு வருகைத்தந்த சில பாடகர்களை நாங்கள் எமது இசைக்குழுவில் இணைத்துக் கொண்டோம். இப்படி இணைந்தவர்களே திருக்கோணமலையைச் சேர்ந்த செல்வி எமிலிகிறவுத்தர். செல்வி கமலாராஜதுரை அவர் சகோதரிகள் பமலா, விமலா, E.R. பிரேமா ஆகியோர். பாடகர்களான இவர்களைத் தவிர இசைக்கருவிகைள வாசித்தவர்கள் முகுந்தன், மோகன், கங்காதரன், சிவானந்தன், ஜீவானந்தன் இன்னும் சிலர், உண்மையில் நான் சில பெயர்கள் மறந்து விட்டேன். என்ன செய்வது காலம் பல்வேறு மறதிகளைக் கொண்டுவந்து சேர்க்கிறது. ஓடும் நதியின் அலைச்சுழிகளைப் போல நம்மை அலைக்கழிக்கிறது வாழ்க்கை. இவர்கள் மட்டுமல்ல இவர்களுடன் எம்மால் மறக்க முடியாத இன்னொருவர் வாத்தியக் கலைஞராக மட்டுமின்றி எங்களின் உதவி இசையமைப்பாளராகவும் எமது தயாரிப்பு நிறுவனத்தின் வரவு - செலவு நிர்வாகியாகவும் இருந்தவர். தற்பொழுது கனடாவில் வசித்துக் காலமான திருக்கோணமலை வி.எஸ்.இ. கோல்டு ஹவுஸ் உரிமையாளர் எஸ்.சி. மகேஷ் அவர்கள். அவர் எங்கள் வாழ்நாளில் மறக்கமுடியாதவர்.

மேலும் கூறுகின்றேன். இந்த வழியில் துணையிருந்த அனைவரையும் எமக்கு அறிவிப்பாளராக இருந்தவர் திருக்கோணமலை K.T. செல்வக்குமார். இன்று உலகின் கலாச்சாரத் தொட்டிலாக அறியப்படும் பரீஸ் மாநகரில் எங்கள் குழுவிற்குப் பெருமை சேர்க்கக் கூடிய வகையில் சிறந்த இசையமைப்பாளராகத் திகழ்ந்த அமரர் S.K. பஞ், அவர்களும் எமது இசைக் குழுவைச் சேர்ந்தவரே. இவர்களோடு திருக்கோணமலை Jr. அலெக்சாண்டர், K.S. பாலச்சந்திரன் (ஜெர்மன்), M. பாக்கியராஜா (டென்மார்க்) இவர்களைப் போன்ற பலரையும் பாடகர்களாக்கிய பெருமை பரமேஷ் - கோணேஷ் எமக்கு உண்டு. எம்முடன் இணைந்து பற்பல மேடைகளிற் பாடிய துரை. துரைலிங்கம் அவர்களையும் நான் மறக்கமுடியாது.

இலங்கை வானொலியில் அரங்கேற்றம் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் திரு. மயில்வாகனன், அவரது துணைவியார் திருமதி செந்தில்மணி மயில்வாகனன் இருவரின் வேண்டுகோளுக்கிணங்க பம்பலப்பட்டி சரஸ்வதி மண்டபத்தில் பொங்கல் விழா நிகழ்ச்சிகளுக்காக எமது பரமேஷ் - கோணேஷ் இசைத்தென்றல் இரண்டரை மணிநேரம் சிறப்பாக நடைபெற்றது. கொழும்பில் முதன்முதலாக நடைபெற்ற எமது நிகழ்ச்சி இது. இந்த நிகழ்ச்சிக்கு கிடைத்த இரசிகர்களின் வரவேற்பு மிகமிக அற்புதமானது. அதைத் தொடர்ந்து வந்த நிகழ்ச்சிகளில் எங்களுக்கு நேரம் போதாததால் நாங்கள் ஒத்துக் கொள்ளாத நிகழ்ச்சிகளே அதிகம். அந்த அளவிற்கு நிகழ்ச்சிகள் அதிகமாகின.

இதுபோன்ற சமயத்தில்தான் ஜெர்மனியில் முப்பது வருடங்கள் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் ஸ்தாபனத்தில் கடமையாற்றி அதே துறையில் இலங்கையின் தலைநகரமான கொழும்பில் Alkemie என்ற பெயரில் ஒரு ஸ்தாபனம் அமைந்திருந்தார் எனது அண்ணன். இந்த வேளையில் முக்கியமான ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இலங்கையிலே ஜெர்மன் மொழியைக் கற்று முதன்முதலாக ஜெர்மன் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஜெர்மனிக்கு வருகை தந்த ஒரு சிலரில் எங்கள் அண்ணனும் ஒருவர். என் அண்ணன்

விவேகானந்தராஜா என்ற ஆனந்தன் அவர்களின் கல்லூரி நண்பர்தான் சாவகச்சேரி ஜோதேவானந்தன் மிகவும் பிரபலமான திரைப்பட இயக்குநர். 'பைலட்பிரேம்நாத்' என்கிற பெயரில் வெளியான தமிழ்த்திரைப்படத்தின் தயாரிப்பாளர். இலங்கையில் இவர் ஜாஃப்னா கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டோ அல்லது ஆசிரியராகவோ இருந்த காலத்தில் மிகச் சரியாக என்னால் நினைவுபடுத்தமுடியவில்லை. இவர் தயாரித்த ஒரு தமிழ் குறும்படம்தான் இலங்கையின் முதலாவது குறுந்திரைக் காவியம். அதற்கு அவர் இட்ட பெயர் 'பாசநிலா'. என் அண்ணர் ஆனந்தன் நண்பர் ஜோதேவானந்தன். இப்படியாகக் காலம் சுழன்று கொண்டிருந்தபோது என் அண்ணனின் ஸ்தாபனத்தின் அருகிலேயே சட்டக்கல்லூரி இருப்பதால் அதிற் கல்வி கற்பதற்காக வருகைபுரியும் திரு. விமல்சொக்கநாதன் அவர்களின் சந்திப்பும் அவர் மூலம் அவர் சகோதரி யோகா தில்லைநாதன் அவர்களின் சந்திப்பும் கிடைத்தது. அப்போதெல்லாம் நான் எப்படி இசைத்துறையில் என்னை வளர்த்துக் கொள்வது என்பது குறித்தே நிறைய யோசித்திருக்கிறேன். அப்போது திருக்கோணமலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த நான் நாட்டின் தலைநகரான கொழும்பில் சில சமயங்களில் இருந்தாற்தான் இந்த இசைக்கலை நுற்பங்களை மிகத் திறம்படக் கற்றுக்கொள்ள பல கலைஞர்களைச் சந்திக்கலாம் என்று எண்ணியிருந்த வேளையில் என் அண்ணார் ஆனந்தன் திருக்கோணமலை வந்து என்னைத் தன் ஸ்தாபனத்திற் சிறு உதவிகள் செய்ய வரவேண்டுமென்று அழைத்துச் சென்றார். அப்பொழுது எனக்கு கல்விக்கூட விடுமுறை. விடுமுறை கழிந்தும்கூட நான் மீண்டும் திருக்கோணமலைக்கு திரும்பவில்லை கல்விக்கூடத்தின் வழக்கமான படிப்பிற்கு முழுக்குப் போட்டாயிற்று.

பின்பு மீண்டும் தொடர்ந்து படிக்க வேண்டும் என்று எங்கள் அப்பா திருக்கோணமலையில் சத்தம் போட்டது கொழும்பு வரை அனைவருக்கும் கேட்டிருக்க வேண்டும். அந்த அதிக சத்தத்தின் வேதனை தாங்காமல் மீண்டும் வந்து திருக்கோணமலை சென்ஜோசப்ஸ் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். எனக்கோ படிப்பு சற்றும் ஓடவில்லை. காரணம் இதுவரை நான் ஆங்கிலத்திற் படித்த பாடங்கள் எல்லாம் தமிழில் படிக்க வேண்டி வந்துவிட்டது. ஆங்கில வழிக்கல்வியில் சகல விஞ்ஞானப்

பாடங்களும் நிறுத்தப்பட்ட கடைசி வரிசையிலேதான் எனது கல்விக்காலம். இதையே காரணம் காட்டி பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிவிட்டேன்.

இப்படியாகத் தொடர்ந்து கொண்டிருந்த நாட்களில்தான் ஒருநாள் நான் எனது தம்பி கோணேஷ் மற்றும் மகேஷ் ஆகியோர் வழக்கம் போல் வெள்ளிக்கிழமை மாலையில் எமது இசைநிர்வாகம் பற்றி உரையாடும் பொழுது மூவருமாக கலந்து ஆலோசித்துத் தீர்மானித்தோம். நாம் திடீர்திடீரென இசைநிகழ்ச்சிகள் செய்வது கஷ்டம். எனவே மாதம் ஒருதடவை ஏதேனும் ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து நுழைவுக்கட்டண அடிப்படையில் நிகழ்ச்சிகள் செய்வோம் என்று.

எமது திட்டத்தின்படி முதன்முதலாக திருக்கோணமலை சென்சேவியர் கல்லூரியில் பரமேஷ்-கோணேஷ் இசைத்தென்றல் அனுமதிச் சீட்டுக்கான நிகழ்ச்சி ஆரம்பித்தது. மிகப் பயத்துடனேயே ஆரம்பித்தோம். ஏனெனில் அப்பொழுதுதான் அந்தப் பள்ளிக்கூடம் புதுப்பிப்பதற்காக கற்குவியல்கள் குவிக்கப்பட்டிருந்தன. 'கற்கள் வீசப்பட்டால் என்ன செய்வது?' என்கிற பயம் முழுவதும் எம்மைக் கலவரப்படுத்தினாலும் நாங்கள் நம்பிக்கை இழக்கவில்லை.

எங்கள் நம்பிக்கையை பொய்ப்பிக்காமல் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக இரவு ஏழு மணிக்கு என்று அறிவிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகள் திருக்கோணமலை சென்சேவியர் கல்லூரி அமைந்துள்ள சென்றல்வீதி முழுவதும் அனுமதிச் சீட்டிற்காக மக்கள் குவிந்துவிட்டனர். நிகழ்ச்சி ஆறு மணிக்கே ஆரம்பமாகிவிட்டது. இடவசதி போதாமையால் மீண்டும் இரண்டாவது நிகழ்ச்சியை இரவு ஒன்பது மணிக்கு நடத்தினோம். சொந்த ஊரிலேயே அந்த ஊர்க்கலைஞர்களிற்கு மக்கள் ஆதரவு கொடுக்கமாட்டார்கள் என்பதை முறியடித்து வெற்றி கண்டது எங்கள் முதலாவது நுழைவுக்கட்டணம் அடிப்படையிலான இசைத்தென்றல் இசைவிழா.

இதேவருடம் எமது குழுவின் முதலாம் ஆண்டுவிழா நிகழவிருந்தது இதைச் சிறப்பாகச் செய்வதற்கு நாங்கள் படித்த மிகப்பெரிய இடவசதி கொண்ட பெரியமண்டபம் தேவையெனக்



*இந்த மேடையில் மெல்லிசை மன்னர் பரமேஷ் கோணேஷ் அவர்களிற்கு மக்களிசைக் கலைஞர் என்ற விருது வழங்கப்பட்டது. ரோபின் ராகல் முத்து சிவராஜா அறிவிப்பாளர் K.T. செல்வக்குமார்.*

கருதினோம். சென்ஜோசப்ஸ் கல்லூரியின் இடம் சரியாக இருக்கும் என்று கருதி அதன் அதிபர் திரு. ஞானப்பிரகாசம் அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டோம். அந்த இடத்தை அவர் எமக்கு இலவசமாகவே தந்துதவினார். பாடசாலை மாணவர்களிற்கு பிற்பகல் 3 மணி முதல் 5.30 வரையும் வெளியாட்களுக்கு மாலை 7 மணி முதல் 9.30 வரையும் பின்னர் இரவு 10 மணி முதல் 12.30 மணிவரையும் என்று மூன்று நிகழ்ச்சிகள் நடத்தினோம். இந்நிகழ்ச்சிக்கு நாம் கொழும்பில் இருந்து திரு. பப்பாமிஸ்கின் அவர்களை ரம்பட் வாத்தியம் வாசிக்கவும் திரு. கிளெம்குளோனர் அவர்களை சக்சபோன் வாத்தியம் வாசிக்கவும் அழைத்திருந்தோம்.

சென்சேவியர் கல்லூரியில் நடந்த எமது இசைத்தென்றலிற்கும் சென்ஜோசப்ஸ் கல்லூரியில் நடைபெற இருந்த முதலாவது ஆண்டு விழாவிற்கும் இடைக்காலத்தில் நான் பல பாடல்கள் இயற்றினேன். இவற்றை இசையமைத்து பல்வேறு சிறுசிறு மேடைகளிற் பாடி வந்தோம். சுயமாக இயற்றி இசையமைத்த பாடல்கள் திரைப் பாடல்களைவிட அமோக வெற்றி

பெற்றது நாங்களே எதிர்பாராதது. அந்த இடைக்காலத்தில் வெள்ளைப் பெண் புறாக்கள் எல்லாம் தங்களின் பாடசாலை நோக்கி பறக்கும் நேரமெல்லாம் எம் கண்கள் அவர்கள் போகும் திசையைத் தொடரும் வயது எமக்கு. அந்த வேகத்தில் உதித்த காதல் பாடல்கள்தான் இருபத்தைந்து வருடங்கள் மேலாகியும் கேட்ட அனைவரின் நெஞ்சிலும் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் பாடல்.

**"உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது
எனக்குத் தெரியுமா நீ என்னை அழைப்பது."**

இந்தப் பாடல் முதன்முதலாக எமது முதலாவது ஆண்டு விழாவில் அனைவருக்குமாக ஒலித்தது. ஒருமுறையல்ல இரு முறைகள். நான் யாரை எண்ணி இந்தப் பாடலை இயற்றினார் என்று எவரிற்கும் தெரியாது. அந்த இரகசியம் எனக்கு மட்டுமே தெரியும். இந்தக் காலத்தில்தான் நான் இயற்றிய பாடல்கள் எல்லாவற்றையும் ஒரு புத்தகமாக அச்சிட்டேன். எப்படியோ முயற்சி செய்து அந்தப் புத்தகத்தில் ஒன்றை நான் விரும்பியவளிடம் கொடுத்துவிட்டேன். என் கெட்டகாலம் அந்தப் புத்தகம் என்னிடமே மீண்டும் திரும்ப வந்து சேர்ந்துவிட்டது. என்ன செய்வது?

இப்படியான ஒருநாளில்தான் மகேஷ் என்னிடம் கேட்டார் பரமேஷ் எனக்கு கடையில் வேலை அதிகம். எனவே நிகழ்ச்சிகளைக் குறைத்து கொண்டு ஒலிப்பதிவு செய்வோமா? என்று. இதற்கு இன்னுமொரு காரணமும் இருந்தது. எங்களுடன் இருந்த சில வாத்தியக் கலைஞர்கள் முகுந்தன், மோகன், கங்காதரன், இன்னும்சிலர் பிரிந்து வேறு இசைக்குழு ஆரம்பித்துவிட்டனர். S.K. பஞ்சும் 'கலைவாணி இசைக்குழு' என்று தனியாக ஒரு இசைக்குழு ஆரம்பித்துவிட்டார். ஆனால் எமக்குள் பிரச்சனைகள் அன்றும் இருக்கவில்லை. இன்றும் இல்லை.

மேடை நிகழ்வுகளுக்கு மத்தியில் மீண்டும் கொழும்பு சென்ற நான் ஒலிப்பதிவு கூடங்களைத் தேடினேன். நான் கண்ட முதல் ஸ்டுடியோ Louis browns recording Studio. இதில் 4

புதுப்பாடல்களை ஒலிப்பதிவு செய்தோம். அந்தப் பாடல்கள் உனக்குத் தெரியுமா என்கிற எமது மிகப் பிரபலமான பாடலிற்கு முந்தியவை. அவையாவன.

1. **தக்காளிப் பழத்திற்கும் தளதள உடம்பிற்கும் வித்தியாசமில்லயைடி பாப்பா.**
2. **நெஞ்சைத் தொட்டுப் பேசவந்த கொஞ்சும் பாவையே.**
3. **தங்கமேனி கன்னம் தாமரைப்பூ.**
4. **முத்துக்கிண்ணக் கன்னத்தின் மேல்**

இவற்றை ஒலிப்பதிவு நாடாக்களில் எடுத்துக் கொண்டு இலங்கை வானொலிக்குச் சென்றேன். எதிர்பாராவிதமாக விமல் சொக்கநாதன் அவர்கள் வேலை முடிந்து வந்து கொண்டிருந்தார். விடயத்தைச் சொன்னேன் அவர் சொன்னார் 'நாடாக்களில் இவற்றை ஒலிபரப்பமாட்டார்கள். நீங்கள் மீண்டும் சென்று Louis Browns ஸ்தாபனத்தாரிடமே கேளுங்கள். இதை சாதாரண பேரழகளில் (disc) அமைத்துத் தருவார்களா?' என்று, அப்படியே நான்கு பாடல்களையும் ஒலிப்பேழைகளில் எடுத்து திரு. விமல்சொக்கநாதன் அவர்களிடம் கொடுத்து வந்தேன். **நான் திருக்கோணமலை வந்து சேர்ந்த மறுநாள் தேசியசேவை பகல் ஒரு மணிமுதல் ஒன்றரை மணிவரை நடைபெறும் கதம்ப இசையில் எமது நான்கு பாடல்களையும் ஒலிபரப்பினர் இலங்கை வானொலி நிலையத்தார். முழுவதுமாக எமது முயற்சியால் பதிவு பெற்ற எமது பாடல்களை வானொலியில் முதன் முதலாக ஒலிபரப்பிடக் காரணமானவர் திரு. விமல்சொக்கநாதன் அவர்கள். தேசிய சேவையில் அதற்காக இன்னும் அவருக்கு எனது நன்றிகள் பல.**

இந்த வேகத்தில் நிகழ்ந்த அனைத்து நிகழ்ச்சிகளும் அனைவரும் அளித்த வரவேற்பின் மத்தியில் திரு S.E. மகேஷ் அவர்களும் பொருளாதார உதவி செய்ய முன்வந்ததால் மேலும் ஐந்து பாடல்களை கெலனியா சரசாவி ஸ்டுடியோவில் ஒலிப்பதிவு செய்தோம். அந்தப் பாடல்களே யாவரும் மிக விரும்பிய



*என்னுடன் அன்று எனக்கு உதவிய அறிவிப்பாளர் திரு. விமல் சொர்க்கநாதன், இன்றும் எனது நண்பர்.*

1. உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது
2. நீ வாழும் இடம் எங்கே
3. நீ வாழும்இடம் எங்கே சோகப்பாடல்
4. போகாதே தூரப் போகாதே
5. நீயின்றி நிலவு ஏன் வந்ததிங்கு

இப்பாடல்களின் பெண்குரலில் K.R. கமலாராஜதுரை என்னுடன் பாடியிருந்தார். அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

எமக்கு சிறுவயதாக இருந்தாலும் எம்முடன் இசைந்து உழைத்தவர்கள் வயதிற்கூடிய பழம்பெரும் கலைஞர்கள் அமரர் றொக்சாமி. அமரர் பப்பாமிஸ்கின், அமரர் கிளம்குளோனர்

ஆகியோரும் இணைந்து பாடல்களிற்கு பக்கவாத்தியங்களை இசைத்ததால் அந்தப் பாடல்கள் அனைத்தையும் அனைவரும் இரசிக்கும்படி மென்மேலும் நாங்கள் மெருகூட்டினோம்.

அந்த சமயத்தில் மீண்டும் லூயிஸ்பிரெளன் ஸ்தாபனத்திற்கே எனது சமீபத்திய ஒலிப்பதிவு நாடாக்களுடன் சென்றேன். அங்கு நான் சந்தித்த பெண்மணி எனக்குக் கை கொடுத்து உதவினார். அவர் வேறுயாருமல்ல. லூயிஸ்பிரெளன் ஒலிப்பதிவுக்கூடத்தின் உரிமையாளர் திரு. ரோனி பெர்ணாண்டோ அவர்களின் மனைவி பிரபல உலகப்புகழ் பாடகி மினோம் இரத்தினம். ஆச்சரியப்படாதீர்கள் ஒருகாலத்தில் உலகம் பூராவும் வெற்றி வாகை சூடி வந்த ஜெட்லைனர்ஸ் இசைக்குழு அமைப்பாளர் அவர் Minome Ratnam.

இன்னும் ஆச்சரியப்படாதீர்கள் இவர் வேற்று மொழி மங்கையல்ல யாழ்ப்பாணத்துச் சுத்தத் தமிழ்ப் பெண், திருமதி மனோகரி இரத்தினம். இந்தப் பெயரையே அப்படி மாற்றியமைத்திருந்தார். Mr. பரமேஷ் என்று அவர் தமிழில் கதைத்தபோது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. **ஒன்றும் யோசிக்காதீர்கள் பரமேஷ் உங்களுடைய நான்கு பாடல்களும் நூற்றுக்கு நூறு மிகமிகத் திறமானவை. இலங்கைத் தமிழ்ப்பாடல்கள் சரித்திரமே இந்தப் பாடல்கள் வெளிவந்தபின்பு முழுவதுமாக மாறப்போகின்றது.** இன்னும் இரண்டே வாரத்தில் நாற்பத்தி ஐந்து R.P.M. தரத்தில் இசைத்தட்டுகளை உற்பத்தி செய்து தருகின்றேன்' என்று சம்மதித்துவிட்டார்.

இசைத்தட்டுகள் வெளியாவதற்கு முன் மறுநாள் பிரதி புதன்கிழமை தோறும் ½ மணிநேரம் Louies browns இசைத்தட்டுகளிற்கான விளம்பர நிகழ்ச்சியில், முதற்பாடலாக This time we introduce the first tamil record in Sri-Lanka Produced by Paramesh Konesh of Trincomallee என்ற அறிவிப்புடன் உனக்குத் தெரியுமா பாடலை ஆங்கில சேவையில் ஒலிபரப்பினார் திருமதி மினோம் இரத்தினம். அன்று நானும் கோணேஷ்சும் மகேஷ்சும் கொண்ட மகிழ்ச்சி இனி எங்கள் வாழ்வில் மீண்டும் வராது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

முதன்முதலாய் உங்கள் குழந்தை உங்களை நோக்கி சிரிக்கும்போதான மகிழ்ச்சி பின் அதே குழந்தை ஒரு கோடி வார்த்தைகளைப் பேசினாலும் கிடைக்குமா என்ன? இந்நிகழ்ச்சியைக் கேட்பவர்கள் அநேகர் ஆங்கிலம் தெரிந்த தமிழர்கள். வந்து குவிந்த வாழ்த்துக் கடிதங்கள் எல்லாம் ஆங்கிலத்தில்.

இதைத் தொடர்ந்து அமரர் மயில்வாகனன் அவர்கள் வர்த்தக சேவையில் முதன்முதலாக பிற்பகல் 4.25 மணிக்கு அன்றைக்கு அவர், தொகுத்து வழங்கிய 'இசைக்களஞ்சியம்' என்ற நிகழ்ச்சியை நிறைவு செய்ய நம்முடைய நாட்டைச் சார்ந்த பாடல் ஒன்று எம்.பி. பரமேஷ் பாடிய பாடல்' என்று கூறி எம்முடைய ''உனக்குத் தெரியுமா'' பாடலை ஒலிபரப்பினார். பாடல் முழுவதுமாக வானொலியில் ஒலிபரப்பாகி முடியவில்லை. அதற்குள் திருக்கோணமலை நண்பர்கள் முழுவதும் எம்முடைய வீட்டிற்கு வந்துவிட்டனர். பரமேஷ்வரன் என்ற எனது பெயரை என்னைக் கேட்காமலே எம்.பி. பரமேஷ் என்று மாற்றியவர் அமரர் அறிவிப்பாளர் எஸ்.பி. மயில்வாகனன் அவர்கள். இந்தப் பெயர் மாற்றம் ''மோதிரக் கையால் குட்டுப்பட்ட'' என்கிற தமிழ்ப் பழமொழியை எனக்கு நினைவூட்டுகிறது. என்றென்றும் என்னுடைய நன்றி அவருக்கு.

இந்தப்பாடல் இலங்கைச் சேவையில் மட்டுமல்ல இலங்கை வானொலியில் ஆசிய சேவையிலும் அடிக்கடி ஒலிபரப்பாகிவிட்டது. **அதனுடைய ஒட்டுமொத்த விளைவு, விட்டுப்போன உறவு தொட்டுத் தொடர, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த என் இதயம் தடவிச் சென்ற மயிலிறகான மாலினியின் காதுகளில் விழுந்து வளர்ந்தது. மீண்டும் அந்த இன்பக் கனவு.**

அன்றைய இலங்கை வானொலியின் 'பூவும் மொட்டும்' நிகழ்ச்சி என்றால் யோகா தில்லைநாதன் சுழலவிட்ட கடைசித் தனிப்பாடல் திருக்கோணமலை எம்.பி. பரமேஷ் பாடியது. அடுத்த அரை மணி நேரம் 'மகளிர் கேட்டவை' நிகழ்ச்சி ஒலிபரப்பாகும். அந்த நிகழ்ச்சியின் அறிவிப்பாளர் புவனரோஜினி ஒலிக்கச் செய்யும் பாடல் மணித்தியாலத்தில் இரு தடவைகள் ஒரே



*மட்டக்களப்பு மாநகர சபை மண்டபம் 1972இல் 2 நாட்களில் நான்கு நிகழ்ச்சிகள். இந்நிகழ்ச்சியை பார்க்க வந்த ரசிகர்கள்.*

பாடகரின் பாடல் மீண்டும் மீண்டும் ஒலித்தது வானொலி நிலையத்தில் அறிவிப்பாளர்களிற்குப் பெரும் பிரச்சனையை ஏற்படுத்திய பாடல் என்றால் அது எங்களின் ''உனக்குத் தெரியுமா'' பாடல்தான்.

அதேபோல இலங்கை வானொலியின் மிகப் பிரசித்தமான நிகழ்ச்சியான 'இன்றையநேர்' நிகழ்ச்சியின் நேயர்கள் தெரிவு செய்யும் முதற்பாடல் திருக்கோணமலை எம்.பி. பரமேஷ் பாடியது. திருக்கோணமலை கோகிலவர்த்தினிசிவராஜா என்றால் நிச்சயம் என் பாடல் ஒலிக்கும் என்கிற அளவுக்கு அந்தப் பாடல் அனைவராலும் மிகவும் இரசிக்கப்பட்டது.

**இப்பாடல் வெளிவந்து சில காலம் இலங்கை வானொலியில் இந்தியப் பாடல்கள் என்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்டது. பின் சில வருடங்கள் கழித்துத்தான் ஈழத்துப்பாடல் என்ற தனி நிகழ்ச்சியே இலங்கை வானொலியில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த அளவிற்கு இந்தப் பாடல் ஈழத்து இசையுலகில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தியது.**

**இலங்கை வானொலியில் மட்டுமல்லாது சிங்கப்பூர் மலேசியா மற்றும் சகல நாடுகளின் வானொலி நிகழ்ச்சிகளும் இந்தப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.** இந்த முதலாவது இலங்கைத் தமிழ் இசைத்தட்டில் அடங்கிய 4 பாடல்களும் எங்கெங்கும் மீண்டும் மீண்டும் ஒலிபரப்பப்பட்டன. இந்தியாவின் திருச்சி வானொலி நிலையத்தில் இந்தப் பாடலின் முதல் அடிகளை ஒலிபரப்பி அறிவிப்பாளர்கள் ஜெயங்கொண்டான் கூத்தபிரான் ஆகியோரின் மிகச் சிறந்த விமர்சனங்களைப் பெற்ற பாடலிது. இந்த அளவிற்கு அனைவராலும் பாராட்டப்படும் என்பது நாங்களே எதிர்பாராதது.

இலங்கை வானொலியிற் கடமையாற்றிய B.H. அப்துல் அமீது. நடராஜசிவம், ராஜேஷ்வரி ஷண்முகம். சரா இம்மானுவேல், மயில்வாகனன், சர்வானந்தா, ஜெகன், லோகேஷ், ஜெயச்சந்திரன், ராஜகுரு சேனாதிபதி கனகறட்ணம் போன்ற அனைவருமே எமது பாடல்களை ஒலிபரப்பி எம்மை உற்சாகப்படுத்தினார்கள்.

இப்படியாகச் சென்று கொண்டிருந்த மகிழ்வான தருணங்களில்தான் 'ஈழத்துப் பாடல்கள்' என்ற நிகழ்ச்சி ஆரம்பித்ததும் சிலவிஷமிகள் எமது பாடல்களைத் தடை செய்தனர். ஆனால் அவர்களின் அந்த நடவடிக்கையும் நெடுநாள் நீடிக்கவில்லை காலப்போக்கில் ஈழத்துப் பாடல் நிகழ்ச்சியிலும் எமது பாடல்கள் ஒலிபரப்பாகின. இதற்கு வழிவகுத்த சில நல்ல உள்ளங்கள் இன்று வெளிநாட்டு வானொலிளில் சேவையாற்றுகின்றனர் என்பதில் மகிழ்ச்சி. அவர்களிற்கு எனது வாழ்த்துக்களை இந்தக் கணத்தில் தெரிவிக்கிறேன்.

இந்த இசைத்தட்டு வெளிவந்ததற்குப் பிறகு எமது இசைநிகழ்ச்சிகள் நிறைய நிகழ ஆரம்பித்தன. பல்வேறு நிகழ்ச்சிகள் ஒப்பந்தமாயின. தினகரன் விழாவின் பின்னர் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் எமது இசைத்தென்றல் நிகழ்ச்சி நடைபெற்றது. **மண்டபம் நிறைந்த ரசிகர்கள் மத்தியில் இலங்கையின் நாடகத்தந்தை அமரர் நவாலியூர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பரமேஷ் கோணேஷ் மகேஷ் மூவருக்கும் 'ஈழத்து மெல்லிசை மன்னர்' என்ற கௌரவ விருதை**

**வழங்கினார்கள்.** அதன் பின்னரும் யாழ் நகரில் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்தினோம்.

1972 வரை தொடர்ந்து மன்னர் வவுனியா வந்தாறுமூலை போன்ற பல இடங்களில் எமது இசைத்தென்றல் நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தோம். சிங்களமக்கள் அதிகமாக வாழும் நீர்கொழும்பிற் கூடத் தனித்தமிழ் இசை நிகழ்ச்சி நடத்தி வெற்றி கண்டுள்ளோம். அந்த வருடத்தின் ஒருநாள் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இசைத்தென்றல் நிகழ்ச்சிக்கு வருகை தந்த சனநெருக்கடியால் நிகழ்ச்சி முடிவடைய இரவு 9.30 மணியாகிவிட்டது. அந்த இசைத்தென்றல் நிகழ்ச்சி மிகப் பெரிய வெற்றி பெற்றது என்று அனைவரும் பாராட்டினார்கள். நிகழ்ச்சி முடிந்தபின்பு அனுமதிச்சீட்டிற்கான வரி கட்டுவதற்கு நான் மட்டும் மீண்டும் மட்டக்களப்பு சென்றிருந்தேன். அப்போதுதான் எனது அன்புத் தந்தை எம்மை ஆளாக்கிய தெய்வத்தின் மரணம் நிகழ்ந்திருக்கிறது. நான் மட்டும் அவரது அருகில் இல்லை. இப்படித்தான் என் வாழ்வில் நிறைய சோகங்கள். நான் கொடுத்து வைக்காதவனாகி விட்டேன்.

எமது தந்தை எப்போதும் எங்களிடம் கூறியிருந்தபடி அவரது விருப்பப்படி சவக்கிரியைகள் எதுவும் செய்யாது குளிப்பாட்டாது அவர் விரும்பியவண்ணமே அவரது பூதவுடலைத் தகனம் செய்தோம். **இறந்த மனித உடலுக்கு இறுதிச் சவக்கிரியைகளும் குளிப்பாட்டுதலும் பொய், அவசியமற்றது என்பார் என்தந்தை. குறிப்பிட்ட நேரமான 1972 ஏப்ரல் மாதம் 5ம் தேதி சரியாக ஐந்து மணிக்கே தந்தையின் பூதவுடல் எமது இல்லத்தைவிட்டுப் புறப்பட்டு விட்டது.**

மிகச்சரியாக ஏழு மணிக்கு மணியடித்து இசைத்தென்றல் நிகழ்ச்சியைத் தொடங்குவதுபோல் தனது தந்தையின் இறுதியாத்திரையையும் செய்துவிட்டார்கள் பரமேஷ் கோணேஷ் என்று எம்முடன் இருந்த பாடசாலை மாணவர்கள் அனைவரும் துன்பக் கண்ணீரோடு கதறி ஓலமிட்டனர்.

அந்தக் காலத்தில் **இலங்கையில் யாழ்ப்பாணம் திருக்கோணமலை என்று பிரதேசரீதியாகப் பெரிய பாகுபாடு**

**மக்களிடையே இருந்தது. மக்களின் இந்த மனோபாவத்தை மாற்றி அமைக்க என் தந்தையார் தம் வாழ்நாளில் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல அவர் முயற்சி நிச்சயமாக வெற்றியடைந்திருக்கிறது என்பது அவருடைய இறுதி ஊர்வலத்தில்தான் தெரிந்தது. கற்றவனிற்குச் சென்ற இடமெல்லாம் மதிப்பு என்பதற்கமைய என் தந்தை யாழ்ப்பாணத்தவர் என்றாலும் எங்கள் வீடு திருக்கோணமலையில் அமைந்திருந்தது. அவரது இறுதிச் சடங்கில் திருக்கோணமலையின் எல்லார் வீட்டிலும் ஒருவர்கூட பாக்கியில்லாத அளவிற்கு தகனக் கிரிகையிற் கலந்து கொண்டனர். திரண்டிருந்த பெரும் மக்கள் கூட்டமும் சகல பாடசாலை மாணவ மாணவிகளின் கண்ணீர் அஞ்சலியும் எனது தந்தையின் பாகுபாடுகளற்ற நற்செயல்பாடுகளை நிரூபித்தன.**

அன்பு, அறிவு, நியாயம், நீதி போன்ற மிகச்சிறந்த நற்குணங்கள் நிறைந்தவர் என் தந்தை அமரர் பீதாம்பரன். அவரைபபோன்ற ஒரு தந்தை எமக்கு வாய்த்தது வேறு எவரிற்கும் கிடைக்க முடியாத பொக்கிஷமாகவே நான் உணர்கிறேன். அவரிடம் பயின்ற அனைத்து மாணவர்களிடமும் பிரம்பெடுக்காமல் படிப்பித்த அனைத்து மாணவர்களின் பெற்றோர்களின் மனம் குளிரப் பிள்ளைகளை ஆளாக்கியவர் என் தந்தை. இந்த உலகில் சைவமும் தமிழும் உள்ளவரை அவர் புகழ் இருக்கும்.

அப்பா விடைபெற்றுப்போன பின்னர் வீடு முழுவதும் ஒரே மௌனம் புயலடித்து ஓய்ந்தது போலிருந்தது. அவரின் இருப்பின்மை தந்த வெறுமை வெக்கைக்காற்றைப் போலச் சுழன்று கொண்டிருந்தது வீட்டின் அறைகளெங்கும். அவர் இறந்தது தனது எழுபத்து நான்கு வயதில்தான் என்றாலும் வாழ்க்கையை முழுவதுமாக ஆனந்தமாக வாழ்ந்து முடித்த பின்புதான் என்றாலும், இருந்தும் அவரிடம் நான் கற்றுக் கொள்ளமுடியாது போன விடயங்கள் பற்பல இருந்தன. அதுவே என்னை எனக்குள் மிகவும் வாட்டி வதைத்தது.

அழுதழுது கழிந்து கொண்டிருந்த அந்த நாட்களில்தான் **அவரின் நினைவுகள் தந்த துடிப்புகளுக்குள் தான் அமரர் விபுல**

பீதாம்பரன் என்னும் நினைவு மலரை எழுதி முடித்து அவர் இறப்பின் பின்னான முப்பத்தோராவது நாளன்றே வெளியிட்டுவிட்டேன். அதில் மூத்த தமிழ் அறிஞர் இந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு. வெள்ளைவாரணர் அவர்களுடைய அனுதாபச் செய்தியும் அச்சிட்டிருந்தேன். அந்த நினைவுமலரினை அவர் கைகளிற் காண்பிக்கக் கிடைக்க வேண்டுமென்பதால் அன்று அண்ணாமலையிற் கல்விகற்கும் செல்வி மாலினியிடமே கொடுத்துவிட எண்ணி அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். அங்கு எதிர்பாராத விதமாக விடுமுறை நாட்களுக்காக வீட்டிற்கு வந்திருந்த மாலினியைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடமே நினைவுமலரினைக் கொடுத்து பேராசிரியரிடம் சேர்ப்பிக்கச் சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

நான் அவரின் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது நாளை மறுநாள் இந்தியா செல்கிறேன். இதுவே கடைசிப் பரீட்சை, விரைவில் வந்திடுவேன் என்று மாலினி சொல்லிக் கொண்டிருந்தார். நானும் அவருக்கு வாழ்த்துக் கூறிவிட்டு எல்லோரும் என்னைவிட்டு பிரிகின்றனரே என்று எண்ணிக் கொண்டே கிளம்பி வந்தேன். நான் சந்திக்கச் சென்ற அன்று மாலினி வீட்டார் என்னுடன் நடந்த முறையும் எனக்குத் திருப்தியாய் இருக்கவில்லை.

இருகோடுகள் திரைப்படம் போல் தந்தையின் இழப்பு மாலினி வீட்டாரின் நடவடிக்கை என்று இரண்டு சங்கடங்களும் மனதில் போட்டி போட்டதால் எது அதிகமாக என்னைப் பாதிப்படைய வைத்தது என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை. திருக்கோணமலைக்கு திரும்பி வந்த நான் அதற்குப்பிறகு மூன்று மாதமாக எந்த இசைநிகழ்ச்சிகளும் செய்யவில்லை. திடீரென கோணேஷ் மகேஷ் இருவரும் தீர்மானித்து வற்புறுத்தியதன் பேரில் பல நாள் இடைவெளியின் பின்னர் மட்டக்களப்பில் மீண்டும் இசைத்தென்றல் நிகழ்ச்சியினை நிகழ்த்தினோம். அந்நிகழ்ச்சியில் நான் இயற்றிப் பாடிய,

**எங்கே நீ சென்றாலும் எந்தன்**
**பாடலென்று உன் காதில் விழும்**

**எங்கே நீ சென்றாலுமெந்தன் பார்வை**
**உன்னைத் தேடிவரும்**

என்ற பாடல் மக்கள் அனைவரின் மத்தியிலும் மிகுந்த பாராட்டைப் பெற்றது. இந்தப் பாடலை ஏன் இயற்றினேன் என்று உங்களிற்கு நான் சொல்லாமலேயே புரிந்திருக்கும். (இந்தப் பாடலை எனது மகள் பிரபாலினி இசையமைத்து வெளிக்கொண்டு வர இருக்கும் எனது அடுத்த குறுந்தட்டில் நான் பாடியிருக்கிறேன். நீங்கள் என் குரலில் கேட்கலாம்).

நினைவுகள் வாழ்வின் கடைசிக் கணங்கள் வரை எப்போதும் உடனிருப்பது அல்லவா. எனக்கு இந்தப் பாடலின் தொடர்பான நினைவுகளும் அப்படித்தான். நான் இயற்றி இசையமைத்துப் பாடிய இந்தப் பாடலை எழுதி மாலினிக்கு அனுப்பியிருந்தேன். பாடலை மட்டும்தான் வேறெந்த வாக்கியமும் அதில் இல்லை. நிச்சயமாக அது கடிதமல்ல.

மாலினியிடம் இருந்து பதில் வந்தது. அந்த பதிலில் நான் அனுப்பியிருந்த பாடலின் கடைசி அடிகள்

**எங்கிருந்து பார்த்தாலும் நிலவு வரும்**
**எங்கே நீ சென்றாலும் உன் நினைவு வரும்**
**அங்கொரு நிலவு வரும்**
**இங்கொரு நிலவு வரும் என்பதில்லை.**
**இங்கொரு நினைவு வரும்**
**அங்கொரு நினைவு வரும் உண்மையில்லை.**
**ஆயிரமாயிரம் பார்வைக்கும் அவள்தான் ஒரு நிலவு**
**அவரவர் மனதிற்குத்தானே தெரியும் அதனழகு**
**மறந்தும் மறக்காத நிலையில் நானிருக்க**
**மலர்ந்தும் மலராத கதையாய் முடிக்காதே**
**எங்கே நீ சென்றாலும் எந்தன் பாடல்**
**என்றுமுன் காதில் விழும்**

இந்தப் பத்தியை மட்டும் வெட்டி மாலினி எனக்கு அனுப்பியிருந்தார். வேறு பதிலில்லை. எனக்கு காரணமும் விளங்கவில்லை.

இப்படியாகத் தொடர்ந்து கொண்டிருந்த போதுதான் மேடை நிகழ்ச்சிகள் நடத்துவது கஷ்டமாக இருந்ததால் மீண்டும் நான்கு பாடல்களை ஒலிப்பதிவு செய்து வெளியிட்டோம். பரமேஷ் கோணேஷ் மகேஷ் என்ற பெயரில் இசைத்தட்டுக்கள் தயாரித்தோம்.

இதற்காக நான் இயற்றி இசையமைத்த பாடல்கள்தான்.

1. **மனமாளிகை ரோஜா மணம் வீசுது லேசா**
2. **பாடலெனக்கிது முதற்தரம்தான்**
3. **அழைக்குமோசை கேட்கலையா**
4. **எழுதுகிறேன் பாட்டு இனியதமிழ் சேர்த்து**

இவைகளுக்குள் அழைக்குமோசை கேட்கலையா என்கிற பாடலுக்கு மட்டும் இருபத்துமூன்றுக்கும் குறையாத வாத்தியக் கருவிகளைச் சேர்த்து இசையமைத்திருந்தோம்.

தமிழில் வெளியிட்ட இதே பாடல்களைச் சிங்களத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டோம். இந்தத் தமிழ்ப் பாடல்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து எழுதித் தந்தவர் கவிஞர் மெல்ரோய் தர்மறட்ண. "**உனக்குத் தெரியுமா**" என்ற பாடலை மட்டும் நானே சிங்கள மொழியில் "**திருநீல அஸ்தெக்கல்**" என்று பாடினேன். மற்ற பாடல்களை வேறுசிலர் பாடினர் இதில் குறிப்பிடத் தகுந்த முக்கியவிடயம் "உனக்குத் தெரியுமா" பாடல் தமிழில் இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவைகளில் ஒலித்ததைவிட சிங்கள மொழிச் சேவையில் நான் சிங்கள மொழியில் பாடிய உனக்குத் தெரியுமா பாடல் ஒவ்வொரு மூன்று மணிக்கொரு தடவை ஒலித்தது.

ஒரு தமிழன் சிங்கள மொழியில் பாடல் பாடி சிங்கள மக்களின் பரிபூரண ஆதரவு பெற்றது என்கிற பெருமையையும் பல்லாயிரக்கணக்கான தடவைகள் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட தமிழன் பாடிய சிங்களப் பாடலும் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. எப்படி சுஜாத்தா அந்தநாயக்க என்கிற சிங்களப் பெண்மணி பாடிய பாடல்கள் தமிழில் வெற்றி பெற்றதோ

அப்படி நான் பாடிய பாடல் சிங்கள மக்கள் மத்தியிலும் மிகப் பெருமளவு வெற்றி பெற்றது.

உனக்குத் தெரியுமா பாடலை நானே சிங்களத்திலும் பாடினேன். அடுத்து அழைக்கும் ஓசை கேட்கலையா என்ற பாடலை கவிஞர் மெல்ரோய் அவர்களே சிங்களத்தில் இயற்ற அந்தக் காலத்தில் ஆரம்ப காலப் பாடகராகச் சிறந்து வளர்ந்து கொண்டு வந்த இளைஞர் விக்ரறட்னாயக்காவைத் தெரிந்தெடுத்து பாடிடச் செய்தோம். அழைக்குமோசை கேட்கலையா என்ற எனது தமிழ்ப் பாடலை சிங்களத்தில் 'சுலங்கசெலவென நாதல்லை' என்றும் மனமாளிகை ரோஜா மணம் வீசுதுலேசா என்ற பாடல் சிங்களத்தில் - 'தூர அந்த அத்தீத்தே' என்றும் பதிவாகின. இந்தத் தடவை தமிழில் 4 பாடல்கள் 2 45Rpm இசைத்தட்டுக்கள்.

அன்று நான் விக்ர றட்னாயக்கா அவர்களுக்குக் கொடுத்த பணம் ரூபா முன்னூறு மட்டுமே. இந்தப் பாடல்கள் வெளிவந்த பின்னரே விக்ர றட்னாயக்கா அவர்கள் மேலும் சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யமானவர். ***ஒரு சிங்களக் கலைஞனை புதிய பாணியில் அவரின் படைப்பாற்றலை வெளிக்கொணர்ந்து அவர் திறமையை வெளிக்காட்டி அவரை வளர்த்தெடுத்த முக்கியப் பங்கு தமிழ்க் கலைஞர்களான பரமேஷ்-கோணேஷ் எமக்குண்டு என்பதை பெருமையுடன் குறிப்பிடுகிறேன்.***

இந்தப் பெருமை ஈழத்தமிழ்க் கலைஞர்களிற்குச் சேரட்டும். இந்தப் பாடல்களையெல்லாம் ஆச்சரியப்படும்படியான தரத்துடன் கெலனியா சரசாவி ஸ்டுடியோவில் ஒலிப்பதிவு செய்தவர் 15000 பாடல்களுக்கும் அதிகமாக ஒலிப்பதிவு செய்த மிகப் பிரபலமான ஒலிப்பதிவாளர் மேவின்றொட்டிக்கோ அவர்கள்.

இதைத் தொடர்ந்து சிங்கள இசைத்தட்டுத் தயாரிப்பாளர்கள் என்னைச் சந்தித்தபொழுது தமது சிங்கள மொழியில் அமைந்த பைலாப் பாடல்களிற்குத் தமிழ் மொழியிற் பாட்டியற்றிப் பாட வேண்டுமென்றார்கள் நான் சம்மதித்து விட்டேன். ***அதற்குப் பின்புதான் சவாலான வேலைகள் வந்தன. சில நண்பர்கள் சொன்னார்கள் பரமேஷ் நீங்கள் முட்டாள்தனமான வேலைபார்க்கப் போகின்றீர்கள், தமிழ் மொழி சிங்கள பைலாப்***

**பாட்டு சேராது பைலாவிற்குச் சிங்கள மொழிதான் பொருத்தம் என்றார்கள்.**

அவர்களிடம் ''இல்லை, அது தவறு என்று நிரூபிக்கிறேன்'' என்பதை மட்டும்தான் பதிலாகச் சொன்னேன் மறுவாரம் கொழும்பு சென்று நான் இயற்றிப் பாடிய பாடல்தான்.

**தமிழ்பைலாப் பாட்டுபாட வேண்டிக்கேட்டதென்று**
**தமிழ்மொழியிற் பாடுகின்றேன் அதே தானம் கொண்டு.**
.................
..................
**எங்கள் மொழியிற் பாடினாலும் துள்ளுதானம் சேரும்**
**சொந்த மொழியைப் பழிக்காதே இந்தப்பாடல் கூறும்**
**எங்கள் மொழியும் எழுதும் விதம் துள்ளுமிசையிற் சேரும்**
**இந்தப்பாடல் நான் எழுதும் செந்தமிழ் சேர் பைலா.**

கொலுசுமகே பகளவாகே என்று காலஞ்சென்ற கலைஞர் ஜோதிபாலா அவர்கள் பாடிய பாடலைத் தமிழிற் பாடினேன். இந்தப் பாடலின் சில அடிகளைத்தான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். இந்தச் சிங்களப் பாடலிற்கு இசையமைத்தவர் ஸ்டுடியோவில் தமிழில் நான் பாடி முடித்ததும் என்னைக்கட்டி அணைத்து முத்தமிட்டு சிங்களப் பாடலை விடச் சிறப்பாக இந்தத் தமிழ் பாடல் உள்ளதென்றார். கலைஞர் ஜோதிபாலா அவர்கள் ஆனந்தக் கண்ணீர் சிந்தி என்னை வாழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து அதே இசைத்தட்டில் இருந்த மிகுதி மூன்று சிங்களப் பாடல்களையும் தமிழில் இயற்றிப் பாடிக் கொடுத்தேன். அந்தப் பாடல்கள் **''நீலஜலா சேரங்கணா அன்ச குமாரி''** என்ற சிங்களப்பாடலை **''நீலச்சேலை கட்டி வந்தாள் எந்தன் காதலி''** என்றும் **''நானுன்னைத்தேடும் நேரம் வானில் வந்தாடும் நிலா'', ''ஆடி அசைந்து நடந்து போகும் சிங்காரப் பெண்ணே உன்னைப் பார்த்துப் பாடுகின்றேன் ஓடாத கண்ணே''** என்றும் அமைந்தன அந்த நான்கு பாடல்களும்.

இந்த இசைத்தட்டு வெளியிடப்பட்டு அடைந்த மிகப்பெரிய வெற்றியைத் தொடர்ந்து அதே நியூ சவுண்ட் எண்டர்பிரைஸ் ஸ்தாபன உரிமையாளர் பேபிமாத்தையர் தற்பொழுது அமரராகி

விட்டார் மற்றுமொரு 4 பாடல்கள் அடங்கிய 45RPM இசைதட்டைக் காட்டி இவற்றையும் பாடித் தரச் சொன்னார். அந்தப் பாடல்கள்தான்.

1. **பொப் இசையிற் பாடல்கேட்டு ஆட்டமாடுங்க**
**தப்பிசை எனக் கருதாமல் ரஸித்துப் பாருங்க.**
2. **மஞ்சள் பட்டாடை கட்டும் மஞ்சுளா மனம் அஞ்சலா**
3. **கோணேஷ்வரம அருள் நாம்நாடு திருக்கேதீஸ்வரம்**
**வளர்நாடு நல்லூர்க் கந்தள் அருள்நாடு.**
4. **நானுனைத் தேடும் நேரம் வானில் வந்தாடும் நிலா.**

இந்தப் பாடல்கள் அனைத்தும் பிரமாதமாக விலைப்பட்டன. முப்பத்தியிரண்டு வருடங்களின் முன்பே Music Trackல் தெளிவாகப் பாடிக் கொடுத்தேன். இன்று விஞ்ஞானம் வளர்ந்த நாட்டில் Music Track-ல் பாடுங்கள் என்றால் யோசனை செய்யும் பாடகர்களைப் பார்த்து நான் கவலைப்படுகின்றேன். இந்தப் போக்கினை வளரும் கலைஞர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும்.

மேடை நிகழ்ச்சிகளில் சாதாரண ஒலிவாங்கிகள் ஒலிபரப்புச் சாதனங்களை மட்டுமே வைத்து மேடை ஒலி சிறப்பாக அமைந்திருக்கிறோம் நாங்கள். இன்று இவ்வளவு தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பின்பும்கூட வெளிநாடுகளில்கூட விதவிதமான ஒலியமைப்புக் கருவிகளைக் கொண்டு மேடை ஒலியமைப்பை நெறிப்படுத்தவில்லை என்பதற்காகத்தான் ஒவ்வொரு நிமிடமும் கவலைப்படுகிறேன். திரைப்படத்திற்கு ஒலியமைப்பாளரை விட ஒளிப்பதிவாளர்தான் திறமைசாலியாக இருக்க வேண்டும். ஏனெனில் திரைப்படத்திற்கு ஒலி பின்புதான் இணைக்கப் படுகின்றது. ஆனால் மேடை இசைநிகழ்ச்சிகளின் ஒலியமைப்பாளர் மிகுந்த திறமைசாலியாக இருக்க வேண்டும். ஏனென்றால் இது மக்கள் நேரிற் கேட்பது.

பழைய நினைவுகளின் தொடர்பை விட்டு வேறெங்கோ சென்றுவிட்டேன். மீண்டும் நான் சிங்களப் பாடல்களைத் தமிழிற் பாடிய விபரங்களிற்க அழைத்து செல்கின்றேன். வெளிவந்த இந்தப்

பாடல்கள் அடங்கிய இசைத்தட்டுகளின் வெற்றியால் நிறைய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் **சகல சிங்கள இசைத்தட்டுக்களையும் தமிழிற் பாடுங்கள் என்று கேட்டார்கள், கெஞ்சினார்கள். நான் பாடிய அந்த எட்டு பாடல்களிற்கும் அன்று 2000 ரூபாய்கள் கொடுத்தார்கள். அன்று அது ஒரு பெரும் தொகையான பணம். நான் சகல சிங்களப் பாடல்களையும் பாடிக் கொடுத்திருந்தால் ஒரு வேளை பெரும் கோடீஸ்வரனாகி இருப்பேன்.**

ஆனால் நான் அதைச் செய்யவில்லை. பரமேஷ் கோணேஷ் மற்றும் மகேஷ் ஆகிய நாங்கள் மூவரும் கலந்தாலோசித்தபோது தொடர்ந்து இதைச் செய்தால் பரமேஷ் கோணேஷ் இசைத்தட்டுப் பாடல்கள் என்ற தராதரமும் பெயரும் குறைந்துவிடும் என்ற தீர்மானத்தில் அதைக் கைவிட்டுவிட்டேன். இல்லையேல் என்னிடம் எக்கச்சக்கமான பணம் இருந்திருக்கும். இரண்டாயிரத்திற்கும் மேலான பாடல்களும் அன்று வெளிவந்திருக்கும். ஆனால் நான் அதைச் செய்திருக்கலாம். கோணேஷ் அவர்களின் தீர்மானத்தைக் கேட்டுச் செய்யாமல்விட்டது தவறு என்று இப்போது உணர்கின்றேன். நான் சகலவற்றையும் பாடியிருந்தால் இன்று தமிழ் மக்களிற்குப் பல தொகையான தமிழ் பைலாப் பாடல்கள் கிடைத்திருக்கும்.

இந்த வேளையில் தற்போது டென்மார்க்கில் இருக்கும் ஷன் அவர்கள் என்னை அழைத்துத் தானும் அர்சுனன் என்பவரும் சேர்ந்தெடுத்த ''கலியுககாலய'' என்ற சிங்களப் படத்தைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்று அதில் என்னைப் பாடும்படியும் கேட்டார். சுஜாத்தா அத்தநாயக்கா அவர்களுடன் நான் பாடிய பாடல் ''மனம் எனும்'' என்று ஆரம்பிக்கும் பாடல். இந்த வசனங்களை எழுதினால் அந்தப்பாடலை வானொலியில் நீங்கள் அடிக்கடி கேட்ட ஞாபகம் வரும்.

**கலியுக காலம் மனம்போல் வாழ்வு**
**இனிமேற் குறையில்லை**

அந்தப் படம் திரையரங்குகளில் திரையிட்டபோது இந்த பாடல் வரும் காட்சிக்காவே பல தடவை படம் பார்த்தவர்கள்

உள்ளனர். இந்த வாய்ப்பை எனக்கு அளித்த திரு. ஷன் அவர்களிற்கும் என் நன்றி.

இதன்பின்னரும் தொடர்ந்து இசைத்தென்றல் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தது. இக்காலக் கட்டங்களில் ஈழத்துப் பாடல்கள் என்ற பதினைந்து நிமிட நேர நிகழ்ச்சியை இலங்கை வானொலியில் ஆரம்பித்தவர்கள் அதில் எமது பாடலை ஒலிபரப்பாமல் விட்டுவிட்டனர். அதுமட்டுமல்ல. நான் இயற்றிப்பாடி நாங்ள் இசையமைத்து இலங்கை வானொலியில் ஒலிபரப்பு செய்யக் கொடுத்த PKMT 003, PKMT 004, 45 RPM இசைத்தட்டுகளிலிருந்து இரு பாடல்களை ஒலிபரப்பக் கூடாது என்று தடை செய்துவிட்டனர் காரணம்,

மணமாளிகை ரோஜா மனம் வீசுது லேசா என்ற பாடலில் நான் எழுதிய சில வரிகளை கீழே கொடுக்கிறேன். வாசித்துப் பாருங்கள்.

**யாழ்ப்பாண மாங்கனிகள் உன்கன்னமா – விபுலன்**
**மீன் பாடும் நாட்டுத் தேனும் வாயிலூறுதா**
**திருக்கோணமலை வெள்ளீர்க்கிணறும் நீ குளித்ததா**
**கோணேசர் கோயிற் கோபுரம் உன் உள்ளமா?**

யாழ்ப்பாணம்-மட்டக்கிளப்பு-திருக்கோணமலை மூன்று நகரங்களையும் 'தமிழர்களுக்கான நகரங்கள்' என்று குறிப்பிட்டு நாட்டுப்பிரிவினையை வலியுறுத்தும் பாடலென்று சுட்டிக்காட்டித் தடை செய்தனர். ஆனால் இன்று என்ன நடந்தது? இதுவே கேள்விக்குறியாய் உள்ளது.

**எழுதுகிறேன் பாட்டு**
**இனிய தமிழ் சேர்த்து**

இந்த வரிகளில் "**மெல்லிசைக்கேதான் பெருமை**" என்று குறிப்பிடுவதால் கர்னாடக சங்கீதத்தை அவமதித்துப் பாடியுள்ளேன் என்று அன்று வானொலி நிலையத்திற்குள் இருந்த சில அறப்படித்த கர்னாடக இசைமட்டும் கற்றவர்கள் தடைசெய்தனர். அதுமட்டுமல்ல இந்தப்பாடலில் இசைத்தென்றல் நாளும் இளநெஞ்சில் வீசும் என்றொரு அடிவருகின்றது. எமது

நிகழ்ச்சியின் பெயரும் இசைத்தென்றலாகும். எனவே இது எமக்கு இலவச விளம்பரமாம். அதனால் இந்தப் பாடல்கள் தடை செய்யப்பட்டதாம். இப்படி அற்பக் காரணங்களைச் சொல்லி ஒலிபரப்பாமல் தடை செய்தனர்.

உண்மையில் இவற்றை ஒலிபரப்பாமல் செய்ததன் காரணம், இந்த இரண்டு பாடல்களும் மிகச் சிறந்தவை. இந்தத் தடைக்குக் காரணம் சில விஷமிகளின் உள் வேலை. அவர்களை மக்களிற்குத் தெரியும். நான் அவர்களின் பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை.

ஏனிப்படித் தடை விதிக்கிறீர்கள் என்று கேட்டு நிலைய உயரதிகாரிகளுக்கு தெரியவேண்டும் என்பதற்காக ஆங்கிலத்தில் கடிதம் எழுதி கையோடு எடுத்துக்கொண்டு வானொலி நிலையத்திற்குச் சென்றேன். வானொலி நிலைய வாசலில் சரா இம்மானுவேல் வந்து கொண்டிருந்தார். என்னடாப்பா பரமேஷ் இப்பதானே உன் பாடலை ஒலிபரப்பி விட்டு வருகிறேன் என்ன விடயமென்றார். கடிதத்தை அவரிடம் காட்டி இதைக் கொடுக்க வந்தேன் என்றேன். அதற்கவர் பரமேஷ் இந்த வானொலி நிலையம் முன்பு பயித்தியக்கார ஆஸ்பத்திரி இருந்த இடத்திற் கட்டியிருக்கின்றார்கள் போலும்.

இதை எல்லாம் கொடுத்து எங்களை உனது ஒரு பாடலும் போடமுடியாமற் செய்துவிடாதே. வா பம்பலப்பட்டிக்கு சென்று வடை சாப்பிடுவோம் என்று அழைத்துச் சென்றுவிட்டார். அவர் கூறியது சரியாகத்தான் இருக்கும் என்று நானும் திரும்பிவிட்டேன்.

இக்காலகட்டத்திற்குத்தான் பொப் இசை நிகழ்ச்சி என்ற அருமையான நிகழ்ச்சியை ஆரம்பித்தார் அறிவிப்பாளர் B.H. அப்துல் ஹமீது அவர்கள். பொப் இசை என்றால் நிச்சயமாகப் பரமேஷ் பாடல் ஒலிக்கும் என்று நம்பலாம். பொப்பிசை நிகழ்ச்சி ஒலிப்பரப்பாகி ஓராண்டு பூர்த்தியான போது அதன் சிறப்பு அரை மணி நேர நிகழ்ச்சி ஒலிபரப்பில் பொப் இசை வளர்ந்த கதையைத் தொகுத்தளித்துக் கொண்டிருந்த அறிவிப்பாளர் B.H. அப்துல் ஹமீது அவர்கள் சரியாக 3.35 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சியின்

இறுதிப் பாடலாக இந்தப் பொப் இசைக் கலைஞர்கள் எல்லோருக்கும் முன்பாக முதன் முதலாக இலங்கைத் தமிழுலகில் இசைத்தட்டுத் தயாரித்து வெற்றி கண்டவர்கள் திருக்கோணமலை பரமேஷ் கோணேஷ் சகோதரர்கள் என்று கூறி நான் பாடிய "**உனக்குத் தெரியுமா**" என்ற பாடலை ஒலிபரப்பினார். அந்த நாளும் அவர் குரலும் இன்றும் என் நினைவில் உள்ளது. கமீட் அவர்களிற்கும் என் நன்றி.

1973ஆம் வருடத்தில் ஒருநாள் நான் ஒருபோதும் எதிர்பாராத வகையில் ஒரு சிலந்தியின் வலையைப் போல் பல்வேறு நபர்களின் எதிர்ப்பு என்னை அறியாமலேயே என்னைச் சுற்றி பின்னப்பட்டு விட்டது. யாரைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தேனோ யாரின் பேச்சைக் கேட்பதற்காக என் வாழ்க்கை உருவாகியிருந்ததோ அந்தப் பெண்ணின் வீட்டிற்கே சென்றிருந்தேன். ஆம் என் மனதைத் தன் வசமாக்கி வைத்திருந்த என்னாருயிர் பெண் மாலினி வீட்டிற்கே நேராகச் சென்றிருந்தேன். அங்கே அந்த வீட்டில் கதை பேச்சுகள் எல்லாம் மாறியிருந்தன. பாட்டுக்காரனுக்குப் பெண் கொடுக்கக்கூடாதாம் என்று மாலினியின் தாயார் என்னிடம் கூறினார்கள். என்னிடம் பதில்களே இல்லை. வெளியே வந்தபோது மனம் முழுவதும் அடையாளம் தெரியாத சுமை தாங்க முடியாத அழுத்தம் நிறைந்த சுமை. சஞ்சலம் நிறைந்த மனதுடன் கலைத்துறை சார்ந்த எந்தப் படைப்பியக்க நடவடிக்கையிலும் பங்கேற்க முடியவில்லை. வேறென்ன சொல்ல ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு மேல் நிகழ்ச்சியே நடக்கவில்லை.

எவ்வளவோ மனச்சிக்கல்களுக்கிடையேயும் நான் அன்றைய நாட்களைக் கடந்து கொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரியுமா இசைக்கு எவ்வளவு வலிமை இருக்கிறது என்று? இந்தக் கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்டால் அதற்கு நான் கூறும் பதில் ஒன்றே ஒன்றுதான் அது என்னுடைய வாழ்க்கை. பெற்று வளர்த்த தாய் தந்தையை மறந்து இருபது வருடங்களிற்கு மேலாக அவர்களுடன் ஒரே கட்டிலிற்படுத்து ஒரே கோப்பையில் உணவருந்தி ஒன்றாக வாழ்ந்த ஒரு பெண் ஒரு சில வருடங்கள் மட்டுமே பழகிய தான் விரும்பிய ஆணுடன் வருவதற்குண்டான

மன இயல்பை உருவாக்குவதற்குத் தேவையான சக்தி நிச்சயமாக இசைக்கு உள்ளது. இசைக்கு இசையாத உயிரினம் எதுதான் உண்டு இந்த உலகத்தில். சர்வ நிச்சயமாகச் சொல்கிறேன் இசை அனைத்து உயிர்களையும் இணைக்கும் மிகப் பெரும் சக்தி. அதனால்தான் அந்த சக்திக்கு இசை என்று பெயர். ஏனென்றால் இது அனைத்து உயிர்களையும் இசைய வைக்கிறது.

1974-ம் ஆண்டு எங்கள் திருமணம் திருக்கோணமலையின் கோணேஷ்வரர் ஆலயத்தில் இரவு 12 மணிக்கு நடைபெற்றது. திருமணம் முடிந்த இரவு 1.30 மணிக்கு ஊர்வலமாக தெருக்களில் நடந்து வரும்போது அந்த அகால இரவு நேரத்திலும் ஒலிபெருக்கி வைத்து நான் பாடிய "உனக்குத் தெரியுமா" பாடலை ஊருக்கே கேட்கும் வண்ணம் ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள் மக்கள். வழியில் தென்படும் ஒவ்வொரு வீட்டின் முன்பும் மக்கள் குத்துவிளக்கேற்றி வரவேற்றனர். எனக்கு தந்தையில்லை, மாலினிக்கும் தந்தையில்லை. என் சகோதரர்கள் எல்லாம்



*14.06.1974 அன்று திருக்கோணமலையில் பதிவு திருமணம் நடைபெற்றது. அதன்பின் கோணேஸ்வரர் ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது. பரமேஷ், மாலினி மணமக்களுடன் நடுவில் பரமேஷ் தாயார், தம்பி கோணேஷ் திருமண எழுத்திற்கு சாட்சிக் கையெழுத்திட்ட அளவெட்டி சின்னத்துரை தம்பதியினர்.*

வெளிநாட்டில் எனது பரமேஷ் கோணேஷ் புரடக்ஷன்ஸ் கலைஞர்களும் மாலினியுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் கூடப்படித்த தோழியர் நிர்மலா பஸ்தியாம்பிள்ளை, பரமேஷ்வரி கோவிந்தராஜா, சாந்தி ராமலிங்கம் மற்றும் சில எனது நண்பர்கள் என்னுடன் படித்த அன்புத் தோழர்களின் துணையுடனே எங்களின் திருமணம் நடந்தது.

இதற்கெல்லாம் மேலாக அப்பா இல்லாவிட்டால் என்னடா நான் இருக்கின்றேன் என்று கூறியதோடு இல்லாமல் என்னை ஒரு சொட்டு கண்ணீரோ அன்றி வருத்தமே ஏற்படுத்தாத வண்ணம் திருமணத்தை லச்சுமிகரமாக நடத்தி வைத்தவன் எனது உடன்பிறவாச் சகோதரன் V.S.E. Gold House உரிமையாளன் S.E. மகேஷ். அந்தத் தெய்வத்திற்கு எந்தத் தீங்கும் வரக்கூடாது. லண்டன் வந்து திரும்பி மீண்டும் கனடா வந்துவிட்டார். அவர் மிக நன்றாக தன் முழு வாழ்நாளும் வாழ வேண்டும் என்று ஒவ்வொரு நிமிடமும் அவரை வாழ்த்துகின்றேன். ஆனால் என் எண்ணம் தவறி போய்விட்டது. கனடாவில் அவர் அமரராகிவிட்டார். கண்ணீர் நிறைந்த அவரின் நினைவுகள் மட்டுமே இப்போது எனக்கு மிச்சமிருக்கிறது. வாழ்க்கை என்றும் பிரிவுகள் நிறைந்ததுதானே.



*எம்முடன் கூடப் பிறக்கத் தவறிய தம்பி எஸ்.இ. மகேஷ்*

எனது இசைக்குழுவின் ஒவ்வொரு நண்பர்களும் மகிழ்ச்சி மிகுந்த மனோநிலையுடன் நிரம்பித் ததும்பினார்கள். சுற்றியிருந்த நண்பர்கள் அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சிக்குக் காரணம் திருமணம் நல்லபடியாக நடந்துவிட்டது என்பதால் அல்ல. நம் இசைக்குழுவிற்கு நல்ல ஒரு பாடகி கிடைத்துவிட்டார் என்ற சந்தோஷம். அவர்கள் விருப்பப்படி மாலினியை என்னுடன் பாடுவதற்கு முதன்முறையாக மேடை ஏற்றினேன். எத்தனையோ எதிர்ப்புகள் என்னுடைய மாமி வீட்டாரிடமிருந்து வந்தது. கர்னாடக சங்கீதத்தை முறைப்படி கற்றவள். **கர்னாடக சங்கீத அரங்கேற்றம் நடத்தாது மெல்லிசை பாடிட பொதுமேடை ஏறக் கூடாது என்று உறவினர் நண்பர்கள் மூலம் பல்வேறுவிதமான தூதுகளும் மிரட்டல்களும் தினந்தோறும் வந்தவண்ணம் இருந்தன.**

ஒவ்வொரு மிரட்டல்களிற்கும் பதிலாக மீண்டும் மீண்டும் ஒவ்வொரு சாதனை செய்பவனும் தத்துவம் சொல்பவனும்தான் நான். எனது இயல்பே இப்படியாகத்தான் இதுவரை இருந்திருக்கிறது. அடுத்த இரண்டு மாதங்களில் எம் தந்தையின் ஊரான சாவகச்சேரியில் ஜோ. தேவானந்தன் அவர்களின் தேவேந்திர படமாளிகையில் மாலினியுடன் படித்த சாவகச்சேரி சாந்தி இராமலிங்கம் அவர்களின் அழைப்பின் பேரில் பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் நிகழ்ச்சி தேவேந்திர படமாளிகை முழுவதுமாக நிறைந்த சனத்திரளுடன் இரண்டு வெவ்வேறு நிகழ்ச்சிகளாக ஒரே நாளில் நடைபெற்றது. இதுவே என் மனைவி மாலினியின் அரங்கேற்ற நிகழ்ச்சி. இதற்குமுன் திருக்கோணமலையில் சென் ஜோசப்ஸ் கல்லூரியில் இவரின் ஆரம்ப அரங்கேற்ற இசைத்தென்றல் நடந்துவிட்டது.

**கர்னாடக சங்கீதம் கற்ற பெண் மெல்லிசை மேடையில் தன் முதல் பொது நிகழ்ச்சியில் அரங்கேறியது இலங்கையின் சரித்திரத்திலேயே இதுதான் முதற்தடவை. இதை எதிர்த்தவர்கள் கூட அனுமதிச் சீட்டுப் பெற்று மாலினியைச் சந்திக்க முடியுமாறு ஏற்பாடுகள் செய்தேன்.** அன்று மாலினி பாடிய மன்னாதி மன்னன் பாடல் ''**கண்கள் இரண்டும் என்று உம்மைக் கண்டு பேசுமோ**'' என்ற பாடல் படமாளிகையின் மொத்தக் கூட்டத்தையே அதிரச்



*மாலினி சென்ற இடமெல்லாம் மலர் மாலைகள் விழாத இடமேயில்லை.*

செய்தது. இதே நிகழ்ச்சி கொழும்பு ராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றபொழுது அங்கு வருகை செய்த காலம் சென்ற அறிவிப்பாளர் K.S. ராஜா இப்பாடலை வானொலி நிலையத்திற் தேடி பார்த்துள்ளார். கிடைக்காததால் அவர் திரைப்படப் பிரிவு அறிவிப்பாளர் என்ற வசதியைக் கொண்டு மன்னாதி மன்னன் திரைப்பட நகலை எடுத்து அதிலிருந்து இந்தப் பாடலை வானொலிக்கென்று ஒலிபரப்புவதற்காக உள்ள இசைத்தட்டில் பதிந்து அடுத்த வாரம் முதல் ஒலிபரப்பினார். இது பழைய பாடலானதால் மாலினியின் பாடல் என்று ஓடிச்சென்று கேட்பார்கள். ராமகிருஷ்ண மண்டபத்தில் எமது நிகழ்ச்சியின் பின்னரே இந்தப் பாடல் வானொலியிற் தொடர்ந்து ஒலிபரப்பானது.

இவையெல்லாம் குறித்து என் மனைவியிடம் பலர் கேட்டபோது படிப்பது சங்கீதம். பின்னர் வேறு பட்டதாரி மாப்பிள்ளையைப் பெற்றோர் தேடுவது, அதற்கு நாம் ஒத்துக்கொண்டு மொத்த வாழ்க்கையையும் சிக்கலாக்கிக் கொள்வது என்கிற இந்த வழக்கமான நடவடிக்கைகள் எல்லாம் தவறு, என் தந்தையும் இசைக்கலைஞர்தான். ஆம். மன்னிக்க வேண்டும். குறிப்பிட மறந்துவிட்டேன். என் மனைவி மாலினி வேறு யாருமல்ல யாழ் திருநெல்வேலி சங்கீத பூஷணம் நமசிவாயம் அவர்களின் புதல்வியரில் ஒருவர்தான். கர்னாடக இசை பாடுபவர்கள்

தமிழ்ப்பாடல்களைத்தான் கீர்த்தனைகளைப் பாடவேண்டுமென்று முதன்முதலில் வாதாடி இந்தப் புரட்சியைச் சங்கீதக் கலைஞர்கள் மத்தியில் உருவாக்கியவர் அமரர் சங்கீத பூஷனம் நமசிவாயம் அவர்கள். தம் வாழ்நாளில் நல்லூரில் சங்கீத சபை அமைத்துப் பல மாணவ மாணவிகளைச் சங்கீதக் கலைஞர்களாக வளர மலர மிளிர வழி வகுத்தவர் என் மனைவியின் தந்தையார் திருநெல்வேலி திரு. நமசிவாயம் அவர்கள். என் தந்தையும் இசைக்கலைஞர்தான் என் குடும்பமே இசை வழிதான் தொடரவேண்டுமென்பது என் அம்மாவின் ஆசை.

அனதால் எவரின் அனுமதியும் தேவையில்லை. என் வாழ்க்கையும் இசைக்கலைஞனுடனேயே தொடரட்டுமென்றும் என் அப்பாவின் ஆத்மா என்னை ஆசீர்வதிக்குமென்று தன் வாழ்க்கையையும் இசைப்பாதைக்கே செலவிட்டு சாதனை நிலைநாட்டியவர் மாலினி. இதுபோல் எனது மகள் பிரபாலினி பாரீஸ் சென்றிருந்தபொழுது என் அன்புக்குரிய ஈழநாடு பிரதம ஆசிரியர் திரு. குகநாதன் பிரபாலினியிடம் கேட்டாராம் - பிரபாலினி நீங்கள் ஜெர்மனியில் படித்து வருகின்றீர்கள் என்ன படிப்புப் பூர்த்தி செய்ய விரும்புகிறீர்கள் டாக்டராகவா? கட்டிட நிபுணராகவா? என்னவாக வர விரும்புகின்றீர்கள் என்று. அதற்கு எனது மகள் பிரபாலினி சொன்ன பதில் குறித்து ஜெர்மனியில் அவர் தலைமை தாங்கிய ஒரு இசை நிகழ்ச்சியிற் பெருமையாகச் சொன்னார் திரு. குகநாதன் அவர்கள்.

இன்று இங்கு கலந்து கொள்ளும் ஒவ்வொருவரிற்கும் பிரபாலினி ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். பிரபாலினி எனக்களித்த பதில் நான் என்ன உயர்கல்வியைக் கற்றாலும் என் அப்பா அம்மாவைப் போல் சிறந்த இசைக் கலைஞராக வரவே விரும்புகின்றேன் என்றும் என் வாழ்வில் எனக்குக் கிடைக்கவிருக்கும் ஒரு உயர் பதவி என்றால் அது இசைக்கலைஞராக மலர்வதாகத்தான் இருக்கும். எத்தனையோ வேறு பட்டதாரிகள் இலங்கையில் இருந்திருக்கலாம்.

ஆனால் அப்பாவைப் போல் ஒரு கவிஞராகவும் பாடகராகவும், இசையமைப்பாளராகவும், தமிழ் இசைத்தட்டுத் தயாரிப்பாளராகவும் இருக்கவில்லை. அந்தப் பெருமை



*என்னுடன் திரு. எஸ்.எஸ். குகநாதன், என் மனைவி மாலினி.*

எனக்கிருந்தது. அப்பாவைப் போல சொந்தமாகச் செயல்படும் திறமையும் எனக்கிருக்கு என்று ஆணித்தரமாகக் கூறினார் என்று திரு. குகநாதன் அவர்கள் அந்தப் பொதுமேடையில் பிரபாலினியைப் பாராட்டினார். எனக்கென்னவோ பொதுமறை யாத்த திருவள்ளுவரின் குறள் ஒன்றே நினைவுக்கு வந்தது. இவன் தந்தை எந்நோற்றான் கொல் என முடியும் அந்தக் குறளை நினைத்தவாறே கண்கள் பனிக்க அந்தப் பாராட்டை மனமுவந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

இந்த வேளையில் உங்கள் சிந்தனைக்குச் சிலவற்றை கண்டிப்பாக நான் சொல்லி வைக்க வேண்டும். பெண்கள் மேடையிற் கர்னாடக சங்கீதம் பரதநாட்டியம் தவிர வேறு எந்தக் கலையும் செய்வது இழுக்கு என்று எண்ணித் தம்மைச் சுற்றி ஒரு போலி வட்டத்தைப் போட்டுக் கொண்டு திரைப்படப் பாடல்களைப் பாடக் கூடாதென்றும் ஜோடி சேர்ந்து பாடக் கூடாது என்றும் திரைப்படப் பாடலிற்கு ஆடுபவர்கள் சின்னமேளம் என்றும் ஒதுக்கித் தள்ளிய இலங்கைத் தமிழ் மக்கள் வெளிநாட்டில் என்ன செய்கிறார்கள். இந்த ஆர்வமெல்லாம் அங்கே நாம் இருக்கும்போது நமக்கு இருந்திருந்தால் அந்நியக் கலை

வடிவங்கள் நம்மை அங்கு ஆண்டிருக்குமா? யோசித்துப் பாருங்கள்.

1966ம் ஆண்டு நான் இசைக்குழு ஆரம்பித்த காலத்தில் இங்கு இருக்கும் என் வயதுடைய பல கலைஞர்கள் அங்கிருந்திருக்கின்றனர். ஏன் அவர்களிற்கு இப்போது இருக்கும் இந்த ஆர்வம் அங்கிருக்கும்போது ஏற்படவில்லை. காரணத்தையும் நானே சொல்கிறேன். டாக்டர் என்றால் ஒரு லட்சம் சீதனம் எஞ்சினியர் என்றால் சில லட்சம் சீதனம், வழக்கறிஞர் என்றால் சில லட்சம் சீதனம், ஆசிரியர் என்றால் ஒரு லட்சம், போஸ்ட் மாஸ்டர் என்றால் ஐம்பதாயிரம். தபால்காரர் என்றால் 25 ஆயிரம் இப்படி சீதனக்கட்டுப்பாடு நிறைந்திருக்கின்ற நிலையில் உத்தியோகம் மட்டுமே முக்கியமாகத் தெரிந்திருக்கும்.

ஆனால் இந்தப் பட்டதாரிகள் எல்லோரும் Radio இல்லாமல் இருக்கமாட்டார்கள். பாட்டுக்கேட்காவிட்டால் பயித்தியம் பிடித்ததுபோல் இருக்கிறது என்பார்கள். படம் பார்க்காமல் இருக்கமாட்டார்கள். புதிய படம் என்றால் வேலைக்கு மட்டம் போட்டுப் படம் பார்த்த பட்டதாரிகள் பலரை எனக்குத் தெரியும். இந்தியக் கலைஞர்களின் தரத்திற்குப் பாடல்கள் செய்ய முடியும் என்று நான் எனது முதல் இலங்கைத் தமிழ் இசைத்தட்டின் மூலம் நிரூபித்த பின்னர் பல பட்டதாரிகள் எனது ரஸிகர்களாகி பின் என் நண்பர்கள் ஆனார்கள். எனது இசைத்தென்றல் என்றால் மேடைக்குவந்து எங்களைப் பாராட்டிச் செல்பவர்கள் 'அனைவரும் பட்டதாரிகள்' தமிழ் ஆசிரியர்கள் பண்டிதர்கள்.

பாட்டுக்காரன் என்ற ஒரே காரணத்தால் என் திருமணத்தைக் குழப்பியடித்த சம்பவத்தை மனதில் மறக்காமல் வைத்துத்தான் என் மனைவி மாலினியை எமது இசைத்தென்றல் மேடையிலேயே அரங்கேற்றியுள்ளேன். என் பிள்ளைகளை இசைவழி தொடர வழி வகுத்தேன். கர்நாடகம் கற்ற தங்கள் சகோதரியை மெல்லிசை மேடையில் பாடக்கூடாது என்று சொன்ன மாலினியின் சகோதரிகளே வெளிநாட்டில் மேடை ஏறிப்பாடியுள்ளனர் பாடுகின்றனர். **எந்தப் பட்டதாரிவேடமும் எந்தக் கடவுளின் வேடமும் போடக்கூடிய உரிமை கலைஞனிற்கு**

**மட்டுமே உண்டு என்று நடிகர்திலகம் சிவாஜி கணேசன் கூறியது ஆயிரத்தில் ஒரு வார்த்தை.**

எனது வேண்டுகோள் ரஸிகர்கள் அபிப்பிராயங்களைச் சொல்ல உரிமையுள்ளவர்கள் அவற்றை முழுமையாகக் கலைஞர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களில்லை. நியாயமானதை ஏற்றுக் கொள்ளலாம். இனியாவது மூடக்கட்டுப்பாடுகளை விட்டு வெளியில் வாருங்கள். கலை வளருங்கள். ஆனால் எங்கள் காலத்தைவிடப் பன்மடங்கு இன்று உங்களிற்கு விஞ்ஞான வசதிகள் உண்டு. எதைச் செய்தாலும் சரியாகச் செய்யுங்கள். ஒலி ஒளி இவற்றில் கவனம் செலுத்துங்கள். முக்கியமாக நேரக் கட்டுப்பாடு கடைப்பிடியுங்கள்.

மூலைக்கு மூலை மணிக்கூண்டு வைத்து நிமிடம் தவறாது சேவையாற்றும் வெளிநாட்டில் நேரக்கட்டுப்பாடு தவறிவிட்டு தமிழனைப் பார்த்து வெள்ளையாள் சிரிக்கும் நிலையை உருவாக்கி வைத்துவிடாதீர்கள். இலங்கைத் தமிழர் இன்று உலகத் தமிழர் ஆகிவிட்டார்கள். ஒருகாலத்தில் ஆங்கில மொழி போல் தமிழ்மொழி உலகமொழியாகவும் நாளை வரலாம். வரும் வரவேண்டும். இதற்குத் தமிழ்க் கலைஞர்கள் தான் வழிவகுக்க முடியும். காரணம் தமிழ்க் கலைகள் மிகவும் சிறப்பானவை. இவற்றைக் கற்றுக் கொள்வதற்காகவே தமிழ்ப் படிக்க ஆரம்பிப்பார்கள் வெளிநாட்டவர். ஆரம்பித்து விட்டார்கள் நான் அறிவேன். கலைஞர்கள்தான் ஒரு நாட்டின் கலாச்சாரத்திற்கு வழிகாட்டிகள். வரப்பிரசாதமானவர்கள். கலைஞர்களாகப் பிறக்க நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இவற்றை எழுதுவது என் கடமை. ஏற்றுக் கொள்வது உங்கள் உரிமை. உங்கள் விருப்பம். மனப்பக்குவங்களைப் பொறுத்தது. விவாதமல்ல இவை.

வேறு இடங்களுக்குப் போய்விட்டேன். மீண்டும் பழைய இடத்தில் தொடர்கிறேன். மாலினி ரசிகையாக அமர்ந்து ரசித்த யாழ் வீரசிங்கம் மண்டபம். திருமணத்திற்கு பின் யாழ் ஸ்ரீதர் பட மாளிகை இதைத் தொடர்ந்து கிளிநொச்சி திறந்த வெளியரங்கு மற்றும் பல இடங்களில் மாலினியுடன் இணைந்து இசைத்தென்றல் நடத்தினோம். இக்காலங்களில் மாலினி பாடிய



*1973களில் திருமணத்தின் பின்னர் மாலினி மட்டக்களப்பு மறுநிகழ்ச்சியில் பரமேஷுடன் கலந்து கொண்டார்.*

*படத்தில் மற்றும் துரைலிங்கம் E.R. பிரேமா*

பாடல்களையெல்லாம் அவர் வயிற்றில் இருந்து பாடிப் பழகிக் கொண்டிருந்த பிரபாலினிதான் எங்களைப் போற் தானும் திகழும் வண்ணம் சி.டி. இசைத்தட்டிற்கு இசையமைத்த முதலாவது ஈழத்தமிழ் மகள்.

1968 முதல் 1977ஆம் ஆண்டு வரை எங்கள் இசைத் தென்றல் நிகழ்ச்சிகள் எந்த ஒரு தழும்பல்களுமின்றி நடைபெற்று வந்தன. பொதுவாகவே எண் எட்டு எனக்கு பொருந்துவதே இல்லை. அதுபோல் எமது இசைப்பாதையில் நாங்கள் தொடர்ந்த எட்டாம் வருடமும் எமக்குப் பொருந்தாத வேளை. எங்கள் குடும்பத்தில் நாங்கள் எட்டு பிள்ளைகள் நான் இதில் ஏழாவது மகன். இசைக்கிசைந்தது ஏழு என்பார்கள். அதுபோல் நன்மையோ தீமையோ என் வாழ்க்கை இன்றுவரை இசையுடன் தொடர்கின்றது.

என் தம்பி கோணேஷ் குடும்பத்தில் எட்டாவது மகன் அதனால்தானோ என்னவோ எங்கள் நிகழ்ச்சி நடக்கத் தொடங்கிய எட்டாவது வருடத்தோடு எனக்கு எட்டாமலே பிரிந்துவிட்டார்.

நானும் மாலினியும் இந்தியா சென்று திரும்பிவரும் போது வீட்டின் முன்பாக இருந்த பரமேஷ் கோணேஷ் என்ற பெயர்ப்பலகை கோணேஷ் பரமேஷ் என்று மாற்றப்பட்டிருந்தது. இதைப் பார்த்தவுடன் மாலினிக்கு வீட்டிற்குள் வரவே விருப்பமில்லை. ஆனால் நான் சிரித்துவிட்டு அவரை வீட்டினுள் கூட்டிச் சென்றேன்.

நான் எந்தவித வித்தியாசமும் காட்டவில்லை. மறுநாள் எனது முன் வீட்டில் இருக்கும் உறவினர்களிடம் சென்று நீங்கள் எங்கள் வீட்டு பெயர்ப் பலகையைப் பார்க்கவில்லையா. அதைக் கழற்றி எடுத்துப் பூட்டக் குறைந்தது மூன்று நாட்களாவது சென்றிருக்குமே அதற்குள் என் தம்பியிடம் இப்படிச் செய்யாதே அது தவறானது. பரமேஷ் கோணேஷ் என்ற உங்களின் இணைந்த பெயர் திருக்கோணமலை நகருக்கு மிகவும் பெயர் எடுத்துக்கொடுத்த ஒன்று, இதை மாற்றிவிடாதே என்று அவரிடம் சொல்லவில்லையா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னர்கள். தம்பி அவருடன் கதைக்க முடியாது. நாம் பார்த்துக் கண்ணீர் விடாத குறைதான் வேறென்ன நாம் என்று சொல்லி முடித்துவிட்டனர்.

அன்று முதல் எமக்குள் சூழ்ந்த மௌனமே என்னை மெல்ல மெல்லச் சாகடித்துக் கொண்டிருந்தது. எதையாவது நேரில் சென்று கேட்டு அதனால் சிக்கல் அதிகரித்தால் பரமேஷ் கோணேஷ் என்ற எங்களின் இசைக்குழு பிரிந்து விடுமே என்ற நல்லெண்ணம் எனக்கு! ஆனால் தம்பியின் செய்கைகள் அத்துடன் நிற்கவில்லை. யார் தூண்டுதல்களோ நானறியேன். எவரையும் நான் குறை சொல்லமாட்டேன்.

ஏனெனில் இவரிற்கென்றொரு மதி இருந்திருக்க வேண்டும். நிச்சயமாக நாம் கூடப்பிறந்த சகோதரர்கள்தான் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் அது என் தாயார் சொன்னது. என் தாயார் எனக்குப் பொய் சொல்லமாட்டார். பெற்ற தாயை நம்பாமல் வேறு யாரை நம்புவது. ஆனால் அவர் பெற்ற தாயையும் நம்பவில்லை போலும். அதனால்தான் நான் அவருடன் கூடப்பிறந்த அண்ணன் என்பதையும் மறந்துவிட்டார். அவர் பெயர் முன்னிற்கு இருந்தாலென்ன என் பெயர் முன்னிற்கு இருந்தாலென்ன. இசைநிகழ்ச்சிகளின் வாயிலாக ஒவ்வொரு தமிழ்

மக்கள் மனதிலும் பரமேஷ் கோணேஷ் என்றுதான் பதிந்துவிட்டதே. அதை யாரால் மாற்ற முடியும்?

ஒரு நாள் நான் எல்லாவற்றையும் எண்ணித் தனிமையில் இருந்து அழுதேன். மாலினி வந்து மகேஷ் வந்திருக்கிறார் என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே அவர் என்னுடைய அறைக்குள் வந்துவிட்டார். நான் அழுவதைக் கவனித்துவிட்டு பரமேஷ் எதிலும் நான் சம்பந்தப்படவில்லை. எனக்கு நீங்கள் இருவரும் இருகண்கள். நீயோ கதைக்க முடியாமல் அழுது கொண்டிருக்கின்றாய் ஆனால் இப்படியே இருந்தாயானால் இது ஒருநாள் பூகம்பாய் வெடிக்கும் என்று சொன்னார். அவர் சொன்னது போலவே நடந்துவிட்டது. இதை நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ தெரியாது.

மாலினி திருக்கோணமலையில் எங்கு சென்றாலும் டேய் அங்கு பாரடா பரமேஷ் கோணேஷ்சின் மாலினி என்று சொல்வார்களே தவிர பரமேஷ் மாலினி என்று சொல்லமாட்டார்கள். காரணம் பரமேஷ் கோணேஷ் ஒரு பொதுப் பெயராகவே மக்கள் மனதிற்பதிந்து விட்டது. இதை மக்களே பிரிக்கமுடியாத நிலையில் என் தம்பி பிரித்துவிட்டார்.

இப்படியெல்லாம் நடந்த பின்னரும் அடுத்து வந்த ஏழு வருடங்களும் பரமேஷ் கோணேஷ் என்ற பெயரிலேயே நான் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தேன். என்றோ ஒரு நாள் மீண்டும் கோணேஷ் எம்முடன் வருவார் என்ற எண்ணத்தில்தான் அவ்வாறு நடத்தி வந்தேன். ஆனால் அவர் கோணேஷ் ஆர்கஷ்ட்ரா என்ற பெயரில் தனியாக ஒரு குழுவுடன் நிகழ்ச்சிகளை நடத்த ஆரம்பித்தார். அத்துடன் எனக்கு நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. இருந்தும் பரமேஷ் கோணேஷ் இசைக்குழு என்பது நான் வளர்த்த பெயர் எனவே அதே பெயரிலேயே தொடர்ந்து நான் இசைநிகழ்ச்சி நடத்தினேன்.

யாழ்ப்பாணத்தில் பரமேஷ் கோணேஷ் என்ற பெயரில் சிறிய அளவில் இசைத்தட்டு மையம் ஒன்றை ஆரம்பித்தோம். அதன் பின்னர் எங்களை விட பெரிய அளவில் நண்பர் விக்டர் அவர்கள் ஒரு இசைத்தட்டு விற்பனை நிலையத்தை




*இசைத் தட்டுத் ஸ்தாபனத்திற்கு வருகை தந்த எமது இசைத்தென்றல் பாடகர் துரை துரைலிங்கம், அவருடன் எம்.பி. பரமேஷ்.*

ஆரம்பித்ததால் நாம் அதைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. கோணேஷ் அதை மூடிவிடும்படி கேட்டார். ஆனால் நான் அதைப் பொறுப்பெடுத்து ஜெர்மனிக்கு நான் கிளம்பிச் செல்லும்வரை இலாபமோ நஷ்டமோ அதைக் குளித்துக் கவலைப்படாமல் நடத்தினேன்.

நான் மாலினியை 1974ம் வருடம் திருமணம் செய்தபின்பு ஏறக்குறைய மூன்று வருடங்களிற்குக் குறையாது பரமேஷ் கோணேஷ் இருவரும் பிரிவதற்கு முன்பாகவே இலங்கை எங்கும் என்னுடன் இணைந்து மாலினி பல்வேறு நிகழ்ச்சிகளில் பாடிவிட்டார்.

கோணேஷ் பிரிவின் பின்னர் எனக்கு வாத்தியக் கருவிகள் தந்து உதவியவர் இசைக்குழுவாகவே எமது நிகழ்ச்சிகளுக்கு வந்தவர் நல்லூர் திரு. மண்டவேஸ்வரனும் அவரின் குழுவினரும்தான். திருக்கோணமலையில் நாம் இருவரும் பிரிந்த பின்னர் இனிமேல் பரமேஷ் கோணேஷ் நிகழ்ச்சி நடக்காது என்பவர்களின் வாயை அடக்க பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் கோணேஷ் இன்றி இரவு 7 மணிக்கும் இரவு 10 மணிக்குமாக இரண்டு நிகழ்ச்சிகளை நான்

படித்த அதே சென்ஜோசவ்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடத்திக் காட்டினேன். இதற்கு முழு உதவியும் புரிந்தவர் அன்று எமது இசைக்குழுவில் கௌவொய்யின் வாத்தியக்கலைஞராக இருந்து பின்னர் கலைவாணி இசைக்குழு அமைத்து லண்டனில் சிலகாலத்திற்கு முன்பு மறைந்த S.K. பஞ். அவரை என்னால் என் வாழ்நாளில் மறக்கமுடியாது.

இந்நிகழ்ச்சியை நடத்த சகல அனுமதிச் சீட்டுக்களையும் தன் செலவில் சிறப்பாக அச்சிட்டு வந்தவர் எமது இசைக்குழுவில் பாடகராக இருந்த என் அன்புக்குரிய திரு. துரைலிங்கம். அவரிற்கும் எனது நன்றி.

இந்நிகழ்ச்சியை நடக்கவிடாதபடி குழப்பம் ஏற்படுத்துவதற்காக சிலர் திட்டமிட்ட சமயம் அது. ஆனால் நிகழ்ச்சிக்குப் பாதுகாப்பாக நின்றுதவியர்கள் திரு. சந்திரன் அவர் நண்பர் திரு. வடிவேல் மற்றும் எனது கல்லூரி அதிபர் திரு. சிவபாலன் அவர்களுடைய மகன் கிரி ஆகியோர். இவர்களில் இனக்கலவரத்தின் காரணமாக திரு. கிரி, காடையர்களால் கொலை செய்யப்பட்டார். அவரின் ஆத்மசாந்திக்கும் என் பிரார்த்தனைகள்.

நானும் கோணேஷ்சும் திருமணம் செய்தபின்னர் ஒரே வீட்டிலேயே பக்கம் பக்கமாக இருந்தோம். எங்களுக்குள் பிரச்சனைகள் தீவிரமாக வளர்ந்த பின்னரும் கூட நிகழ்ச்சிகளை இணைந்து செய்வோம் என்ற நம்பிக்கை எனக்கு இருந்ததால் நான் பெரிதும் மௌனமாகவே இருந்தேன். இந்த சமயத்தில்தான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்திற் கடமையாற்றிய திரு. சுந்தரலிங்கம் அவர்கள் இந்தியாவில் தமிழ்நாடு முழுவதும் எமது இசைத்தென்றல் நிகழ்ச்சியை நடத்திடத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் பூரண ஒழுங்குகளுடன் செய்துவிட்டு எமக்குக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தை கோணேஷ்சிடம் நான் தர என் முன்னிலையிலேயே அதைக் கிழித்தெறிந்தார் கோணேஷ் . ஏன் என்று நான் கேட்டிருக்க வேண்டும். ஆனால் நான் ஒன்றும் கேட்கவில்லை ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கோணேஷ்சின் மனைவியும் அவரைக் கேட்கவில்லை. இந்த சம்பவத்திற்காக அவர் மனைவி ஆத்திரப்படவும் இல்லை.

மறுவாரமே நான் என் அம்மாவிடம் சொல்லிவிட்டு வேறு வீடு செல்லப்போவதாகக் கூறினேன். ஆனால் என் அம்மா எங்களை அனுமதிக்கவில்லை. இசை நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டோம். திருக்கோணமலை முழுவதும் எங்கள் பேச்சுத்தான் நிம்மதியற்றதாக நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அவ்வளவு காலமும் எமது காதற் திருமணத்தால் எம்மை ஒதுக்கி வைத்திருந்த மாலினியாரின் தாயார் தனது மகளைத் தேடி எம் வீட்டிற்கு வந்தது எமது கவலைகளிற்கெல்லாம் சிறந்த மருந்தாக அமைந்துவிட்டது.

மேலும் இசைநிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என்று திருக்கோணமலையில் இருந்த எமது ஆசிரியர்கள் பெரியவர்கள் எல்லோரும் என்னையும் தம்பியையும் ஒற்றுமைப்படுத்த எவ்வளவோ பாடுபட்டனர். இதில் முக்கியமாகக் கவனமெடுத்த ஒரு சிலரின் பெயர்கள் என் நினைவில் இன்னமும் நன்றியறிதலுடன் இருக்கின்றது. எமது பாடசாலை ஆசிரியர்கள் திரு. சிவலோகநாதன் திரு. யோகராஜா டாக்டர் மகேஷ்வரன் (தெல்லிப்பனை) எம்முடன் படித்த மாணவர்கள் தயானந்தன், கெங்காதரன், தேவேந்திரன் சகோதரர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன், ப. நேமிநாதன், டாக்டர் சித்திரவேலு அவர் குடும்பத்தினர் பஞ் பாலச்சந்திரன் இன்னும் பலர்.

நான் தொடர்ந்து அவருக்காக விட்டுக் கொடுத்து விட்டுக் கொடுத்தே மனதளவில் மிகவும் களைத்துவிட்டேன். கோணேஷ் எதை என்னிடம் எதிர்பார்த்தார் என்று எனக்கு விளங்காததால் நான் எதுவும் செய்ய முடியாத கையறு நிலையில் இருந்தேன். நாளுக்குநாள் உள்ளுக்குள் மிருகமாகிக் கொண்டுவந்தேன். காலை எழுந்தால் எனது மகள் பிரபாலினியை அம்மாவிடம் கொடுத்துவிட்டு நானும் மாலினியும் வெளியில் சென்று விடுவோம். திருக்கோணமலையின் அழகிய கடற்கரைகளும் நண்பர்களின் வீடுகளுமே எமக்கு ஆறுதல் அளித்தது.

சிலகாலம் எமது வீட்டில் ஒரு பகுதியில் வாடகைக்கு இருந்த கதிரைமலைநாதன் அவர் சகோதரர் ரங்கநாதன் அவர்கள் வீட்டிற்குச் சென்று அவர்களுடன் நேரத்தைச் செலவிட்டு மனம் ஆறுதலடைவோம். திருக்கோணமலையை விட்டுப்

போகவேண்டுமென்ற நினைவே நாளாக ஆக அதிகமாகிக் கொண்டிருந்தது. ஆனால் என் அம்மா ஒவ்வொரு நாளும் மாலினியிடம் என் மகளே என்னை விட்டுப் போய்விடாதே இவர்களை ஒற்றுமையாக்கு என்று அடிக்கடி அழுது முறையிடுவார். என் அம்மாவின் கோரிக்கையை தனியே போகவிடாதவாறு என்னைத் தடுத்துக் கொண்டிருந்தது.

இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் எனது மகள் பிரபாலினியின் முதலாவது பிறந்தநாளை 1976ம் வருடம் 29ம் தேதி மிகச் சிறப்பாகக் கொண்டாடினோம். கோணேஷ்சும் அவர் மனைவி பத்மினியும் அதே வீட்டில் இருந்தும் விழாவில் கலந்து கொள்ளவில்லை. அதுவும் 76ம் வருடம் கூட்டுத்தொகை 7+6=13. இந்த வருடமே எங்களை அந்த வீட்டைவிட்டு வெளியே செல்ல விதிவகுத்த வருடம். இதற்கு நடுவில் குறிப்பிடத்தகுந்த முக்கியவிடயம் மகேஷ் சொன்னதுதான். மற்றவர்கள் அனைவரும் இருவரையும் ஒன்றுபடுத்த முயற்சிக்க மகேஷ் மட்டும் எங்களை ஒற்றுமை குறித்து பேசவேயில்லை. அதற்கு அவர் சொன்ன காரணம் எனக்கு உங்கள் இருவரின் பக்குவநிலையும் மிக நன்றாகத் தெரியும். தொடர்ந்து இதைச் செய்தீர்களானால் இது ஒரு கொலையில் முடியும். ஏனெனில் ஏதோ ஒரு தீயசக்தி உங்களைப் பிரிக்கின்றது என்றார்.

அதன்பின் வேறு ஒரு சிறு அறை எடுத்துத் தனியாக குடி புகுந்து விட்டோம். பின்னர் எங்கள் அம்மா வீட்டை விற்று வந்த பணத்தில் பாதித்தொகையை என்னிடமும் பாதித்தொகையைக் கோணேஷ்சிடமும் கொடுத்தார்கள். 1 லட்சம் ரூபாய் கேட்ட அந்த வீட்டை 35,000 ரூபாய்க்கு ஒரு தமிழ் மகளிற்கே விற்றோம். 1 லட்சம் ரூபாய் கேட்டவர்கள் ஒரு சிங்களவர். அதனால் நான் அவரிற்கு விற்கச் சம்மதிக்கவில்லை. சிக்கல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. இசை வாழ்வின் எதிர்காலம் ஏறக்குறைய போயேபோய்விட்டது. இருந்த சொந்தமான வீடுவாசல் போய்விட்டது. எதிர்காலம் பெரிய கேள்விக்குறியாக எம் முன் நின்றது.

நானும் மாலினியும் தனியே இருப்பதை அறிந்த சில இசையார்வமுள்ள திருக்கோணமலைக் கலைஞர்கள் பிரேமதாஸ்,

சுந்தரலிங்கம், அமரலிங்கம் ஆகியோர் எம்மிடம் வந்து, அண்ணா போனது போகட்டும் எம்மால் இயன்ற பணத்தைத் தருகின்றோம். பிரபல பாடகர் கண்டசாலா அவர்களின் நினைவுதினம் அடுத்த மாதம் வருகின்றது. அந்த நாளில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் கண்டசாலா இசைஇரவு என்ற நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்றும் பாடுவதற்கு வரும்படி கேட்டனர். எமக்கும் பணம் தேவைப்பட்டதால் நிகழ்ச்சி நடத்திடச் சம்மதித்தோம்.

கண்டசாலா இசைஇரவு நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது. கண்டசாலா பாடிய பாடல்கள் அனைத்தையும் நாங்கள் பாடிமுடித்தோம். வழக்கம்போல் அதிலும் எமக்குப் பணம் கிடைக்க வழிவகை செய்திட முடியவில்லை. ஆனால் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்தது.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு மனம் வெதும்பிப் போய் யாழ்ப்பாணத்தில் எனது ஒலிப்பதிவு மையம் மிகச்சிறிய அளவில் நடைபெற்றுக் கொண்டிருந்தால் யாழ்ப்பாணம் கிளம்பி வந்துவிட்டோம். அங்கே ஒரு வீட்டின் பகுதியை வாடகைக்கு எடுத்து இருந்தோம். இங்கு தான் எமது இரண்டாவது மகள் பிரகாஷினி பிறந்தாள். இனியாவது வாழ்க்கை பிரகாசமாய் இருக்கட்டுமே என்று பிரகாஷினி (பிரகாசம் - இனி) என்று பெயர் வைத்தோம். பிரகாசம் எமக்கு அன்று கிடைக்காவிட்டாலும் இன்று அவள் பிரகாசிக்கும் விதம் பிரகாஷினி என்று பெயரிற்குப் பொருத்தமாய் உள்ளது. அது போதும்.

இந்த வேளையிற்தான் நண்பர் மண்டேஷ்வரன் நாங்கள் பணத்திற்குப் படும்பாட்டைப் பார்த்துத் தன் இசைக்குழுவிற் பாடுங்கள் அதில் எந்தக் குறையும் இல்லை என்று கேட்டார். அன்று முதல் அவருடன் இணைந்து பாடினோம். மாலினியும் நானும் ஜோடிப் பாடல்களாக இரண்டும், நான் தனித்துப்பாடுவது நான்கு பாடல்கள் என்ற வகையில் பாடினோம்.

அன்றைக்கு தனது சிறுவயதிலேயே எனது மகள் பிரபாலினி பாடுவது மூன்று பாடல்கள். சிறிது காலம் செல்ல பிரபாலினி இல்லாது நிகழ்ச்சியே வேண்டாம் என்ற நிலை வந்துவிட்டது. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் எமக்கு 400 ரூபாயும்

பிரபாலினிக்கு மட்டும் 300 ரூபாயுமாக, மொத்தம் எமக்கு 700 ரூபாய் கிடைக்கும். **6 வயதிலேயே பாட்டுப்பாடி இவ்வளவு பணம் வெகுமதிபெற்ற முதலாவது இலங்கைத் தமிழ்ச் சிறுமி பிரபாலினி பரமேஷ்.**

காலங்களில் மாற்றம் நிகழ்ந்தது. தொடர்ந்து எத்தனையோ நிகழ்ச்சிகள் செய்யமுடியாத நிலையில் ரத்துச் செய்தோம். அந்த அளவிற்கு வாய்ப்புகள் தொடர்ந்தன. பல ஆலயத்திருவிழா அமைப்பாளர்களின் விருப்பத்திற்கிணங்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன அறிவிப்பாளர் சரா இம்மானுவேல் லோகேஷ் ஆகியோர் எமது இசைத் தென்றல் நிகழ்ச்சியிற் கடமையாற்றினார்கள். யாழ்நகரின் சிலோன் வங்கி நிறுவனத்தார் நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு பீப்பிள்ஸ் பேங்க் விசேட தின நிகழ்ச்சிகள் இவைமட்டுமல்ல வவுனியா, முல்லைத்தீவு, வாழைச்சேனை முதல் பொத்துவில் வரை கிழக்கு மாகாணம் எங்கும் பத்து நாட்கள் தொடர் நிகழ்ச்சிகளாக நடத்தினோம்.

1981ம் ஆண்டு வரை, இப்படி நிகழ்ச்சி நடத்திய எமக்கு அதன்பின்னர் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளினால் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்தமுடியவில்லை. அப்பொழுது தான் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற எண்ணம் எம் மனதில் எழுந்தது. உள்நாட்டுப் பிரச்சினைகள் சில அரசாங்கத் தொழில்கள் நடைபெற்றாலும் அமைதியற்ற நாட்டில் இசைநிகழ்ச்சி நடத்தி உழைப்பது என்பது சாத்தியமாகாது என்று தீர்மானித்தேன். வெளிநாடு செல்வதற்குக் கூடப் பணவசதியில்லாது இருந்த எனக்குச் சகல உதவியும் புரிந்தவர் என் மனைவியின் சகோதரி ரஞ்சனியின் கணவர் (கஸ்தூரியார் வீதி கல்யாணிக் கிரீம்ஹவுஸ் உரிமையாளர் த. கிருஷ்ணமூர்த்தி) என் வாழ்நாளில் மறக்க முடியாதவர்களில் இவரும் ஒருவர்.

பாஸ்போர்ட் எடுப்பதே மிகவும் சிரமமான அந்நேரத்தில் 1982 முதல் 1984ஆம் ஆண்டின் இறுதிவரை மூன்று வருடங்கள் நானும் என் குடும்பமும் பட்டபாடு கொஞ்சமல்ல. அது போன்ற மிகச் சிக்கலான வேளையிலும்கூட எமக்கு உதவியவர் என் சகலர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களே. நான் எல்லா விதமான

வாழ்க்கைச் சூழல்களிலும் வாழ்ந்திருக்கின்றேன். அதனால் எனக்கு எவரிலும் அதிகமான அளவு இரக்கமனமும் உதவி செய்யும் உள்ளமும் விட்டுக் கொடுக்கும் பழக்கமும் கொண்டவன். ஆனால் நான் பெருந்தன்மையுடன் நடப்பதை மற்றவர்கள் தவறான வழியிற் பயன்படுத்திக் கொண்டதும் உண்டு. என்னைப் பயித்தியக்காரன் என்று ஒரு சிலர் நினைத்தும் இருக்கலாம்.

நாட்டைவிட்டு என் மனைவி மக்களைவிட்டு வர முழுமனதுடன் விரும்பாவிட்டாலும் வேறுவழியின்றி கிளம்பிடத் தேவையான ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தேன். 1980 முதல் 84 வரை வாழ்க்கைச் செலவுக்காக சில வியாபாரஸ்தாபன விளம்பரங்களை வானொலிக்கு அனுப்பி அதன்மூலம் வருகின்ற சிறு வருவாயில் மட்டுமே நான் வாழ்க்கை நடத்தினேன்.

1985ம் வருடம் தை மாதம் 21 திகதி இரவு 12 மணிக்கு நான் பிறந்த பூமியை விட்டுமட்டுமல்ல என் மனைவி மக்களையும் பிரிந்துவிட்டு முகமறியாத பூமியான ஜெர்மன் நாட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்தேன். எப்படியெல்லாமோ வாழ்ந்திருந்த எனக்கு அனைத்தையும் இழந்துவிட்டேனே என்ற அடக்க இயலாத மனோவேதனையுடன் Berlin இல் நான் தனியே இருந்தபோது என் மூத்த அண்ணர் விவேகானந்தராஜாவுடன் பலகாலமாக ஜெர்மனியில் இருந்த திரு. ஆனந்தராஜா அவர்கள் எனக்கு உதவி புரிந்தார்கள் (மொழிபெயர்ப்பாளர் பேர்னிள் ஆனந்தராஜா).

அப்போது என்னிடம் வந்து சில நாட்டுப் பற்றுப் பாடல்கள் பாடவேண்டும் என்று சுதா சுரேந்திரன் ஆகியோர் கேட்டதின் பெயரில் பத்து தமிழ் நிகழ்ச்சிகளில் நம் நாட்டின் நிலை பற்றிய பாடல்களைப் பாடினேன். புலிகளின் புயலிசை என்ற நிகழ்ச்சி அது. அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அப்பொழுது ஜெர்மனியில் இருந்த தம்பி கோணேஷ்சும் நானும் இணைந்தே நடத்தினோம். மீண்டும் நானும் கோணேஷ்சும் இணைந்து அந்த நிகழ்ச்சியில்தான். இவர்களின் நாட்டுப்பற்றுச் சேவைக்காகவே இதைச் செய்தேன்.

பின்னர் என் பிள்ளைகளில் நால்வர் ஜெர்மனி வந்தபின்னர் எனக்களந்தது அவ்வளவுதான் என்று நினைத்துக்

கொண்டு உயிர்தப்பியது போதும் என்ற எண்ணத்தில் அரசாங்கம் தரும் பணத்தில் காலத்தைக் கடத்தி வந்தேன். இசை என்ற எண்ணமே என்னை விட்டுக் கடந்து போய்விட்டது போலத் தோன்றியது எனக்கு.

ஒருநாள், பரமேஷ் நான் உங்களை பழைய பரமேஷ் போல மீண்டும் பார்க்க வேண்டுமென்று சொல்லி என்னிடம் கீபோர்டு ஒன்றை தந்தார் ஜெர்மனியில் வாழ்ந்துவரும் என் நண்பன் யோகநாதன். நானும் மிக ஆசையாக வாங்கிக் கொண்டேன். உடனே எனக்குப் பணம் தரவேண்டாம் மாதம் மாதம் முடிந்ததைத் தாருங்கள் என்று என்னிடமும் மாலினியிடமும் சொல்லித் தந்துவிட்டு சென்றார் யோகநாதன். மொத்தமான 3700 DM தொகையை மாதாமாதம் 200 DM வீதம் கொடுத்து முழுவதுமாகக் கட்டிமுடித்தேன்.

இந்த கீபோர்டைக் கொண்டே நூற்றுக்கும் அதிகமான பாடல்களை வீட்டில் இருந்தவாறே இயற்றி இசையமைத்தேன். என் பாடல்களை யார் மூலமோ கேட்ட திரு. முத்துக்குமார் அவர்கள் என் வீடு தேடிவந்து பரமேஷ் உன் போல் ஒரு கலைஞனை நான் காணவில்லை என்று பாராட்டி பல ஒலிப் நாடாக்களை எனக்கு அன்பளிப்பாக வாங்கித் தந்தார். அமரர் திரு. முத்துக்குமார் அவர்களுக்கும் என் நன்றி.

இந்த நூற்றுக்கும் அதிகமான பாடல்களில் தெரிவு செய்ததைக் கொண்டே 1995ம் ஆண்டில் வெளியிட்ட சங்கீத சாம்ராஜ்ஜியம் சி.டி.யில் தேர்ந்தெடுத்து அமைத்தேன்.

வீட்டோடு அமர்ந்து மன அமைதிக்காகப் பாடல்களைச் செய்வதும் பின்னர் அதைக் கேட்டு மகிழ்வதும் அதைக் குறுந்தட்டு வடிவில் அமைத்து வெளியிடப் பணம் இல்லையே என்று கண்ணீர் விடுவதுமே தினந்தோறும் என் வாழ்க்கையின் வாடிக்கையாக இருந்தது.

இந்த வேளையில் ஒரு நடன அரங்கேற்ற நிகழ்ச்சியில் என் மனைவியைக் கண்ட சிறீபதி சிவனடியான் அவர்கள் தனது முகவரி அட்டையைப் பரமேஷ் அவர்களிடம் கொடுங்கள் என்று

கொடுத்து அனுப்பியிருந்தார். தன்னுடன் தொடர்பு கொள்ளும்படி பின்னர் தனது ஒரு விழாவிற்கு Frankfurtக்கு வரும்படியும் அழைப்பிதழுடன் நான் போக்குவரத்துச் செலவும் தருவேன் கண்டிப்பாக பரமேஷ் மாலினி இருவரும் வரவேண்டும் என்று எழுதியிருந்தார். நாம் இருவரும் சென்று அவரை நஷ்டப்படுத்தக் கூடாது என்று நான் மட்டும் சென்றேன்.

சில நாட்களின் பின்னர் என்னைத் தொலைபேசியில் அழைத்து பரமேஷ் நான் உங்கள் வீட்டிற்கு இவ்வாரச் சனிக்கிழமை வருவேன் என்று கூறினார். சொன்னது போல் மாலை 4 மணிக்கு Korschenbroichல் இருக்கும் எனது இல்லத்திற்கு சிறீபதி அவர்கள் வந்தார்கள். அவர் என்ன விடயமாக என்னிடம் வந்தார் என்று முதலில் எனக்கு விளங்கவில்லை.

அவரே கதையை ஆரம்பித்தார் பரமேஷ் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை எனக்குப் புரியும். அதோ நீங்கள் பாருங்கள் உங்கள் முன்பே நீங்களே போட்டிருக்கும் உங்களை இளமைக்காலக் கல்யாணப் படத்தை எத்தனை குளிர்ந்த முகம். இந்தக் கோலத்திற் தான் உங்களை நான் கண்டேன். இன்று அந்த சந்தோஷமான முகத்தை உங்களிற் காணமுடியவில்லை என்று சொன்னது மட்டுமல்ல என் வாழ்க்கையில் நிகழ்ந்த சகல சுழற்சிகளையும் எனக்கு நேர்ந்த இன்ப துன்பங்கள் எல்லாவற்றினையும் ஜெர்மனியில் எனக்கு ஏற்பட்ட கலைவாழ்வின் வெறுப்புகளின் உண்மைகளையும் ஒன்று விடாமல் சொன்னார்.

இவையனைத்தையும் சொல்லிவிட்டு அவர் சொன்னதுதான் மறக்க முடியாதது. வாழ்ந்த கலைஞர்களை மீண்டும் வாழ வைப்பதுதான் என் கலைப்பணி. பரமேஷ் நீங்கள் மீண்டும் வெளிவர வேண்டும் இந்த வருடமே பரமேஷின் ஒலிப்பேழை சிடி ஜெர்மனியில் வெளிவர வேண்டும். நான் அதற்கான சகல உதவிகளையும் செய்கின்றேன் என்று கூறினார். எனக்குக் கண்ணீர் ததும்பியது. மிகவும் உணர்ச்சி வயப்பட்டு நான் அழவே செய்துவிட்டேன்.

தேனீர் குடித்தபடி என் வீட்டின் சகல புகைப்படங்களையும் பார்த்துக் கொண்டிருந்த சிறீபதி அவர்கள் ஒரு படத்தைப் பார்த்து



இந்த ஆசிரியர் தம்பதியினர் யார் உங்களிற்கு என்றார். நானும் பதிலுக்கு இவர்களை உங்களிற்குத் தெரியுமா என்று கேட்டேன். அதற்கு சிறீபதியவர்கள் தெரியுமாவா என் மதிப்பிற்குரிய பேராசிரியர் தமிழறிஞர் மா. பீதாம்பரன் புகைப்படம் எனக்குத் தெரியாதா என்றார். அவருடைய மகன்தான் நான் என்று பதில் சொன்னவுடன் அவரிற்கிருந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உடனே "என்னுடன் இருபது வருடங்களின் முன் Berlinல் இருந்த கேதீஸ்வரன் பீதாம்பரன் உங்களுக்கு என்ன உறவு" என்று கேட்டார். நான் சொன்னேன் அவர் கேதீஸ்வரனல்ல ஜெகதீஸ்வரன் பீதாம்பரன். அவருடைய தம்பிதான் இந்த பரமேஷ் என்றேன். **அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.**

இந்த வருடம் உங்கள் பாடல்களின் குறுந்தட்டுப் பதிப்பு வெளிவர என்னாலான உதவிகள் செய்வேன் என்று சொல்லிச் சென்ற சிறீபதி அவர்கள் தன் வாக்கைக் காப்பாற்றினார்கள். அந்த அன்பான மனிதரை நாம் என்றும் வாழ்நாளில் மறக்கமாட்டோம்.

இவருடைய அனுசரணையுடன் 95ம் வருடம் வெளிவந்த சங்கீத சாம்ராஜ்ஜியம் C.D. MPR 001 95 இதே வருடம் செப்டம்பர் மாதம் 31ம் திகதி எசன் மாநகரில் நடைபெற்ற தமிழருவி விழாவில் வெளியிட்டோம். தமிழருவி விழா ஒழுங்கமைப்பாளர் திரு. விஜயன் அவர்களுக்கு எனது நன்றி.

இந்த வெளியீட்டு விழாவிற்கு பரீஸ் மாநகரில் இருந்து வருகை தந்த ஈழநாடு பிரதம ஆசிரியர் திரு. எஸ்.எஸ். குகநாதன் அவர்களின் வாழ்த்துச் சொற்பொழிவுடனும் லண்டன் மாநகரில் இருந்து வருகைதந்த ஈழகேசரி ஆசிரியர் திரு. ஸி. ராஜகோபால் அவர்களின் ஆசி உரைகளுடனும் வெளிநாட்டில் எனது இசைப்பாடல்கள் அடங்கிய குறுந்தகடுகள் விற்பனையாகத் தொடங்கிய வைபவத்தை என்னால் மறக்கமுடியாது. திரு.

குகநாதன் அவர்களிற்கும் திரு. ராஜகோபால் அவர்களிற்கும் எனது மொத்த குடும்பத்தினரின் நன்றியறிதலும் என்றும் உண்டு.

இந்த சி.டி.யில் என்னைப் போல் தன் 18 வயதினிலேயே தானே இயற்றி இசையமைத்த பாடலைப் பாடிய என் மகள் செய்த சாதனைதான் நாம் இந்த சி.டி.யை வெளியிட்டதன் பலனைத் தந்தது என்று எண்ணி நானும் எனது மனைவி மாலினி மட்டுமல்ல ஏனைய இளம் இசைக் கலைஞர்களும் மனத்பூரித்தோம்.

**சி.டி. இசைத்தட்டிற்கு இசையமைத்த முதலாவது ஈழத்தமிழ் மகள் என்ற பெயரைப் பிரபாலினி பரமேஷ்க்குக் கொடுத்தது நாங்கள் வெளியிட்ட சங்கீத சாம்ராஜ்ஜியம் என்கிற இசைத் தொகுப்பு.**

எனது முதலாவது இலங்கைத் தமிழ் இசைத்தட்டு எவ்வளவு சீக்கிரம் விற்பனையாகியதோ அதைவிட வேகமாக 3 மாதங்களிற்குள்ளேயே சங்கீத சாம்ராஜ்ஜியம் குறுந்தட்டுகள் முழுவதும் விற்பனையாகி சாதனைப் படைத்தது. வெளியீட்டு விழாவில் முதலாவது சி.டி.யை வாங்கிய சிறீபதியவர்களின் சகோதரியிவர்களினுடையதும் அவர் கணவருடைய கைவிசேஷம் தானிது என்றுதான் எனக்கு எண்ணத் தோன்றுகின்றது.

என் இசைவாழ்க்கை முடிந்துவிட்டது என்று எண்ணியிருந்த என்னை மீண்டும் வெள்ளிவிழாக் கலைஞனாக இசைத்தட்டுகளிலும் இசைமேடைளிலும் இசை வழங்க வழி வகுத்தவர் கலைக்காவலர் சிறீபதி அவர்கள்தான்.

இந்த குறுந்தட்டுகளையெல்லாம் அதிக லாபமின்றி விற்பனை செய்துவந்த வியாபார ஸ்தாபனத்தார் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த உணர்வுகளுடன் நன்றி பாராட்டுகிறேன்.

**நிச்சயமாகச் சொல்கிறேன் 25 வருடங்களின் பின்னர் வெளிவந்த இந்த வெள்ளிவிழா இசைத் தொகுப்பு எனது கடைசிப் படைப்பல்ல அதற்கு மாறாக எனது பிள்ளைகளின் முதலாவது வெளியீடு. இதுபோன்ற பல முத்தான வெளிப்பாடுகளை என் மகள் பிரபாலினி இசையமைப்பிலும் என் இசையமைப்பிலும் எமது கவியாக்கத்திலும் தொடர்ந்து வெளிவரும். இந்த உலகில்**

**நாங்கள் வாழும்வரை சங்கீதம் நம்மோடுதான் என்பதை நிச்சயமாக நிலைநாட்டுவோம்.**

அன்பு நெஞ்சங்களே! நான் பிரபல்யமாக வேண்டுமென்பதற்காக 1968ம் வருடம் பாட்டுப்பாட ஆரம்பிக்கவில்லை என்னை அறியாமல் என்னிடமிருந்த ஒரு திறமையின் எதிரொலி வெளிப்பட்டு அந்த எதிரொலி மக்கள் மனதைக் கவர்ந்தது. அவர்கள் தான் என்னைப் பிரபல்யமாக்கினார்கள்.

நான் முதலாவது இலங்கைத் தமிழ் இசைத் தட்டுத் தயாரிக்க வேண்டுமென்று முன் முடிவு செய்து அந்த இசைத்தட்டைத் தயாரிக்கவில்லை. நான் தயாரித்த இசைத்தட்டு இலங்கையின் முதலாவது இசைத்தட்டாக அமைந்துவிட்டது.

கடந்துசென்ற இருபத்தைந்து வருடங்களின் பின்னரும் சங்கீத சாம்ராஜ்ஜியம் என்னும் சி.டி.யைத் தயாரிக்க வேண்டுமென்று நான் முன்கூட்டியே திட்டம் போட்டிருக்கவில்லை நான் நினைத்துச் செய்யாதவையும் திட்டமிட்டுச் செய்யாதவையுமான பல வெளிப்பாடுகள் என் வாழ்வினில் திடகாத்திரமான அத்திவாரமிட்ட பெறுமதிவாய்ந்த புகழாரங்களாக அமைந்துவிட்டன.

என்னைப்போல் வாழ்க்கையை இசைவழியினிலே தொடருங்கள் என்று நான் என் பிள்ளைகளை வற்புறுத்தவில்லை தானாகவே தந்தை தாய் வழி தொடர்கின்றார்கள். மீன் குஞ்சுக்கு நீந்தவும் மயில் குஞ்சுக்கு ஆடவும் குயில் பாடவும் மான்குட்டிக்கு பாயவுமான திறமைகளை இயல்பாகவே படைத்த ஆண்டவன் நான் பாடிய பாடல்களை எனது பிள்ளைகள் வழியாகத் தொடர வழிவகுக்காமலா போய்விடுவான்?

எனக்கொரு இலட்சியக் கனவு இருக்கின்றது. எங்கள் வானொலியில் இரவு பகலாக எங்கள் ஈழத்துக் கலைஞர்களின் பாடல்கள், நமது இந்திய முன்னோடி கலைஞர்களின் பாடல்களையும் மிஞ்சிய தராதரத்தில் ஒலிக்க வேண்டும். மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும். ஆனால் உங்கள் முற்றத்து மல்லிகை மணம் வீசும் போது உங்களிற்கு ஏற்படும்

இன்பம் அதன் சுகந்தம் நிறைந்த மணம் மாற்றான் தோட்டத்து மல்லிகையின் இரவல் மணத்தில் இருக்கவே இருக்காது. இந்த என் ஆசை எனது காலத்தில் நிறைவேறாவிட்டாலும் என் பிள்ளைகள் காலத்தில் நிச்சயம் நிறைவேறும். நல்ல தரமான பாடல்களை தயாரியுங்கள் நிச்சயமாக இந்திய மக்கள் மட்டுமல்ல உலகம் முழுவதுமாக வாழும் தமிழ்மக்கள் அனைவரும் விரும்பி ஆதரவளிப்பார்.

அதற்கு ஆதாரமாக நான் ஒரு தகவலைத் தொகுத்துத் தர விரும்புகிறேன். இலங்கையில் வெளியான எனது முதலாவது இசைத்தட்டுப் பாடல்கள் ''உனக்குத் தெரியுமா'', ''நீ வாழுமிடமெங்கே'', ''நீயின்றி நிலவு ஏன் வந்ததிங்கு'', ''போகாதே தூரப்போகாதே தாங்காதே நெஞ்சம் தாங்காதே'' (இது இசைத்தட்டில் வெளிவந்த முதலாவது பொப் இசைப்பாடல் என்பது குறிப்பிடத்தக்கது) போன்ற இந்தப் பாடல்களை இலங்கை மக்களிற்காக ஒலிபரப்பும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் ''நீங்கள் கேட்டவை'' நிகழ்ச்சியில் தமிழ்ச்சேவை ஒன்று தமிழ்ச்சேவை இரண்டு ஆகிய நிகழ்ச்சிகளில் விரும்பிக் கேட்டவர்களை விட அதிகமானோர் இந்தியா மலேசியா சிங்கப்பூர் ஆசிய நாடுகளிற்காக ஒலிபரப்பாகும் ஆசிய சேவையிலேயே கேட்டனர் என்பது அனைவரும் அறிந்தது.

இந்த உண்மை இலங்கை வானொலியில் கடமையாற்றிய ஒவ்வொரு அறிவிப்பாளர்களிற்கும் தெரியும்.

இது நான் எனக்காக எழுதும் புகழ்ச்சியல்ல. இந்தப் பெருமை இலங்கை இசைக்கலைஞர்களிற்கே. எங்கள் மக்கள் எங்கள் பாடல்களை இரசிக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தை அடியோடு தூக்கி எறிந்து விடுங்கள். இதை 25 வருடத்தின் முன் எனது முதலாவது இலங்கைத் தமிழ் இசைத்தட்டு மூலமும் இன்று எனது வெள்ளி விழா ஆண்டில் எனது சங்கீத சாம்ராஜ்ஜியம் சி.டி. வெளியீட்டின் வெற்றியின் மூலமும் நிரூபித்துவிட்டேன். அந்தத் திருப்தியே எனக்குப் போதும்.

இவ்வளவு எல்லாம் எழுதும் என்னிடம் நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்கலாம். ஏன் ஈழத்துத் திரைப்படங்களிற்கு

இசையமைக்கவில்லை? இதற்கான பதிலை நான் உறுதியாகக் கூறுகிறேன். அதை எழுதாவிட்டால் இந்த என் வாழ்க்கைசரிதம் என் இசைப்பயணங்கள் குறித்த நினைவோடை நிறைவு பெறாது.

இந்தியாவில் மட்டுமல்ல உலகநாடுகள் அனைத்திலும் திரைப்படங்கள்தான் எந்தவொரு கலைஞனையும் மிக அதிகமாக பிரபல்யமாக்கி அவர்களின் வாழ்வை வெற்றிநடை போடச் செய்கின்றது. ஆனால் இலங்கையில் எமது காலத்தில் எந்த ஈழத்துப்படம் மக்கள் முண்டியடித்துப் பார்க்கக்கூடியதாக இருந்தது? எதுவுமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இலங்கையின் மற்ற அனைத்து ஊடகங்களிலும் வானொலி வடிவம்தான் மிகவும் புகழ்பெற்ற ஊடகமாக இருந்தது.

எனவேதான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தில் ஒலித்த பாடல்கள் நாடகங்கள் போன்றவைகளின் வாயிலாகப் பிரபல்யமான இசைஞர்கள் கலைஞர்கள் அறிவிப்பாளர்கள்தான் இன்று உலகநாடுகளிற் தமிழ்க் கலைக்கு முழுவதுமாக உயிர் கொடுத்து வாழவைத்துக் கொண்டிருக்கின்றனர். நானும்கூட இந்த வானொலி ஒலிபரப்பின் மூலமும் என் இசைத்தட்டுகளின் மூலமும் பிரபல்யமானவன்தானே.

இவற்றிற்கெல்லாம் முன்பு எனது பாடல்கள் மேடையிற் பாடும் போதே பிரபல்யமாகிவிட்டது. ஏனெனில் எனது மேடை நிகழ்ச்சிகளை விட அன்றைக்கு வெளியாகிய ஈழத்தமிழ் திரைப்படங்கள் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இன்னுமொரு சிக்கலும் இருந்தது. ஈழத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் அநேகம் பேர் முகத்தாட்சண்யத்திற்காகவோ பண உதவி செய்வார்கள் என்பதற்காகவோ உறவினர் மற்றும் நண்பர்களை வைத்தே படமெடுத்து வந்தனர்.

இவை போன்ற திரைப்பட முயற்சிகளால் பெருமளவு நஷ்டமடைந்தவர்களே பலர். ஈழத்திரைப்படம் எடுத்த அதே தயாரிப்பாளர் மீண்டும் இன்னொரு திரைப்படம் எடுத்ததான நினைவே எனக்கில்லை. சிங்களப் பாடல்களில் பலவற்றிற்கு இசையமைத்துக் கொண்டிருந்தவர்கள் சில அசல் தமிழர்கள் அவர்களில் பிரபல்யமான இருவர் திரு. றொக்சாமி

(ஆரோக்கியசாமி) தமிழர் திரு. முத்துசாமி தமிழர் ஆகியோர். இவர்கள் இசையமைத்த தமிழ் இசைத்தட்டு பாடல்கள் அமோக வெற்றி பெற்றனவா? ஈழத்தில் தமிழ்த்திரைப்படச் சூழ்நிலை இது போன்றிருக்க நான் ஏன் தமிழ்ப்படத்தில் இசையமைக்க ஆசைப்படப் போகின்றேன்.

இந்தியக் கலைஞர்களை உருவாக்கியது இந்தியத் திரைப்படங்கள் என்றால் ஈழத்துக் கலைஞர்களைப் பிரபல்யமாக்கியது இலங்கை வானொலி. அதுமட்டுமல்ல இந்தியத் திரைப்படங்கள் நீண்ட நாட்கள் ஓடுவதற்கு வசதியான வெளிப்பாடாகவும் திகழ்ந்ததுவும் நிச்சயமாக இலங்கை வானொலியே.

இந்தியாவில் தோல்வியுற்ற இந்தியத் திரைப்படங்கள் பல இலங்கை வானொலி விளம்பரத்தின் பின்னர் இரண்டாவது தடவையாக வெற்றிமுரசு கொட்டி ஓடியுள்ளன. எனவே திரைப்படத்தில் இசையமைக்காமற் போனதற்கு இதுவே காரணம். இலங்கையில் 36 தமிழ் திரைப்படங்களே வெளிவந்தன. அவையும் எனது 20 வயதிற்கு முன்பே வந்தவை. மக்கள் முட்டிமோதி பார்த்தார்கள் என்று சொல்ல எதுவுமே இல்லை. எமது இசைத்தென்றல் மேடை நிகழ்ச்சிகள் அப்படியல்ல! மண்டப வாயினிலேயே அனுமதிச் சீட்டுக்கள் பெற்று சென்று கண்டு களித்தவரைவிட முன்கூட்டியே அனுமதிச் சீட்டுக்களை வாங்கி காத்திருந்த ரசிகர்கள் ஏராளம்.

நான் கலைக்காவலர் சிறீபதி அவர்களிடம் அடிக்கடி சொல்வேன் உங்கள் காலத்தில் ஐரோப்பாவில் ஒரு தமிழ் வானொலி நிலையம் அமைத்தாற்தான் உங்களை கலைத்தொண்டு என்னவோ தன் நண்பர்கள் ஈழநாடு பிரதம ஆசிரியர் திரு. எஸ்.எஸ். குகநாதன் ஈழகேசரி பிரதம ஆசிரியர் திரு. ஆர். ராஜகோபால் மற்றும் மிகுந்த கனிவு நிறைந்த கலையுள்ளம் படைத்த நண்பர்கள் துணையுடன் முதன்முறையாக ஆரம்பித்தார். இன்று பல தமிழ் வானொலி நிகழ்ச்சிகள் உலகெங்கும் ஒலிபரப்பாகிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் அன்று அப்படி ஒரு வேண்டுகோளைச் சிறீபதியிடம் விடுத்து முதல் வானொலி உருவாகக் காரணமாயிருந்தவர்களுள் நானும் ஒருவன்.

என்னால் நிகழ்த்த முடியாத செயல்கள் பல இருக்கின்றன. அவற்றைச் சிலர் செய்யும் பொழுது சந்தோஷத்தால் மனம் பூரிக்கின்றேன். உண்மையில் என் உள்ளம் புரிந்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவுதான். ஆனால் என் கலைத்துறை தொடர்பான எண்ணத் துடிப்புகளை அறியாத பலரை விட அறிந்த சிலரை நான் மிகவும் நேசிக்கிறேன். அவர்களால்தான் எனது கலைப்பயணம் வெற்றிகரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

விட்டு கொடுத்தே கெட்ட பெயர் வாங்கியவன் நான். அன்று மட்டுமல்ல இன்றும்தான் நான் விட்டுக் கொடுத்துவிட்டு வந்த எதையும் தொட்டகுறை விட்டழிக்காமற் கட்டி முடித்ததெல்லாம்தான் இன்றும் எட்டுத்திசையும் ஈழத்தமிழ்ப் பாடலாக இசைத்தட்டுக்களில் ஒலிக்கின்றன. அப்போதெல்லாம் என் கவலை "உனக்குத் தெரியுமா" பாடலை தொடர்ந்து குறைந்தது 100 பாடல்களாவது செய்து முடிக்க முடியவில்லையே என்று கண்ணீர் சிந்துவேன்.

நான் சிந்தும் ஒவ்வொரு கண்ணீர்த்துளிகளும் விழுந்து காயும் முன் ஒரு பாடலெழுதி முடித்துவிடுவேன். ஆனால் வெளியிட முடியவில்லை. என்ன செய்வது புலமையும் வறுமையும் அன்று முதல் ஒன்றாகவே பிறந்தவை. எல்லாவற்றிற்கும் பணம் என்ற ஒரு பொருளும் வேண்டும். ஆனால் பணத்தால் எல்லாம் செய்ய முடியும் என்றும் இல்லை.

எனது வாழ்க்கையில் நான் அடியெடுத்து வைத்த ஒவ்வொரு படிகளும் இடக்கு முடக்குகளால் மட்டுமே ஆனவை. இவற்றில் நான் இடறி விழுந்த நேரத்திலெல்லாம் சற்று நேரம் கழித்து என் பயம் தெளிந்தவுடன் மனதில் முன்பைவிட அதிகமான அளவு மனஉறுதியும் வளர்ந்திருக்கின்றது.

எத்தனை முறை விழுகிறோம் என்பதைவிட எவ்வளவு விரைவாக எழுந்து பயணத்தைத் தொடர முடியும் என்பதுதானே முக்கியம். ஒருகாலில் தொடர்ந்து அடிபட்டு அடிபட்டு ரணப்பட்டு பின் முற்றிலுமாக காய்ப்பேறிப் போன பின்னர் எத்தனை கற்களால் அடித்தாலும் நிச்சயமாக வலி தெரியவே தெரியாது.

நான் பள்ளிக்கூடக் காலத்தில் முதன் முதலாகப் பாடிய பாடல் பச்சை விளக்கு திரைப்படத்தில் T.M. சௌந்தர்ராஜன் சிவாஜிகணேசன் அவர்களிற்காகப் பாடிய ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்திற் தெரிகின்றது என்ற பாடல். ஆரம்பகாலத்தில் இலங்கையில் சில சிறிய இசைக்குழுக்கள் இருந்தன அவற்றுடன் இணைந்து ஒரு பாடல் பாடினாலே போதுமென்று வாய்ப்புக்காக அலைந்தேன்.

ஆனால் ஒருபோதும் வாய்ப்புக் கிடைக்கவே இல்லை. அது எனக்குக் கிடைத்த அடி. அது எனக்கு நெஞ்சில் பட்ட அடி. என்னுடைய பட்டப்படிப்புகளையும் குழப்பியது. பின்னர் பரமேஷ் கோணேஷ் இசைக்குழுவை ஆரம்பித்தேன். கைகொடுத்தான் கடவுள் என்பது போல் நண்பன் எஸ்.சி. மகேஷ் எங்களுடன் இணைந்தான்.

மிகவும் காலம் அதிகமாகிடவில்லை சுமார் ஒரு வருடத்தில் எனக்கு இடங்கொடுக்காத இசைக்குழக்கள் எல்லாம் எங்களை அழைத்துப் பாராட்டிடும் வெறுமனே திரையிசைப் பாடல்கள் மட்டுமல்ல. முதன்முதலாக நானே இயற்றி இசையமைத்த பாடல்கள்.

ஈழத்துப் பாடல்கள் என்ற நிகழ்ச்சியைத் துவங்கிட இலங்கை வானொலி உயர் அதிகாரிகளுக்கு எண்ணம் வளர்ந்தது எனது பாடல்களின் வெற்றிக்கு பின்புதான். எனது சொந்தப் பாடல்கள், மக்கள் மத்தியில் பெற்ற வரவேற்புதான் இதற்குக் காரணம். எமது பரமேஷ் கோணேஷ் நிகழ்ச்சிக்குப் பொங்கி வழிந்த சனக்கூட்டம்தான் பொப் இசை என்ற நிகழ்ச்சியையே ஆரம்பிக்க வைத்த காலம்.

வானொலி நிலையத்தில் இருந்த பலர் வசதிகள் இருந்ததால் பொப் இசைப்பாடல்கள் பலவற்றைப் பாடியதும் எனது ''உனக்குத் தெரியுமா'', ''போகாதே தூரப் போகாதே'' போன்ற பொப் இசைப்பாடல்களைக் கேட்ட பின்னர்தான். இந்தியப் பாடல்களைவிட அவை இலங்கை வானொலியிற் பிரபல்யமானதும் எமது இசைத்தென்றல் நிகழ்ச்சிகளின் வெற்றிக்குப் பின்னர்தான். அன்றைக்கான அறிவிப்பாளர் திரு. நடராஜசிவம் அவர்களைக் கேட்டாற் சொல்லுவார்.

அவர் வானொலி நிலையத்திற் கடமையாற்றியபொழுது வெளியான ராமச்சந்திரன் பாடிய பாடல் ''நத்தை என்று ஊர்ந்து வருகின்றார்'' அவரும் பாடலுக்கு இடையில் சில வசனங்கள் பேசியுள்ளார். அந்தப் பாடலில் பங்கேற்றிருந்த போதும் நடராஜசிவம் அவர்களைக் கேட்டாற் சொல்லுவார். பரமேஷ் பாடல்கள் வெளிவந்து எவ்வளவு காலத்திற் பின்னர் மற்ற அனைத்துப் பாடல்களும் வெளிவந்ததென்று. அதுமட்டுமல்ல அன்றைக்கு நாங்கள் செய்ததோ எமது சொந்தச் செலவிலும் ஆதரவுகள் அற்ற நிலையிலும்தான்.

இவையெல்லாம் எனது புகழைப்பேசிட வேண்டும் என்கிற தற்பொருமைக்காக எழுதவில்லை. அன்றைக்கு நான் பட்ட வேதனைகள் அனைத்தும் இன்று இன்ப இசையாக ஒலிக்கின்றதே அந்த மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். இன்று புலம்பெயர்ந்த பூமியில் இருக்கும் ஆர்வமெல்லாம் அன்று எமது ஈழ மண்ணில் இருந்திருந்தால் அந்நியக்கலை நம்மை அங்கு ஆண்டிருக்குமா? என்ற உணர்ச்சிகள் வளர வேண்டுமென்பதற்காகவே என் நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறேனேயன்றி வெறும் புகழ்ச்சிக்காகவில்லை.

அனைத்துக் கலைஞர்களுக்கும் நிகழும் அந்த துயரம் எனக்கும் நேர்ந்தது. எந்த அளவிற்கு திறமைமிகுந்த கலைஞர்கள் அல்லது பாடகர்களென்றாலும் மது பாவித்தால் மேடையில் இருந்து நிகழ்ச்சிக்கு நடுவிலேயே அவர்களை இறக்கி என் இசைக்குழுவில் இருந்து விலக்கியவன் நான்.

**அப்படிப்பட்டவன் என் தம்பி கோணேஷ் என்னைவிட்டுப் பிரிந்துசென்ற நாள் முதல் ஒரு போத்தல் பியர் இரண்டு போத்தல் பியர் என்று குடிக்கப் பழகி பரமேஷ் குடிகாரன் என்ற பெயர் எடுத்தவன். கண்ணீர்சிந்த பலர் மன்றாடிய போதும் மதுவைப் பாவிக்கத் துவங்கினேன். பலரும் விரும்பிக் கேட்ட என் இசைத்தென்றல் நின்று போச்சே என்று கொஞ்சகாலம் நெஞ்சு வேகக் குடித்துக் கொண்டிருந்தேன்.** ஆனால் அப்பொழுது கூட நான் குடித்துவிட்டு மேடை ஏறிப் பாடியது மிகமிகக் குறைவான நேரங்கள்தான்.

காரணம் குடித்தவர்களை நான் மேடையை விட்டிறக்கிய காலகட்டத்தில் எனக்கிருந்த மனோபாவம் என் மனதில் உறுத்தும். சில மேடைகளில் நான் குடித்துவிட்டு பாடியிருக்கின்றேன். ஆனால் மனிதர்களோ எல்லா மேடைகளிலும் குடித்துவிட்டுதான் பாடியுள்ளேன் என்ற பெயரை முத்திரை குத்திவிட்டார்கள்.

குடிப்பழக்கம் இருந்த காலத்திற்குகூட நான் எழுதிய பாடல்கள் இனிமையானவை என்றே அனைவரும் சொன்னார்கள். இவையாவற்றையும் என் காலத்தில் இசைத்தட்டு வடிவில் அள்ளித் தந்துவிட்டே செல்வேன். குடிக்கக் காரணம் சொல்பவர்களை முழுவதுமாக எதிர்ப்பவன் நான். இந்தக் கவலையை நான் மட்டும் மனதில் வைத்து புழுங்கலாமே தவிர எவரும் ஆறுதல் சொல்ல முடியாது. ஆறுதல் சொல்பவர்களைப் பார்த்தாலும் ஆத்திரமே வரும்.

தற்கொலைக்குப் பதிலாகத்தான் நான் குடித்தேன். இப்படியும் ஒரு காலம் வாழ்ந்தேன். ஆனால் எப்படியும் வாழலாம் என்ற எண்ணம் என்றுமே வந்ததில்லை. வாழ்வில் மேடு பள்ளங்கள் அதிகமாக குறுக்கிடும்பொழுது மென்மையான மனங்கொண்ட கலைஞர்கள் போதையின் பாதையில் இடறுகிறார்கள். எனவேதான் நான் நடந்த பாதை அனைத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். வாழ்வின் அனைத்து பாகங்களும் வெறும் நல்ல சுவைகள் மட்டுமே கொண்டவை அல்ல. எனவே இதையும் சேர்த்தே பகிர்ந்து கொள்கிறேன்.

**என் வாழ்க்கை இசைப் பயணங்களிற் தொடராமல் வேறு பட்டப்படிப்புகளிற் தொடராதது நினைத்து இன்று பெருமைப்படுகின்றேன்.** ஈழத்தமிழர்களிடையே கலைஞர்கள் அதிகரிக்க வேண்டும். வேறு பட்டப்படிப்புகளும் கலைகள் தொடர்பானவைதான். ஆனால் இவர்கள் இடையில் வரும் படிப்பால் மட்டுமே உருவாக்கப்படுகிறார்கள். இயல் இசை நாடகம் போன்ற வடிவங்களின் கலைஞர்கள் எழுத்தாளர்கள் சிந்தனையாளர்கள் எல்லாம் பிறப்பிலேயே உதயமாக வேண்டும். விட்ட குறை தொட்ட குறை என்று உலகில் உதிப்பவர்களே கலைஞர்கள்.

பெற்றோர்களே உங்களிற்கு என் அன்பான வேண்டுகோள்! எழுத்திலே, படைப்பிலே கவனம் செலுத்தும் கலைத்தொழிலைத் தமது பிள்ளைகள் தொடர்வதை விரும்பாத பல பெற்றோர் பல்லாண்டு காலமாகத் தமது பிள்ளைகளின் கலையார்வத்தை வளரவிடாது அழித்து விட்டனர். தற்பொழுது அந்தக் கலையார்வம் இங்கு மேவி வளரும் நிலை ஆரம்பித்துள்ளது. இதைக் காண எனக்கு மிக்க மகிழ்ச்சி.

தொழிலாளர்கள் பட்டதாரிகள் ஏன் மனிதர்கள் அனைவரும்கூட மன நிம்மதியடைவது கலையால்தான் கலைஞர்களால்தான். வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் வீடியோ ஆடியோ சாதனங்களும் இல்லாத இல்லங்களே இன்று இல்லை. எனவே உங்கள் குழந்தைகளின் கலையார்வத்தை நீங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

பாட்டுடன் பிறந்து பாட்டுடன் இறப்பவன் தமிழன். பிள்ளை பிறந்தால் தாலாட்டு, தத்தி நடக்க ஒரு பாட்டு, சோறு ஊட்ட நிலாப்பாட்டு, சொன்னது கேட்கச் சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா என்று சொற்கேளாப் பிள்ளைக்குச் சொல்லிச் சென்றார் அருள் பாட்டு. தலைவாரிப் பூச்சூடிப் பாடசாலையனுப்ப ஒரு பாட்டு. கற்றுவந்த வித்தை கேட்க இன்ப நொடிப்பாட்டு. இன்னுமவர் வளர வளர வெளியே சென்று வீடு திரும்பி வரும்வரை வழிமேல் விழிவைத்து அன்னை சிந்தும் கண்ணீர்ப்பாட்டு. காதலிற் கட்டுண்டு காதலிசைப் பாட்டு.

காலமெல்லாம் கட்டி வளர்த்த அன்னை பிரிந்தால் ஆறாத்துயர்ப் பாட்டு. ஆண்டாண்டு காலம் அள்ளித் தோள்மீது வளர்த்த தந்தை மறைந்தால் மனம் தாங்கா ஓலப்பாட்டு. நாலுபேர் தூக்கிச் செல்ல நாளிதுவே கடைசியென்று நெஞ்சமுருகும் ஒப்பாரிப்பாட்டு. பெற்ற உடல் வெந்த தணலில் வேகும்போது வேதியர்பாடும் தேவாரப்பாட்டு. செத்தவர் செய்த சேவை எண்ணித் தினம் தினமெழுதும் புகழ்ச்சிப்பாட்டு. பிறப்பிற்கு பாட்டு நடக்கவைக்கும் பாட்டு. இறப்பிற்கும் பாட்டு. இப்படிப் பாட்டுடன் பிறந்து பாட்டுடன் மடிபவன் தமிழன்.

இசைக்கு இசையாத உயிர்கள் எதுவும் இல்லை. இதற்குப் பெயரே இசை. இசையால் இசைந்து பாடலைப் பாடி ஒருவரை

வாழ வைக்கவும் முடியும் சாகடிக்கவும் முடியும். இசையால் உணவின்றியும் வாழலாம். இதை நிரூபித்துக் காட்டியவர்கள் எமது தமிழ்ச் சித்தர்கள் பலர். வாழ்த்துப் பாடி வாழ வைக்கவும் அறம் பாடி அழித்தொழிக்கவும் சக்தி வாய்ந்தது நமது தமிழிசை.

அன்பானவர்களே! இனியாவது உங்கள் பிள்ளைகளிடம் நீ என்னவாக வரவிரும்புகிறாய் பின்காலத்தில் என்று கேட்குமுன், மகனே அல்லது மகளே! நீ எக்கல்வியையும் உன் வாழ்க்கைக்குத் தேவையானது என்று நீ விரும்பியது அனைத்தையும் கற்றுக் கொள்ளலாம். எத்தனை விதமான மொழிகளையும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் முதலில் அம்மா அப்பா என்று உன் வாயில் இருந்து வந்த முதல் மொழியைச் சரிவரக் கற்றுக்கொள். உன் தாய்மொழியைச் சிறப்பாகக் கற்றுக்கொள் என்று பயிற்றுவியுங்கள்.

அதேபோல வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இசைத்தட்டு நாடாக்களிலும் வழிந்து வரும் யாதொரு இசையைக் கேட்குமுன் உங்கள் குழந்தைகளிடம் உன் குரலில் நீ பாடி அதை நாம் கேட்க வேண்டும். உன் விரல்கள் மீட்டும் இசையைக் கேட்க வேண்டும் உன் பாடல்கள் இசைத்தட்டிலோ வேறு வடிவங்களிலோ வெளிவர அதை நாம் கேட்க வேண்டும் என்று ஊக்குவியுங்கள்.

இசையைக் கற்றுக் கொள்ளும் விருப்பத்தை வளர்த்தெடுங்கள். ஐந்தறிவு கொண்ட மிருகங்களும் பறவைகளுமே அற்புதமான இசைக்கு இசையும்பொழுது பகுத்தறிவு படைத்த மனிதர் இசைக்கு இசையாவிடில் அதை விரும்பும் மனப்போக்குடன் குழந்தைகளை நாம் வளர்க்காவிடில் அது தவறானது.

உலகிலே மனித சமுதாயத்தில் இசை என்பது ஒரு அற்புதமான வெளிப்பாடு. எந்தத் தாயும் தாலாட்டுப் பாடும்போது அந்த மொழியும் அதன் விளக்கமும் குழந்தைக்கு அதன் இளம்பருவத்தில் விளங்காது. தாலாட்டினைக் கேட்கின்ற குழந்தை தன் அழுகையை நிறுத்தி உறங்கிவிடும் கவனித்திருக்கிறீர்களா? குழந்தை அங்கே கேட்பது இசை, தாலாட்டுப் பாடலின் ஒலி இனிமையை மட்டும் தான்.

இசைக்கு மொழியே தேவையில்லை. உலகின் அனைவருக்கும் பொதுவான மொழி என்று சொன்னால் அது நிச்சயமாக இசை ஒன்றுதான். எந்த ஒரு நாட்டவரும் இணைந்து இசைக்கக்கூடிய ஒரே எழுத்துக்கள் அடங்கிய மொழி இசைதான் அந்த அளவிற்கு இசை எழுத்துக்கள் போல் வேறு எந்த மொழி எழுத்தும் அனைவருக்கும் பொதுவானதாக இல்லை. இந்த உலக மொழி இசையை உங்கள் ஒவ்வொரு பிள்ளைகளிற்கும் கற்பியுங்கள். இதுவே எனது ஆசை அன்பு வேண்டுகோள்.

2000-ஆம் வருடம் எனைப்பிரிந்து சென்ற என் இசைத்தோழி அன்புக்காதலி ஆருயிர் மனைவி மாலினி பரமேஷ் எனக்குத் தந்து சென்ற ஆறு குழந்தைகளும் எனது மூத்த மருமகன் இசைக்கலைஞர் பிரபாகரனும் றிதம்ஸ் இசைக் கலைஞர்களும் 1968ஆம் வருடம் ஆரம்பித்த பரமேஷ் - கோணேஷ் இசைத்தென்றலின் தொடர்ச்சியாக இசைத்தென்றல் வீசுவர். ''சங்கீத சாம்ராஜ்ஜியம்'' போன்ற ஒலிப்பேழைகளை உருவாக்குவர் என்பது உறுதி.

தமிழர்களிற்கென்றொரு தனித்த சாம்ராஜ்ஜியம் கட்டப்படும்பொழுது சுதந்திரமான அந்நாட்டில் ஈழத்தமிழர் இசைத்தட்டுகளை வானொலி வாயிலாகவும் சுழல வழிவகுப்பர் என்பது என் பூரண நம்பிக்கை.

இவர்கள் இசைத்துக் கொண்டிருக்கும்வரை எனக்கு இறப்பே இல்லை.

நான் நுகர்வது நம்முற்றத்து மல்லிகையே. என் இனிய இசைப்பயணங்களில் என்னுடன் தொடர்ந்து வந்தவர்களும், இடையிலே இறங்கியவர்களும் இன்று என்னை நன்கு அறிந்திருப்பார்கள். பயணத்தில் இடையிடையே இடறல்களும், குழப்பங்களும் இருக்கவேண்டும், இல்லையேல் இப்பயணத்தில் உண்மையான சுவை இருக்காது.

பயணத்தில் இசைவாகனத்தில் ஜன்னல்களைத் திறந்து பயணிப்பவர்கள் நல்ல தென்றல் வீசாதபோது மெல்ல ஜன்னலை சாத்திவிடுவார்கள். அதுபோல என் வாழ்க்கையிலும் திறந்த

ஜன்னல் ஊடாக நல்ல காற்றை சுவாசித்திருக்கின்றேன், பலதடவை சுவாசிக்கவே காற்றைத் தேடியிருக்கின்றேன்.

நான் ஒரு இசைக் கலைஞன். நான் செய்த இசை பணத்தை தராதபோதும், வாழும் வரை சங்கீதம் என்னோடுதான் என்று கவிதைகள் எழுதுபவன். கலைக்காக நான் என்ன செய்யலாம் என்று கேட்பேனே தவிர; கலை எனக்கு என்ன செய்தது என்று ஒரு நாளும் கேட்பதில்லை.

**அந்நிய நாட்டவர் கலைத்திறனைக்**
**கண்டிங்கு போற்றுதல் நம் கடமை.**
**அடுத்தவர் கலைபோல் நம் திறனை**
**எடுத்து வளர்ப்பதே நம் பெருமை.**

**இசைக் கிண்ணத்திலே எங்கள் இதயம்.**




நன்றிகளுடன் உங்கள்

**எம்.பி. பரமேஷ்**

## நான் ஆணித்தரமாக எழுதவேண்டிய வரிகள்



இசையமைப்பாளர் என்று ஒருவரை குறிப்பிடுவதற்கு என்ன காரணம் என்று என் தம்பி கோணேஷுக்கு புரியாத ஒரு விடயமாகிவிட்டது. ஒரு பாடல் உருவாகுவதற்கு பல கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

ஆனால், அது இசையமைப்பு அல்ல. ஒரு தாய் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். அக்குழந்தையை பலரும் தூக்கி வளர்க்கின்றனர். இதுபோலவே தன் இதய இசை சுரப்பிகளால் தன் இசைப்பிரசவத்தை புரியும் ஒருவரே ஒரு பாடலுக்கு இசையமைப்பின் சொந்தக்காரர்.


அன்று என் தம்பி கோணேஷ் அவர் இசை ஆர்வத்தால் எனது 'பரமேஷ் கோணேஷ்' புரெடக்ஷன்ஸ் இசைத்தென்றலில் இணைந்திருந்தார் என்பது உண்மை.

ஆனால் இசையமைப்பாளராக அல்ல. என்னை விட்டு பல வருடங்கள் பிரிந்தபின்னரும் எனது மகள் பிரபாலினி இசையமைத்த பாடல்களுக்குக்கூட தான் உரிமைக்கூறி, தனது சொந்த வானொலியில் ஒலிபரப்பி வருகின்றார். தட்டிக்கேட்க எனது குழந்தைகள் வளர்ந்துவிட்டார்கள்.


அவர்கள் என்னைப்போல் எனது தம்பிக்கு விட்டுக்கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. எமது இசைக்குழுவிற்கு 'பரமேஷ் கோணேஷ்' இசைத்தென்றல் என்று பெயரிட்டதால், இசையமைப்புக்கும் கோணேஷ் உரிமையாளர் என்பது தவறு. எஸ்.இ. மகேஷ் என்னுடன் எப்படி இருந்தாரோ அதேபோல் கோணேஷும் இணைந்து இருந்தார் என்பதுதான் உண்மை.

ஆனால் மகேஷ் எனக்கு செய்த உதவிகள் எத்தனையோ. என் தம்பி கோணேஷ், நான் கஷ்டப்பட்டு கட்டியெழுப்பிய பரமேஷ் கோணேஷ் பெயரை அழித்தது மட்டுமல்லாது வாத்தியக் கருவிகளும் எனக்கு மிஞ்சவில்லை நான் பாடிய எந்த ஒரு பாடலுக்கும் என் தம்பி கோணேஷ் இசையமைக்கவில்லை. இதற்கு உதாரணம் என்னை விட்டு அவர் பிரிந்த பின்னர் அவர் இசையமைப்பில் ஒலிப்பேழைகள் வெளியிடவில்லை. நான் வாழும் நாட்களிலேயே இந்த உண்மையை தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஏனெனில் என் இசைப் பயணத்தைத் தொடர எனது குழந்தைகள் உள்ளனர். நான் பெற்ற வேதனையை என் குழந்தைகள் அறியக்கூடாது. எனது சகலப் பாடல்களுக்கும், கவிதைகளுக்கும் உரிமையாளர் எனது மூத்த மகள் பிரபாலினி பிரபாகரன் மட்டுமே.



**உங்கள் கவனத்திற்கு நன்றி...**



## பாடகர் - துரைலிங்கம், திருக்கோணமலை இலங்கை

## ஈழத்து மெல்லிசைத் தட்டுருவாக எதிர்காலம் எழுதியவன் என் நண்பன் எம்.பி, பரமேஷ்

நான் பாடக்கூடியவர்தான் ஆனால் நீங்கள் நன்றாகப் பாடுகின்றீர்கள் தொடர்ந்து பாடுங்கள் என்று என்னைப் பாடிட வைத்தவர் எம்.பி. பரமேஷ். இவனின் இசைத் தென்றலில் என்று இணைந்தேனோ அன்று முதல் இசைத்தேனே இனிய ராக நாதம்.

இடையில் இரு சகோதரர்களும் இரு திசையில் ''இசைத் தென்றல்'' வீச ஆரம்பித்த பின்னரும் என்னை இணைத்து இலங்கையெங்கும் இசைத்தென்றல் வீசியவன் எம்.பி. பரமேஷ். அன்று மட்டுமல்ல இன்றும் இலங்கைவிட்டு வேறு நாட்டில் வாழ்த்து வரும் காலத்திலும் இடைவிடாது உறவு முறியாது என்னுடன் பழகிய பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும் அவனின் தொலைபேசி மணி யோசனைகள்தான் அவனின் உள்ளத் தூய்மை இசையாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். இசைக்குயில் இவன் தன் மனைவி இசைத்தோழி மாலினியை இழந்த நிலையிலும் இவர்கள் தம் இசைக் குழந்தைகளுடன் இசைத்தென்றல் வீசி வரும் வழியெலாம் என்னுள்ளும் வாழ்த்துப் பூ மழை தூவி வரும்.

இவனிற்குக் கலையரசு சொர்ணலிங்கம் சூட்டிய கௌரவம் **ஈழத்து மெல்லிசை மன்னன்.** இன்றல்ல ஆண்டு 72களில். இன்றும் அந்த கௌரவத்திற்கேற்பக் கடல் கடந்து கலையோடு கலந்தாடும் அவளின் **கலைக்கோயிற் தீபம் என்றும் அணையாது.** எல்லா நலமும் பெற்று எமக்கெல்லாம் பெருமை சேர்த்து என்றும் வாழ்க எனதருமை எம்.பி. பரமேஷ் எழிலிசை இசைத் தென்றற் குழந்தைகளுடன்.

திருக்கோணமலையிலிருந்து அன்று இசைத் தென்றல் பாடகர்

*துரை துரைலிங்கம்*



# றிதம்ஸ் இசைத்தென்றல்

**எமது இசைக்குழு, ஜெர்மனி**

அன்பான வாசகர்களே!

விமர்சன வரிகள் மேலுங்கள் விழிகள் உலாவருமுன் விளக்கம் சில. விமர்சகர்கள் எழுதியவை யாவும் விபரமறிந்தவர்கள் எம் தந்தை காலத்தவர்கள் அவர்தம் இசைத்தென்றல் கண்டும் கேட்டும் கலை வழக்க அவர் பட்ட கஷ்டநஷ்டம் அறிந்தவர்கள். அவற்றை அறியாத இன்றைய இளம் கலைஞர்களிற்காகவே அவற்றை வாசிக்கும் என் வயதிற்குட்பட்ட வளர் கலைஞர் மத்தியில் மேலும் எம் தந்தை எம். பி. பரமேஷ் அவர்களிற்கு புகழ் சேருமென்றல்ல.

எம் மத்தியில் இற்றைக்கு 37 வருடங்களில் முன்பே இவரைப் போற் கலைஞர்கள் வாழ்ந்துள்ளனர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் வெவ்வேறு கலைத்துறைகளில் என்பதை அறியும்பொழுது இக்காலக் கலைச்சிறார்களிற்கும் ஏதோ ஒரு வகையிற் கலையிற் சாதனை புரியத் துடிப்பு ஏற்படும் என்பதால்தான்.

மேலும் எம் தந்தையின் காலத்துத் தொழில்நுட்பக் கருவிகளை விட இன்று நீங்கள் வாழ்ந்து வரும் நாட்டில் வசதிகள் பொருளாதாரம் மிக அதிகம். அன்று பரமேஷ் அவர்கள் இயற்றி

இசையமைத்துப் பாடிய பாடல்கள் இன்றைய தரத்திற்கு உயர்ந்து நிற்குதென்றால் இதைப் போல் பலமடங்கு சிறப்பாக உங்களாற் பாடல்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை வளரும் என்பதால்தான்.

மேலும் என்னுயை வயது மேலும் பலவருடங்கள் எட்டிப் பிடிக்கும்போது என் பாடல்களும் என் தந்தையாரின் பாடல்கள்போல் நின்று நிலைக்கும் என்ற நம்பிக்கை 95இல் ஜெர்மனியில் நாம் வெளியிட்ட சங்கீத சாம்ராஜ்ஜியம் இசைப்பேளைகள் சகலமும் விற்பனையானபோதே எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது இதே நம்பிக்கை இந்த விமர்சனங்களை வாசிக்கும் உங்களிற்கும் நிச்சயம் ஏற்படும் இதைவிட வேறு எந்தக் காரணங்களிற்காகவும் இந்த விமர்சனங்கள் இணைக்கப்படவில்லை.

புகழ்ச்சி, பிரபல்யம் என்பது ஒருவரின் திறமையை மக்கள் அறிந்து வரவேற்புக் கொடுக்கும்போது தானாகவே வருவதுதான்.

அது அப்பாவின் முதல் முயற்சியிலேயே 68களிற் கிடைத்துவிட்டது. அதைவிட விமர்சனங்களால் மேலும் புகழ்சேரும் என்று எண்ணிவிடாதீர். தன்னைப்போல் பல ஈழகலைஞர்கள் உருவாக வேண்டுமென்ற எமது தந்தை எம்.பி. பரமேஷ் தாயார் சங்கீத பூஷணம் மெல்லிசை வான்மதி மாலினி பரமேஷ் அவர்களின் தணியாத தாகம் தீரும் என்ற நம்பிக்கைதான்.

வாருங்கள் என்காலத்துக் கலைஞர்களே! வளமான கருத்துக்களுடன் வரலாறு வரைந்துள்ளனர். வரிவரியாக வாசித்து நேசிப்போம் எம் நெஞ்செழுதும் கொஞ்சும் கவிதை இசையெல்லாம் கொஞ்சக்காலமல்ல மிஞ்சும் காலமெல்லாம் வாழும்.

விமர்சகர்களிற்கு நன்றி.

**பிரபாலினி பிரபாகரன்**
ஜெர்மனி.



# VIJAY ANTONY

## தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர்

### சந்தித்த வேளையை சிந்தித்து பார்க்கிறேன்

இந்த சிறிய வயதில் எல்லோரும் மெச்சும் தரத்தில் பாடல்களை இசையமைக்க மட்டுமல்லாது, இயற்றி, இசையமைத்து, பாடும் இந்த சிறந்த கலைஞனைக் கண்டேன். அவரின் அன்புள்ள பண்பான நடைமுறைகளை கண்டு நெகிழ்ந்து விட்டேன். சுக்ரனில் ஆரம்பித்த தம்பி Vijay Antony-யின் இசைப் பயணம் என்றென்றும் தொடர்க!





விஜய் ஆன்ரனியுடன் அவர் கலையகத்தில்



தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர்
**திரு. விஜய் ஆன்ரனி** அவர்களுடன்...




Our Fa
Daughter PRABALIN
Sworn Interprete
Business Administratio
Son in law PRABAKARAN
Dipl. Math. / Computer Software Engineer
Tabla & Guitar Player
Son PRAGATHESH PARAMESH
Drummer
Grand child SAMARA PRAGATHESH
KN901
Son GAJANESH PARAMESH
Asst. Administrator in Court



amily
PRABAKARAN
/ Translations
n Singer & Composer
Daughter SIMONE THURGASHINI PARAMESH
Office Management
Daughter PRIYANTHINI SANJEEF
Medical Asst.
Singer & Keyboard Player
Son in law SANJEEF
Computer &
Business Administration
Daughter PRAGASHINI PARAMESH
Office Management & Event Management
My Friends Mr. SAMSON & YUGA



பொப்பிசை சக்ரவர்த்தி திரு. ஏ.ஈ.மனோகரன்
(ஈழத்து பொப்பிசை பாடகர், நடிகர்) அவர்களுடன்...



# A.E. மனோகரன்

## *பொப் இசை சக்கரவர்த்தி*

## எனக்குப் பிடித்த M.P. பரமேஷ்

எனக்குப் பிடித்த இவன் படித்த பாடல்கள்
எனக்கும் பிடிக்கும் இவன் வடித்த வரிகள்
எனக்குப் பிடித்த இவனமைத்த இசைகள்
எனக்குப் பிடித்த இவன் படைத்த இசைத்தட்டு
எனக்குப் பிடித்த இவன் துடிப்பின் துள்ளிசை
எனக்குப் பிடித்த இவனுரத்த குரல் மெல்லிசை
எனக்கும் எல்லோர்க்கும் பிடித்த இவன்
நடைமுறை நல்லிசைப் பயணம்.

நானும் தம்பி பரமேஷும் நம் நாட்டிலே சந்தித்தது மிகக் குறைவு. நானொரு மேடையில், அவரொரு மேடையில் நாளும் நிகழ்ச்சிகள் நடத்தினோம். என்னையும் எம்.பி. பரமேஷையும் ஒரே மேடையில் காணமுடியவே முடியாது. காரணம் பெருமைக்குரியது. இருவரையும் ஒரே மேடையில் இசைக்கச் செய்வது எவராலும் முடியாத பொருளாதாரப் பிரச்சினை. ஈழத்துக் கலைஞர்களாகவே வாழ்ந்து ஈழத்து மக்களால் பாராட்டப்பட்டு நாம் கேட்ட கட்டணத் தொகை எவ்வளவென்றாலும் தந்து எம்மை அழைத்து இசை வெள்ளத்தில் நனைந்தவர்கள் எங்கள் ஈழத்தமிழ் மக்கள். மக்கள் சொந்த நாட்டில் சொந்த நாட்டுக் கலைஞர்களை மதிக்கமாட்டார்கள் என்பதை அடியோடு முறியடித்தவர்கள் நானும் பரமேஷும் தான் என்று ஆணித்தரமாகக் கூறுவேன். உங்கள் தொழில் என்னவென்றால் "இசை" என்று பெருமையாகக் கூறிய இலங்கை கலைஞர்கள் இருவரென்றால் அது நானும் தம்பி பரமேஷும்தான்.

இருவரும் இசையென்ற ஒரே தோணியில். இன்ப துன்பங்கள் இசையலைகளாய் ஆடி அசைந்தன. அசைவுகளையெல்லாம் கடந்து 60-தும் நான் 63-மாக வயதெட்டிவிட்டோம் ஆண்டு 2007-ல். எத்தனையாண்டுகள் எட்டினாலும் எங்கள் இசைத்தட்டுக் குரல் இன்னும் இனிமையாக உள்ளது.

உங்களுக்கோர் உன்னத செய்தி கனடா, லண்டன் மற்றும் பல மேலை நாடுகளில் வெகு விரைவில் இந்த ஈழத்து மெல்லிசை மன்னன் M.P. பரமேஷையும், பொப் இசை சக்கரவாத்தி A.E. மனோகரனையும் இணைந்து ஒரே மேடையில் எமது மெல்லிசை துள்ளிசை பாடல்களுடன் காணலாம். இந்த கிழவர்கள் கலக்கிக் காட்டுகின்றோம், பொறுத்திருந்து பாருங்கள்!

அன்புடன் என் நண்பனுக்காக
**A.E. மனோகரன்**



1972இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஈழத்து மெல்லிசை மன்னனாக எம்.பி. பரமேஷ் கௌரவிக்கப்பட்டபோது. யார் யாரை எப்படி வணக்கம் கூறுவது கைகுலுக்குவது அழகல்லவே என்றுதான் கலையரசு அவர்களின் கைகளும் பரமேஷ் அவர்களின் கைகளும் ஒரே நேரத்தில் இப்படி வணக்கம் சொல்லியதோ.

## மெல்லிசைச் செல்வர் பரமேஷ் கோணேஷ் செயல்வீரர், இசைத்தட்டு வெளியீட்டுக்கு எனது இனிய வாழ்த்துக்கள்

நமது நாட்டில் மெல்லிசைக் கோஷ்டிகள் அநேகம் இருக்கின்றன. இன்னும் நாளுக்கு நாள் இதன் தொகை பெருகிக் கொண்டே வருகின்றது. இதனால் இத்தகைய கோஷ்டிகளுக்குச் செல்வாக்கு இருக்கின்றதெனவே சொல்லலாம் ஆயினும் இவர்களால் பாடப்படும் கீதங்கள் அனேகமாகச் சினிமாப் பாட்டுகளின் கொப்பிகளாகவே காணப்படுகின்றன பாடுகிற பாடல்களைச் சரியாக விளங்காமற் சும்மா சத்தங்களையே கொப்பியடிக்கின்றார்கள் போல் இருக்கின்றது.

சினிமாவிற் பாடப்படும் கீதங்கள் சிலவற்றைத் தவிர, மற்றவை மேலைத் தேசத்துப் பாடல்களின் இசைக்கிணங்கத் தமிழ்ச் சொற்களை அடுக்கிப் பாடுவதாகத் தோன்றுகின்றது. இதனால் அவை மேலைத் தேசத்துச் சங்கீதமுமல்ல, நமது தேசிய சங்கீதமுமல்லாமல் போய்விடுகின்றது. அவைகளைச் சாதாரணமாகச் சினிமாப்பாட்டென்று சொல்லிவிடுகிறார்கள்.

மேலைத் தேசத்துச் சங்கீதக் கருவிகளுக்கு இணங்க, நமது கருநாடக மெட்டுக்களை ஆராய்ச்சி செய்து கற்பனை செய்து அவைகளில் பாட்டுக்களை இயற்றி மேற்கூறிய கருவிகளுடன் சேர்த்துப் பாடப்பழகி வருவார்களாயின் இரசிக்கக்கூடியதாக இருக்குமென்பது எனது அபிப்பிராயம் எங்கள் தேசிய சங்கீதத்தையும் பாழடையாது காத்துக் கொள்ளலாம். திருக்கோணமலை பரமேஸ் கோணேஸ் ஆகிய இரு சகோதரர்களும் மேற்கூறியதைப் போல கர்நாடக சங்கீத பாணியில் தங்கள் சொந்தக்கற்பனை மூலமாக இசை கலையமைத்துச் சிறந்த முறையில் மேலைத் தேசத்துச் சங்கீத கருவிகளுக்கிணங்க, பாடல்களை இயற்றிப் பாடிவருவது புகழத்தக்கது. இவர்களது பாடல்கள் இசைத்தட்டுக்களில் வெளிவருவது பாராட்டுதற்குரியது.

இவ்விரு சகோதரர்களும் கலைப்பணிக்கே தம்மை அர்ப்பணித்தவர்கள் இவர்களது கலை மென்மேலும் வளர்ந்து உச்ச நிலையை அடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன். ஈழத்து மெல்லிசை மன்னர் என்று கௌரவிக்கின்றேன்.

**நவாலியூர் நாடகத்தந்தை கலையரசு. சொர்ணலிங்கம், 1972**



## பத்திரிகைகளின் பாராட்டு

1972ம் வருடம் மட்டக்களப்பில் ஒரே நாளில் இரு நிகழ்ச்சிகளின் பின்னர் மறுநாளும் இரு நிகழ்ச்சிகள் நடாத்திய திறமையைப் பாராட்டி பரமேஷ் அவர்களை பத்திரிகை நிருபர்கள் கண்ட பேட்டியின் போது மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் எடுத்த படம்.

மீனிசை பாடிவரும் தேனருவி ஓடிவரும் என்ற பாடலை இயற்றி இசையமைத்த எம்.பி. பரமேஷின் திறமை வடிவத்திற்காக அப்பாடலைப் பாடசாலைகளில் பாட வேண்டும் என்று பத்திரிகைகளில் எழுதியவர்கள் இவர்கள்.

# இசையில் இணைந்தோர்...

1



**K.T. Selvakumar**

**இசைத் தென்றல் அறிவிப்பாளர் திருக்கோணமலை**

1108, Palauttu, Trincomalee, Srilanka

சாதனையாளர்களின் திறமை,புகழ், பிரபல்யம், கல்லின் மேல் எழுத்துக்கள் நீர்மேல் எழுத்துக்களல்ல. அன்றும், இன்றும், இனியும் இவை மாறாதவை. இலங்கையின் முதலாவது தமிழிசைத்தட்டு (1968), கவிஞர் பாடகர் இசையமைப்பாளர், மெல்லிசை மன்னன், எம்.பி. பரமேஷ் அவர்களிற்கு, மலர்கிற மகிழ்ச்சி வரிகள்.

திருக்கோணமலை இந்துக்கல்லூரியின் முன்னால் அமைந்த விளையாட்டு மைதானம் பாடசாலைகளுக்கிடையிலான நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. எமது கல்லூரியின் சார்பாக பாடுதற்கென ஒருவர் அழைக்கப்பட்டார். அவர் பெயர் எம்.பி. பரமேஸ்வரன். அந்த நிகழ்ச்சியில் அவர் பாடிய பாடலும் அவரின்

குரலில் நான் முதலில் கேட்ட பாடலும் இதுதான் ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது அக்காலகட்டத்தில் மிக பிரபலமான பாடல் இது. வாத்தியக்கருவிகள் இல்லாமல் அவர் பாடிய விதம் குரல்வளம். உச்சரிப்பு ராகம் சகலதும் அனைத்து மாணவர்கள் ஆசிரியர்கள் சகலரையும் கவர்ந்தது.

இவர் பிற்காலத்தில் சிறந்த பாடகராக வருவார் என்ற எனது கணக்கும் தப்பாகவில்லை. அவர்தான் பிற்காலப்பகுதியில் ஈழத்து மெல்லிய மன்னராக எல்லோருக்கும் பழக்கப்பட்ட எம்.பி. பரமேஷ் ஆவார். இவரின் ஆரம்பகால வாழ்க்கை எப்படி என்ற விவரம் என்னை விட தெரிந்தவர்கள் இருக்க முடியாது என்ற நோக்கில்தான் இக்கட்டுரையை எழுதுகிறேன். 1967ல் தனது சகோதரன் கோணஸ்வரனுடன் சேர்ந்து பரமேஸ்கோணேஷ் என்ற பெயரில் இசைத்தென்றல் நிகழ்ச்சி திருக்கோணமலை செயின்ட் ஜோசப் கல்லூரியில் அரங்கேறியது. அந்த முதல் நிகழ்ச்சிக்கே அனுமதிச்சீட்டுகள் 5/2, 3/2 என்ற வகையில் விற்பனை செய்து கொண்டிருந்தோம். இதில் ஒரு விசேஷம் என்னவெனில் ஒரு 5/2 டிக்கட் விற்பனை செய்ய சில கி.மீட்டர் தூரம் சைக்கிளில் செல்ல வேண்டி இருந்தது. அந்த ஒரு நாளை என்னால் மறக்க முடியாது. அந்த மண்டபத்தில் நிகழ்ச்சியை பார்த்தவர்கள் மேலும் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தார்கள். இந்த சகல மேடை இசை நிகழ்ச்சிகளுக்கும் பரமேஷ் அவர்கள் என்னை அறிவிப்பாளராக அமைத்துக் கொண்டார்.

கே. திருச்செல்வக்குமார் என்ற பெயரை K.T. செல்வகுமார் என்ற என்னை தனது இசைக்குழுவில் நிரந்தர அறிவிப்பாளராக இணைத்துக் கொண்டார். அதன்பின் பரமேஷ் கோணேஷ் இசைக்குழு எனது இசைக்குழு என்ற பதத்திற்கு எனது குரல் பழக்கப்பட்டது.

எம்.பி. பரமேஷ் அவர்களுக்கு இன மத பேதம் கிடையாது கலைஞர்கள் என்ற கோதாவில் சகல இன மதத்தவர்களையும் தனது சகோதரர்களாகவே மதிப்பவர் மேலும் அறிவிப்பாளர் ஒருவர் மேடையில் ரசிகர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் உணர்த்தியவர் எம்.பி. பரமேஷ் தான். அவர் ஆரம்பத்தில் எனக்கு சொன்ன அறிவுறுத்தல்கள் இன்னும்

என் மனதில் நிற்கிறது. அதாவது மேடை நிகழ்ச்சியில் ஒரு பாடல் முடிந்து அடுத்த பாடல் தொடங்கும் இடைவேளையை நான் மேடையில் நின்று ரசிகர்களை சமாளிக்க வேண்டும் அது இப்படியாகவும் இருக்க வேண்டும். எனது வசனங்கள் ரசிகர்களை கவரக்கூடியதாகவும் ஓரளவு நகைச்சுவையாகவும் முடிந்த பாடலையும் தொடர இருக்கும் பாடலையும் தொடர்பு பண்ணக் கூடிய வகையிலும் அமைய வேண்டும் என்றார்.

69ல் இலங்கை வானொலி வர்த்த சேவையால் விளம்பர நிகழ்ச்சி வாரா வாரம் நடைபெற்றது. இக்காலகட்டத்தில் இலங்கை வானொலியின் பழம் பெரும் அறிவிப்பாளர் எம்.பி. மயில்வாகனன் அவர்களும் அவர் மனைவி செந்தில்மணியும் சேர்ந்து நடத்திய ஒரு நிகழ்ச்சிக்கு எம்.பி. பரமேஷ் அவர்களை கொழும்பு சரஸ்வதி மண்டபத்திற்கு வருமாறு அழைப்பு வந்தது. நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு சற்று முன்னதாக திரு. எஸ்.பி. மயில்வாகனனுக்கு என்னை தனது மேடை நிகழ்ச்சி அறிவிப்பாளர் என்று அறிமுகப்படுத்தினார். எமது அன்றைய இசைத்தென்றல் நிகழ்ச்சி முடிவுற்றதும் திரு. மயில்வாகனன் அவர்கள் எனது 23வது வயதில் என்னை பாராட்டியதை வாழ்நாளில் நான் மறக்க மாட்டேன் காரணம் இலங்கை இந்திய தமிழ் நெஞ்சங்களை கவர்ந்த குரல்வளம் மிக பிரபல்யம் பெற்ற அறிவிப்பாளர். அப்படிப்பட்டவரின் பாராட்டைப் பெற காரணமாக இருந்தவர் எம்.பி. பரமேஷ்தான் பரமேஷ் கோணேஷ் சகோதரர்கள் தான்.

1970ல் முதன் முதலாக விற்பனைக்கு வந்த எம்.பி. பரமேஷ் இயற்றி இசையமைத்துப் பாடிய உனக்கு தெரியுமா நான் உன்னை நினைப்பது என்ற இசைத்தட்டு வெளியானதும் பாராட்டுக்கள் இலங்கையின் பல பாகங்களாலும் வந்து குவிந்தது. 1971ல் மட்டுநகர் மண்டபத்தில் நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இரவு 7 மணிக்கு ஒரு இசை நிகழ்ச்சியும் பின்பு இரவு 9 மணிக்கு மற்றுமொரு நிகழ்ச்சி என இரண்டு நிகழ்ச்சிகள் ஒரே நாளில் ஒரே மேடையில் நிகழ்ச்சி தொடங்க அரை மணித்தியாலம் முன்னதாகவே நாங்கள் மண்டபத்திற்கு போவது வழக்கம். அன்றைய தினமும் அப்படி நாங்கள் போய்க்கொண்டிருக்கும்போது மண்டபவாயிலில் ஜனத்திரள் நிறைந்து இருந்தது. டிக்கற் விற்பனை

செய்தவர்களுக்கும் எமது ரசிகர்களுக்கும் இடையில் வாக்குவாதம் நான் மெதுவாக சென்று விசாரித்ததில் இரு காட்சிக்குரிய அனுமதிச்சீட்டுகளும் விற்பனையாகிவிட்டதாம் தூர இடங்களில் இருந்து வந்தவர்கள் தாம் எம்.பி. பரமேஷ் அவர்களின் நிகழ்ச்சியை பார்க்காமல் அவ்விடத்தைவிட்டு போக மாட்டார்களாம். ஒரு சில ரசிகர்கள் என்றால் சமாளித்து விடலாம்.

இது சில நூற்றுக்கணக்கானவர்கள் இவர்களை எப்படி சமாளிப்பது எப்படியோ முன் வரிசையில் அமர்ந்திருந்த மேயர் அவர்களின் உதவியுடன் ஒரே நாளில் 3வது முறையாகவும் இசைநிகழ்ச்சி மேடை ஏற்றப்பட்டது. இது எம்.பி. பரமேஷ் அவர்களின் மிகப்பெரும் சாதனை. பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் வெற்றி. மேலும் 1970ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதிகளில் இலங்கை வானொலி அறிவிப்பாளர்கள் வெறுமனே படத்தின் பெயரையும் பாடியவரின் பெயரை மட்டுமே பாடலின் இடையில் அறிவிப்பு செய்தவர்களுக்கு எமது நிகழ்ச்சியை பார்த்தபின் அறிவிப்பு பாணியிலும் சற்று ஈடுபாடு மாற்றம் வந்தது.

இது எனக்கு உற்சாகத்தை தந்தது எனினும் இதன் காரணகர்த்தா எம்.பி. பரமேஷ் தான். பாடகர்களின் திறமைதான் மேடை அறிவிப்பாளர்களையும் பிரகாசிக்கச் செய்கிறது என்பது எனது கருத்து.

இசைத்தென்றல் எந்த ஊரில் நடைபெற்றாலும் மாலை 7 மணிக்கு தொடங்க வேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு வைத்திருந்தார். எம்.பி. பரமேஸ் ஒரு செக்கன் கூட ரசிகர்களை தாமதிக்க வைக்க விரும்பாதவர். இதன் காரணமாக எனது கடிகாரத்தை மிக உன்னிப்பாக அவதானித்த வண்ணமே இருப்பேன். சகல மேடை நிகழ்ச்சிகளுக்கும் மேடை முன் மறைப்பூ திரை இருக்கும். வாத்திய கருவிகளை பயன்படுத்தும் அனைவரும் மாலை 6.58 மணி அளவில் அவரவர் ஆசனங்களில் அமர்ந்திருப்பார்கள் சரியாக 6.59க்கு ஒலி வாங்கியை நான் கையில் எடுத்து ஒரு சில சம்பிரதாய வசனங்களுடன் இசைத்தென்றல் நேரம் சரியாக 7 மணி என்றதும் மக்கள் கரகோசம் ஒருபுறம் கேட்கவும் மேடையில் உள்ள திரை விலகவும் சரியாக இருக்கும்.

நான் அறிவிப்பாளராக பங்குபற்றிய பல நூற்றுக்கும் மேற்பட்ட இசைத்தென்றல் நிகழ்ச்சிகள் இதே பாணியிலேயே கைதட்டலும் பாராட்டும் பெற்றது. ஒரு முறை மழை காரணமாக ஒரு இசைநிகழ்ச்சிக்கு அரைப்பங்கு ரசிகர்கள் தான் வந்திருந்தார்கள். நான் பரமேஸ் அவர்களிடம் கேட்டேன் மழையாக இருக்கிறது என்று மட்டும் அரைமணிநேரம் தாமதித்து நிகழ்ச்சியை தொடங்குவோமோ எனக் கேட்டேன். அதற்கு பரமேஸ் அவர்கள் சொன்னபதில். நீர் இதை பற்றி ஏன் கவலை படுகிறீர் உமது கடமையை செய்யும். அவர் கடமை என்றது நேரம் தவறாமல் நிகழ்ச்சியை ஆரம்பிக்க வேண்டும் என்பதே.

நிகழ்ச்சிகள் மூலம் தனக்கு நட்டம் வந்தாலும் பரவாயில்லை எனது ரசிகர்கள் மனம் கோணாமல் இருக்க வேண்டும் என்பதில் மிகவும் கரிசனை காட்டினார் நூற்றுக்கணக்கான மேடைகளிலும் செக்கன் தவறாமல் இசை நிகழ்ச்சியை நேரத்திற்கு ஆரம்பிப்பது என்பது எம்.பி. பரமேஷ் அவர்களின் மிகப்பெரும் சாதனை.

ரசிகர்களும் உணர்ந்தார்கள் எம்.பி. பரமேஷ் அவர்களின் நிகழ்ச்சி என்றால் குறிப்பிட்ட நேரத்திற்குள் நிற்க வேண்டும் என்பதை.

ஒருமுறை இப்படியும் நடைபெற்றது. அது எந்த ஆண்டு என்பது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. கல்முனை திறந்தவெளி அரங்கில் இசைத்தென்றல் நிகழ்ச்சியை ஏற்பாட்டாளர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். அது ஒரு தீபாவளிநாள் நிகழ்ச்சி ஆரம்பிக்க அரை மணிநேரம் இருக்கிறது. சனத்திரள் திறந்த வெளி அரங்குக்கு வந்த வண்ணம் இருந்தனர். இப்போது நிகழ்ச்சி ஆரம்பிக்க ஒரு நிமிடமே உள்ளது.

ஒலிவாங்கியையும் எனது கையில் எடுத்து வைத்திருந்தேன். அந்த வேளை மழை மிக பலமாக கொட்டத் தொடங்கியது. திறந்தவெளி அரங்கல்லவா ரசிகர்கள் எவ்வளவு சிரமத்திற்குள்ளாகி இருப்பார்கள் என்பதை உணர்ந்தோம். மழை தொடர்ந்து இரண்டு மணி நேரம் பெய்தது. மழையில் நனைத்தும் ரசிகர்கள் விட்டபாடில்லை. மழை தண்ணி ஈரப்புலிப்புக்குள் அவர்கள் நின்று எமது நிகழ்ச்சிக்கு ஊக்கம் கொடுத்தது மறக்க

முடியாது. எம்.பி. பரமேஷ் அவர்கள் பாடல்கள் இயற்றுவதிலும் வல்லவர் ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார் இவர் நகைச்சுவையாகப் பேசுவதிலும் திறமை பெற்றவர். ஒரு நல்ல பொருளுக்கோ நல்ல கலைஞருக்கோ விளம்பரம் தேவையில்லை தனது பெயரை தானாக விளம்பரப்படுத்தாதவர் பரமேஷ் அவர்கள். இவரை அறியாத இந்தியக் கலைஞர்களும் இல்லை. சன்.டி.வி. சிட்டிபாபு. அர்ச்சனா இருவரிடம் நான் மெல்லிசை மன்னர் பரமேஷ் அவர்களை உங்களுக்கு தெரியுமா எனக்கேட்டதற்கு இருவரும் சேர்ந்த குரலில் ஆமாம், ஆமாம் என்றார்கள்.

எம்.பி.பரமேஷ் அவர்கள் 1974ல் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். இவரது ரசிகையான மாலினி இவருடன் சேர்ந்து பாட வேண்டும் என்பதற்காகத்தானோ இந்தியாவில் சங்கீத பயிற்சி பெற்றார் என எனக்கு எண்ணத்தோன்றியது வாணிஜெயராமின் குரலை ஒலித்த மாலினி பரமேஷ் பல நூற்றுக்கணக்கான மேடைகளில் தம்பதிகளாக சேர்ந்து பாடி ரசிகர்களை மகிழ்வித்தார்கள்.

இறுதியாக இவரது இசைநிகழ்ச்சியில் நான் அறிவிப்பாளராக இருந்த காலத்தை ஒரு பொற்காலமாகவே கருதுகிறேன். ஒரு நல்ல கலைஞரின் இசைநிகழ்ச்சிக்கு என்னால் முடிந்த ஆதரவை கொடுத்தேன். எனது ரசிகர்களுக்காகவும் ஒரு நகைச்சுவைத் துனுக்கைத் தருகிறேன். அன்று இசைத்தென்றல் பாடல்கள் இடையில் கூறியது.

புகையிரதம் ஓடிக்கொண்டிருக்கிறது. வண்டியின் சகல பெட்டிகளிலும் ஆசனங்கள் நிரம்பியிருந்தன. ஒரு பெட்டியில் காதலர் இருவர் அவர்கள் அருகேயும் ஆட்கள்தான். அப்போது ஒரு குகையின் ஊடாக புகையிரதம் போய்க் கொண்டிருந்தது. பகல் வேளையாக இருந்தமையால் விளக்குகள் எரியவில்லை. ஏறத்தாழ இரண்டு நிமிடத்தின்பின் குகையின் மறு புறமாக புகையிரதம் வெளியேறிக் கொண்டிருந்தது. அந்த இரண்டு நிமிடங்களும் இருட்டு. இதை மனதில் கொண்டு காதலன் காதலியிடம் கேட்டான். இப்போ இருட்டாக இருந்த இந்த நேரத்தில் உன்னை நான் முத்தமிட்டால் நீ என்ன செய்திருப்பாய் என்றான்.

அதற்கு காதலி பதிலளித்தாள். அப்படியானால் இப்போது என்னை முத்தமிட்டது நீங்கள் இல்லையா எனக்கேட்டாள்''

எம்.பி. பரமேஷ் அவர்களிடம் நான் கண்ட சிறப்பு; பரமேஸ் நீங்கள் ஒரு அழைப்பு விடுத்தால் வானொலி அறிவிப்பாளர்கள் ஓடிவந்து இசைத்தென்றலைச் சிறப்பிப்பார்களே! இந்நிலையில் ஏன் என்னை அறிவிப்பாளராக அமைத்தீர்கள் என்று நான் கேட்டதற்கு அவர் கூறிய பதில் என்னைப் பரவசமடையச் செய்தது. செல்வக்குமார் இலங்கை வானொலிக் கூட்டுஸ்தாபன அறிவிப்பாளர் வருகின்றார் என்றாலே அவர்களிற்காகவே .சனக்கூட்டம் வந்துவிடும். இதுவளமை அவர்களை அழைத்தால் எங்களிற்காக ரசிகர்கள் வந்தார்கள் என்று உறுதிப்படுத்த முடியாதல்லவா? என்னை என் திறமையை இசைத்தென்றல் நிகழ்ச்சியை மதிப்பிட நான்தான் எடுத்த முடிவு என்றார்.

இவ்வண்ணம்
என்றும் அன்புடன்
**கே.டி. செல்வகுமார்**

## 2

## எழிலன்
**எழுத்தாளர், ஜெர்மனி**

**பாட்டொன்று கேட்டேன் பரவசமானேன்.**
**நானிளங் காலத்திலே...**

இலங்கைத் தீவின் திக்கு முக்கெல்லாம் ஒரு காலத்தில் இளம் உள்ளங்கள் மிகவும் விரும்பிப் பாடிக் கொண்டலைந்த ஒரு பாடலைத் தந்த இதயங்களில் இடம் பிடித்திருந்த இனிய இசைக்கலைஞரும் புலம் பெயர்ந்தும் சுயம் இழக்காது இன்றும் தொடர்ந்து தமது பணியைச் செவ்வனே செய்து வருபவரும் இதயத்துள் நுழைந்து மனிதத்தை வழிநடத்தும் இசைக்கலையை

இன்தமிழில் மணம் பரப்ப வைத்து வருபவருமாகிய அன்பர் பரமேஷ் அவர்களுக்கு அறுபது அகவையென்ற செய்தியை அவரது உறவுகள் வாழ்த்தி, சரித்திரப் பதிலாக நூல் வடிவில் வெளியிடுவதாகவும் அதற்காக என்னையும் ஒரு வாழ்த்து எழுதித் தரும்படியும் பிரான்ஸ் ஏபிசி வானொலியின் நிர்வாகி திருமதி நவஜோதி அவர்களின் சகோதரரான என் இனிய நண்பர் பவானந்தராஜா அவர்கள் என்னைக் கேட்டபோது நான் கேட்ட ஒரு விபரமறியும் கேள்வி "யார் நமது... உனக்குத் தெரியுமா... நான் உன்னை நினைப்பது..." பாடகர்தானே என்பதுதான்.

அந்தளவுக்கு அன்றைய என் இளமையில் அப்பிப் பிடித்திருந்த அற்புதமான பாடலது. ஒரு கலைஞனும் எழுத்தாளனும்தான் சமுதாய வண்டியின் அதி அவசியமான சக்கரங்கள்.

எழுத்தாளரின் எழுத்துக்கள் சுமக்கும் நல்ல அவசியமான கருத்துக்களும் அவற்றுக்கு இசையமைத்து உயிரூட்டி, உள்ளங்களுக்குள் வாழைப் பழத்துள் ஊசியை ஏற்றிடும் பக்குவத்துடன் நுழைத்திடும் இசையும் இல்லாவிட்டால் உலக இயக்கம் என்றைக்கோ நின்று விட்டிருக்கும்.

பிறந்த போது தாலாட்டு. வளருகையில் இளம் பாட்டு. ஏன், இறந்த பின்பு ஒப்பாரி என்று இசைதான் மனித உயிர்களின் உயிர் நாடியாக இருந்து வருகின்றது. அந்த அற்புதமான கலையை நமக்காக சுமந்து வடித்துத் தருகின்ற கலைஞரை வாழ்த்திட நான் கேட்கப்பட்ட போது கரும்பு தின்னக் கூலியா என்று மனம் குதூகலித்தது.

அன்பின் இசை நண்பர் பரமேஷ் அவர்கள் சமுதாயத்தின் முழுமையான சொத்து.

அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்கு நம்மனைவருக்குமே முழு உரிமை உண்டு.

அவருக்கு அறுபது அகவையென்னும் செய்தி தெரிந்து அளவில்லா மகிழ்ச்சி. ஏனென்றால் அவரால் இந்தக் கால கட்டத்தில் தமிழிசை அமுது எவ்வளவோ அள்ளித் தெளிக்கப்பட்டுள்ளனவே!

இன்னும் பல்லாண்டு நற்சுகமும் நல்வளமும் நற்புகழும் சூழ அவர் புகழ்கட்டிப் பறக்க வேண்டும் என என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

நற்றமிழ் முத்தமிழ் என்பதில் ஒன்று
எண்திசை ஒலித்திடும் நல்லிசை என்று
கற்றநல் இசையை தமிழ்வழி நின்று
மற்றவர் மகிழ்வுறத் தந்தநல் கலைஞர்
நற்றமிழ் ஈழம் தந்திட்ட செல்வம்
நம்பர மேஷ்வர் வாழிய நீடுழி!
எத்திசை செல்லினும் நல்லிசை மன்னன்
எழுபுகழ் பெற்றுமே ஓங்குக. வாழி!

அன்புடன்
**எழிலன்**

3



**திரு./திருமதி பவானந்த ராஜா**
**ஜெர்மனி**

மீனிசை பாடும் நாட்டில் தேனிசை பொழிந்த எங்கள் எம்.பி. பரமேஷ்.

தாங்கள் தங்களது அறுபதாவது அகவையை தொடரும் இவ்வேளையில் தங்களை மனப்பூர்வமாக வாழ்த்துவதோடு

அறுபதுகளின் இறுதியிலும், எழுபதுகளிலும் தங்களால் ஆரம்பிக்கப்பட்ட பரமேஷ், கோணேஷ் இசைக்குழுவினர் பற்றி நான் அறிந்திருந்த சில விடயங்களை நினைவு கூர்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஈழத்து மெல்லிசை மன்னர்களென்று அழைக்கப்பட்ட நீங்கள் தாயகத்தில் மிகச்சில ஆண்டுகளே செயல்பட்டிருந்தாலும் அவ்வளவு காலமும் வெகு வேகமாக முன்னேறி புகழின் உச்சியில் இருந்தீர்கள் என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

ஈழத்தில் முதல் தமிழ் இசைத்தட்டை வெளியிட்டு சாதனை படைத்தவர்கள் நீங்கள். அக்கால கட்டத்தில் மட்டுநகரில் பிரபலமான மாமாங்கேஸ்வரர் ஆலயம் எறாவூர் பத்திரகாளி அம்மன் ஆலயம் உட்பட பல்வேறு பிரபல்யமான ஆலயத்திருவிழாக்களுக்கு தங்கள் இசைக்குழுவினர்கள் வருகின்றார்கள் என்று கேள்விபட்டால் அன்றைய திருவிழாவிற்கு மக்கள் கூட்டம் அலைமோதும். அத்தோடு மட்டக்களப்பு மானகர சபை மண்டபத்தில் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இசை நிகழ்வுகள் அவற்றிற்குக் கட்டணம் அறவிடப்பட்ட போதிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இன்றும் என் நினைவில் உள்ளது.

அதுபோல் இன்று கிழக்குப் பல்கலைக்கழகமாக இயங்கிக் கொண்டிருக்கும் முன்னர் மட்டக் களப்பில் பிரபல கல்லூரிகளில் ஒன்றான வந்தாறு மூலை மத்திய மகா வித்தியாலயத்தில் எழுபதுகளில் நடைபெற்ற தங்கள் இசை விழாவும் நான் நேராகப் பார்த்து ரசித்ததும், அதிகமான மக்களின் பெருவரவேற்பைப் பெற்ற விழாவாகவும் அமைந்திருந்தது. அன்று உங்களால் பாடப்பட்ட உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது என்ற அந்தப் பாடல் அன்றைய இளம் வயதினரின் மனதை மிகவும் கொள்ளை கொண்டபாடலாகும்.

இப்படி இசைத்துறையில் அழியாத முத்திரை பதித்த நீங்கள் புலப்பெயர்ந்தும், எண்பதுகளில் ஜெர்மன் நாட்டில் பல இசை நிகழ்வுகளை நடத்தியுள்ளீர்கள். தற்போது உங்கள் வாரிசுகள் ஒரு இசைக்குழுவினை அமைத்து தங்கள் இசைப்பயணத்தைத் தொடர்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் இன்று

இத்துறையில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் எமது இளம் சந்ததியினருக்குத் தேவை. அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்யும் நீங்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து எமது சமூகத்திற்கு இசைச்சேவை ஆற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

அன்புடன்
**திரு./திருமதி பவானந்த ராஜா**

4

## திரு.திருமதி. சிவபாலன்
### ஜெர்மனி

என் தந்தை எந்நாளும் பாடும் எம்.பி. பரமேஷ் பாடல்.

துள்ளித் திரிந்த வயதினிலே எங்கள் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்ட கலைஞன் ஜெர்மன் மண்ணில்தான் வாழ்கின்றார். என்னும் செய்தி கேட்டுப் புளகாங்கிதம் கொண்டு புகழாரம் சூட்ட விழைகின்றேன். கோணேஸர் குடிகொண்டுள்ள திருகோணமலையிலே உருப்பெற்ற பரமேஷ் கோணேஷ் இசைக்குழுவினர் வருகை தருகின்றனர். என்றால் எங்கள் எறாவூர் பத்திரகாளி அம்மன் கோவில் தீமிதிப்பு விழாவிற்கு சனக்கூட்டம் பெருக்கெடுக்கும்.

1968களில் அவர்களுக்கென்றே ஓர் ரசிகர் கூட்டத்தைக் கொண்டு முத்திரை பதித்தவர்கள். அதில் தன் குரலால் பல நெஞ்சங்களைக கவர்ந்த திரு. பரமேஷ் அவர்கள் பாடிய உனக்குத் தெரியுமா? நான் உன்னை நினைப்பது எனக்குத் தெரியுமா? நீ என்னை நினைப்பது என்னும் பாடல் எனது தந்தையார் உதடுகளில் எப்போதும் உச்சரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

1972ல் யாழ் வீரசிங்கமண்டபத்தில் கலைமாமேதை நவாலியூர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் ஈழத்து

மெல்லிசை மன்னன் எனக் கௌரவிக்கப்பட்ட திரு. எம்.பி. பரமேஷ் அவர்களின் தந்தை திரு. பீதாம்பரம் அவர்கள் யாழ்நூலை நினைவு கூறுமுகமாக தனது வாழ் அகத்தை யாழ்அகம் எனப் பெயரிட்டு சுவாமி விபுலானந்தரை என்றும் நினைத்திருக்கும். அடிகளாருடைய முதல் மாணாக்கராவார். இவருடைய புதல்வர் எம்.பி. பரமேஷ்.

வாழ்விலும் வளர்ச்சியிலும் புகழிலும் தோளோடு தோள் நின்று உழைத்து இனிது இல்லற வாழ்க்கை நடாத்தி ஆறு குழந்தைகளை உலகுக்கு ஈன்று இன்று றிதம்ஸ் என்னும் இசைக்குழு அடையாளம் காணப்பட வழிவகை செய்த இவரது நாயகி திருமதி மாலினி பரமேஷ் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் எனப் பட்டம் பெற்றதுடன் கர்நாடக இசையை முறைப்படிக் கற்றவர்.

ஆயினும் அவர் முதல் அரங்கேற்ற மேடை மெல்லிசை அரங்கேற்ற மேடையே ஆகும். கணவனுடன் இணைந்து இருவரும் பாடிய பாடல்களை மேடையில் பார்க்கப் பணவசதியின்றி ஏங்கிய பல இரசிகர்களை யான் அறிவேன். இவர்கள் இன்னிசைத் தென்றலுக்கென்றே பல இரசிகர் குழாம் இருந்தன. 1995ல் ஜெர்மனியில் இவர்களால் வெளியிடப்பட்ட சங்கீத சாம்ராஜ்யம் இசைக்கு மகுடம் சூட்டுவதாகவே அமைந்திருந்தது.

தாங்கள் மட்டுமின்றி தங்கள் வாரிசுகளையும் இசையில் ஈடுபடுத்தி இசைக்குடும்பமாக வாழ்ந்தார்கள். திருமதி மாலினி பரமேஷ் அவர்களின் மறைவு இக்குடும்பத்திற்கு பெரும் இழப்பைத் தந்த போதும். தொடர்ந்து இசையில் மேம்பட்டு அழியாப்புகழ் பெறும் றிதம்ஸ் இசைக்குழுவாகத் திகழ வேண்டும். என இறை ஆசி வேண்டி கலைஞர்கள் புகழ் அழிவதில்லை. நிலைத்திருக்கும். நிலைத்திருக்க வேண்டும். 60 அகவையை எட்டுகின்ற திரு. பரமேஷ் அவர்கள் ஓய்ந்துவிடாது ஓயாத அலையாக வாழுகின்ற தேசத்தில் இசையில் வான்புகழ் பெற்று தனது வாரிசுகளுக்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து பெருமை சேர்க்க வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

**கலைத்தோழி கௌசி**

# 5



**திரு.ஏ. ரகுநாதன்**
**ஈழத்திரைப்படக்கலை முன்னோடி**
**பிரான்ஸ்**

என் காலத்து மொட்டாகி மலராகி மணம் வீசும் எம்.பி. பரமேஷ் 1960களில் என்று ஞாபகம் ஈழத்தில் கலைகள் செறிந்து பரந்த காலம் நாடகம், நாட்டியம், திரைப்படம், எழுத்து என ஈழமண் கலைப்பூங்காவாக நனைந்த காலம்.

திருகோணமலையிலிருந்து - மெல்லிசை மீட்ட - பொப் இசை காட்ட பரமேஷ் கோணேஷ் என இரு சகோதரர்கள் மலர்ந்தார்கள். தமிழ் பேசும் இடமெல்லாம் அவர்கள் இசைத்தட்டுகள் அரங்கேறின.

தமிழ் மேடைகளெல்லாம் ''உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது'' என அவர்களை நினைக்க வைத்த பாடல் பறந்தது.

இன்று அந்தக் கலைஞன் எம்.பி.பரமேஸ் தன் 60 வயதை அவர் ரசிகர்களும் அவர் வாரிசுகளும் கொண்டாடும் நன்னாளில் எம்.பி. பரமேஷ் அவர்கள் வெற்றி முகம் காட்டி உலா வந்த காலத்தில் வாழ்ந்தவன். வாழ்த்தியவன், போற்றியவன் ரசித்தவன் என்ற வகையில் அவரை வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன். அவரும் அவர் இசைக் குடும்பமும் இசையால் நிறையட்டும். நம் இதயங்கள் தேன் இசையால் நிலைக்கட்டும். மக்கள் மனசெல்லாம் தேனாய் இனிக்கட்டும். தொடரட்டும் அவர்கள் பணி.

வெளிநாட்டில் எம்.பி. பரமேஷ் சங்கீத பூஷணம் மாலினி பரமேஷ் இசைத்தம்பதியினரின் வாரிசுகள் தமது தாய் தந்தையினர் இசைத்தென்றல் இன்றும் நிதம்ஸ் இசைத்தென்றலாக இசைத்து வருவது எனக்கு மகிழ்ச்சி. அமரர் மாலினி பரமேஸ் அவர்களின் இசை ஆத்மா என்றும் அவர் இசைக்குழந்தைகளைப் புகழேணியில் ஏற்றி நிற்கும் என்ற நம்பிக்கையோடு விடைபெறும் யான்.

தமிழாள் கூத்தவை என்றும் அன்பன்
**ஏ. ரகுநாதன்**

## 6

## நயினை விஜயன்

**தமிழ் அருவி - ஜெர்மனி**

புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் தாய்மொழி வளர்ச்சியிலும் இசையார்வத்தையும் வளர்க்குமகமாக தமிழ் அருவி வருடந்தோறும் எழுத்தாளர்களையும் இசைக்கலைஞர்களையும் கௌரவித்து ஊக்குவித்து வருவது யாவரும் அறிந்ததே.

அந்த வரிசையில் ஆண்டு 1995ல் தமிழருவியில் நீந்திய மீன்களில் பொன்மீனாக நீந்தி மக்கள் மனம் கவர்ந்தது

எம்.பி. பரமேஷ், மாலினி பரமேஷ் வெளியிட்ட சங்கீத சாம்ராஜ்ஜியம். சாதனை பல செய்து விட்டுச் சாகாவரம் பெற்று இரண்டாயிரத்தில் இறைவனடி எய்திய சகோதரி மெல்லிசை வான்மதி மாலினி பரமேஷ் இன்றும் அவர் விட்டுச் சென்ற இசையால் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அகவை அறுபதில் அன்பின் பரமேஷ் அனைத்துலகத் தமிழிசைஞர்களின் ஆசீர்வாதத்தையும் பெற்று அதிகப்படி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

நல்ல கலைக்குடும்ப மக்கள் பிரபாலினி பிரபாகரன் அவர் சகோதர சகோதரிகள். அவர் தம் தந்தையாரின் இனிய இசைப் பயணங்களை இனிய நூலாக வெளியிட்டு இளம் தலைமுறையினருக்கு அதை அறிமுகம் செய்து அவர்களை ஊக்குவிப்பது மிக மிக உகந்த செயல். உண்மையில் தமிழருவி விழாவில் பல பேச்சாளர்களும் பரமேஷிற்கு புகழ்மாலை சூட்டியபோது கூறிய வார்த்தைகள் நிஜமானவை.

ஈழத்துமெல்லிசை என்று ஒரு வரலாறு எழுதப்படுமானால் அதில் பரமேஷ் மாலினி தம்பதியினர் பெயர் இடம்பெறாவிட்டால் அது முழுமையடையாதது என்று திரு. எஸ்.எஸ். குகநாதன் கூறியது முழுவதும் உண்மை.

இந்தக் கலைஞனை அழைத்து மீண்டும் கௌரவிக்கத் தற்பொழுது எனது தமிழருவி இல்லை என்றாலும் என் இதயத்தால் வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**கலை அன்பன் நயினை விஜயன்**



# 7



## எஸ்.பி. ஜெயக்குமார்

ஐரோப்பிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**லண்டன்**

அன்றும் ஒரு மாலைப்பொழுது இளந்தென்றல் கொஞ்சம் சில்லென்று வீச மழைமேகம் கொஞ்சம் விரைவாக வானத்தின் கீழ் அசைவாட பூமியின் குடிகள் ஏதோ அவசரமாக ஒன்று கூடத்துடிப்பது மட்டும் நமக்குப் புரிகிறது இளந்தென்றலோடு இசைத்தென்றல் கலந்து தேனாக காதோரம் கேட்கப் போகுதே என்ற ஆவல் இவர்கள் மனதில் தென்படுவது முகத்தில் தெரிந்து கொண்டது உண்மைதான் கிழக்கில் உதிக்கும் சூரியன் மாலையில் கடலோரத்தின் அடி சென்று புதைந்துவிடும்போது இருள் கொஞ்சம் கவ்விக்கொள்ளும் இது புரிந்த இந்நாட்டு மக்கள் விரைவாக அந்த மண்டபம் நோக்கி விரைந்த காட்சி, விபரம் புரியாத அந்த இளவயதில் என்னையும் அங்கே அழைத்துச் சென்ற அந்த நினைவினை இன்று உங்களோடு பகிர்ந்து கொள்வதில் அளவற்ற மகிழ்ச்சிதான்.

இயற்கையன்னையின் அரவணைப்பில் இசைமாலை படைப்பதில் நம் சங்ககாலத்தின் கலைஞர்கள்போல் அன்று

போட்டியோடு கலை படைத்த காலம் அது கிழக்கு வடக்கின் மூலைமுடுக்கெல்லாம் இசையென இசைக்கலைஞர்கள் படைபெடுத்த காலம் அது. அதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் தான் பரமேஷ் - கோணேஷ் இசை இரட்டையர்கள், தென்னகத்தின் இசை இரட்டையர்கள் இசைப்புயல் எழுப்பியவேளை தென் தமிழ் ஈழத்தில் இசைக்கொடி நட்டவர்கள் இவர்கள். இளவலாக நான் அக்காலத்தில் இருந்தாலும் இசைப்பற்று கொண்டதன் காரணமாக இவர்களோடு பழக வாய்ப்புக்கிடைத்தது இறைவன் அருள்தான் என்பேன்.

இசைத்தட்டு அதுவும் தமிழில் முதலில் ஈழத்தில் வெளியிட்டு உனக்குத் தெரியுமா என இது நமக்கு புரியுமா என மறைமுகமாகக் கேட்டவர்கள் இவர்கள். உள்ளத்தைத் தொட்டது மட்டுமல்ல ஒவ்வொரு உதடுகளும் உச்சரித்த ஓர் பாடல்தான் இந்தப் பாடலாகும். அற்புதமான வரிகள் அமைத்து அதற்கு மெட்டிட்டு இருவராக இசைப்பயணம் புரிந்த இவர்களை இவ்வேளையில் வாழ்த்துவது சாலப்பொருத்தமாகும். நிலம் விட்டு புலம் பெயர்ந்தாலும் இசைவிட்டு இவர்கள் வாழாமல் புலத்திலும் அப்பணி தொடர்வது மிகவும் மெச்சத்தக்கது. இதயம் ஆயிரம் மலர் கொண்ட தோட்டமல்ல அதில் தினம் ஒன்று வேளைக்குச் சூட்டிக் கொள்ள இன்னும் மனதில் நீங்காத ஒரு வரி. இதற்குச் சொந்தக்காரன் அண்ணன் பரமேஷ். இன்றும் அதன் வரிபோல வாழ்கிறார். வாழ்த்துகிறேன்.

இசைப்பயணத்தில் மட்டுமல்ல இல்வாழ்க்கைப் பயணத்திலும் கரம் கோர்த்த சகோதரி மாலினி பரமேஸ் அவர்களையும் நினைவு கூறுகிறோம். இறைபதம் அடைந்தாலும் இசைச் செல்வர்களை ஈன்றெடுத்துள்ளார்களே எனும்போது இன்னும் மனம் நெகிழ்கிறது. உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைப்பது உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது. இவ்வரிகள் இன்னும் இவர்கள் இருவருக்கும் தான் புரியும். அற்புதமான நினைவுகள் இன்றும் தொடர்கிறது.

அந்த மண்டபம், ஆட்கொள்ள முடியா நிறைவினால் அல்லோலப்பட ஆற்றங்கரைக் காற்றோடு இந்தப்பாட்டு அதிர்ந்துவர எத்தனை உள்ளங்கள் காதல் கொண்டதோ -

ஆண்டவன் அறிவான். உங்கள் உள்ளங்களும் அறிந்திருக்கும். இவர்கள் இசைப்பயணம் தொடரட்டும் இவர் பணியினை இளையவர்களும் தொடரட்டும். இசைத்தென்றல் உலகெங்கும் ஒலிக்கட்டும். வாழ்த்துகிறேன் வளமுடன் பல்லாண்டு வாழ்கவென இவர்களை, இன்னும் இன்னும் எழுதத் தூண்டுகிறது.

எழுதிவிட ஆசைதான் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள இன்னும் ஆசைதான். வாழ்த்துக்கள். வாழும் போதே நம்மவர்களை வாழ்த்துங்கள். இதுவே இவர்களுக்கு நாம் வழங்கும் இதய காணிக்கை. இளையவர்களை இன்னும் இசை படைக்க அவர்களைத்தூண்ட.

என்றும் அன்புடன்
**எஸ்.பி. ஜெயக்குமார்**

## 8



## பொ. சிவானந்தன்

இந்தியா

அன்பான பிரபாலினி பிரபாகரனுக்கு உனது தந்தையைப் பற்றி நான் உன்னுடன் பகிர்ந்துகொள்ளும் சுவாரசியச் செய்தி.

1968கள் முதல் அன்புபாசம் நட்புக் கயிற்றினால் இறுகக்கட்டி இணைபிரியாது இசைத் தென்றல் வீசிய

கலைஞர்களில் நானொருவன் நல்லிசை நண்பன் எம்.பி. பரமேஷ் அவர்களுக்கு எம்.பி. பரமேஷின் வாரிசுகளே. செல்வங்களே உங்கள் அன்பான மடல் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அதே சமயம் உங்கள் தாயாரின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தேன். மனம் தளராதீர்கள்.

உங்கள் பெற்றோர் பெயரை நிலைநிறுத்துங்கள். உங்கள் கடமை உணர்வைப் பாராட்டி இசைப்பணி தொடர நல்லாசிகளைக் கூறுகின்றேன். உங்கள் அப்பா, சித்தப்பா கோணேஷ் மற்றும் பரமேஷ் கோணேஷ் இசைக்குழுவினருடன் வாழ்ந்த கலை நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

இந்தியாவின் விஸ்வநாதன் இராமமூர்த்தி இரட்டையர்கள் போல் ஈழத்தில் பரமேஷ் கோணேஷ். நானும் இ. மகேஷ்வரன், முகுந்தன், மோகன்ராவ், ஜீவானந்தம், பாலச்சந்திரன், அறிவிப்பாளர் திருச்செல்வம் அன்ரனி. ஆரியசேன. ஆகியோருடன் இணைந்தே முதல் முதல் 1968ம் ஆண்டு வில்லூன்றிக் கந்தசுவாமி கோவிலில் பக்திப் பாட்டை அரங்கேற்றம் செய்தோம்.

அதே ஆண்டு சைக்கிள் பயணம் செல்ல விரும்பி புறப்பட்டோம். முதல் இரவு மட்டக்களப்பில் தரித்துப் பின் பதுளை நோக்கிப் புறப்பட்டோம். வழியில் யானைகள் நடமாட்டம் அதிகமான காரணத்தால் இரவு சிங்களப் பாடசாலையில் தங்கி அதிகாலை யானை மலங்கண்டு அதிர்ச்சியடைந்து பயணத்தைத் தொடர்ந்தோம். பதுளையை அடைந்தபோது மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு ஹோட்டல் முதலாளி ஒருவரின் உதவியுடன் சமையல் அறையொன்றில் தங்கி ஊரை வந்தடைந்தோம்.

இந்த ஐந்து நாள் சைக்கிள்ல டூர் என் வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஆகும். உங்கள் அப்பா, சித்தப்பா, பாட்டி, தாத்தா எல்லோரும் என்னில் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார்கள். என்னைப் போலத் தான் உனது தந்தையும் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை வந்திருந்த உனது தாயார் காதல் வயப்பட்டார். பொங்கல் விழாவுக்காக நாங்கள் மெட்டமைத்த

"தமிழர் திருநாள் தைப்பொங்கல் திருநாள்"

என்னும் பாட்டின் மெட்டை மாற்றி தாயாருக்காக ஒரு பாடல் இயற்றினார் எம்.பி. பரமேஷ்.

**"உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது**
**எனக்குத் தெரியுமா நீ என்னை அழைப்பது"**
**இதைவிட போகாதே தூரப் போகாதே**
**தாங்காதே உள்ளம் தாங்காதே"**

என்னும் பாடலும் அவருக்காக அமைந்த பாடல்தான்.

1969ஆம் ஆண்டு சென்ற்ஜோசப் கல்லூரியில் நாங்கள் நடத்திய பிரமாண்டமான இசைநிகழ்ச்சியின் மூலமே பேரும் புகழும் எம்மை வந்து சேர்ந்தது. அதைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் செய்தோம்.

இதே ஆண்டு வானொலி அறிவிப்பாளர்கள் உதவியுடன் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பிரமாண்டமான இசை நிகழ்ச்சியொன்றைச் செய்து புகழ் பெற்றோம். அதன் பின் இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகள் செய்தோம்.

இந்த ஆண்டில்தான் யாழ்ப்பாணத் தினகரன் விழா மேடையிலே எங்களைக் கண்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது இன்றும் மறக்க முடியாதுள்ளது. யாழ்ப்பாணத்தைப் பற்றி நண்பன் எம்.பி. பரமேஷ் இயற்றிப் பாடிய பாடலுக்குக் கரகோசம் ஒலித்துக் கொண்ட இருந்தது.

**யாழ்பாடி யாழ்ப்பாணம் பெயர் கொண்டது**
**வேலேந்தும் நல்லூர் கந்தன் அருள் கொண்டது**
**சங்கிலியன் ஆண்டு வந்த சங்க நாடிது...**

என்ற இந்த இனிய பாடலுக்காக...

உங்கள் பாட்டி பரமேஷின் தாய் மூக்குப் பொடி போடும் பழக்கமுடையவர். அவரும் எனக்கு அம்மா போல்தான். ஒரு நாள் எனது மூக்குப் பொடியை வாங்கிப் போட்டு காரம் தாங்காது கீழே விழுந்து பின் எழும்பி அகப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு என்னை அடிக்க வந்தது இன்னும் பசுமரத்தாணி போல்

என் நெஞ்சில் நீங்காதிருக்கின்றது. நாங்கள் தாய் பிள்ளை போல் பழகிய நாட்களை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன். எங்கள் நட்பும் பாசமும் என்றும் நிலைத்திருக்கும் என் அறிவுக்கு எட்டிய வரை இதை எழுதுகின்றேன். ஏதும் குறையிருப்பின் மன்னிக்கவும் வளர்க உங்கள் புகழ் என வாழ்த்தி இறைவனை வேண்டி இத்துடன் முடிக்கின்றேன்.

இப்படிக்கு
உங்கள் பாசமுள்ள மாமா
**பொ. சிவானந்தன்**

## 9

## லன்டோ மனோ

**இசைக்கலைஞர், ஜெர்மனி**

ஈழத்து மெல்லிசைவானில் பரமேஸ் அவர்கள்...

கடலலைகள் அலைமோதிக் கவிபாடித் தாலாட்டும் தாயகத்தின் தலைநகராய் விளங்குகின்ற திருக்கோணமலைக்குப் பல சிறப்புகள் உண்டு. இலங்கை வேந்தன் இராவணன் தனது தாயார் வணங்குவதற்காக ஆலயம் அமைப்பதற்காக வீணையிசைத்து, இறைவனை அழைத்து வரமாய்ப் பெற்று அமைந்ததும், பாடல் பெற்ற தலமுமான கோணேஸ்வரமும், இயற்கையாய் அமைந்த துறைமுகமாய் அமைந்து, இன்னும் பலசிறப்புக்களைக் கொண்ட அந்த மண்ணிலிருந்து 1960களின் பின்னரான காலப் பகுதியில் ஈழமண்ணில் மெல்லிசைப் புயலொன்று ஈழவானில் தன் இசைப் பயணத்தை ஆரம்பித்தது. இன்று பல சகாப்தங்களைக் கடந்தும் அவரது இசைப்படைப்புக்கள் காலத்தை வென்றும் வாழ்பவையாக உள்ளன. கலைஞர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டும்.

அந்த வகையிலே வயதால் வைரவிழாக் காணும் அன்பு நண்பரும் ஈழத்து மெல்லிசைப் பரப்பின் மூத்த கலைஞருமான திரு. பரமேஷ் அவர்களின் இசைப்பயணமானது ஈழத்து மெல்லிசை

வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தமிழிசையார்வலர்களின் கடனாகும். வெறுமனே இரவல் இசையை அசைபோட்ட எமக்கு எமக்கான இசையை பாடல்களை வடித்தெடுத்து எமது மக்கள் துணிவோடு கொண்டு சென்று மக்களின் இரசனைக் களத்தைப் பரிசோதனைக்குட்படுத்தி வெற்றியும் கண்ட ஓர் கலைஞனாக எம்மிடையே வாழ்ந்து வரும் பரமேஷ் அவர்களை கௌரவப்படுத்துவதானது இத்துறைசார் கலைஞர்களையே கௌரவப்படுத்துவதானது இத்துறைசார் கலைஞர்களையே கௌரவப்படுத்துவதாக இருக்கும் என்பது என் தாழ்மையான எண்ணக் கருத்தாகும்.

பரமேஷ் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது அங்கு பரமேஷ் அவர்கள் இணைந்து பயணித்த திருமதி மாலினி பரமேஷ் அவர்களைப் பற்றியும் ஒரு சில வரிகள். சங்கீதத்தை முறைப்படி பயின்று, சங்கீத பூஷணம் என்ற கௌரவத்தைப் பெற்ற திருமதி பரமேஸ் அவர்கள் இசையரங்கிலே தமிழிசை ஓரங்கட்டப்பட்டு, அந்நிய இசையின் ஆதிக்கம் மேலோங்கியிருந்த காலகட்டத்தில் துணிச்சலோடு திரு. பரமேஷ் அவர்களுடன் இணைந்து மெல்லிசை வானில் சிறகடித்தவாறு அவரையே தன் வாழ்க்கைத் துணையாக வரித்துக் கொண்டு மெல்லிசைக்கு மேலும் மெருகூட்டியமை இங்கு மனம்கொள்ளல் பொருத்தமானது மாலினியவர்களை மணந்து கொண்டு இசைத்துறையில் பல சாதனைகளைப் படைத்து நிற்பதானது ஈழத்தமிழினத்திற்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

ஈழத்தமிழர்களாலும் அற்புதமான இசையைத் தரமுடியும் என்பதற்குப் பிள்ளையார் சுழி போட்டவர்களில் திரு பரமேஷ் அவர்கள் முதன்மை வகிக்கின்றார் என்றால் மிகையாகாது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தொழில் நுட்பவளங்களைக் கொண்ட அன்றைய காலகட்டத்தில், இன்றுள்ளது போன்று ஈழத்தமிழரிடையே, சுயத்தின் மீதான ஆழமான தேடல்களோ புரிதல்களோ இல்லாத வேளையிலும் எமக்கான மெல்லிசையை வலுவோடு மக்களிடையே கொண்டு சென்ற இந்த மெல்லிசைக் கலைஞனின் கைவண்ணத்தில் உருவாகி இன்றும், ஏன் தமிழிசைப் பாடல்கள் உயிர்வாழும் காலம்வரை மெல்லிசை உலகில்

பிரகாசிக்கும் என்பதற்கு சாட்சியமாய் விளங்கும் வண்ணம். உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைப்பது... போகாதே தூரப் போகாதே... நீ வாழும் இடம் எங்கே... நீலச் சேலை கட்டி வந்தாள் எந்தன் காதலி... போன்ற பாடல்கள் காலத்தைக் கடந்தும் இனிமை கொஞ்சும் இசையாரங்களாய்த் திகழ்வது எமக்கும், எம்மினத்துக்கும் பெருமைதரும் என்பதே உண்மையாகும். தாயகத்தில் மட்டுமன்றி சிங்கள இனவெறியரசின் கொடுமைகளுக்கு அஞ்சி புலம்பெயர்ந்து ஜெர்மனியில் வாழ்ந்த போதும் இசைத்துறையில் சில வெளியீடுகளைச் செய்தார். அந்த வெளியீடுகளிற்குச் சிகரம் வைத்தாற் போல் "புலிகளின் புயலிசை" என்னும் இசைப்பேழை அமைந்தது.

இது போன்ற முயற்சிகளோடு நில்லாது, இலண்டனில் இருந்து இருபத்தி நான்கு மணி நேரத் தமிழ் ஒலிபரப்பை நடாத்திவரும். அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மண்ணின் மனம் கமழும் நிகழ்வான காலைக் கலசத்திலே, புலம்பெயர் நாடுகளில் நம்மவர்களில் பாடலாசிரியர்களை, கவிஞர்களை, பாடகர்களை வளர்த்தெடுத்து வரும் "முற்றத்து மல்லிகை" நிகழ்ச்சியிலும் இவரது பங்களிப்பை அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்பதையும் இந்த இடத்திலே சுட்டுதல் பொருத்தமாகும்.

அந்த வகையிலே மெல்லிசையையே தனது வாழ்வோடு, வரித்துக் கொண்ட மூத்த மெல்லிசைக் கலைஞர் திரு. பரமேஷ் அவர்கள் ஈழத்து மெல்லிசை வானில் ஓர் மைல்கல்லாகத் திகழ்கின்றார். தலைசிறந்த இந்த மெல்லிசைக் கலைஞரை வாழ்த்துவதில் என் மனம் பெருமகிழ்வடைகிறது அந்த வகையிலே நூற்றாண்டுகளையும் கடந்தும் மெல்லிசைக்கு மேலும் மெருகூட்டும் பணியில் அவர் தொடர்ந்தும் பயணிக்க எல்லோருக்கும் பொதுவான இறைவனின் அருள் கிட்ட வாழ்த்துகின்றோம்.

இவ்வண்ணம்
லண்டோ மனோ குடும்பத்தினர்
**சி. மனோகர்**

## 10



## பிரியாலயம் துரைஸ்
ஃபிரான்ஸ்

### பூவுக்கு மாலை சூடும் பொன்னான நேரம்

என் கடந்த கால நினைவுகளில் பாடசாலைவாழ் நாட்களில் பகுதிநேர வேலையாக கொண்டாட்ட வைபவங்களுக்கு ஒலி அமைப்பு சேவையில் ஈடுபட்டு வந்ததால் திரை இசைப்பாடல்களை கேட்கும் வாய்ப்பும் அதில் பெரும் ஈடுபாடும் என்னோடு இறுகப்பற்றிக் கொண்டது அப்போது தென்னிந்திய திரைப்படப் பாடல்களின் அலைதான் கொண்டாட்ட வைபவங்களிலும் இசைக்குழுக்களிலும் வீசிக் கொண்டிருந்தது.

சிறப்பாக வாத்தியங்களை வாசிக்கத் தெரிந்த நம்மவர்கள் ஏன்தான் சொந்தமாக பாடல்களை எழுதி இசையமைத்து இசைத்தட்டு வடிவில் வெளியிட முன்வரவில்லை? இது என்னை நானே கேட்கும் கேள்வி இருந்தாலும் இதுபோன்ற முயற்சிகள் பெருமளவு பணத்தை விழுங்குவதுடன் அதில் பல சிரமங்களும் உள்ளது என்பதையும் நன்கு உணர்ந்திருந்தேன்.

இந்தக் குறை எப்போது தீரும். யார் தீர்த்து வைப்பார்கள் என்று நானும் நண்பர்களும் அடிக்கடி பேசி வருத்தப்பட்டுக்

கொள்வோம். அந்த வேளையில் எங்கள் வருத்தம் தீர்ந்து வசந்தம் வீசவும். ஈழமணித்திருநாட்டின் வரலாற்றில் முத்திரை பதித்து முத்தாக ஜொலித்து சத்தான சேதிதனை சுமந்து சந்தனமாக மணம் வீசி வெளிவந்து சாதனை படைத்திட்டது.

''பரமேஷ் கோணேஷ்'' எனும் மெல்லிசை மன்னர்களின் முதலாவது இசைத்தட்டு ''உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது'' எனும் பாடலை முதலாவதாகக் கொண்டு முக்கனிச் சுவைதனை முழுமையாக சுமந்து வந்தது ''இசைத்தென்றல்'' இப்படியாக சாதனையாளர்கள் பட்டியலில் இடம்பிடித்த இவர்களின் திட்டமிட்டு செயல்படும்முறை நேரத்திற்கு கொடக்கும் மரியாதை 21 இசைக்கலைஞர்களை வைத்து மேடையிலே குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிடப்படட பாடல்களை மிக அற்புதமாக பாடி மகிழ்வித்த அந்த இனிய நிகழ்வினை நேரடியாக ஒரு முறை நான் பிறந்து வளர்ந்த கிளிநொச்சி மண்ணிலே (1972) பார்த்து ஆச்சரியத்தில் மூழ்கி மகிழ்வுற்றிருக்கின்றேன்.

''கலையரசு'' சொர்ணலிங்கம் ஐயா அவர்களிடம் ''மெல்லிசை மன்னர்கள்'' என்ற பாராட்டுடன் பட்டமும் பெற்றுக் கொண்ட இவர்களின் இசைக் குழுவின் சிறப்பிற்கு மகுடம் வைத்தது போல் பிரகாசித்தவர் ''சங்கீதபூசணம்'' திருமதி மாலினி பரமேஷ் அவர்களாகும்.

ஒவ்வொரு ஆண் மகனின் வெற்றிக்குப் பின்னால் பெண் என்ற மிகப்பெரும் சக்தியின் பங்களிப்பு திரு பரமேஷ் அண்ணாவின் இசைத்துறை வாழ்விலும் ஈடு கொடுத்து வாழ்ந்த ''இசைச்சேவை மகள்'' என்ற பொருத்தமான சிறப்புப் பெயருக்குரிய அமரர் மாலினி பரமேஷ் அவர்களுக்குரியதே. காலங்கள் உள்ளவரை மறக்க முடியாதவாறு அவரின் வாழ்க்கை முறையால் தமிழ் உறவுகள் மத்தியில் தன் திறமையையும் பண்பையும் பணிவையும் ஆழப்பதித்து வைத்துள்ளமை பெருமைக்குரியதாகும்.

புலம்பெயர் வாழ்விலே தமிழர்கள் வாழும் இடங்களெல்லாம் இசைப் பணியை தொடர்ந்து நிகழ்த்தி வரும் திரு. பரமேஷ் அண்ணா அவர்கள் இங்கு தானே பாடல்களையும்

எழுதி இசையமைத்து பல இறுவெட்டுக்களையும் வெளியிட்டுள்ளதுடன் ''ரிதம்'' இசைக்குழுவை உருவாக்கி ''மெல்லிசைக்குயில்'' பிரபாலினி பிரபாகரன் எனும் தனது மூத்த மகள் முதல் குடும்பத்தோடு கலைப் பயணத்தைதொடர்ந்து செய்து வருவதும் இன்று வரை பல துன்பங்களை துயர்களை, சோதனைகளை சந்தித்தும் தான் காதல் கொண்ட இசைப்பயணத்தில் இளமைப் பொலிவுடன் சேவை புரிந்து வருவதும், அகவை அறுபதைக் காணும் என் அன்பிற்கும், மதிப்பிற்குரிய இசைத்தென்றல், மெல்லிசை மன்னர் பரமேஷ் அண்ணாவின் காலத்தில் நாமும் வாழ்கின்றோம். அவரை வாழ்த்தும் நாம் பாக்கியம் பெற்றோம் என்ற மகிழ்வுடன், அவர் இன்னும் பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் வாழ்க என வாழ்த்தி விடைபெறும்.

என்றும் பிரியமுடன்
**பிரயாலயம் ''துரைஸ்''**

## 11

## திருமதி ஜெயா பத்மநாதன்
**பரீஸ் ஃபிரான்ஸ்**

**ஒரு கலைஞரின் காலவோட்டமும் அவன் கலைத்திறமையும்**

**ஒரு மனிதன் கவிஞனானான் அவன் காதலியாலே**
**ஒரு மனிதன் மனிதனானான் அவன் காதலியாலே**
**ஒரு மனிதன் புலமை பெற்றான் அவன் காதலியாலே**

என்ற கருவுடன் வெளிப்படுகின்றார் எம்.பி. பரமேஷ் அவர்கள். எவ்வளவோ கலைஞரைப் பற்றி விமர்சனம் எழுதியுள்ளேன் என்றாலும் இந்த கலைஞரைப் பற்றிய விமர்சனம் ஒரு புதுமையாகவுள்ளது.

6 பிள்ளைகளுக்கு தந்தையாரான எம்.பி. பரமேஷ் அவர்களின் 60வது பிறந்த நாளையொட்டி அவரின் இனிய

இசைப்பயணங்களை கொணரவிருக்கும் முகமாக எம்.பி. பரமேஷ்சின் தலைமகள் கலைமகள் பிரபாலினி பிரபாகரன் அன்பு மடலை அனுப்பி வைத்ததையொட்டி தந்தையின் கலையை ரசித்திருந்தால் அவர் பற்றி வாழ்த்து கேட்டிருந்தனர். இது மிகவும் அற்புதம் ஒருவகையான சந்தோஷத்தை தந்தது.

பரமேஷ் கோணேஷ் இவர்களுடைய தோற்றம் பொப்பாடகர்கள் தன் தலைமுடியையும் பொப்பாகத்தானோ வளர்த்திருப்பார்கள் என்று நான் சிந்தித்த அந்த சிறுவயது நினைவுகள். பரமேஷ் கோணேஷ் எப்போதும் கையில் இசைக்கருவியும் இசைக்கச்சேரியும் நான் சிறு வயதில் பத்திரிகையில் காணமுடிந்தது, பாடல்களை வானொலியில் கேட்க முடிந்தது. இவர்களை நான் இன்றும் நேரிலே கண்டதில்லை.

பத்திரிகையில் துண்டுப்பிரசுரங்களில் ரசித்திருக்கின்றேன். சிரித்தமுகம் கலையே உருவான இவர்கள் தோற்றம் இவர்களுடைய கலையுலகு மீண்டும் புலம்பெயர்ந்த மண்ணில் ஒலிக்க வேண்டும் அதை நான் கேட்க வேண்டும் என்ற ஆசையுண்டு. சந்தோஷமான செய்தி என்னவென்றால் எம்.பி. பரமேஷ் அவர்களின் வாரிசுகளை றிதம்ஸ் என்ற இசைக் குழுவினராக இசையை வளர்த்து வருவது பெருமைக்குரியது வாழ்த்துக்கள். பாராட்டுக்கள்.

மீண்டும் எம்.பி. பரமேஷ் பற்றி இளம் வயதினிலே நான் விரும்பிய ஒரு பொப்பாடகன் இசையமைப்பாளன் கவிஞன் நீங்கள் பாடிதிரிந்த நாட்கள் ஓடித்திரிந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன் ஆயிரம்பேர் கூடியிருந்த ரசித்த கைதட்டி ஆரவாரித்த அந்த நாட்களை நினைக்க சந்தோஷத்தை தருகிறது. பொப்பிசை மீண்டும் புலம்பெயர்ந்த மண்ணில் ஒலிக்க வேண்டும். கலையென்பது அழிந்துவரும் ஒழிந்துவிடும் பொருளல்ல பரமேஷ் கோணேஷ் அவர்களே முதல் முதலில் விடுதலைக்காய் எழுச்சிப்பாடல் பாடிய பெருமை கொண்டவர்கள்

**துணிந்து நில்லடா துயர் சுவரை தாண்டடா**
**பணிந்து செல்வதா பயத்தை நீக்கடா**

இப்படியான பாடலும் காதலை அதன் உணர்வுகளை ஒவ்வொரு கருத்து மிக்க அந்த காதல் கவிதை வரியை எழுதி இசையமைத்து பாடிய எம்.பி. பரமேஷ் அவர்களை பாராட்டி அவற்றின் சிலவரிகளை மீட்டி பார்க்கின்றேன்.

இவர்கள் கலைக்குடும்பத்தில் வாழ்ந்தவர்கள் என்று கூறுவது மிகையாகாது. ஏனெனில் எம்.பி. பரமேஷ் அவர்களின் தந்தையார் கவிஞர் பிள்ளை பாட்டு பாடி புகழ் பெற்றவர் 'அந்த மரம் ஆலமரம்' என்ற பிள்ளை பாட்டுடன் அறிமுகமான இவர் தன் பிள்ளையான பரமேஷையும் கலைத்துறைக்கே அர்ப்பணித்திருக்கிறார் நன்றி. இவர் கலைப்பணி வளர்க.

உங்கள் பிரியை
**ஜெயா பத்மநாதன்**

## 12



## அப்புக்குட்டி இராஜகோபால்

ஃபிரான்ஸ்

மெல்லிசைக்கு மெருகூட்டிய பரமேஷின் இசைப்பயணம். காற்றினிலே வந்த கீதம்.

ஆம்! இவர் வேறு யாருமல்ல. இலங்கையில் திருக்கோணமலை பரமேஷ், கோணேஷ் என்று யார் குறிப்பிட்டாலும் உடனே இவரின் பெயர் நினைவுக்கு வந்துவிடும்.

இசையின்பால் நிறையவே ஈடுபாடு கொண்ட ஓர் இளைஞனாகப் பரமேஷ் அன்று எனக்கு அறிமுகமானார்.

1966ம் ஆண்டு ஆடி மாதம் 26ம் திகதி இலங்கை வானொலியில் என்னை நாடகத் துறையில் கலைஞனாகத் தெரிவு செய்த காலமது.

வசந்தம் வீசிய அன்றைய காலகட்டத்தில் ஈழத்துக் கலைஞர்கள் அனைவரையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த ஒரு ஊடகம் இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

இசைக் கலைஞர்கள் எந்தத் திக்கில் இருந்தாலும், வரவழைக்கப்பட்டு, அவர்கள் கர்னாடகக் கச்சேரிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் உறவுகள் மத்தியில், அவர்கள் இல்லங்கள் தோறும் சென்று ஒலிபரப்பிய காலமது.

நாதஸ்வர வித்துவான்கள், வில்லிசைக் கலைஞர்கள் எனப் பல்வேறு துறையினருக்கும் வழிசமைத்த இந்த ஊடகத்தில் இந்தக் கலைஞன் பரமேஷ் 1969-70களில் அற்புதமான மெல்லிசையோடு அறிமுகமானார்.

இசையின்பால் இவருக்கிருந்த மோகம் இவர் பாடல்களில் நிதர்சனமாக்கப்பட்டு, யார் இந்தப் பரமேஷ் என்று இரசிகர்கள் தேடல் செய்யுமளவிற்கு பேசப்பட்ட இந்தக் கலைஞனின் இசைப் பயணத்தில் நாமும் இணைந்து கொள்வோம்.

எந்தவொரு கலைஞனும் அவன் தகைமைக்கேற்ப, வாழும்போது கௌரவிக்கப்பட வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்து. அந்த வகையில் தான் தெரிவு செய்த துறையில் சாதனை செய்ய வேண்டுமென்ற அவா கலைஞர் பரமேஸிடம் இருந்திருக்கிறதென்றால் அது மிகையாகாது.

இசை கெட்டால் புவி அசைந்தாடுமென்பார்கள். உண்மைதான்! திருக்கோணமலையில் இசைத் தென்றலாய் ஒலித்த பரமேஷின் குரல் திருநெல்வேலியில் குடியிருந்த மாலினியின் செவிகளூடாகச் சென்று, அவர் இசையமைத்துப் பாடிய, ''உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது'' என்ற

பாடலுக்குப் பதிலடியாக, ''எனக்குத் தெரியுமே, நீ என்னை நினைத்துத்தான் பாடியுள்ளது'' என்று சொல்லாமற் சொல்லி, சங்கீத பூஷணம் திருநெல்வேலி நமச்சிவாயத்தின் அன்பு மகள் மாலினி பரமேஷ் அவர்களையே காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருப்பதுவும் இறைவன் திருவருளும் கொடுப்பனவும் என்று சொல்வோம்.

கர்நாடக சங்கீதத்தில் சித்தியெய்திருந்தும் கூட, தன் கணவனின் மெல்லிசை ஆர்வத்துக்கு உயிரூட்டும் பெண்ணாக வாழ்ந்துள்ள திருமதி மாலினி பரமேஷை வாழ்த்துவதுவும் கடமை.

இந்தக் கலைஞன் இலங்கையில் எனக்கு அறிமுகமாகியபோதே இவர் எதிர்காலம் நன்றாக அமையும் என்று நம்பிக்கை கொண்டிருந்தேன். அது வீண் போகவில்லை.

1968ஆம் ஆண்டு 1976 வரை பரமேஷ், கோணேஷ் இசைத் தென்றலாகி, 1977 முதல் 82 வரை புலம் பெயர்ந்து ஜேர்மனி வரும் வரை இசைத்தென்றலாய் மெல்லிசைக்கு மெருகூட்டிய பெருமை பரமேஷ், மாலினி இருவரையும் சேரும்.

இவரது குழுவில் பல பாடகர்கள், பாடகிகள் உருவாகி, அவர் பெயருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் புகழ் சேர்த்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஒரே இசைக் குழுவாக பல வாத்தியக் கலைஞர்களையும் உள்ளடக்கி, குறிப்பாக மகேஷிற்குப் புகழ் தந்தது பியானோ அக்கோடியன் வாத்தியமாகும்.

மேடையில் இவர்கள் இணைந்து வழங்கிய இசைத்தென்றல், இலங்கையின் பல பாகங்களிலும் மெல்லிசையாய் மிதந்து சென்று, அவர்களது மெல்லிசைப் பசியைத் தீர்த்திருப்பதனால்தான் இன்றும் பரமேஷ், கோணேஷ் இசைத்தட்டில் பதிவாகியுள்ளது.

தாய், தந்தையரோடு மட்டும் இந்த இசை ஆர்வம் முடிந்து போகாமல், அவர்கள் வழி வந்த தொப்புள் கொடி உறவுகளான குழந்தைகளுக்கு, குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு (பிரபாலினி பிரபாகரன், பிரியந்தினி பரமேஷ் இருவருக்கும்) இசை இயல்பாகவே அவர்களிடம் குடிபுகுந்திருப்பதுவும் ஆண்டவனின்

கருணையென்றே கூறவேண்டும். பிரபாலினியின் துணைவர் பிரபாகரனையும் பாராட்ட வேண்டும்.

மகிழ்ச்சியும் பெருமையும் என்னவென்றால், இந்தக் குழந்தைகள் இசை வழங்கிய ஒரே மேடையில், எனது கலைக் குழுவோடு அந்தத் தலைமுறையுடன் அவர்கள் தந்தை பங்குபெற, தாயார் மாலினியின் பங்களிப்போடு கலை நிகழ்ச்சிகள் வழங்கியிருப்பது நீங்காத பசுமையான நினைவாக இன்றும் இருப்பதுதான்.

இசைக்கு இன, மன, மொழி என்ற வேறுபாடு கிடையாது என்பது எனது தாழ்மையான கருத்து. ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் நிச்சயம் இருப்பாள் என்று சொல்வார்கள். பரமேசைப் பொறுத்தவரை அவர் இசைத் தாகத்துக்கு நீரூற்றி, அவர் புகழிலும், பெயரிலும் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துச் சென்றுள்ள மாலினி நம்மோடு இல்லையே என்பது வேதனைதான். இருப்பினும் அவர் விட்டுச் சென்றுள்ள இசைப்பதிவுகள் என்றுமே அழியாத சொத்துக்கள்.


மெல்லிசையின் சகாப்தம் பரமேஷ் கோணேஷ் குழுவினரோடு நின்று விடக்கூடாது என்பதற்காகவே ஜேர்மனியில், Rythms என்ற இசைக் குழுவை அமைத்து, புலம் பெயர்ந்து தமிழ் உறவுகள் வாழும் பல மேடைகளிலும் தன் குழந்தைகளுடன் மற்றைய இசைக் கலைஞர்களோடும் இசைப்பணி ஆற்றிவரும் பரமேஷின் இசைப்பயணம் வீறு நடை போட்டு, மெல்லிசைக்கு மேலும் மெருகூட்டட்டும் என்று வாழ்த்தி விடைபெறுவது,

அன்புடன்

**அப்புக்குட்டி டி. இராஜகோபால்**

இலங்கை வானொலி மேடை திரையரங்கு

தொலைக்காட்சிக் கலைஞர்



## 13

## நவாஜோதி

கவிஞர் அறிவிப்பாளர்
**ஃபிரான்ஸ் ஏ.பி.சி. வானொலி**

**மெல்லிசை மன்னர் எம்.பி. பரமேஷ் என்னும் இசைக் கலைஞனே.**

இசையோடு இசைந்து இரண்டறக் கலந்து இசையை வசமாக்கி வயது அறுபதைத் தொடுகின்றபோதும் இசை ஆற்றலினால் அகிலத்தை வெல்ல நினைக்கும் உங்களுக்கு வயதுஒரு பொருட்டல்ல. கலைஞன் காலமாற்றத்தினாலும் இளைஞன்தான்.

இசை இயல்பாகவே எவரையும் வசப்படுத்தக் கூடியது. மனித வாழ்வு முழுமையுமே இசையோடு பின்னிப் பிணைந்து கிடக்கிறது. ஆதிமனிதனின் ஆரம்பக்கலையே இசையும் நடனமும் தான். இயற்கையின் சப்தங்களையும் ஒலிகளையும் அவன் இசையாகவே கண்டான்.

பின்னர் தூங்க வைக்கும் தாலாட்டும் இறுதி ஊர்வலத்தில் கிடைக்கும் ஒப்பாரியுடனும் இசை, அவனது வாழ்வின் பிரிக்கவொண்ணா அம்சமாகிவிடுகிறது. இத்தகைய இசைக்குள் வாழ்வின் பொருளுணர்த்தும். அத்தனை விடயங்களையும் உங்கள் கற்பனை வளத்தால் பாடல்களாக்கி, மனதில் பதிய வைத்தீர்கள்.

இலங்கையில் இருந்தவரையில் அறுபத்தியெட்டாம் ஆண்டிலிருந்து இசைத்தென்றல் நிகழ்ச்சிகளையும் பலமேடை நிகழ்ச்சிகளையும் நடாத்தி, மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருந்தமை என்றுமே மறக்க முடியாது. அன்று ''மெல்லிசை மன்னர்'' எனும் பட்டத்தை உங்களை விட வேறு யாரும் பெற்றதாக நான் அறிந்ததில்லை. இலங்கை வானொலியில், மேடையில்,

மெல்லிசையென்றால் அன்றைய ரசிகர்களின் நாவில், சட்டென்று உச்சரிக்கப்படுவது உங்கள் பெயர் அல்லவா? நீங்கள் பிறந்து வளர்ந்த திருக்கோணமலை மட்டுமல்ல. மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகரிலும் பல இடங்களிலும், பட்டி தொட்டியெல்லாம் உங்கள் மெல்லிசை தேனகாகப் பாய்ந்ததை அனைவரும் அறிவர்.

சந்தன மலர்களால் நந்தவனம் அமைத்து, ரசிகர்களின் சிந்தனையில் வாசனையை சிந்த வைத்தது. உங்கள் மெல்லிசை என்றால் அது மிகையாகாது என்றே நான் கருதுகின்றேன். இப்போதெல்லாம் தென்னிந்திய திரையிசைப் பாடல்களே செவிகளின் சுவாசமாகிப் போன மெல்லிசைப் பாடல்களை செயற்கையாய் சுவாசிக்க வேண்டிய துர்பாக்கிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

உங்களைப் போன்ற பல இசைக் கலைஞர்கள் நம் மத்தியில் நிறைய இருந்தும், இத்துறைசார்ந்த அடிப்படை வசதிகள் பற்றாக்குறை காரணமாக, இந்த மெல்லிசையானது நம்மவர் மத்தியில் பின்தங்கிய நிலையில் இருப்பது வருத்தத்துக்குரிய விடயமே.

தென்னிந்திய சினிமாப் பாடல்கள் வர்த்தக ரீதியாக காதுக்குள் நுழைய வாயில்கள் அதிகம். ஆனால் மெல்லிசை பாடல்களுக்கு வானொலி மட்டுமே நுழைவாயில் என்பதால் இதுவும் ஒரு காரணமாகிவிடுகிறது. இருந்த போதும் கூட அன்றைய காலகட்டத்தில் உங்கள் மனைவி, சங்கீதபூசணம் மாலினி பரமேஷ் அவர்களுடன் இணைந்து நீங்கள் பாடிய அனேகமான பாடல்கள் இன்னும் மனதை விட்டகலாத பாடல்களாகவே இருக்கின்றன.

அதிலும் ''உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது'' என்கின்ற பாடல். உலகம் உள்ளவரை காதல் வாழும் என்பதுபோல, உங்கள் காதல் மனைவிக்காக நீங்கள் எழுதிய கவிவரிகள் தமிழில் இசையிருக்கும்மட்டும் தொடர்ந்தேயிருக்கும். அப்படிப் பிரபலமாக இருந்த உங்கள் இசை வாழ்வு ஒவ்வொரு இலங்கைத் தமிழராலும் நினைவு கூரத்தக்கது. திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, சிலாபம் போன்ற தமிழர்கள் வாழும்

இடங்களிலெல்லாம் மெல்லிசையை மேடை தோறும் அறிமுகப்படுத்தி, மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய உங்கள் இசைப்பணி மறக்க முடியாதது.

புலம்பெயர்ந்த பின்னரும் கூட தொடர்ந்து இசைப்பணியை ஆற்றிக் கொண்டிருக்கும் நீங்கள் 1995 ஆம் ஆண்டில் உங்கள் மனைவி சங்கீத பூஷணம் மாலினி பரமேஸ் அவர்களுடன் இணைந்து "சங்கீத சாம்ராஜ்யம்" என்னும் இசைப்பேழையை வெளியிட்டமையும் உங்கள் இசைப்பணிக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

இசைப்பாரம்பரியத்தில் வந்த உங்கள் வாழ்க்கைத் துணைவி குழந்தைகளுக்கு கூட இசையை ஊட்டத் தவறவில்லை. தன் குடும்பம் ஒரு இசைக் குடும்பமாகவே மிளிர வேண்டுமென்ற அவரது கனவு இன்று நனவாகி விட்டது. உங்கள் குழந்தைகள் அனைவரும் ஒன்றிணைந்து ரிதம் இசைக்குழுவினை, அமைத்து அதனூடாக நீங்கள் வளர்ந்து கொண்டிருக்கும்.

ஜெர்மன் நாட்டிலும் இதர ஐரோப்பிய நாடுகளிலும் மேடை நிகழ்ச்சிகளையும், இசை நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருவது பாராட்டப் படவேண்டிய விடயமாகும். உங்களின் அறுபதாவது அகவை விழா எம்மக்களால் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. நமது துரதிர்ஷ்டம் எம் கலைஞர்கள் அவர்களது திறமைக்கும், பெருமைகளுக்குமுரிய கௌரவத்தினை தமது வாழ்நாளில் பெறமுடியாமல் போவது.

நீங்கள் இசைக்காக ஆற்றிக் கொண்டிருக்கும் அத்தனை பணிகளும் வரலாற்றுப் பதிவுகள். எந்தக் கால மாறுதல்களும் இவற்றின் அத்தியாயங்களை, வரலாற்றிலிருந்து எடுத்துவிடாது என்பது மட்டும் நிட்சயம். தொடரட்டும் உங்கள் இசைப்பயணம், இந்நன்நாளில் உங்களை மனதார வாழ்த்துகின்றேன். வாழ்க வளமுடன்!

என்றும் அன்புடன் வாழ்த்தும் சகோதரி

**நவா ஜோதி**

## 14



## திருமதி ஜெயந்தி யோகராஜா

**பரதநாட்டியக் கலைஞர், ஆசிரியர்**
**லண்டன்**

புலம்பெயர்ந்த மண்ணில் புடை சூழ எழும் பண்பாட்டுச் சவால்களுக்கு மத்தியில் பொங்கி எழும் புதுப்புனலாய் புறப்பட்ட எம்.பி. பரமேஷ் அவர் தன் 60வது பிறந்த தினத்தில் இசைமழையுடன் காலடி எடுத்து வைக்கும் வேளையில் இவர் தன் சிறப்பினை சொல்ல மொழியில்லாமல் வாழ்த்துகின்றேன்.

சிறுவயது முதல் ''உனக்கு தெரியுமா'' என்ற பாடல் என் மனதில் இடம் பிடித்த ஒரு இனிமையான கானம். இப்பாடல் இந்திய கலைஞர்களினால் பாடிய பாடல் என்று நீண்ட காலமாக நினைத்திருந்தேன். பின்தான் தெரிந்தது இப்பாடல் நம் நாட்டு ஒரு அற்புதமான கலைஞரால் பாடப்பட்டது என்று அவரின் மனைவியும் ஓர் அற்புதமான பாடகி. இப்படிப்பட்ட ஒரு கலைக்குடும்பத்துடன் சிறிது காலமாகத்தான் நட்பு. ஆனால் சிறு வயதிலேயே கேள்விப்பட்டுள்ளேன்.

சங்கீதம் கற்று மெல்லிசைக்கலைஞராக மெல்லிசை மேடையில் அரங்கேறிய முதலாவது ஈழத்தமிழ் மகள் என்ற

பெருமை இவரின் மனைவிக்கு உண்டு பெண்கள் மேடையேறி பாடுவது இழுக்கு என்று கணிக்கப்பட்ட காலத்தில் அவற்றையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு துணிந்து சாதனை செய்தவர் அவர் அன்பு மனைவி மாலினி. இவர் இன்று உலகில் இல்லாவிட்டாலும் இவரின் பாடல் உலா வருவது மெய்.

எம்.பி. பரமேஷ் அவர்களின் 60வது பிறந்தநாளை முன்னிட்டு இவரை ஒரு கலைஞர் என்ற முறையில் வாழ்த்துவதில் நான் பெருமையடைகின்றேன். இவரின் கலைப்பயணம் மென்மேலும் தொடர இறைவன் அருள் புரிவாராக.

அன்புடன்

**ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜா**

இங்கிலாந்து நெதர்லாந்து சலங்கை நர்த்தனாலய அதிபர்

''நாட்டிய கலா நர்த்தகி'' ''நாட்டிய விஷாரத்''

## 15

## இந்து மகேஷ்

**பூவரசு மாத சஞ்சிகை ஆசிரியர்**

**ஜெர்மனி**

***சங்கீத அரசனிற்குப் பூவரசு புகழாரம்.***

தாயகத்தில் சந்திக்க முடியவில்லை. தமிழருவி விழாவில் சந்தித்தேன். சங்கீத சாம்ராஜ்ஜியத் தலைவனாக என் இதயம் குளிர்ந்து மகிழ்ந்தேன். ஒரே பாடல் உன்னை அழைக்கும்!

எத்தனை ஆண்டுகள் ஆயினும் என்றும் இளமையாய் நின்று நிலைத்து விடும் நினைவுகள். அந்த நினைவுகளோடு இரண்டறக் கலந்து நிற்கும் வலிமை படைத்தது இசை.

என் இளமைக் காலங்களில் இலங்கை வானொலியில் மிதந்துவரும் மெல்லிசைப்பாடல்களில் மனம் இலயித்துக் கிடந்த

போது ஒரு இளமைக்குரல் என்னைத் தேடி வந்தது. உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது?

என்னை மட்டுமல்ல அப்போதைய என்போன்ற இளசுகளின் செவிகளில் நுழைந்து இதயங்களில் இடம்பிடித்துக் கொண்டது அந்தப் பாடல்.

காதல் பருவத்தில் கனவுகளில் திளைத்த காளையரின் உதடுகளிலும், கனாக்காணும் கன்னிப்பருவத்து மங்கையரின் மனங்களிலும் அப்போதெல்லாம் இந்தப் பாடல் செலுத்திய செல்வாக்கு அதிசயிக்கத்தக்கது.

எத்தனை பாடல்கள் வந்தாலும் இந்தப் பாடலுக்கு மட்டுமென்ன அத்தனை தனித்துவம் இது நம்மவர்பாடல் என்ற முத்திரையோடு வெளிவந்தது முக்கியமான காரணம்.

ஏன் இதற்கு முன் நம்மவர் பாடல்கள் உருவானதில்லையா என்றால் முதன்முதலாக இசைத்தட்டு வடிவில் வெளியான நம்மவர் பாடல் அல்லவா இது!

திரும்பத்திரும்ப அந்தப் பாடல் ஒலித்த அந்த நேரத்தில் எனக்குத் தெரிந்திருக்கவில்லை அது இசைத்தட்டாக உருவாகியிருந்தது என்பது.

அந்தக் கானத்தின் சொந்தக்காரன் எம்.பி. பரமேஷ் என்ற இளைஞன்.

தாயகமண்ணில் நான் நேரில் சந்திக்காத அந்த இன்னிசைக்கலைஞனை 'சங்கீத சாம்ராஜ்யத்தில்' அவர் முடிசூட்டிக் கொண்ட 'தமிழருவி'யின் இசைப்பொழுதில் சந்தித்தேன்.

தனியொரு இசைக்கலைஞரென மட்டுமல்ல ஒரு இசைக்குடும்பத்தின் தலைவராகவே அவரைச் சந்தித்த கணத்தில் மனது பெருமிதம் கொண்டது. நமது மண்ணின் கலைஞன் எனும்போது ஒவ்வொருவர் மனத்திலும் இயல்பாகவே எழுகின்ற தனியானதோர் பூரிப்பும் புளகாங்கிதமும் என்னையும் பற்றிக் கொண்டது.

இன்று அந்தக் கலைஞருக்கு அகவை அறுபது. ஆனாலும் அந்த குரலில் இன்னும் இருப்பது இளமை இருபது.

புகழ்பெறும் ஒவ்வொரு கலைஞனுக்குள்ளும் சோகங்கள் புதைந்திருக்கும். சாதனைபுரியும் ஒவ்வொருவரின் வாழ்விலும் ஏராளமான தடைக்கற்கள் எதிரிப்பட்டுக் காயப்படுத்தியிருக்கும். அதிலும் நமது தாயகத்தில் ஒரு சிறந்த கலைஞனாக நின்று நிலைப்பதற்கு எண்ணற்ற இடர்களைத் தாண்டி வந்தாக வேண்டும்.

எல்லாத் துயரங்களையும் தடைகளையும் எதிர்கொள்ளும் வலிமை பெற்றாலன்றி எவரும் சாதனை படைத்துவிட முடியாது. நின்று நிலைத்துவிடவும் முடியாது.

ஒரு சிறந்த கலைஞராக நம் முன்னே சாதனையாளராக நிற்கின்ற திரு. எம்.பி. பரமேஷ் அவர்கள் எத்தனை தடைகளைத் தாண்டி வந்திருப்பார் என்று நினைத்துப் பார்க்கிறேன் இவர் போன்ற கலைஞர்களின் பணிகள் அடுத்து வருகின்ற சந்ததிகளால் போற்றப்பட வேண்டியவை மதிக்கப்படவேண்டியவை.

அவரது எண்ணற்ற இரசிகர்களில் ஒருவனாய் நின்று அவரது இசைப்பயணத்தின் பாதையில் அன்பு மலர் தூவி வாழ்த்துவதில் நானும் பங்கேற்று மகிழ்கிறேன்.

இவரோடு இசைபாடி இவரையே துணையாய்க் கொண்டு வாழ்ந்த இசைக்குயில் மாலினி இன்று இவரருகில் இல்லை என்றான போதும் உருவமில்லாத இசையாய் இவரோடு இணைந்தே இருக்கிறார். இருவரும் இணைந்து உருவாக்கிய இசைவாரிசுகள் இவர்களது பணியைத் தொடர்கிறார்கள் என்பது என்போன்ற 'இளசுகளுக்கும்' இனிப்பான செய்தியே.

இன்னும் பல்லாண்டுகாலம் இளைஞனாய் வாழ்ந்து, இசைப்பயணத்தில் அவர் இயற்றவுள்ள சாதனைகளை நிறைவுற முடிப்பதற்கு இறையருள் கிட்டுவதாக! நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அன்பன்

**மகேஷ்**

(பூவரசு கலை இலக்கியப் பேரவை - ஜெர்மனி)

## 16



**முகத்தார் யேசுரட்ணம்**

**எழுத்தாளர், இலங்கை வானொலிக் கலைஞர்**
**நாடகம், திரைபடக் கலைஞர், ஃபிரான்ஸ்**

# இசை நீரோடை சுமந்துவரும் பூவாடை!!!

இசையால் வசமாகா இதயம் எது?! எம் பெருமான் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவத்திலே, உலகமே சுழர்கிறது! இசையில்லாமல் தாண்டவம் ஏது?! புல் பூண்டு, செடி கொடி தாவரம் இவ்வனைத்தும், இசைக்கு ஆழுமைப்பட்டவை! ஏன் கறவைகள்கூட, அதிக பால் சுரக்கும் தன்மையைப் பெற்றுவிடுகின்றன என்பது, விஞ்ஞான ஆராய்ச்சியின் கண்டுபிடிப்பில் ஒன்று!

நாதர் முடி மேலிருக்கும் நாகபாம்பு கூட, இசைக்கு தலைவிரித்தாடாமல் இருந்துவிட முடியாது! கயிலை மலை நாதனைக் கூடக் கவர்ந்தது, ராகம் தான்! இசை கேட்டால் புவி அசைந்தாடும், இது இறைவன் கொடுத்த வரம்!

நான் இசை ஞானியுமல்ல, இசை ஆய்வாழனுமல்ல! சாதாரண இசை ரசிகன் மட்டுமேதான்! தாயகத்திலே பரமேஷ் கோணேஷ் இசைத் தென்றலைக் கேட்டு மகிழ்ந்தவர்களில்

நானுமொருவன். நண்பர் பரமேஷ் ஓர் மெல்லிசை மன்னன்! 1972-ல், கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களால் இவ்விருது வழங்கப்பட்டது! நண்பர் பரமேஷ் குடும்பமே ஒரு இசைக் களஞ்சியம். 60வது வயதினை எட்டினாலும், தன் அன்புத் துணைவியார், மெல்லிசை வான்மதி சங்கீத பூஷணம் மாலினி அவர்களை இழக்க நேரிட்டாலும் கூட, தளராது தன் குழந்தைச் செல்வங்களை, இசைத் துறையில் பிரகாசித்துவர வைத்தது, போற்றப்பட வேண்டியது, பாராட்டப்பட வேண்டியதுமே!!

அந்நாட்களில், இலங்கை வானொலியில்தான், நண்பர் பரமேஷ் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. நட்புத் தொடர்ந்தது. ஓரிரு வருடங்கள் முன், ஜெர்மனியில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சியிலே, நானும் கலந்து கொண்டபோதுதான், அந்த நாள் ஞாபகங்களை இரை மீட்டிப் பார்க்க முடிந்தது! இன்று "றிதம்ஸ்" (Rythms) இசைக்குழுவினை நிறுவி, தன் செல்வங்களுடன் தொடர்ச்சியாக அலங்கரித்து வருவது, போற்றப்பட வேண்டியதொன்று! நண்பர், மெல்லிசை மன்னர் பரமேஷ் அவர்களின் "என் இனிய கலைப்பயணங்கள்" எனும் கௌரவிப்பு மலருக்கு, யானும் ஓர் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்!

"அறுபது ஆண்டுகளை அணியணியாகக் கடந்தாலும்
இருபது ஆண்டுடை இளைஞன் போல் பணிபுரியும்
உருவத்தோய்! உள்ளத்தோய்! உயர்ந்தெழும் கோபுரமே
ஒருபத்து நூறாண்டு உயர்ந்து நீர் வாழியவே!!!"

"காலங்கள் யாவும் நின்று கல்லிலே எழுதி வைத்த
கோலம் போல் ஒளிவிளங்கி, குன்றெனப் புகழும் சேர்த்து
ஞாலத்தில் ஒருவன் என்ற நற்பெயர் விளங்க! வானின
நிலம் போல் நிலைக்க, இந்த நெஞ்சினில் இறைவன் நிற்க!!!"

"இசையிலே புதுமை கண்டீர், கடுமையாய் உழைத்துழைத்து
நல்லதோர் விளைவும் கண்டீர், தமிழறிஞர்கள் மதிப்பும் கண்டீர்!
செல்வழி நேர்மையாகச் செயல்திறம் சீர்மையாக
வல்லவராக வாழும்! நண்பரே வாழ்க, வாழ்க!!!"

**எஸ். ஜேசுறட்ணம்**

## 17

## சின்னத்தம்பி கெந்தீஸ்வரன்

**மேடைப் பாடகர், ஜெர்மனி**

### காதலர்கள் கடிதத்தில் எழுதிய இதயம் குளிர்ந்த பாடல்

அன்று மக்கள் வாய்களில் முணுமுணுத்த 'உனக்குத் தெரியுமா' என்ற மெல்லிசைப்பாடல் மூலம் அனைவராலும் பேசப்பட்ட திரு எம்.பி. பரமேஷ் அவர்களைப் பற்றிய தகவலோடு உங்களுடன்.

கலைஞர்களை அவர்கள் வாழும் காலத்தில் அவர்களுக்கு மதிப்பளித்து பாராட்டுவதால், அவர்கள் கலைப்பணியில் மன நிறைவுடன் பணிபுரிய உந்துகோலாக அமையும். அந்த வகையில் தற்போது அறுபதாவது அகவையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இசைச் சக்கரவர்த்தி பரமேஷ் அண்ணா அவர்களின் சாதனைகளையும், வியத்தகு செயல்திறனையும், நான் அறிந்து கண்டவற்றை உங்கள் முன் கொண்டு வருகின்றேன்.

ஈழத்தில் முதன் முதலில் மெல்லிசைத்தட்டு வெளியிட்டவரும், அதற்குரிய பாடல்வரிகளை எழுதி இசையமைத்து பாடியவர் பரமேஷ் அவர்களே! அப்பாடல் 'உனக்குத் தெரியுமா' இப்பாடலை நானும் பல மேடைகளில் பாடியுள்ளேன்.

அன்று பல இசைக்குழுவினர் ஒருவரை ஒருவர். மிஞ்சும் வண்ணம் இசை வழங்கிய காலத்தில் பரமேஷ் கோணேஷ் இசைக்குழுவினரும் இசை வழங்கினார்கள். அப்போது கிளிநொச்சி கந்தசாமி கோவிலின் ஐந்தாம் திருவிழாவில் 'சித்திரை மாதம் பௌர்ணமி நேரம்' எனும் சினிமாப் பாடலை பரமேஷ் கோணேஷ் குழுவில் ஒருவர் பாடினார். அதைக் கேட்டு வியந்து விட்டேன். இசைத்தட்டை ஒத்தது போலவே பின்னணி இசை. இடையிசை

இரண்டும் அமைந்திருந்தது. அதற்காக பார்வையாளர்கள் இடமிருந்து வந்த கைதட்டல்களை அளவிட முடியாது. மற்றைய இசைக் குழுவினருக்கு மாறாக திறம்பட இசை வழங்கியதே அதற்குக் காரணம்.

அன்று கீழ் இருந்து கைதட்டியவன் புலம்பெயர்ந்து ஜெர்மனி வந்து கடந்த 14 வருடமாக மாபெரும் கலைஞர் பரமேஷ் அவர்களுடன் பழகும் வாய்ப்பு கிட்டியது. அதன் பயனாக ஓரிரு நிகழ்ச்சிகளில் சேர்ந்து பாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த நேரத்தில் என்னைப் பாராட்ட பரமேஷ் அண்ணரும் அவர் மனைவியும் தவறவில்லை. அவரது மனைவியோ சங்கீதப்பரம்பரை, அவரோ இசையரசன். இவர்களது இசை வாரிசுகளில் முதல் மகளான பிரபாலினி பிரபாகரன் சிறந்த பாடகர் மட்டுமல்ல. இசைக்கருவிகளையும் மீட்டத் தெரிந்தவர். அவரது கணவர் பிரபாகரன் சிறந்த வாத்தியக் கலைஞர். பரமேஷ் அவர்களது மகன் கஜனேஸ் (Key Bord) கரத்தட்டுக் கலைஞர் இளைய மகள் பிரியந்தினியும் சிறந்த பாடகி. குடும்பத்தில் அனைவருமே இசைக்கலைஞர்கள்.

இவர் தேசப்பற்றுப் பாடல்களை 1986-87ல் ஜெர்மனியில் பல நகரங்களில் புலிகளின் புரட்சிப் புயலிசையாக முழங்கினார். அதன் பிற்பாடு 1995ல் சங்கீத சாம்ராஜ்யம் என்ற ஒலிப்பேழையினை வெளியிட்டு புலம் யெபர்ந்து இங்கு வாழும் இளங் கலைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தார். அத்தோடு நில்லாது தன் பிள்ளைகளுடன் குடும்பமாக பல இசை நிகழ்ச்சிகளைச் செய்து வருகின்றார். அவ்வகையில் ஒரு கலைஞனைப் பாராட்டும் வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு நான் பெரும் மகிழ்வடைகின்றேன்.

**கானம் பாடி வரும் வானம் பாடியும் இசையாலே**
**அதன் இசையாலே – தன்**
**ஜோடிதனைத் தேடும் இசையாலே அதன் இசையாலே**
**உருவமில்லாது ஓசையினால் உள்ளங்களை**
**கவர்ந்து இழுப்பது இசைக்கலை ஒன்றுதான்.**

கலைகளில் ஈடுபாடுள்ள,
**சின்னத்தம்பி கெந்தீஸ்வரன்**

# 18



## வண்ணைதெய்வம்

கலைஞர், எழுத்தாளர்
ஃபிரான்ஸ்

### சிறப்புப் பார்வை

அன்று 68களில் நான் இசைத் தென்றல் மேடைகளில் கண்டு கேட்டு ரஸித்த இவரின் அற்புதமான காதற் குரலிசைப் பாடல்களை இன்று இவரைக் கண்டு கதைத்து மதித்து ரஸிக்கிறேன் பாராட்டுகிறேன் வாழ்த்துகிறேன்.

கவிஞர், இ.சையமைப்பாளர், பாடகர்கள், இசைத் தட்டு வெளியிட்டாளர்கள், இசை நிகழ்ச்சியாளர்கள் இருக்கின்றார்கள். ஆனால் இவை அனைத்தையும் தன் வசம் கொண்டு பரமேஷ் கோணேஷ் புரொடக்ஷன்ஸ் என்ற ஸ்தாபனத்தை 68களில் திருக்கோணமலையில் ஆரம்பித்து இசைத் தென்றல்க் கலைஞர்களைக் கட்டியெழுப்பி கண்ணியத்துடன் தானும் தன் தம்பி கோணேஷ்சுடனும் மெல்லிசை மேடை பல கண்டு மேடைப் பாடல்களை 68களின் பின் இசைத்தட்டுகளாக வெளியிட்ட தனிச்சிறப்பு இவரிற்குண்டு. இலங்கைப் பாடல்களே இல்லாத,

முக்கியமாக இசைத்தட்டில் ஈழத்துப் பாடல்கள் இல்லாத அக்காலத்தில் முதன் முதலாக இலங்கைத் தமிழிசைத் தட்டு வெளியிட்ட பெருமை இவருக்குண்டு.

சின்ன சின்னச் சொற்களால் சிந்தை கவர இவரெழுதும் பாடல்கள் கனி, வரிக்கு வரி வனிதையரும் வாலிபரும் வயதானவர்களும் ரஸித்துப் பாராட்டிய இவரின் முதற் பாடல் இலங்கையின் முதலாவது இசைத் தட்டுத் தமிழ்ப் பாடல் உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது'' இன்றும் மனதை விட்டகலாதது.

34 வருடங்களின் பின்பும் கேட்கச் சலிக்காது இனிக்குதென்றால் இவரல்லவோ ஈழத்து மெல்லிசைக்கு மகிமையூட்டிவர். ஈழத்து இளைஞர்களே எழுதுங்கள் பாடுங்கள் இசைகோருங்கள். இந்தியக்கலைஞர்களும் கேட்க இலங்கை வானொலியில் ஒலிக்க விடுங்கள்.'' என்று உற்சாகம் நம்பிக்கையூட்டியவர் பரமேஷ்.

இந்தியப் பாடகர்கள் தமது மேடைகளிற் தமது குரலில் ஆசையுடன் ஆர்வத்துடன் பாடிய ஈழத்தவர் பாடல் இந்த உனக்குத் தெரியுமா தான். பாடலின் கேள்வி போலவே இப்பாடல் மூலம் தன்னை எல்லோர்க்கும் தெரியப்படுத்தி விட்டார் எம்.பி. பரமேஷ் டாக்டர் யேசுதாஸ் அவர்களிற்கு நீயும் பொம்மை நானும் பொம்மை, பாலசுப்பிரமணியம் அவர்களிற்கு ஆயிரம் நிலவே வா, ஆரம்பம் போல எங்கள் எம்.பி. பரமேஷ்க்கு உனக்குத் தெரியுமா மணிமுத்திரை. ஆரம்ப வெற்றிகள் தான் அவர்களை அகலப் பரந்து விரிந்து வளரச் செய்கின்றன என்ற உண்மை உதாரணத்திற்காகவே இதைக் குறிப்பிட்டேன்.

பரீஸ் மாநகரிற்கு இந்தியத்திரைப் பின்னணிப் பாடகர் வந்த பொழுது அறிவிப்பாளர் திரு. S.K. ராஜன் ஏன் சார் அருள் மொழியவர்களே! நாமெல்லாம் இந்தியத்தமிழ் பாடல்களைப் பாடுகின்றோம். எமது இலங்கைப் பாடலை நீங்கள் பாடினால் என்ன? என்ற கேள்விக்கு அருள்மொழியவர்கள் உடனடியாக ஏனில்லை என்று எம்.பி. பரமேஷ் பாடிய உனக்குத் தெரியுமா பாடலை மிக ஆசை ஆர்வத்துடன் பாடினார். அன்று நான் கொண்ட மகிழ்ச்சி அளப்பரியது.

திரைகளில் நாம் கண்டுள்ளோம் பாடலைக் கேட்டுக் காதலிக்கும் கதையம்சங்களை ஆனால் இவரின் நிஜவாழ்க்கையில் இப்பாடலைக் கேட்டுக் காதலித்துக் கைபிடித்துக் காலமெல்லாம் கணக்கிடலங்காத இசைத் தென்றலில் இணைந்து பாடிச் சென்றாள் ஒருத்தியென்றால் இக்கலைஞன் பாடலிற்கு எத்தனை சக்தி உண்டு என்று எண்ணிப் பாராட்டுகின்றேன்.

இலங்கையில் இசைத் தென்றல் விளம்பரங்களென்ன இடைவிடாது இரு வாரமொருமுறை இசை நிகழ்ச்சிகளென்ன அபாரம்! அபாரம்! புதிய சினிமாப்படம் திரைக்கு வருவது போன்ற பரபரப்பைத் தன் இசைத் தென்றல் நிகழ்ச்சிக்கு விளம்பரத்திறமை மூலம் வெளிப்படுத்தினார். பேருந்துகளில் ஏறினால் பாடசாலை மாணவ மாணவிகள் முணுமுணுப்பது பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் பேச்சுத்தான். காரணம் பேருந்துகளில் ஒரு பக்கம் மில்க் வைற் சவர்கார விளம்பரத்திற்காகப் பளிச்சிடும் திருக்குறள். மறுபக்கம் முழுவதும் பரமேஷ் இசைத் தென்றல் விளம்பரம். வானொலியைத் திறந்தால் தினமும் இசைத்தென்றல் விளம்பரம்தான்.

இப்படியான ஒரு துணிச்சலான விளம்பரத்தைச் செய்து முன்கூட்டிளேய அனுமதிச் சீட்டுகளை விற்பனை செய்யாது மண்டப வாசலிலேயே மக்கள் திரண்டு வந்து அனுமதிச் சீட்டுக்கள் பெற்றது மட்டுமல்ல. ஆசனங்கள் போதாது ஒரு இரவில் ஒரு மேடையில் 2 அல்லது 3 நிகழ்ச்சிகள் நடத்திய இசை நிகழ்ச்சி வெற்றி நிர்வாகஸ்தர் எம்.பி. பரமேஷ் தானே கலைஞனாக இருந்து தானே சகலவற்றையும் செய்துவிட்டு இசைத் தென்றலில் அவர் கலைஞனாக மலர்ந்திருக்கும் திறமையே அவரைச் செயல் வீரராக்கியது.

அவரின் இசைத் தென்றலின் முதல் வெற்றி, குறிப்பிட்ட நேரம் மணியடித்து வானொலியில் கூறுவது போல் உங்கள் நேரங்களைப் பாருங்கள் மாலை 7 மணி என்று முதல் நிகழ்ச்சி ஆரம்பிக்கும். இன்று வெளிநாட்டிற் கூட எந்த நிகழ்ச்சியும் நேரத்திற்கு ஆரம்பிப்பதில்லை, சகலவசதிகள் இருந்தும்,

ஆரம்பிப்பது மட்டுமல்ல, நிகழ்ச்சி முடிவுறும் நேரமும் சரியாக முதல் நிகழ்ச்சி திரைப்படம் போல் 9.30க்கு முடிந்து விடும்.

ஆரம்பிப்பதை விடக் குறிப்பிட்ட நேரத்தில் நிறைவு செய்வது மிகவும் கஷ்டமான வேலை. இதை எப்படிச் செய்தாரோ தெரியாது. அதற்கும் என் பாராட்டு. இசைத் தென்றல் மேடையில் பாடல்களிற்கிடையில் அந்த ஊர் வியாபாரஸ்தாபன விளம்பரங்களை ஒலிபரப்பி அப்பணத்தின் மூலம் ரூபா 2, ரூபா 5, என்று மிகக் குறைந்த கட்டண அநுமதிச் சீட்டுக்களை அமைத்து வெற்றி கண்டவர் எங்கள் எம்.பி. பரமேஷ். இசைத்தென்றல் துண்டுப் பிரசுரங்களில் விரும்பிய பாடலைக் கேட்க எழுதி அனுப்புங்கள் என்று ரஸிகர்கள் கேட்ட பாடல்களை மேடையில் வழங்கியவர்.

குறிப்பிட்ட நேரம் முதலாவது வெற்றி. இரண்டாவது வெற்றி பரமேஷ் கோணேஷ் இசைத் தென்றலிற்தான். முதன் முதலாகச் சினிமாப் பாடல்களிற்குரிய அதே இடையிசை வாசிக்க ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன் சகல இசைக் குழுக்களும் தாம் விரும்பிய இடையிசையை வாசித்தனர். இது யாவரிற்கும் தெரியும்.

1972களில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கலைமாமேதை நாடகத்தந்தை நவாலியூர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் ஈழத்து மெல்லிசை மன்னன்'' என்று கௌரவித்ததிற் கமைய இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன். அன்று பரமேஷ் கோணேஷ் சகோதரர்கள், உதவி இசையினர் எஸ்.இ. மகேஷ் மூவருக்கும் கலையரசு வழங்கிய கௌரவத்துடன் இன்று பரமேஷ் தனித்தியங்கினாலும் தங்கத் தமிழிசை மகள், மனைவி மாலினியுடனும் மூத்த மகள் பிரபாலினியுடனும் 1995களில் வெளியிட்ட சங்கீத சாம்ராஜ்ஜியம் இசைப் பேழை இவரின் வாரிசுகளின் தொடர் றிதம்ஸ் இசைத் தென்றலிற்கு வழிகாட்டும்.

தனது அறுபதாவது வயதில் தன் ஆசை இசைக் குழந்தைகளுடன் இசைத்துக் கொண்டிருக்கும் இவர் சிறப்பினைச் சிந்தனையிற் கொள்ள வேண்டியவர்கள் வளர்கலை இசையினர். வாழ்க பரமேஷ், வளமுடன் வருடம் பல! பல! சிந்தித்துச் சிறப்பெழுதி வாழ்த்தினேன்!

**வண்ணைத் தெய்வம்**

# 19

## புலவன் ஆலடி நா.சி. கமலநாதன்

ஜெர்மனி

இனிய கவிதை, இன்னிசை, இனிய குரல் மூன்றும் முக்கனிச் சுவைபோல் தன்னுள் கலந்த ஈழத்து மக்கள் கலைஞன் எங்கிருந்தோ ஒரு தொலைபேசி அழைப்பு! நான் பரமேஷ் பேசுகிறேன். உங்களை யாரென்று தெரியவில்லையே! ''பரமேஷ் கோணேஷ்'' எம்.பி. பரமேஷ்

ஓ! என் இனிய நண்பன். ஏறத்தாழ முப்பதாண்டுகளின் பின் அவரது குரலைக் கேட்கின்றேன். இன்று அதே இன்குரல். அவர் பேசுகின்றார். ஆனால், நான் எனக்குள்ளே, ''உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது'' இந்த வரிகளை மீட்டிக் கொள்கின்றேன். என் இளமைக் காலத்தை மீட்டுப் பார்க்கின்றேன் அந்த அறுபதுகளிலேயே தனித்தமிழ், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற உணர்விற்குள் நான் குமுறிக் கொண்டிருந்த நாட்கள் அவை. தமிழகத்துக் கலைஞர்களும் திரைப்படக்காரரும் ஈழத்தில் நல்ல சந்தை நடத்திக் கொண்டிருந்த காலம். இசையா? மெல்லிசையா? ஏதுவானாலும் தமிழகத்தார் தான் வாரிசுகள். என்றொரு நிலை இருந்தது அன்று.

இந்த நிலை சில ஈழத்தவர்களைச் சமகாலவேளையில் உசுப்பியிருக்க வேண்டும். அதன் பயனாக கலைத்துறையில் பலர் துணிந்து இறங்கினார்கள். அந்த முயல்வு ஒரு தற்கொலைச் செயலைப் போலவே முடிந்தது. ''ரக்சி டிரைவர்,'' ''குத்து விளக்கு'' இப்படிச் சில திரைப்படங்கள் வெளியாகி, என்போன்றோரை தலைகுனிய வைத்தது. இசை, நடிப்பு, இயக்கம் எதுவுமே எடுபடவில்லை. இந்தத் திரைப்பட முயல்வு ஈழத்துக் கலைத்துறைக்கு பேரிடர் என்றே கருதுகின்றேன். அதிலிருந்து ஈழத்தில் கலைத்துறை மீது எனக்கு ஒரு வெறுப்பு இருந்து வந்தது. ஏம்மால் இயலாது என்றல்லவா இவர்கள் செய்து காட்டிவிட்டார்கள்.

கலைத்துறையின் குடிமுதலான பழந்தமிழ்க் கூத்து, வடமோடி தென்மோடி என, அதனுடைய மெய்மை குன்றா நிலையில் ஈழத்தில் தான், மிகச் சிறப்பாக விளங்கிக் கொண்டிருந்தது. இப்பழந்தமிழ்க் கூத்து தமிழகத்தில் உயர்ந்து விளங்கவில்லை. அத்தகைய உயர்நிலையில் வாழ்ந்த ஈழம், புத்துலக இசைக்கலைகள் எனப்படும் முயல்வுகளில் ஏன் முன்னேறவில்லை. பின்புல வாய்ப்புகள் குறைவு என்றார்கள். ஆனால், அது ஏற்பதற்கு இல்லை.

அந்நாட்களில் நன்கு அறியப்பட்டிருந்த கவிஞனான நான், 68ல் கொழும்பு சரசுவதி மண்டபத்தில் இடம்பெற்ற மகாகவியினுடைய குறும்பா கவிதைத் தொகுப்பு வெளியீட்டிற்குச் சென்றிருந்தவேளை, பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் இசைக்குழவினது, தோற்றம் செயல்பாடுகள் பற்றிச் செவியுற்றேன் ஆனால், ஈழத்துக் கலைமுயல்வுகளின் மீது இனந்தெரியாத வெறுப்புக் கொண்டிருந்த நான் அதைப் பெரிதுப்படுத்திக் கொள்ளவில்லை. ''ஆரோ சின்னப் பெடியளின்ரை முசுப்பாத்தி'' அப்படியொரு மனநிலை எனக்கு.

1974ல் ஆசிரியப் பணியில் இடமாற்றலாகி திஇந்துக் கல்லூரியில் பணி ஏற்றிருந்த வேளையில் ''பரமேஷ் கோணேஷ்'' பற்றிப் பள்ளி நண்பர்கள் பலரும் புகழ்ந்து பேசினார்கள். ஒருவர் அவர்களுடைய கன்னி வெளியீடான ஒலியிழை நாடாவொன்னையும் தந்தார்.

''உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது'' இந்தப் பாடல். பாடலின் இசைநயம், தொனியில் விரவிக் கிடந்த குரல்வளம்: மெலிவு வலிவு ஏற்ற இறக்கங்கள்; உள்ளத்தைக் கவரும் பாங்கு; குயிலுவங்களுடன் கலந்த இசைவு; அது பரமேசின் முதற்பாடலா? ஓ! ஒரு அருமையான என் நாட்டுக் கலைஞனை நான் கண்டு கொள்ளாமல் .இருந்துவிட்டேனே. அன்றிலிருந்து பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் நிகழ்ச்சிகளில் கருத்தூன்றினேன். இதன் பயனாக எழுபத்து நான்கிலேயே நாமிருவரும் நண்பர்களானோம். மிக நெருங்கிய நண்பர்களானோம். நாங்கள் திருமலை வீதிகளில் உலவிய போதெல்லாம், பரமேஷ் மெல்லிசை, பாடல், இசை, இசையமைப்பு இவைபற்றியே பேசுவார்.

பரமேஸ் என்கிற இந்த தன்னிகரில்லாக் மெல்லிசைக் கலைஞனைப் பற்றிச் சொல்வதற்கு, எனக்கு இசைப்புலமை இல்லை. எனினும், நற்றமிழ்ப் புலவன், தூய்தமிழ் போராளி, என்கிற வகையில் நான் அவரிடத்துக் கண்ட விந்தைகளைச் சொல்கின்றேன்.

தமிழகத்து மெல்லிசைப் பாடல்கள் இலகுவில் மனங்களைக் கவர்வதற்கு வாய்ப்பாக இருந்தது திரைப்படம். திரைப்படத்தில் பாடப்படும் பாடலுக்கான காட்சிகளை மக்கள் பார்க்கின்றபோது, பாடலில் தோன்றும் சுவைகளை, உணர்வுகளை நடிகர்களது மெய்ப்பாட்டின் மூலமாக உணர்ந்து, அவ்வுணர்வூடாகப் பாடல்களைச் சுவைக்கின்றார்கள். இதனால், அப்பாடல்கள் அவர்களது மனதை இலகுவாகக் கவர்கின்றன. இதில் பாடலா நடிப்பா ஆளுமையைக் கொண்டிருந்தது என்பதை யாரும் எண்ணிப் பார்க்கவில்லை.

ஆனால், அந்த வாய்ப்பு பரமேசிற்கு இல்லை. அவர் தனது தொனியின் மூலமாக, இசையின் மூலமாக, தன்னுடைய இசையமைப்பின் மூலமாகவே, பாடலில் விரவியுள்ள சுவைகளை, உணர்வுகளை மக்கள் மனதில் ஊன்றுதல் வேண்டும். இந்த ஊன்றலுக்கு இசையாளுமையுடன் உணர்வாளுமையும் வேண்டும். அந்த அரிய ஆற்றலைக் கொண்டிருந்தார் பரமேஷ். முக்கனிச் சுவைபோல் பாடல், இசை, இன்குரல் மூன்று ஆளுமையைக் கொண்டிருந்தன பரமேஷிடம்.

எனவே, சுவைஞர்களின் மனதைக் கவ்வியிழுத்துத் தன் பாடலுக்குள் அமிழ்த்தினார் பரமேஷ். என்னுடைய பாடல்கள் என் தாய்நாட்டிற்குப் பெருமை தேடித் தரவேண்டும். ஈழத்துக் கலைஞர்கள் இறக்குமதிக் கலைஞர்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல என நிறுவவேண்டும். புதிது புதிதாக கலைஞர்களை உருவாக்க வேண்டும் என எண்ணினார். தானே பாடல்களை எழுதினார். தானே இசையமைத்தார்; தானே பாடினார். மக்கள் மனங்களைக் கவர்ந்தார்.

அவரது மெல்லிசையின் ஆற்றல் தானே ஒரு இசை மேதையை அவருக்கு வாழ்க்கைத் துணையாகக் கொண்டு வந்தது.

இதைவிடவா வேறொரு சான்று வேண்டும்? இசைக்கலையில் தேர்ந்த அவரது வாழ்க்கைத் துணைவியின் இணைவில் அவரது இசைத்தென்றல் ஈழமக்களை இன்பிலாழ்த்தி ஈழமெங்கணும் வீசிற்று. பல சங்கீத சாம்ராச்சியங்களை வெற்றி கொண்டு மெல்லிசை மன்னனாய் வலம் வந்தார். அவரை நினைவு கூருவதிலும், அவரைப் பற்றிப் பேசுவதிலும் இறும்பூதெய்துகின்றேன். பரமேஷின் இணைவில் இடையறாது வீசிய இசைத்தென்றல், மாலினியின் பிரிவினால் சிறிது தளர்வடைந்த போதும், அவரின் நினைவாகவே தனது பிள்ளைகளுடன் இணைந்து இன்றும் அவர் நடத்தி வருவது பெருந்தவம்.

பரமேஷ் என்னூரவர் அவரது துணைவி மாலினி என் துணைவியின் அயலவர் என் துணைவியின் அயலவர் என் துணைவியின் இனிய தோழி, அதனால் அவர் கற்கும் காலத்திலேயே மாலினியை நான் அறிவேன். இதை நான் நினைவு கூர்வதில் புளகாங்கிக்கிறேன். மாலினி உள்ளம் உடல் இண்டுமே அழகானவர். இசைப்பித்துக் கொண்டலைந்த பரமேசிற்கு முற்பயன் காரணமாகவே அவர் வாய்த்தார். இன்றவர் எம்மிடையே இல்லையாயினும், இசைத்தென்றலில் தன் தாயின் இடத்தை அவரது மகளும், இசைவாரிசுமான பிரபாலினி நிரப்பி வருவது, பரமேசினுடைய நண்பர்களுக்குத் தென்பூட்டுவதாகும்.

எம்.பி. பரமேஷ் ஈழத்து மெல்லிசைக் கலையின் முன்னோடி மட்டுமல்ல, முதுகெலும்பாய் நின்று அதை நிமிர்த்திய வல்லாளன். ஈழத்தவன் மெல்லிசையில் சளைத்தவன் அல்ல என்று களமாடி வென்ற கலைஞன். அவன் தன் இல்லறத்தை இசை நோக்கியே ஆற்றினான். அவனது குடும்பமே இசையோடு தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. இசை சொல்வதில் பேருவகையடைகின்றேன்.

பரமேஷும் அவரது இசைக்குடும்பமும் இசையுள்ளவரை நின்று நிலைத்துப் புகழ்பரப்பத் தமிழ்தாயை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**நா.சி. கமலநாதன்**

20

## கவிஞர் சிவலிங்கம் சிவபாலன்
ஃபிரான்ஸ்

இசை அரசனுக்கு அகவை அறுபதா...?.

கருவின் குழந்தைக்கு தாயின்
இதயத் துடிப்பும் ஒரு சங்கீதம்
தவழும் மழலைக்கு தாயின்
தாலாட்டும் ஒரு சங்கீதம்
வண்டு துளைத்த மூங்கில் தடியில்
காற்றுப் புகுவதும் சங்கீதம்
தென்றல் விலக்கி தென்னந்தளிரின்
அசையும் ஓசையும் சங்கீதம்
நரம்பை வலாத்து அதிர்வை உதிர்த்து
அடையும் ஓசையும் சங்கீதம்
ஓடைத் தண்ணீர் உரசும் கல்லில்
மீட்டும் நாதமும் சங்கீதம்
கவலை போக்கி னங்கிட இதயம்
நாடும் ஊடகம் சங்கீதம்
காட்டை விலக்கி கடுகதி விரைவதும்
காதுக்கெல்லாம் சங்கீதம்

இசை ஒரு இணையில்லாத ஒளடதம் என்பது நம் முன்னோர் வாக்கு. அதனடிப்படையில் இகமதை இசையது நிறைத்திடும் போது, உருகிடும் மனத்துள் அன்பு குவியும் என்பதும் நம் முன்னோர் வாக்கு.

சூரியக்கதிர் கண்டு பயிர்கள் வளர்வது போல், இசையின் ஈர்ப்பில் உள்ளங்களும் பயணிக்கின்றன. மனிதனின் தேகாரோக்கியத்துக்கு பிராணவாயு எப்படி முக்கியமானதோ,

மனிதனின் மன அமைதிக்கும் இசையென்பது அதிக முக்கியத்துவம் தருகிறது.

மனிதராகட்டும், கொடிய விலங்குகளாகட்டும், பறவைகளாகட்டும் இசைக்கு வசமானவையான படைப்புகளாகவே உருவாக்கம் பெற்றிருக்கின்றன. அசைவின்றி விசையில்லை என்பது போலவே, இசையின்றி அகிலமில்லை.

ஆயிரத்து தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு காலப்பகுதியை நாம்மீண்டுமொருமுறை திரும்பிப் பார்த்தால், அதுவொரு வசந்தகாலப் பகுதியாகவே எழுதத் தோன்றுகிறது.

அதுவும் அன்றுஞ்சரி இன்றுஞ்சரி ஆவணியாகிவிட்டால் பாடசாலைகளுக்கு எல்லாம் மூடுவிழா, பாடப்புத்தகங்களுக்கு எல்லாம் மூடுவிழா, மாறி மாறி ஒவ்வொரு கோவில்களிலும் கொடியேற்றப்பட்டுவிடும். விடிய விடிய திருவிழாக்கள், தெருக்களிலும் பெருவிழாக்கள் ஒட்டுமொத்தக் கலைஞர்களுக்கும் அப்போதுதான் பலப்பரிட்சை விழாக்கள். தங்கள் தங்கள் திறமைகளையெல்லாம் மனதுள் புதைத்து வைத்த உள்ளக் கிடக்கைகளை எல்லாம் ஒரு சேராக வெளிப்படுத்தவென காலம் அவர்களுக்கு அமைத்துத்தரும் ஒரு காத்திரமான அரங்க உலா இந்தப் பொன்மாலைப் பொழுதான ஆவணியரங்க உலாவிலே வில்லிசை, புல்லாங்குழலாசை, வீணையிசை, மேள நாதஸ்வர இசை, சதுரிசை, மெல்லிசை, வயலினிசை, தமிழிசை, கர்நாடக சங்கீத இசை என்று ஆரம்பித்து கூத்திசை, துள்ளிசை (பொப்பிசை) என்று நாம் பார்த்துக் கேட்டு அனுபவித்து அகமகிழ்ந்திருக்கக் கூடிய அத்தனை முத்தமிழ் விழுமியங்களையும் உள்ளடக்கக்கூடியதான தன்மைகளையும் எமக்களித்து எம்மையெல்லாம் மகிழ்வித்த எங்கள் கலைஞர்களையும், அந்தக்காலங்களையும் ஒரு கணமேனும் மறக்க முடியவில்லை.

ஒவ்வொரு விரலசைவுக்கும் ஒவ்வொரு வகை தந்து, இசை தன்னைப் பணியப் பண்காற்றில் மிதந்து வந்து செவிவழி ஊட யாவரது மனங்களையும் நிறையப்பண்ணி, அவற்றை இற்றைவரை நினைவு கூர்ந்துகொள்ளப் பணித்திருக்கிறதென்றால் இசையையும் இசையை மீட்டித்தந்த அத்தனை கலைஞர்களையும் மறக்கத்தான் கூடுமா...?

பாடசாலை தம் காலங்களை எமக்கு விடுதலையாகத் தரும்போது, என்னகத்து இராசதானி உரும்பிராய் தன்னகத்து விளையாட்டுத் திடல்களை எமக்கு முதுசமாகத் தந்திருக்கும்.

அதிலொன்று அதிபர் பேராயிரவர் அவர்களது வீட்டின் முன்றலால் பரந்து விரிந்திருக்கும் பசுமையான வலைப் பந்தாட்டத்திடல்.

அங்கு ஒரு பந்து எல்லோராலும் அடிவாங்கும்.

அங்கு விளையாட வருபவர்களைக் காட்டிலும் நண்பர்களுடன் கூடிக் குதூகலிக்கவரும் என்னவர்கள் ஏராளம். அந்த அரங்கத்துக்கு எதிரே பரமேஷ் கோணேஷ் என்ற முகவரியை தன் கிறீடத்தில் பொருத்தி பேருந்து ஒன்று கிழக்கிலிருந்து வந்திருக்கும்.

அது அந்த இடத்தைவிட்டு என்றைக்குமே இடம்மாறி நின்றதில்லை. எம்.பி. பரமேஷ் என்ற அந்த இசை இளவரசன் எம்மை விலத்திப் போவார். எம்மை விலத்தி வருவார். என்றைக்குமே எம்முடன் எதுவும் பேசியதில்லை. அவருக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது... இல்லை எமக்கென்ன கொம்பா முளைக்கவில்லை.

அவர் அமைதியானவரா இல்லை அதிமிடுக்கானவரா, அறிய நாம் முற்படவில்லை. ஆனால்... ஆனால் அவரது இசைக்கு நாம் அடங்கியவர்கள்.

அன்றைக்குஞ்சரி, இன்றைக்குஞ்சரி எம்.பி. பரமேஷ் என்றாலே இலங்கையின் முன்னணிப் பாடகர், இசைக்குழுவின் இயக்குனர் என்ற பதங்களையும் தாண்டி, தத்தம் எண்ணக்கோலங்களை, தத்தம் மன பரப்பிலேயே விரைந்திசைக்க வழிவகை செய்தவர் என்ற பெருமைக்கும் உரித்தானவர்.

அவர்களது பேருந்தின் வருகையைக் கண்டதுமே, அன்றைய மாலைப்பொழுதில், பரமேஷ், கோணேஷ் அவர்களுடைய இசை நிகழ்வு யாழ் நகரில் நிகழப்போகிறது என்பது முடிவாகிவிடும். அப்போதே நிகழப்போகும் அரங்கத்தின் முகவரியும் தெரிந்து விடும்.

விளையாட்டுத் திடலின் கூட்டமும் கலையத் தொடங்கிவிடும். கலைந்து வென்ற அத்தனை முகங்களும் இசை நிகழ்வின் திசைநோக்கி நகரத் தொடங்கும். விளையாட்டுத் திடலின் அதே குனகலம், இசை மண்டபத்தின் வழலால் மீண்டும் குனகலிக்கும்.

துள்ளிசையின் பிதாமகரின் குழு மீண்டும் எங்களைக் கண நேரத்தில் சந்திக்கும். அதே மிடுக்கு அதே கர்வம்.

யாழ் திறந்த வெளியரங்கு. வீரசாங்கம் மண்டபம், ''றிமர்'' மண்டபம், யாழ் மாநகரசபை மண்டபம் என்ற முகவராகள் எங்கள் பாடசாலை வகுப்பறைகளைக் காட்டிலும் எங்களுக்கு நன்கு பராட்சயமானவை.

அப்போது மாணவராக இருந்த எமக்கு பாடசாலைகளில் எப்படி முன்வராசை கிடையாதோ, அதுபோலவே பரமேஸ் கோணேஸ் அவர்களுடைய நிகழ்வுக்கும் எங்களுக்கு முன்வராசை கிடைப்பதில்லை. படித்தவருக்கும் பணக்காரருக்குந்தானே எப்போதும் முன்னிருக்கை திரையரங்கைத் தவிர.

இருந்தும் அவர்கள் பாடும் பாடல்கள் அத்தனையும் எங்களுக்கு அத்துப்படி. அவர்கள் ஆயிரம் பாடல்களைப் பாடினாலும், அன்றைய காலகட்டத்தில் மிகவும் முத்திரை பதித்த பாடலான

''உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைப்பது
எனக்குத் தெரியுமா நீ என்னை நினைப்பது''

என்ற பாடலுக்கான வேளை வந்ததுமே அரங்கம் அதிரும். பார்வையாளரான் விசில் சத்தமும், கை தட்டல் ஒலியும் அடங்கி முடிய சில நிமிடங்கள் தேவைப்படும்.

அவர் யாரை அழைத்தாரோ... இல்லை. அவரை யார் நினைத்தாரோ...? எல்லாமே வெளிச்சந்தான். மரத்தை வளைத்தார் மலரைப் பறித்தார். முகர்ந்து கழித்தார். பின்... மௌனங் கலைத்தார். இந்தப் பாடல் தான் இவருக்கு சுகராகமானதோ...?

"உனக்குத் தெரியுமா..." என்ற பாடலாலேயே எத்தனை பாடசாலை மாணவியரின் உதட்டில் சிரிப்பைக் கண்டனர்... கண்டோம். முறைத்த முகங்களிலெல்லாம் இழகாய சிரிப்பைத் தந்தது இப்பாடல்.

மாற்றான் தோட்டத்து மல்லிகையென்ன, முற்றத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று நிருபித்த பரமேஷ் அவர்களது இத்தகைய வெற்றியென்பது அவர் கண்ட கனவான் மீதி என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

காலத்தை பதியாத கலைஞனுமில்லை. கலைஞனைப் போற்றாத காலமுமில்லை" என்றவாறே. கலைஞன் என்பவனுக்கு என்றைக்குமே முதலிடந்தான்.

மீண்டும் எழுபதுகளின் தொடர்புகளில் அக்காலத்தை அவர் எங்களுக்குத் தர வேண்டும். அன்றைய வெள்ளத்தில் நாம் மீண்டும் மூழ்க வேண்டும். அதே கரகோசங்கள் எங்கள் காதுகளை நிறைக்க வேண்டும். கணனியில் உருளும் உலகான் எண்ணம். இன்னும் நிறைவாய்த் தரவேண்டும் புலம்பெயர் புவியின் ஒவ்வொரு நிலமும். புதிய பூபாளம் கேட்க வேண்டும். பொழியும் பனியின் துகள்கள் நாளும், துள்ளிசை கேட்டு உருக வேண்டும்.

அகவை தங்களுக்கு அறுபதென்ன... அதையுந்தாண்டி நூறையும் வென்று, நம் மக்களின் நெஞ்சப் பரப்பெங்கும். நீங்காத இடத்தைப் பெற்று நீங்கள் நீடுழி வாழ வேண்டும்.

உங்கள் நாவிலிருந்து உங்களை இயக்கி மகிழ்ந்தவள் துணை உங்களுக்கு எப்போதும் உண்டு என்ற வாழ்த்துக்களுடன்...

பொய்யாமொழியரின்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

என்ற கூற்றுக்கு இலக்கணமாக வாழ்கவென வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**சிவலிங்கம் சிவபாலன்**

## 21

## முகுந்தராஜா

**தாளவாத்திய கலைஞர், இசைத்தென்றல்**

**கனடா**

அன்புடையீர்,

நான் திருக்கோணமலை முகுந்தராஜா எழுதுகின்றேன். எம்.பி. பரமேஷ் என்ற இசைக் கலைஞனைப் பற்றி எப்படி எழுதுவதென்று எனக்கே தெரியவில்லை. இக்கட்டுரையை எப்படி ஆரம்பிப்பது என்று எனக்குத் தெரியவில்லை.

எனக்குத் தெரிந்ததை எழுதுகின்றேன். 1966 முதல் 70வரை இடைப்பட்ட காலத்தில் அதாவது எனது பாடசாலை நாட்களிலே நான் எனது நண்பன் மோகன் சிவானந்தன் ஜீவானந்தன் கங்காதரன் நாங்கள் யாவரும் பாடசாலை முடிவடைந்ததும் தினமும் பிற்பகல் 4 மணிமுதல் 6 மணிவரை எம்.பி. பரமேஷ் எம்.பி. கோணேஷ் இல்லத்திற்குச் சென்று 2 மணித்தியாலங்களும் அனைவருமிணைந்து இசைபயின்ற நாட்களை நான் மறக்கவில்லை. திருக்கோணமலையில் மாலை வேளைகளில் அவசியமற்ற ஊர் உலாத்தல் விடயங்களைத் தவிர்த்து எங்களை நல்ல இசைக்கலைஞர் ஆக்கியவர்கள் பரமேஷ் கோணேஷ் சகோதரர்கள்தான்.

இதற்கும் மேலாக எம்.பி. பரமேஷ் அவர்களிடமொரு சிறப்பிருந்தது. நாங்கள் 4 மணிக்குக் வராவிட்டால் எம் வீடு தேடி வந்திடுவார். கோவிக்க மாட்டார். அவரிற்குத் தெரியும் அவருக்கு 4 வயது குறைந்தவர்கள்தான் நாம் திருக்கோணமலை கெந்தகபூமி என்பது அறிவீர்கள். மாலை 4 மணிக்குப்பின்பு தான் வெளியில் மெல்லிய உடைகளை அணிந்து காற்று வாங்கக் கடற்கரைக்கு வருவார்கள். பாடசாலை மாணவிகள் பட்டாம் பூச்சிகள் போல் பரந்து வருவார்கள். நாம் எமது வீட்டில்

இல்லாவிட்டாற் கடைக்கரைக்கே எம்மைத் தேடி வந்து பிடித்துவிடுவார். பிற்பகல் 4 மணிக்கே எப்படியும் இசை ஒத்திகை ஆரம்பித்து விடுவார்.

இக்காலங்களை நான் மறக்க முடியாது. இசைக் கலைஞனாக மட்டுமல்ல என்னுடன் எந்த விடயத்திலும் இணைந்து கைகொடுத்து நின்றவர் எம்.பி. பரமேஷ் அண்ணன் இந்த இசைத்துறையால் அவர் பட்ட துன்பங்களை நான் வெளிநாடு வந்த பின்னரே அறிந்தேன்.

என்னைப் பொறுத்தவரையில் 1966 முதல் இன்றுவரை இசைக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்குத் தெரிந்த ஒருவரென்றால் என் அண்ணன் எம்.பி. பரமேஷ்தான். தான் விரும்பியவளே கைபிடித்துக் காலமெல்லாம் அவளுடன் இசைபாடி 2 ஆயிரத்தில் இவளையிழந்து தொடர்ந்து தன் இசைக் குழந்தைகளுடன் இசைத்து வரும் என் அன்புக்குரிய எம்.பி. பரமேஷ் அண்ணனை நான் அவரின் 60வது வயதிற் பாராட்டக் கொடுத்து வைக்க வேண்டும்.

பரமேஷ் கோணேஷ் இருவரும் எனது நண்பர்கள் இருந்தும் இசைத்தென்றல் இசைக்குழு விடயத்தில் எந்தவிடயமும் சரி பிழை நடந்தால் நானும் என் நண்பர்களும் பரமேஷ் அண்ணனுடனே பேசுவோம். அவ்வளவு தூரம் அன்புடன் பக்குவமாகப் பதில் கூறக் கூடியவர். எம்.பி. பரமேஷ் சாதி சமயம் தாழ்வு உயர்வு பார்க்க மாட்டார்.

அவர் தந்தையார் மரியாதைக்குரிய கல்லூரி வித்தியாதிகாரி மிகப்பெரிய மனதோடு பரமேஷ் கோணேஷ் அண்ணர்களைத் தன் பிள்ளைகளை இசைத் துறைக்கு அர்ப்பணித்த பெரிய மனதுடையவர். அந்த நல்லெண்ணம் இந்தியக் கலைஞர்களும் கௌரவிக்கும்படி மெல்லிசை மன்னர் விஸ்வநாதன் ராமமூர்த்தியின் கௌரவப் பெயரை ஈழத்து மெல்லிசை மன்னர் என்று நாடகத் தந்தை நவாலியூர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் பெற்றுத் திருக்கோணமலைக்குப் புகழ்சேர்த்தனர். அவர்கள் இசைத்தென்றற் கலைஞரில் நானுமொருவனென்று எண்ணும்போது நெஞ்சம் பூரிக்கின்றது.

ஈழத்து மெல்லிசை மன்னர் என்ற விருது அவர்களிற்கு மட்டுமல்ல அவர்களின் உதவியிசையமைப்பாளராகவும் பொருளாதாரத்தில் இசைத் தென்றலைக் கட்டி வளர்த்தவருமான எமது நண்பர் S.E. மகேஷ் அவர்களிற்கும் வழங்கப்பட்டது. அதையும் குறிப்பிடுவது என் கடமை.

கனடா நாடு வந்த அவர் தொழில்புரியும் ஸ்தாபனத்தில் விபத்திற் சிக்கி விரைந்து விட்டார். அவரின் இசைச் சேவைக்காக அவர் ஆத்மா நிச்சயம் ஆசி பெறும். பரமேஷ் அண்ணனின் தந்தையார் பிள்ளைபாட்டுக் கவிஞர் மா. பீதாம்பரன் போல் சிறந்த தமிழ் அறிவும் கவித்திறனும் கொண்டவர் எம்.பி. பரமேஷ். அண்மையில் அவரும் அவர் மனைவி மாலியும் இணைந்து ஜெர்மனியில் வெளியிட்ட சங்கீத சாம்ராஜ்ஜியம் என்ற C.D. யைக் கேட்டேன் அத்தனை பாடல்களும் முத்துக்கள்.

ஈழத்தில் பாடகர்களைச் சந்தித்துள்ளேன் கவிஞர்களைக் கேள்விப்பட்டுள்ளேன் ஆனால் கவிஞர் பாடகர் இசையமைப்பாளராகப் பிரபல்யமான ஒருவரென்றால் என் அன்புக்குரிய அண்ணன் எம்.பி. பரமேஷ் அவர் தனது ஒரு ஆக்கத்திற் குறிப்பிட்டள்ளார் பழையவற்றை மறவாது எமது இசைத் தென்றற் கலைஞர்களின் ஒற்றுமைதான் எம்மிசையை வளர்த்ததென்று. உண்மையை உண்மையாகச் சொல்லும் பேசும் அன்பானவர் அண்ணன் எம்.பி.பரமேஷ். நகைச்சுவை கலந்து அவர் பேசும் பாணியை இப்பொழுது அவர் தொலைபேசியில் என்னுடன் பேசும் போதும் காண்கிறேன்.

அண்ணன் என்று நான் எழுதுவது ஆச்சரியமாக இருக்கலாம். அதிலுள்ள உண்மை இதுதான். நானும் என் இசைத் தோழர்கள் மோகன் சிவானந்தன், கங்கா, பிரபா, ஜீவானந்தன், மகேஷ் பாடகிகள் எபிலிகிளேதர் தற்பொழுது கனடாவிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் K.R. கமலா (தற்பொழுது திருமதி கிருஷ்ணதாசன்) கமலாவின் சகோதரிகள் பமலா விமலா ஆகியோரும் பாடகர்கள் துரை துரைலிங்கம் K.S. பாலச்சந்திரன் M. பாக்கியராஜா, அறிவிப்பாளர் K.T. செல்வக்குமார், S.K. பஞ் ஆகியோரும் பரமேஷ் கோணேஷ் இல்லம் இசையில்லமாக மட்டுமல்ல எமதில்லமாகவே நினைத்து வாழ்ந்தவர்கள்

அவர்களின் தாயாரின் கையால் தாராளமாக உணவருந்தியவர்கள் அவர்களின் பாடசாலை காலக் காதற் கேளிகையிற் கௌரவமாகப் பங்கெடுத்தவர்கள். எமது கேளிக்கையிலும் நாம் கேட்காமலே சேர்ந்து சல்லாபித்தவர்கள்.

1966 முதல் 1971 வரை அதாவது நானும் நண்பர் மோகனும் தொழில் விடயமாகக் கப்பலிற் செல்லும் வரை 5 வருடங்களும் அந்த இசை வாழ்க்கை இனிமையானது. இடைக்காலத்தில் என்னுடன் எம்மிற் சிலர் பரமேஷ் கோணேஷ் அவர்களை விட்டு விலகிப் புதியதொரு பெயரிற் தனி இசைக்குழு அமைத்தாலும் அது எங்களுக்குள் பகைமையாக இருக்கவில்லை. பரமேஷ் அவர்கள் இசைத்தென்றல் நிகழ்ச்சித் திகதி தெரிவு செய்யும் பொழுது 8, 17, 31, 21, 13, ஆகிய திகதிகளைத் தவிர்த்திடுவார் அவர் எண்கணித சாஸ்திரத்தை மட்டும நம்புபவர்.

இந்த நம்பிக்கை போல் எம்.பி. கோணேஷ் அவர்கள் இசைத் தென்றற் பாதையில் 8வது வருடம் எம்.பி. பரமேஷ் அண்ணணிற்கு எட்டாமலே போய்விட்டார் இதை அவரே சொன்னார். இந்த எட்டு வருடங்களின் பின்பும் பரமேஷ் கோணேஷ் என்ற பெயருடனே தனது அன்பு மனைவி மாலியுடனும் பிள்ளைகளுடனும் தொடர்ந்து 6 வருடங்கள் இசைத் தென்றல் நடத்திய பெருமை எம்.பி. பரமேஷ் அவர்களுக்கு உண்டு அது அவரின் சிறப்பு.

அண்மையில் என்னுடன் பேசும் போது கூறினார் முகுந்தன் எனக்கு 13ம் பொருந்துவதில்லை என்பது உண்மை போல் என் கடைசி மகள் சிமோனதுர்காஷினியின் 13வது வயதில் என் குலவிளக்கு மாலினியை இசைத் தோழியை இழந்து விட்டேன் என்றார். எத்தனையோ சோகங்கள் துன்பங்கள் மத்தியில் தொடர்ந்து இசைக் கலைஞனாகவே வாழும் எம்.பி. பரமேஷ் தன் இசைக் குழந்தைகளுடன் அவர்கள் தம் றிதம்ஸ் இசைத் தென்றலால் இன்னும் பல பாடல்கள் தருவார் தர வேண்டும் என்று ஆசி கூறிவிடைபெறும். அன்று பரமேஷ் கோணேஷ் இசைத் தென்றற் கலைஞன் R. முகுந்தராஜா மனைவி மக்களுடன் வாழ்த்துகிறேன்.

109, Kelso Crestent, Maple - ONT, L6A 2K6, Canada

**முகுந்தராஜா**

"உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைப்பது" என்ற ஈழத்து மெல்லிசைப்பாடல், இந்தியக் கலைஞர்கள் பலரின் பாராட்டைப்பெற்றது. **குறிப்பாக மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் உதடுகளும் இந்தப்பாடலைப் பற்றிப் பேசின.**

**இசைஞானி இளையராஜாவின் இசையமைப்புப் பாடல்களுக்கு புல்லாங்குழல் இசைமீட்டிவருபவரும், பாடகருமான அருண்மொழி (நெப்போலியன்) எம்.பி. பரமேஸின் பாடல் பற்றி, அந்த மெட்டமைப்புப் பற்றி என்னிடம் நேரில் கூறியிருந்தார். அந்தளவுக்கு தரமும் - நிறைவும் கொண்ட பல பாடல்கள் பரமேஸ் - கோணேஷ் இசையில் எம்.பி. பரமேஷ் அவர்களால் பாடப்பட்டுள்ளன.**

இந்த உனக்குத் தெரியுமா... பாடல் அவரது துணைவியார் அமரர் மாலினி பரமேஷ் அவர்களுக்காகவே பாடப்பட்டது என்பதை பின்னாட்களில் அவரை வானொலிக்காகப் பேட்டி காண்கின்ற வேளைகளில் எம்.பி. பரமேஷ் எம்மிடம் தெரிவித்திருந்தார்.

ஈழத்து மெல்லிசைத் துறையில் என்றென்றும் மறக்கமுடியாத இசைத்தம்பதிகள் இவர்கள்.

எம்.பி. பரமேஷ் - எம்.பி. கோணேஷ் சகோதரர்கள் இணைந்து ஈழத்தில் 1968கள் முதல் இயக்கிவந்த பரமேஷ் - கோணேஸ் இசைக்குழு மூலம் பல கலைஞர்கள் இசைத்துறைக்கு அறிமுகமானார்கள். பரமேஷ் - கோணேஸ் மூலம் பாடல்கள் பாடஆரம்பித்த பலர் இன்று பெரும் புகழீட்டிய கலைஞர்களாக விளங்குகின்றார்கள்.

ஈழத்து மெல்லிசை என்கின்ற வரலாற்றில் மிகப்பெரும் பங்களிப்பைச் செய்திருக்கும், இன்றும் அதனைத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஈழத்து மெல்லிசையின் மூத்த கலைஞர்களில் ஒருவரான எம்.பி. பரமேஷ் பாராட்டுக்களுக்கும், புகழுரைகளுக்கும் மேலானவர்.

அவர் அகவை 60ஐக் கடந்தும் இந்த இசையுலகை நேசிக்கின்றார். அவர் இப்பொழுது பாடி வருவதெல்லாம் தனது

இசையுலகத் தோழியும், வாழ்க்கைத் துணைவியுமாகிய மாலினி பரமேஷ் அவர்களுக்காகவே. மாலினியின் ஆத்மா சாந்திபெற, தான் தொடர்ந்து பாட வேண்டும் என்பதே பரமேஷ் அவர்களின் நிலைப்பாடு.

புலம்பெயர்ந்து ஜெர்மனி நாட்டிற்குவந்ததின் பின்னரும் அவர் தனது கலைத்துறையிலிருந்து ஒதுங்கிவிடாமல், தொடர்ந்து அந்தத் துறையின் வளர்ச்சிக்காக உழைத்துவருகின்றார். தனது குடும்பவாரிசுகளை ஈழத்து இசைத்துறைக்கு அறிமுகம் செய்துவைத்திருக்கின்றார். அவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

பரமேஷ் அவர்களின் இசைப்பணி பக்கம் பக்கமாக எழுதப்பட வேண்டியவை. அவரது 60வது அகவையை, அவரின் வாரிசுகள் இசைத்தென்றலாகவே கொண்டாடி, தந்தைக்குப் பெருமை சேர்க்கின்றார்கள்.

''வாழும் போதே கலைஞர்கள் வாழ்த்தப்பட வேண்டும்' கலைஞர் பரமேஷ் அவர்களை இந்த மலரின் ஊடாக வாழ்த்த முடிந்ததை பெருமையாகக் கருதுகிறேன்.

ஈழத்தின் யாழ். மண்ணில் பரமேஷ் - கோணேஷ் இசைத்தென்றல் நிகழ்ச்சிகள் பலவற்றை தொகுத்தளித்த நினைவுகள் நெஞ்சில் நிழலாட, எம்கலைஞர், ஈழத்து மெல்லிசையின் மூத்த கலைஞர், வாழும் வரை இசையோடே வாழவேண்டும் என வாழ்ந்து காட்டும் கலைஞர், முற்றத்து மல்லிகை என்றென்றும் மணம் வீச வேண்டும் என வாஞ்ஞை கொண்டு அனைவரையும் அரவணைக்கும் கலைஞர் எம்.பி. பரமேஷ் பல்லாண்டுகாலம் வாழ்ந்து, ஈழத்து மெல்லிசைத்துறைக்கு இன்னும் நிறைவான பணியினையாற்ற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.



என்றும் அன்புடன்
**எஸ்.கே. ராஜென்**

## 22



### சிவனடியார் ஸ்ரீபதி
*இரங்கும் இல்லம், ஜெர்மனி, சிங்கப்பூர்*

நான் ஆற்றிய கலைப்பணிகளிலேயே
எனக்குப் பூரண திருப்தியைக்
கொடுத்தவைகளில் நான் பரமேஷ் அவர்களுடன்
இணைந்து தயாரித்த 'சங்கீத சாம்ராஜ்ஜியம்'
இசைப்பேழை என் மனதில்
முதலிடம் பெற்றுள்ளது.
இது பேதாது, போதாது. மேலும்
பரமேஷ் வாழும் வழிதோறும் இன்று இசை
நறுமணம் வீசும் குழந்தைகளுடன் இன்னும் பல
இசைத்தட்டுகள் வெளியிட வேண்டும். அகவை
அறுபதையொட்டினாலும் அவன் கொடுத்த வரம்
கலைஞனுக்கு வயதெல்லையே இல்லை.

**இசைக்குயிலை இழந்த**
**இன்னிசைக் குடும்பம்**

பரமேஷ் தனது ஆருயிர் மனைவி மாலினியின் பிரிவினை மறந்து பிள்ளைகளுடன் தொடர்ந்து இசைத்துக் கொண்டே இருக்க வேண்டும். மீண்டும் தன் இன்னிசையால் இசைபிரியர்களான எம் அனைவரையும் ஈர்க்க வேண்டும்

பரமேஷ் எழுதிய என் இனிய இசைப் பயணங்களில் கையெழுத்துப் பிரதி மாலினி வாழும் காலங்களிலேய என்னால் படிக்க முடிந்தது. அந்தவகையில் இசைப்பயணத்தில் அத்தனையும் அதிசுவை மிகுந்தவையே!

மேலும் வாழ்க வளர்க
என் அன்பன் எம்.பி. பரமேஷ்!

**சிவனடியான் ஸ்ரீபதி**



## இலங்கையின் மிகச்சிறந்த ரிறம்பெற் வாத்திய கலைஞர்

பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் என்றால் '**பப்பா மிஸ்கின்**' இல்லாத மேடையே இல்லை. உனக்குத் தெரியுமா பாடல் முதல் தொடர்ந்து பல ஆயிரம் மேடைகளில் ரிறம்பெற் வாத்தியத்தை கையாண்டவர் இவர். எமது மகள் பிரபாலினியை தூக்கி வளர்த்தவர் இவர். அன்றே சொன்னார் இவள் உங்கள் இசை வாரிசுஆக இருப்பாள் என்று. அவர் ஆசீர்வாதம் இன்று நிறைவேறியது.

# வெள்ளி விழா வாழ்த்து

ஈழத்து மெல்லிசை வரலாற்றில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக தன்னையே அர்ப்பணித்து ஈழத்து வானொலியிலும் பல மேடைகளிலும் மெல்லிசை பொழிந்தது மட்டுமின்றி ஐரோப்பிய மண்ணில் கால்பதித்து நவீன தொழில்நுட்ப இசையுடன் பல மேடைகளில் தோன்றி எல்லோர் இதயத்திலும் இடம்பிடித்துக் கொண்டு இன்றும் தமிழ் இசை உலகில் தன் முத்திரையை பதித்து சங்கீத சாம்ராச்சியத்தில் முடிசூடும் மன்னனாக விளங்கும் எம்.பி. பரமேஸ் அவர்களை இன்றைய வெள்ளிவிழா நிகழ்ச்சியில் வாழ்த்தி வழங்கப்பட்ட வாழ்த்து மடல்.


காலம் : 30.09.1995 இடம் : தமிழருவியின் 3வது வருடாந்த இசைவிழா எசன்.

ஈழத்து மெல்லிசை மன்னவனே எங்கள்
இதயங்கள் மகிழ்தன உன்னிசையால்
ஆழக் கடலிடை மேவிய தென்றல் உன்
ஈழத்து மெல்லிசை கேட்டிருந்தேன்
காலப் புகழ் உன்னை தேடி வந்தே உயர்
காவியத் தமிழனாய் புகழ் அடைந்தாய் தமிழ்
கோலத் தமிழிசைப் பாட்டுக்களால் நீ
குங்குமச் செந்தமிழ் குமிழானாய்.



சங்கம் பரப்பிய இசைத்தமிழே சுவை
சந்தம் பரப்பிடும் பூங்குயிலே
எங்கும் தமிழிசை பாடி நின்று
மங்காப் புகழ் கொண்டு வாழ்ந்திடுவாய்
அன்னிய மண்ணிலும் எந்தமிழ் பாடலால்
அனைவரின் மனதிலும் இடம் பிடித்தாய்
ஏழு சுரங்களை ஆளும் புகழ் பெற்று
மேவும் தமிழிசைக் கடலானாய்.

வாழி உன் புகழ் வளர்க செந்தமிழ்
வையகம் எல்லாம் புகழ் சிறக்க
சங்கீதப் பாட்டினால் சாரீரம் பாடி நீ
சங்கீத சாம் ராச்சிய மன்னனாய்
சுந்தரத் தமிழிசைப் பாட்டிசைத்து
சுரங்களாய் எம்மனதை மீட்டி நிற்கும்
சந்திர ஒளியுடைப் பாவலனே தமிழ்
சபையினில் வாழும் உன் சரித்திரமே.



தாயகப் புகழ் காக்கும் தமிழ் மகனே உனை
வாயார வாழ்த்தினேன் வாழ்க நீடூழி
வாழ்க தமிழ், வளர்க தமிழிசை. மங்களம்.

அன்புடன்
**அ. வேணுகோபாலன்**

## வைரவிழாக் கலைஞன்
## எம்.பி. பரமேஷ் அவர்களுக்கு

### வாழ்த்து மடல்

மெல்லிசையில் தேன்கலந்து
தெள்ளுதமிழ் உணவளித்து
எல்லையில்லாப் புகழ் சேர்த்த ஏந்தலே

கார்மேகம் கண்ட மயில் போல - உங்கள்
கானம் கேட்டு இன்புற்றுக் களித்திருந்தோம்

காற்றுக்கு இசைதந்த கலைஞனே
காதலர் பாட்டுக்குக் கருத்தந்த பாடகனே

சங்கீத பூஷணத்தை சங்கமமாக்கி
சங்கீத சாம்ராஜ்ஜியம் கண்டவரே

காலம் ஆண்டறுபது கடந்தாலும் - உங்கள்
கானம் என்றும் இளமைக் கோலமே

மேலும் கானம் கேட்கக் காத்திருப்போம்
காலமெல்லாம் இசையோடு வாழ்கவே - உங்கள்
வாரிசுகள் சேர்ந்து வளம் பெற்று வாழ்கவே.

16.12.2006

**சிவபாலன் குடும்பம்**
சோலிங்கன், ஜெர்மனி.



எனது தந்தையாக மட்டுமல்ல எனக்கு தமிழ் கற்பித்த தமிழறிஞனாகவும், என் இசைத்துறைக்குத் தன்னால் இயன்ற சகல ஒத்தாசைகளை நல்கி என்னை கவிஞனாகவும் இசைக் கலைஞனாகவும் ஆக்கிய என் தந்தை மா. பீதாம்பரம் அவருடன் என் தாயார் பொற்கொடி நாயகி.

எனது தந்தையார் மா. பீதாம்பரன் அவர்கள் சாவகச்சேரியைச் சேர்ந்தவர். இவர் Jaffna College அதிபராக இருந்த திரு. ஏ.எம்.கே. குமாரசுவாமி அவர்களுடைய ஒரே பாசமிகு தம்பி. யாழ்நூல் யாத்தழித்த மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் அவர்களின் முதல் மாணவன். சுவாமி விபுலானந்தரின் வாழ்நாள் முழுவதும் அவர் பணி செய்து வாழ்ந்தவர். பாலபோதினி என்ற அரிவரிப் புத்தகத்தில் அந்த மரம் ஆலமரம் என்ற கவியெழுதி பிள்ளைப்பாட்டு கவிஞர் என்ற விருதுபெற்றவர்.

உயர் பாடசாலைகள் வித்தியாதிகாரியாகவும் பல கல்லூரிகளில் அதிபராகவும் கடமையாற்றியவர். இவர் அச்சிடுவதற்காக கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்த பிரதிகளை புத்தக வடிவாக்க எனது இரண்டாவது அண்ணா ஜெகதீஸ்வரன் அவர்கள் எடுத்துச் சென்றபோது அன்று நடந்த சிங்களக் காடையர்களின் அட்டூழியத்திற்கு தீக்கிரையாகி விட்டன. மாலினியின் தந்தையார் கல்லூரித் தொடர்புகளால் முன்பு இருவரும் அறிமுகமானவர்கள். எனது அண்ணா ஜெகதீஸ்வரன் கனடாவில் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றும்போதுகூட அன்று நடந்தவைகளை சொல்லி வருத்தப்படுவார். இன்று அவரும் இறைவனிடம் சேர்ந்துவிட்டார்.

எனது தாயர் திருக்கோணமலையைச் சேர்ந்தவர். நானும் கோணேஷும் திருக்கோணமலையிலேயே இறுதிக் காலங்களில் கல்வி கற்று இசைக் கலைஞராகவும் வளர்ந்ததால் திருக்கோணமலை பரமேஷ், கோணேஷ் என்ற பெயரை வழமையாக்கிக் கொண்டோம். மாலினிகூட திருக்கோணமலையில் தனது மாமா ஆசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களிடமிருந்தே கல்விகற்று வந்தார். என் வாழ்க்கைத் துணைவியுமானார். இன்று வாழ்ந்து முடித்துச் சென்றுவிட்டார்.



**HAMM** ஜெர்மனியில் **JAFFNA STORES** உரிமையாளர் திரு. துரைசிங்கம் அவர்களுடன் எம்.பி. பரமேஷ்.

1995களில் ஜெர்மனியில் வெளியிடப்பட்ட சங்கீத சாம்ராஜ்யம் இசைப் பேழைமுதல் எமது றிதம்ஸ் இசைத் தென்றல் அனைத்திற்கும் முகம் மலர்ந்து உதவியவர். ஜெர்மனியிலும் பாரிஸ்சிலும் மூன்று கிளை ஸ்தாபனங்கள் அமைத்து மக்கள் ஆதரசைப் பெற்ற இவர் அன்றும் இன்றும் எங்கள் அப்பா அம்மாவின் இசை ரசிகராகவும் அப்பாவின் வெளியீடுகளுக்கு ஆதரவும் அனுசரணையும் உடையவராகவும் இருக்கின்றார். அவரையும் அவர் சகோதரர் வீரசிங்கம் அவர்களையும் அவருடன் இணைந்து திரு. ஆன்ரன் அவர்களையும் எம்மால் மறக்க முடியாது. இவர்களால் HAMM மாநகரில் நடைபெற்ற B.H. அப்துல் ஹமீது அவர்களின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் எங்கள் தந்தை எம்.பி. பரமேஷ் அவர்களை பொன்னாடை போர்த்தி கௌரவித்ததை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.


*- பிரபாலினி பிரபாகரன்*



அன்று
பதின்மூன்று வயதில்,
தென்னிந்திய திரைப்பட
பின்னனி பாடகர்
**திரு. தீபன் சக்கரவர்த்தி**
அவர்களின் கையால்
கௌரவ பரிசையும்,
பாராட்டுக்களையும்,
பெற்றுக்கொண்டார்
எமது மகள் பிரியந்தினி.

லண்டனில் நடைபெற்ற அதே நிகழ்வில் சிறந்த பாடகி
என்று பரிசையும், பாராட்டையும் பெற்றார்
எமது மூத்த மகள் பிரபாலினி.




C-14
அந்நாளும் இந்நாளும்
இசையோடு தான்...

C-15

எமது இசைப்பயணத்தை தொடரும் முதல் வாரிசு
பிரபாலினி பிரபாகரனை ஒரு சிறந்த ஈழத்து
பெண் இசையமைப்பாளராக வெற்றி பெற வாழ்த்துகிறேன்...

அன்புடன் அப்பா...





ஐரோப்பிய வானொலி மற்றும் தொலைக்காட்சி
அறிவிப்பாளர் **திரு. எஸ்.கே. ராஜென்**
அவர்களுடன்...



# எஸ்.கே. ராஜென்

*தொலைக்காட்சி வானொலி ஒலிபரப்பாளர்,*
*லண்டன்*


**மேடைகளில் மெல்லிசை நிகழ்ச்சிகள்
நடாத்தி மேன்மை பெற்றவர் இலங்கையில்
முதலாவது தமிழிசைத் தட்டுத் தந்து
ஈழத்து மெல்லிசை மன்னராக மலர்ந்தவர்
- எம்.பி. பரமேஷ்**

ஈழத்து மெல்லிசை வரலாற்றில் மிகமுக்கிய பாத்திரம் வகிக்கும் கலைஞர் எம்.பி. பரமேஷ் அவர்கள், ஈழத்து இசையுலகின் நிலையான பாராட்டுக்குரியவர்.

ஈழத்துப்பாடல் என்று வானொலியில் அறிவிப்பு கேட்டதும், வேறு அலைவரிசையைத் தேடும் எம்மவர் மத்தியில் முற்றிலும் மாறுபட்டவகையில் முழுமையான ஈழத்துப்பாடல் நிகழ்ச்சியை 'இசைத்தென்றல்' என்ற வடிவில் நாட்டின் மூலைமுடுக்குகள் எங்கும் மேடையேற்றிய பெருமைக்குரியவர்கள் பரமேஷ் - கோணேஷ் கலைஞர்கள். அதிலே எம்.பி. பரமேஷ் பாடலாசிரியராக, பாடகராக, இசையமைப்பாளராக என தனது பங்களிப்பை வழங்கி கடல் கடந்தும் புகழீட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரவு 7.00 மணிக்கு மணியடித்து நேரம் கூறி மேடை நிகழ்ச்சியை அன்றைய காலகட்டத்தில் நடாத்தியவர்கள் என்றால், அது திருக்கோணமலை பரமேஷ் - கோணேஷ் கலைஞர்கள் என்பது நாடறிந்த உண்மை.

1968களில் இலங்கை வானொலிக்கு வெளியே, ஈழத்து மெல்லிசைக்கு பெருமை தேடி, இசைத்தட்டு வெளியிட்டு சாதனை படைத்த கலைஞர்கள் பரமேஷ் - கோணேஷ்.



**எம்.பி. பரமேஷ்**
10 வயதில்

**எம்.பி. கோணேஷ்**
9 வயதில்

50 வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் பரமேஷ் அவர்கள் குடும்பத்தினர். இடது கோடியில் இன்றைய இசைக் கலைஞன் எம்.பி. பரமேஷ், வலது கோடியில் எம்.பி. கோணேஷ். தந்தையார் கல்லூரி வித்தியாதிகாரி மா. பீதாம்பரன். கனடாவில் வாழ்ந்த அமரர் Dr. Prof. ஜெகதீஸ்வரன், அமரர் பி.வி. ஆனந்தன் மற்றும் லீலா, நல்லநாயகி, சந்திரா எனது சகோதர சகோதரிகள்.

இப்படத்தை இதில் அச்சிட ஒரு காரணம் உண்டு. எனது தந்தையார் சொல்வார் எல்லோரும் ஒன்றிணைந்து நின்று எடுத்த படமே கடைசியாகப் போய்விடுகின்றது என்று. உண்மையிலும் உண்மை. மாலினியின் புகைப்படங்களைப் பார்த்தால் உண்மை விளங்கும். வாழ்க்கைப் பயணத்தில் வழியில் இறங்குபவர்களும் உண்டு, பயணம் செய்பவர்களும் உண்டு. ஆனால் நான் யார் என்று எனக்குத் தெரியவில்லை.


**எம்.பி. பரமேஷ்**



## எனது அண்ணா அமரர் ஆனந்தன்

யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்று, பல்கலைக்கழகம் பட்டம் பெற்று கொழும்பு கந்தானை ராணி சந்தன சோப் தயாரிப்பு நிலையத்தில் தலைமைக் கட்டுப் பாட்டாளராகக் கடமை புரிந்தவர். ஜெர்மன் வெளிநாட்டுக் காரியாலயத்திற் கடமை புரிந்து சிறப்பாக ஜெர்மன் மொழி கற்று 50 வருடங்களின் முன் ஜெர்மன் அரசாங்கத்தின் அழைப்பின் பெயரில் ஜெர்மன் நாடுவந்த முதல் 6 இலங்கைத் தமிழரில் இவர் ஒருவர்.

சிறந்த தமிழ் பற்றுள்ள இவரின் சிறந்த நண்பர்களில் ஒருவர் சாவகச்சேரி பிரபல சினிமாத் தயாரிப்பாளர் யோ. தேவானந்தன் அவர்கள் ஜெர்மன் நாடு விட்டு வந்தபின்னர் கொழும்பில் Alkemie என்ற ஸ்தாபனத்தை நடத்தியவர். உனக்குத் தெரியுமா பாடல் தயாரிக்கத் தட்டிக் கொடுத்தவர் இவர். இவர் எனக்கு கற்பித்தது குறைவு. கதைப்பதிலேயே விடயங்களைப் புகுத்திவிடுவார். இந்த எழுத்துக்கள் எல்லாம் அவர் வடிவங்களே.



**சங்கீதபூஷணம் அமரர் ஆ. நமசிவாயம்**
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


நமச்சிவாயம் அவர்கள் சங்கீதபூசணம் மட்டுமல்ல யாழ் நல்லூர் நகரிலே மங்கையர்க்கரசி அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் அமைத்து அதன் மூலம் பல இசைக் கலஞைர்களை உருவாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அதே பட்டதாரிகள் இன்று தமது பேட்டிகளில் தாம் ஆரம்ப காலத்தில் கற்ற பாடசாலையையும் அதை உருவாக்கியவர் திரு. நமச்சிவாயம் அவர்களின் பெயர்களையும் குறிப்பிடத் தவறி விடுகின்றனர். இதையிட்டு நானும் மாலினியும் மாலினியின் குடும்பத்தினரும் மிகவும் மன வேதனையடைந்த காலங்கள் நிறைய உண்டு. சங்கீத பூசணம் விருதுபெற்று பாடசாலைகளில் ஆசிரியர்களாக கடமையாற்றி முடித்தவர்களே அதிகம். நமச்சிவாயம் அவர்கள் அப்படிப்பட்டவரல்ல. இவற்றிற்கெல்லாம் விதி விலக்கானவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழிலேயே கர்னாடகப் பாடல்கள் பாட வேண்டுமென்று வாதாடியவர்.

இவ்விரு அரும்பெரும் சாதனைக்காக நான் அவர் மகள் மாலினியை மணமுடித்து 26 வருடங்கள் வாழ்ந்து விட்டதில் கௌரவம் உண்டு. அவர் சங்கீதப் பரம்பரை இனி அழியாது. அவரின் அன்புப் புதல்வி மாலினியின் பிள்ளைகள் இன்று கர்னாடக இசையிலும் மெல்லிசை மேல்நாட்டிசையிலும் வெற்றிமேல் வெற்றியீட்டிக் கொண்டிருக்கின்றனர். மாலினி தனது மூத்த மருமகனையும் இசைக் கலைஞராக தேர்ந்தெடுத்துவிட்டுச் சென்றுள்ளார்.

ஜெர்மனி வந்தது தை 21ம் திகதி. மாலினி எம்மைவிட்டுப் பிரிந்ததும் 21ம் திகதி இவற்றிற்கு என்ன தொடர்போ தெரியாது. இது போல் அனேகமாகச் சிவராத்திரி 21ம் திகதிகளிலேயே வரும். மாலினியின் தந்தையார் மறைந்ததும் சிவராத்திரி எனவே மரணம் எல்லோருக்கும் தீர்மானிக்கப்பட்ட திடமான அழைப்பு என்று ஆறுதல்பட முயற்சிக்கலாம். ஆனால் அது முடிவதில்லை.

எனது மனைவி மாலினியின் அன்புத் தந்தையார் அமரர் சங்கீத பூசணம் திருநெல்வேலி ஆ. நமச்சிவாயம் அவர்கள் தனது 47 வயதில் மரணித்தார். அவரைப் போலவே 48 வயதில் சென்றுவிட்டார் எனது மனைவி மாலினி.

**- மருமகன் எம்.பி. பரமேஷ்**




எனது தந்தை பீதாம்பரன் தனது இல்லத்திற்கு யாழ் அகம் என்று பெயரிட்டிருந்தார். யாழ்ப்பாணம் என்ற காரணத்தாலல்ல.

தனது குருசுவாமி விபுலானந்தர் **யாழ்நூல்** யாத்த வித்தகர் என்ற கௌரவத்திற்காக மட்டுமே.

யாழ்ப்பாணம் திருக்கோணமலை மட்டக்களப்பு என்ற **பிரதேச வாதம்** ஆகாது அது தமிழர் மத்தியில் வேண்டாமென்று வாதாடியவர் எனது தந்தையார் என்ற மகிழ்ச்சி இன்றைய காலச் சூழ்நிலையில் எனக்குண்டு.

## கலாபூஷணம் J.P. அரியநாயகம் அவர்கள் அன்புடன் சூட்டும் புகழாரம்

பிள்ளைப்பாட்டுக் கவிஞர் பீதாம்பரம் வீட்டு நூலகம்
அவர் பிள்ளை பரமேஷ் அவர்களுக்கு பாட்டுப் பல்கலைக்கழகம்

ஈழத்திருநாட்டில் பாடல்பெற்ற இரு தலங்களில் ஒன்றாக விளங்குவது கோணேஸ்வரம் "தாயினும் நல்ல தலைவரென்று கோணேஸ்வரப் பெருமானைப் போற்றுவர்." கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை எனப் போற்றுவார், ஞானசம்பந்தப் பெருமான்.

இத்தகை புகழ் பூத்த புண்ணிய பூமியில் பல ஆண்டுகள் வாழ்ந்தவர் தான், தமிழ்த் தாய் பெற்ற தமிழ் அறிஞர் மா. பீதாம்பரம் B.A. அவர்கள். இவர் பவனந்தி முனிவர் கூறும்

"குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மிணையவும்
அமைய னூலுரை யாசிரி யன்னே"

எனும் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர். யாழ்ப்பாணம் தமிழர் வாழும் தொன்னகரம். இந்நகரின் அருகாமையில், உள்ள சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திரு. பீதாம்பரனார் அவர்கள்.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே"

என்ற திருமூலரின் வாக்கிற்கேற்பத் தமிழ் பணிபுரிந்த திரு. பீதாம்பரனார், முத்தமிழ் வித்தகர், யாழ்நூல் தந்த சுவாமி விபுலானந்தரின் அன்புக்கும் மதிப்புக்குமுரிய உத்தம சீடராக விளங்கினார்.

இத்தகைய புகழ் பூத்த தமிழ் அறிஞரின் புதல்வர்களாகிய பரமேஷ் கோணேஷ் அவர்களின் இசைப்பணியை இன்றைய

தலைமுறையினர் அறிந்திருக்கவில்லை. நாட்டில் தோன்றிய இனக்கலவரங்கள் போர்ச்சூழல்கள், இதன் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகள் நம் நாட்டில் புலம்பெயர்வுகள் காரணமாகிவிட்டன.

1964ம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெற்று என் பிறந்த நாடாம் நெடுந்தீவிற்கும் (DELFT) வந்தபோது திருமலையில் நாவலர் அகடமி நடத்தி வந்த புலவர் பிரமஸ்ரீ கோமஸ்கந்த சர்மா அவர்கள் தன்னுடன் பணியாற்ற வருமாறு அன்புடன் அழைத்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் தான் பேரறிஞர் பீதாம்பரனாரின் நட்பு ஏற்பட்டது.

இவர் கிடைத்தற்கரிய பல நூல்களைத் தம் வசம் வைத்திருந்த நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தார்.

> ''நல்லாரைக் காண்பதுவும் நன்றே – நலமிக்க
> நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே''

என்ற முதுமொழியின் உண்மையை இப்பெரியாரோடு உரையாடும் போது உணராதவர் எவருமில்லை.

கொழும்பு விவேகானந்த சபையினரால் வெளியிடப்பட்ட ''விவேகானந்தன்'' பத்திரிகைக்கு கல்வி, சமயம், தமிழ்மொழி பற்றிய பல கட்டுரைகள் எழுதினார். விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாறு ஈழகேசரியில் ''அடிகள் வரலாறு'' எனும் தொடர்கட்டுரையாக எழுதினார். இவர் எழுதிய கையெழுத்துப் பிரதிகள் நூல்வடிவம் பெறாமலே போனமை தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பேரிழப்பே.

திரு. பீதாம்பரன் அவர்கள் தம் புதல்வராகிய பரமேஷ் அவர்களிடம் இளமையிலேயே காணப்பட்ட சாரீர வளத்தையும் நுண்கலை ஆற்றலையும் கண்டு இவரைத் தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் கல்வி கற்கச் செய்ய விரும்பினார். தம் ஆசையை எம்மிடமெல்லாம் சொல்லி மகிழ்வார்.

1966ம் ஆண்டிற்குப் பின் ஈழத்திருநாட்டிலும் சிறப்பாகத் திருக்கோணமலையிலும் மெல்லிசைக் குழுக்கள் ஆரம்பிக்கப்

பட்டன. இதன் காரணமாக இசை ஆர்வமும் ஆற்றலும் திறமையும் கொண்டு விளங்கிய பரமேசும் மெல்லிசை பாடுவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

தந்தையார் திரு. பீதாம்பரனார் கண்ட இசைத்துறையில் உயர் கல்வி என்னும் கனவும் நனவாகாமல் போய்விட்டது.

இவர் ஏற்படுத்திய மெல்லிசைக்குழு இலங்கையின் பல பாகங்களிலும் சென்று புகழ் பெறத் தொடங்கியது. இவர் பாடிய உனக்குத் தெரியுமா தொட்டு பலப்பல பிரபல்யமான பாடல்கள் பல கலை உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. இவர் கண்ட இசைத்தென்றல் மேடை நிகழ்ச்சிகளோ 1,400க்கும் மேற்பட்டது.

இவர் பாடல்கள் ஈழநாட்டில் மூலைமுடுக்கெங்கும் ஒலிக்கத் தொடங்கிய வேளையில், யாழ் திருநெல்வேலி சங்கீதபூஷணம் நமசிவாயம் அவர்களின் புதல்வி செல்வி மாலினி என்பவர், யாழ்ப்பாணத்திலிருந்து திருமலையில் வாழ்ந்த தமது மாமனார் திரு. நா. கணபதிப்பிள்ளை அவர்களின் வீட்டிலிருந்து கல்வி கற்று வந்தார். தந்தையின் குரல் வளமும் இசைஞானமும் இயல்பாகவே இவரிடம் காணப்பட்டது. இவர் பரமேஷ் கோணேஷ் இசைக்குழுவில் இரசிகையானர்.

இவ் இசைக்குழு மேலும் மேலும் புகழும் பெருமையும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தபோது, இன்னிசை மழையில் தமிழ் நெஞ்சுகளைக் கொள்ளை கொண்ட பரமேஷ் அவர்களைக் கொள்ளை கொண்டவர் செல்வி மாலினி. பல வருடங்கள் இரசிகையாகத் தொடர்ந்த மாலினி, தன் தந்தை சங்கீதபூஷணம் திரு. நமசிவாயம் அவர்களின் ஆசையை நிறைவேற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்றார். அன்று பீதாம்பரனார் தனது பிள்ளையை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அனுப்ப வேண்டும் என்ற கனவு செல்வி மாலினி மூலம் நிஜமாகியது. செல்வி மாலினி தன் காதலைத் தொடர்ந்ததுடன் சங்கீதபூஷணம் மாலினியாக வெளிப்பட்டுத் தன் காதலன் எம்.பி. பரமேஷ் அவர்களையே கைப்பிடித்த செய்தி எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியாக இருந்தது.

> ''காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்
> காரியம் யாவினும் கைகொடுத்து

மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெற வாழ்ந்தே
இல்லறத்தை இனிதே நடாத்தினார்
மெல்லிசைக்குப் புது மெருகேற்றினார்."

இலங்கையில் குறிப்பாக இசைத்துறை பற்றிய எதிர்கால ஆய்வாளர்கள் இவர்களின் இசைப்பணியை என்றும் மறக்கவோ மறைக்கவோ முடியாது.


இன்று 60 வயதில் துணைவியாரை இழந்த துயர் எம்.பி. பரமேஷ் அவர்களை வாட்டிய போதும் தம் பிள்ளைகளுடன் ஜேர்மனியில் இசைத்துறையில் புகழ் பூத்த கலைஞராகவே பல வளங்களும் நிறைந்து வளமுடன் வாழ்கின்றார். தானே பாடல்களை எழுதி இசையமைத்து இனிய குரலால் அவற்றைப் பாடி கலைப்பணி புரியும் அவர்களுக்கு தமிழ் கூறும் நல்லுலகு என்றும் கடமைப்பட்டுள்ளது.

வாழ்க! வளர்க அவர் பணிகள்!

**கலாபூஷணம் அரியநாயகம் J.P.**
37, பேராலய வீதி, திருகோணமலை.



திருக்கோணமலையில் தமது மூன்றாவது ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியின்போது மண்டபம் நிறைந்து அமர்ந்திருந்த ரசிகர்களின் காட்சி. தமது சொந்த ஊரிலேயே ஒரே நாளில் மூன்று நிகழ்ச்சிகள் நடத்தி வெற்றிக் கண்டவர் எம்.பி. பரமேஷ். முன்கூட்டியே அனுமதிசீட்டு விற்காது அந்தந்த நிகழ்ச்சியின்போதே மண்டப வாசலிலே அனுமதி சீட்டுகளை விற்று, மக்கள் ஆதரவு ஈழத்துக் கலைஞருக்கு உண்டு என்பதை சாதித்துக் காட்டியவர் ஈழத்து மெல்லிசை மன்னன் எம்.பி. பரமேஷ்.



இசையமைப்பாளராக மட்டுமல்ல எமது குடும்பத்தில் ஒருவராவே இணைந்து இன்பதுன்பங்களிற் கலந்து எம்முடன் பழகியவர் மகேஷ் அவர்கள். அவருடைய இந்த 20 வயதின் புகைப்படமே என் வசமிருந்தது.

வேலை விடயமாகக் கனடா தேசம் வந்த மகேஷ் வேலை ஸ்தலத்தில் விபத்தொன்றிற் தன் 45வது வயதிலேயே எம்மை விட்டு விடைபெற்று விட்டார். மாலினிக்கும் எனக்கும் எமது இசை கலைஞர்களுடன் இணைந்து திருமணம் செய்து வைத்தவர்.

திருக்கோணமலை V.S.E. Gold House உரிமையாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஒலிப்பதிவுகளில் அமர்ந்திருப்பவர் பிரபல சிங்களப் பட பாடகர் Victor Ratnayaka தமிழில் நான் இயற்றி இசையமைத்துப் பாடிய மணமாளிகை ரோஜா, அழைக்கும் ஓசை கேட்கலையா, இருபாடல்களையும் சிங்களத்தில் பாடியவர்.



மட்டக்களப்பு மாவட்டம் பரமேஷ் கோணேஷ் அவர்களின் இசைத் தென்றல் கோட்டை என்பார்கள் எத்தனை நிகழ்ச்சிகள் நடத்தினாலும் மண்டபம் நிறைந்திருக்கும், நிகழ்ச்சி வெற்றிபெறும்.



பரமேஷ் கோணேஷ் ஒலிப் பதிவுகளில் Studio Sarasaviஇல் M.P. Paramesh மற்றும் சக பாடகர்களுடன்.



திருக்கோணமலை சென் ஜோசப் கல்லூரியில் என் மனைவி மாலினியின் முதலாவது இசைத் தென்றல்.




**பழைய நினைவுகளில் நீந்துகிறேன்**

இது எமது இசைக் கலைஞர்களுடனல்ல! அவ்வளவு அன்பு பாசம் நட்பு திருக்கோணமலை இசைக் கலைஞர்களுடன் எனக்கிருந்தது. திருக்கோணமலையில் கோணேஷ்வர இசைக்குழு என்று எனது மூத்த கலைஞர் திரு. இம்மானுவேல் எனது நண்பர் பியானோ எக்கோடியன் வாத்தியக் கலைஞர் திரு. நெல்சன் தற்பொழுது நோர்வே நாட்டில் வசித்து வரும் ஏரம்பு சரவணபவன் அவர்களின் இணையமைப்பில் நடைபெற்று வந்தது. இடமிருந்து வலமாக பெயர் தெரியவில்லை. படத்தில் ஆரியசேன, நெல்சன், இம்மானுவேல் மற்றும் நண்பர்களைக் காணலாம்.

பாடுபவர் பக்கத்தில் **Guitar** வாசித்துக் கொண்டிருப்பவர் வேறு யாருமல்ல நானேதான். அன்றைய தினம் பிறந்தநாள் வைபவத்தில் சரவணபவள் வீட்டில் கூடியிருந்தோம்.

இதை ஏன் குறிப்பிட்டேன் என்றால் நான் கற்றது கிற்றார், வயலின் வாத்தியங்கள் தான். Arthur Samson என்ற ஒரு வெளிநாட்டு இசைக்கலைஞரிடம் கற்றுக்கொண்டேன். மேடையில் அவற்றை நாள் வாசிக்கச் சந்தர்பங்கள் கிடைக்கவில்லை. நிச்சயமாகக் கிடைக்காது. காரணம் நானே முக்கிய பாடகர். ஆனால் இன்று நான் கற்ற வாத்தியங்களின் இசை நுணுக்கங்கள் இசையமைப்பை எளிமையும் இனிமையுமாக்கின்றன.



1972களில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பகல் 2.30க்கும் மாலை 7 மணிக்கும் பரமேஷ் கோணேஷ் இசைத்தென்றல் நடைபெற்றது. மாலினி ரஸிகையாகக் கலந்து கொண்ட நிகழ்ச்சி மட்டுமல்ல நாடகத் தந்தை நவாலியூர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பரமேஷ் கோணேஷ் மகேஷ் மூவரிற்கும் இலங்கையில் முதலாவது தமிழ் இசைத் தட்டுத் தயாரித்த திறமைக்காக ஈழத்து மெல்லிசை மன்னர் என்று கௌரவித்த நிகழ்ச்சியுமாகும்.

முதல் வரிசையில் இடப்பக்கமிருந்து மாலினி நமசிவாயம் (அன்று) அருகில் அவர் தோழி குசலா திருநாவுக்கரசு, பக்கத்தில் மாலினி சகோதரி தமிழ்ச் செல்வி அருகில் மாலினியின் தாயார் திருமதி நமசிவாயம், தொடர்ந்து இளையவர்கள் உறவினர். அடுத்து பரமேஷ் கோணேஷ் சகோதரி புவனேஷ் தொடர்ந்து இரு சிறு மகள் ரோகினி பேராயிரவர் அடுத்து அவர் சகோதரி பரமேஷ் கோணேஷ் உறவினர்.

என்னிடம் விபரமறிந்து இவற்றைத் தொகுத்தவர் எனது இரண்டாவது மகள் பிரகாஷினி பரமேஷ். புகைப்படங்கள் சகலதும் குலசேகரம் உரும்பிராய்.



## PARAMESH KONESH RECORD BAR

யாழ்நகரில் திறக்கப்பட்ட பரமேஷ் கோணேஷ் இசைத் தட்டு விற்பனை ஸ்தாபனம் இடமிருந்து வலமாக எமது இசைத் தென்றல் எங்கு நடைபெற்றாலும் அனுமதிச் சீட்டுக்கள் விற்பனையாகி அப்பணத்தை எம்மிடம் கணக்கிட்டு ஒப்புவிப்பவரும் நிகழ்ச்சி பாதுகாவலராகவும் இருந்த என்றும் எம்மால் மறக்க முடியாத நாவாந்துறை R. ராஜலிங்கம் அவர்கள், அருகில் சிவக்குமார் திருநாவுக்கரசு, அவரருகில் அண்ணே ரைட் K.S. பாலச்சந்திரன் எம்.பி. கோணேஷ், ஸ்தாபனத்தைத் திறந்து வைத்த C.S.K. மில் உரிமையாளர்கள் எம்.பி. பரமேஷ்.





பரமேஷ் கோணேஷ் ஒலிப் பதிவுகளில் Studio Sarasaviஇல் M.P. Paramesh குரலிசைக்க, Humming இசை Pamala, Kamala, Vimala, E.R. Prema. ஒலிப்பதிவாளர் Mervin Rodrigo 3000 சிங்களப் பாடல்களை ஒலிப்பதிவு செய்தவர். தமிழகத்தில் T.S. ரங்கசாமியிடம் பயிற்சி பெற்றவர்.

## Sujatha Athanayake


M.P. பரமேஷ், E.R. பிரேமா இணைந்து பாடிய பாடலெனக்கிது முதல்தரம்தான் என்ற பாடலைச் சிங்களத் திரைப்படப் பின்னணிப் பாடகி சுஜாத்தா அத்தநாயக்கா அவர்களுடன் இணைந்து சிங்கள மொழியிற் பாடினார் எம்.பி.பரமேஷ்.



# திருமண நாட்களிலே வரும் சிங்காரக் கனவுகளே



பரமேஷ் மாலினியை ஆலத்தி அனுசரிப்பவர்கள் பரமேஷ் தாயார், சகோதரி மகள் காந்திமதி பரமேஷ் மூத்த சகோதரி திருமதி நல்லநாயகி ராஜரட்ணம். படத்தில் எனது மனைவி மாலினியுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றத் தோழிகள். இவர்களே எங்கள் திருமணத்தை முன்னின்று நடத்தியவர்கள்.



**இந்த சிரிப்பெல்லாம் போச்சடா இந்த நாளிலே - சொந்த**
**சீர் எல்லாம் போச்சடா சொந்த நாட்டிலே - இவள்**
**முடித்தாளே என் பாட்டை பாதி வழியிலே - அவள்**
**போட்டாளே பூவோடு என் வாய் பூட்டியே - நான்**
**தன் பாட்டாலே சாகுறேனே துயர் மூட்டியே**
**தாயின்றி துடிக்கிறதே ஆறு முயற்குட்டியே.**

ஈழத்து மெல்லிசை மன்னன், இயல் இசைக் கவிஞன், துள்ளிசைச்சுடர், மக்களிசை மன்னன், இவற்றிற்கெல்லாம் மேலாக 25 வருடங்கள் இணைந்து, இசை இசைத்து இசைக்குழந்தைகள் ஆறு அபூர்வ ராகங்களைத் தந்த சங்கீத பூஷணம் மெல்லிசை வான்மதியின் கணவன்.



இலங்கையில் முதலாவது மெல்லிசைத் தம்பதியினர்
ஈழத்து மெல்லிசை மன்னன் எம்.பி. பரமேஷ் மெல்லிசை
வான்மதி சங்கீத பூஷணம் மாலினி பரமேஷ்



எனது மனைவி மாலினி
ஒரு சிறந்த வீணை
கலைஞரும்கூட.

கர்னாடக இசை கற்றவள் என்ற செருக்கில்லாமல் சகலருடனும் சரிநிகர் சமானமாகப் பாடிச் சென்றவர் மாலினி பரமேஷ்.





## அறுபதாவது அகவை வாழ்த்து!...

திருகோணமலை நகர்தனில் பிறந்து ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கும் திருவாளர் எம். பி. பரமேஸ் அவர்கள் 30 ஆண்டுகளுக்குமெலாக தாயகத்திலும் ஜேர்மனியிலும் தமிழ் இசைத்துறைக்கு அழகூட்டி மெருகூட்டி உயிரூட்டி சிறப்பூட்டியமைக்காக இன்றைய அவரின் 60வது வைரவிழா பிறந்தநாளில் (16.12.2006) வாழ்த்தி வழங்கப்பட்ட வாழ்த்துப்பா!..

திருமலை நகர் தனில் பிறந்த செம்மல் நீ
திரு பரமேஸ் என்னும் பைந்தமிழ்ப் புதல்வன் நீ
திரு உருவமே அறுபதாவது அகவை நிறைவு செய்யும் நீ
திரு உளங்கொண்டு வாழ்த்தப்பட வேண்டியவன் நீ!...

DiaMOND

HaPPY BiRthDaY

அறுபதாவது அகவையில் வாழ்பவன் நீ
பெறுதற்கரிய பேரின்பமும் பெற்றவன் நீ
வறுமையில்லாத் தமிழிசை கற்றவன் நீ
மறுமையிலும் முத்தமிழ் காப்பவன் நீ!...

வசை இல்லா வல்ல தமிழ் வித்தகன் நீ
விசையாக நாதம் தரும் குருவானவனும் நீ
இசைக்கு ஓர் இன்னிசைப் புயலானவன் நீ
ஓசைக்கு ஒலியூட்டி மகிழ்விக்கும் பாடகன் நீ!...

பண் இசைப்பாடல்களையும் பாடுபவன் நீ
கண்ணான தேன் தமிழையும் காப்பவன் நீ
எண்ணங்கள் பலவற்றை நிறைத்தவன் நீ
மண்ணின் கலைஞனாய் மிளிர்பவன் நீ!...

கல்லாதோரையும் கற்றுத்தேற வைப்பவன் நீ
வல்லோராய் வான்புகழ் நீடுழி வாழ்ந்திடனும் நீ
பல் வளமும் பெற்று பார்போற்ற உயர்ந்திடனும் நீ
எல்லோர் உளமும் மனங்குளிர வாழ்த்துகிறோம் நாம்!...

வாழ்க!... வாழ்க!... பல்லாண்டு வாழ்க!...

வ. சிவராசா
பிரதம ஆசிரியர்
"மண்" கலை, இலக்கிய சமூக சஞ்சிகை
தலைவர்
தமிழ் எழுத்தாளர் சங்கம் ஜேர்மனி

டியூஸ்பேர்க் - ஜேர்மனி
16.12.2006

## கவிசிவபாலனின் கனிந்த வாழ்த்து

SIVALINGAM SIVAPALAN
14, Rue Des Sablons, 75016 PARIS

கருவறையில் உதித்தபோதே அமுதகானம் வேண்டி
அடம்பிடித்த துள்ளிசையின் பிதாமகனே!
அகவை உனக்கு அறுபதா?
ஆயிரம் பிறை கண்டு நீ வாழ்வாய்!!
ஈரடிக் கவி தந்த வள்ளுவனும் அவன் வரிகளும்
ஈராயிரமாண்டுகள் கடந்தும் வாழ்வது போல்,
முற்றத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று உணர்த்திய
மட்டற்ற இசையாளனே...
"உனக்குத் தெரியுமா.... நான் உன்னை நினைப்பது..." என்ற
வரிதந்த உந்தனை ஆறாயிரமாண்டுகள் கடந்துவாழ
எந்தனின் தமிழவன் வழிவகுப்பான்
இட்டார் கெட்டதில்லை என்பது போல்
இசைத்தார் புகழ் இழந்ததில்லை!
இமயத்தின் உச்சியில் இசைக்கொடி நாட்டியவனே
ஈட்டாத வெற்றியெல்லாம் நீ ஈட்டிக் காட்டியவனே
இன்னும் இருக்கிறது உயரம்
இராவணேசனின் கை நரம்புகள் புடைசூழ அந்த
சிவனே மயங்கியது போல்
உந்தன்ட இசை உலகமெல்லாம் இன்னும் பரவ வேண்டும்
உலகமெல்லாம் பரந்து வாழும் அத்தனை உறவுகளும்
உந்தன் இசைக்கு மயங்க வேண்டும்
பரமேசன் இசை கேட்க ஒருநாள் அந்தப் பரமசிவனே
வரங்கேக்கும் நிலை வரவேண்டும்
உனக்கு அகவை அறுபது என்றதும்
இந்த உலகமே இன்று வாழ்த்துச் சொல்ல விழித்துக் கொண்டது.
எடு...!!!
மீண்டும்... எடு... உந்தன் வீணை இனிப் புது இராகம் இசைக்கட்டும்
ஒரு நரம்பு அகன்றது... எல்லோருக்கும் ஒரு வலியைத் தந்தது.
நீ மீட்டு... எல்லோருக்கும் முன் உன்னை அவளே வழிநடத்துவாள்!!
அவளே வாழ்த்தும் சொல்லியனுப்புவாள்.
உன் வெற்றிப்படிக்கு அவளே வழியுங்காட்டுவாள்.
மீண்டும் உன் இசையில் நனையத் துடிக்கும்.



– சிவலிங்கம் சிவபாலன்

# மெல்லிசை மன்னனுக்கு இந்த கலைமாமணியின் மனமார்ந்த வாழ்த்துக்கள்



எனக்கும் பரமேஷ் அவர்களுக்கும் 2006இல் வயது 60 ஆகிவிட்டது. நாம் இருவர் சென்ற பாதையும் ஒரே வழிதான் இந்த கலைவழி, தமிழ் இசை வழி. இலங்கையின் முதல் தமிழிசைத் தட்டுத் தந்த கலைஞன் இந்த எம்.பி. பரமேஷ்தான். அவரின் என் இனிய இசைப் பயணத்தில் நானும் இணைவதில் மிக மகிழ்ச்சியரடகிறேன். என்னோடு என் கலைப்பயணம் முடியாமல் காக்க என் மகன் சுதனை இந்த கலைப் பணிக்கு அர்ப்பணித்துள்ளேன். அதேபோல் எம்.பி. பரமேஷ் தன் ஆறு குழந்தைகளையும், தன் இசைப்பணிக்கே அர்ப்பணித்துள்ளார். இதற்கு மேலாக அவருக்குக் கிடைத்த மூத்த மருமகன் பிரபாகரன் ஓர் அற்புத இசைக் கலைஞன். இதுவே பரமேஷின் வெற்றிகள் தொடர்வதற்கு ஓர் ஆதாரம். வாழ்க உன் இசை.

**கலைமாமணி பாசையூர் ஜேசுதாஸ்,** ஜெர்மனி



## இலங்கைத் தமிழிசை தட்டுக்கலை முன்னோடிகள்!

### மெல்லிசை மன்னர்

# பரமேஷ் கோணேஷ்

- ஈழத்தின் முதலாவது தமிழிசைத் தட்டைத் தயாரித்தவர்கள் (1970).
- முதன் முதலாக நாற்பதிற்கும் மேற்பட்ட இசைக்கருவிகளை ஒன்றிணைத்து ஈழத் தமிழிசை உலகிலும், சிங்கள இசை உலகிலும் புதிய ஓர் சாதனையை நிலைநாட்டியவர்கள்.
- தமது சொந்த லேபல்களிலேயே அதாவது P.K.M. இசைத் தட்டுக்களில் தமிழ்ப் பாடல்களையும், சிங்களப் பாடல்களையும் வெளியிட்ட முதலாவது இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள்.
- தமது தமிழ்ப் பாடல்களின் மெட்டிற்கு சிங்களப் பாடல்களை உருவாக்கி அதில் வெற்றி கண்டு, சிங்கள இசைத் தட்டுத் தயாரிப்பாளர்களையும் தமிழ்ப் பாடல்களை உருவாக்குவதற்கு முதல் வழிகாட்டிகளாக இருந்தவர்கள்.
- கவிஞர், இசையமைப்பாளர், பாடகர், இசைத் தட்டுத் தயாரிப்பாளர்கள், இசைத்தட்டு விற்பனையாளர்கள் (பரமேஸ் கோணேஷ் றெக்கோட்ஸ்பார்) விநியோகஸ்தர்கள் அத்தனை திறமைகளையும் தம்மிற் கொண்டு செயற்படுத்தி வரும் முதலாவது இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள்.
- ஈழத்தில் முதன் முதலாக மெல்லிசை, பொப் இசை, (இசைத் தென்றல்) மேடை நிகழ்ச்சியினால் பதினாறுக்கும் மேற்பட்ட வாத்தியக் கருவிகளை ஒன்றிணைத்து இயக்கியவர்கள்.

  இசைத் தென்றல் நிகழ்ச்சிக்கு மண்டப வாசலிலேயே அனுமதிச் சீட்டுக்களை விற்பனை செய்து ஒரே இரவில் ஏழு

மணிக்கும், பத்து மணிக்கும் இரு நிகழ்ச்சிகளை நடத்தியவர்கள்.

தொடர்ந்து ஆறு தினங்கள் ஒரு மாகாணத்தில் எட்டு இசைத் தென்றல் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியவர்கள். (29.8.74 முதல் 4.9.74 வரை வடமாகாணம்.)

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் ஈழத்துப் பாடல், ஈழத்துத் தமிழ்ப் பொப் இசைப் பாடல் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கும் முன்னரே இசைத்தட்டு வடிவில் தமது பாடல்களை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத் தாபனத்திற்கு அன்பளிப்புச் செய்து அவற்றை இந்தியப் பாடல்கள் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளிலேயே ஒலிபரப்பச் செய்த முதலாவது இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள்.

- ஈழத்துத் தமிழ்ப் பொப் இசைப் பாடல்களென்று ஆங்கிலச் சொல்லையும் (Pop) சேர்த்து அழைக்கப்பட்ட பாடல்களுக்கு ஈழத்துத் தமிழ் துள்ளு இசைப் பாடல்களென்ற தமிழ்ப் பெயரைச் சூட்டி, பொப் இசைக்கு முதன் முதலாக இப்பெயரை அறிமுகப்படுத்தியவர்கள். (23.8.1973 அன்று பரமேஸ் பொப் (Pop) என்ற வரிசையில் அடங்கக் கூடியவை. சுருக்கமாகச் சொன்னால் துள்ளு இசைப் பாடல்கள் என்பது மிகப் பொருத்தமாகும்.) இம்மலர் வெளியீட்டின் பின்னரே பத்திரிகைகளிலும், வானொலியிலும் பொப் இசைக்குத் துள்ளு இசைப் பாடல்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

- முதன் முதலாக ஈழத்து நாட்டுச் சிறப்புப் பாடல்களை (யாழ்பாடி யாழ்ப்பாணம், மீனிசை பாடி வரும், திருக்கோணமலை எங்கள் நாடு) மெல்லிசையிலும், பொப் இசையிலும் மக்கள் மனதில் இடம்பிடிக்கும் வண்ணம் உருவாக்கியவர்கள்.

  மனமாளிகை றோஜா என்ற பாடலில் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மலைநாடு, இலங்கை வானொலி, ஆலயங்கள், ஆகியவற்றை இணைத்துக் கவிபுனைத்து அப்பாடல் வெளிவந்த பின்னரே இதே பாணியில் வேறு சில பொப் பாடல்கள் வெளிவந்தன.

- முதலாவது இலங்கைத் தமிழிசைத் தட்டை இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் வானொலி நிலையங்களிலும் மற்றும் சில வெளிநாட்டு வானொலி நிலையங்களிலும் ஒலிபரப்பச் செய்த முதலாவது இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள்.

இத்தனை உண்மைகளையும் எடுத்துக்கூறிய நான் தொடர்ந்தும் நேயர்கள் கேட்கும் கேள்விகளுக்குக் கடிதமூலம் பதிலளித்து அவர்களின் சந்தேகத்தைத் தீர்த்துவைக்கக் காத்திருக்கின்றேன். அன்றும் இன்றும் என்றும் புகழ் குன்றாது ''இசைத்தென்றல்'' வீசிவரும் ஈழத்து மெல்லிசை மன்னர் பரமேஸ் கோணேஷ் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**K.T. செல்வகுமார்**
நிகழ்ச்சி அறிவிப்பாளர், பரமேஸ் கோணேஷ்,
திருக்கோணமலை.

**சிறப்பு :**

ஈழத்தில் முதலாவது தமிழிசைத்தட்டுத் தயாரித்தளித்த திறமைக்காக திரு. **கலையரசு சொர்ணலிங்கம்** அவர்களால் **பரமேஷ் கோணேஷ்** அவர்களுக்கும், **மகேஷ்** அவர்களுக்கும் ''**ஈழத்து மெல்லிசை மன்னர்**'' என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது.
(24.6.72 யாழ்ப்பாணம்)

''**யாழ்பாடி யாழ்ப்பாணம் பெயர் கொண்டது**''
என்ற நாட்டுச் சிறப்புப் பாடலை உருவாக்கிய பெருமைக்காக திருநெல்வேலி **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** அவர்களால் **பரமேஷ் கோணேஷ்** அவர்களுக்கு ''**இயல் இசைக் கலைஞர்**'' என்ற பட்டம் வழங்கப்பட்டது.
(27.5.72 யாழ்ப்பாணம்)

1971ம் ஆண்டு வெளியான
''**இசைத்தென்றல் வீசும் சோலையிலே**'' என்னும் புத்தகத்தில் இருந்து ஒரு பகுதி. (மறுபதிப்பு)

**கௌரவ கலைஞர்களாக என் மனைவி மாலினியுடன்
Holland நாட்டில்
இறுதியாக கலந்துகொண்ட நிகழ்ச்சி**



மகள் பிரகாஷினி, மனைவி மாலினி,
அறிவிப்பாளர் கே.எஸ்.கோபால் இவர்களுடன்.

இந்நாளை என்னால் மறக்க முடியாது, மாலினியுடன் நான் சென்ற இறதி இசைவிழா. நான் கேட்கும் எல்லா இடத்திற்கம் என்னோடு இணைந்து வரும் மாலினி 21.06.2000இல் என்னை தனியே விட்டு சென்றுவிட்டார். ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான் என்ற பாடல் எவ்வளவு உண்மை என்பதை அன்று உணர்ந்தேன்.

1968ஆம் ஆண்டுமுதல் நான் இயற்றி இசையமைத்துப் பாடிய பாடல்கள் பல பல. நேயர்களாலும் பாராட்டுப் பெற்று அவர்கள் வாயிலே முணுமுணுத்தவை.

இருந்தும், "உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது" என்ற பாடல்தான் என்னை இசை ரசிகர்களுக்கு இனம் காட்டியது.


ஆகவே இம்மலரில் இப்பாடலின் கவிதை வரிகளை இணைத்துள்ளேன்.

- **M.P. பரமேஷ்**

உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது
எனக்குத் தெரியுமா நீ என்னை அழைப்பது

மணக்க முடியுமா மலர் பறித்தெடுக்காமல்
மாலையாகுமா அதைத் தொடுத்தெடுக்காமல்
படிக்க முடியுமா தொடர்கதை தொடராமல்
பாடமுடியுமா ஒரு இசையெடுக்காமல்
பாடமுடியுமா ஒரு இசையெடுக்காமல்
உனக்குத் தெரியுமா...

எழுத முடியுமா ஒரு ஏடெடுக்காமல்
பொழுது விடியுமா அந்த இரவு போகாமல்
நிலவு தெரியுமா ஓடும் முகில் விலகாமல் - உன்
நினைவு புரியுமா நீ நெருங்கி வராமல்
நினைவு புரியுமா நீ நெருங்கி வராமல்
உனக்குத் தெரியுமா...





# நன்றி சொல்ல வேண்டும் நாம் உங்களுக்கு


என் இனிய இசைப் பயணங்களில் விமர்சனக் கட்டுரைகள் பலதும் கையெழுத்துப் பிரதிகளிலே கிடைக்கப்பெற்றன. இவற்றை அச்சுக் கூடத்தினரிடம் ஒப்படைப்பதற்காக ஏற்ற முறையில் கணனியில் அமைத்துத் தந்த சந்திர கௌரி (Solingen Germany) திரு. பவானந்த ராஜா (Germany) திரு.திருமதி சிவநேசன் (Germany) இவற்றிற்கெல்லாம் முன்பாக எமக்கு வேண்டிய பல கணனிப் பதிவுகளைத் தெளிவாக ஆக்கித்தந்த திரு. பத்மநாதன் (Moenchengladbach, Germany) Melani Vincent (Neuss, Germany), வாமன் (Germany) ஆகியோரிற்கும் எமது நன்றிகள் பல.

எங்கள் அப்பா எம்.பி. பரமேஷ் அவர்களுடன் 1968கள் முதல் பயணம் செய்தவர்களே!

விமர்சனங்களில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருந்தாலோ அல்லது நிறைகுறைகள் இருந்தாலோ தயவுசெய்து எனக்குத் தெரிவைபடுத்தவும்.

**Prabalini Prabakaran**
Muehlen str. 20
41352 Korschenbroich, Germany.
e_mail : rhythms@gmx.de






**TRANSLATION & SERVICES**



**பிரபாலினி பிரபாகரன்**

அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்

• தமிழ் • ஜெர்மன் • ஆங்கிலம்

*சான்றிதழ்கள், விசா (Visa), சொந்த வீடு வாங்கும் வசதிகள்*
*கடன் ஏற்பாடுகள், சகல ஆலோசனைகளுக்கும்*

**எம்மை நாடுங்கள்...**

Ph : 0049-21616203305 Mobile : 0049-17621234376
tamildolmetscher@hotmail.de/ rhythms@gmx.de